மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனு வாலர் சீயெனு
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள்
மனிதர்கள் பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா
எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ லேலெனு வாயை ஆவெனு
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்
எரிதனி லிடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினையு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர் பெருமாளே.

869

இலகு குழைகிழிய வூடு போயுலவி
யடர வருமதன னூல ளாவியெதி
ரிளைஞ ருயிர்கவர ஆசை நேர்வலைபொ திந்தநீலம்
இனிமை கரைபுரள வாகு லாவுசரி
நெறிவு கலகலென வாசம் வீசுகுழ
லிருளின் முகநிலவு கூர மாணுடைய கன்றுபோக

மலையு மிதழ்பருகி வேடை தீரவுட
லிறுக இறுகியநு ராக போகமிக
வளரு மிளகுதன பார மீதினில்மு யங்குவேனை
மதுர கவியடைவு பாடி வீடறிவு
முதிர அரியதமி ழோசை யாகவொளி
வசன முடையவழி பாடு சேருமருள் தந்திடாதோ

கலக அசுரர்கிளை மாள மேருகிரி
தவிடு படவுதிர வோல வாரியலை
கதற வரியரவம் வாய்வி டாபசித ணிந்தபோகக்

கலப மயிலின்மிசை யேறி வேதநெறி
பரவு மமரர்குடி யேற நாளும்விளை
கடிய கொடியவினை வீழ வேலைவிட வந்தவாழ்வே

அலகை யுடனடம தாடு தாதைசெவி
நிறைய மவுனவுரை யாடு நீபஎழி
லடவி தனிலுறையும் வேடர் பேதையைம
ணந்தகோவே
அமணர் கழுவில்விளை யாட வாதுபடை
கருது குமரகுரு நாத நீதியுள
தருளுமிடைமருதில்மேவுமாமுனிவர் தம்பிரானே.

870

படியையள விடுநெடிய கொண்டலுஞ் சண்டனும்
தமரசது மறையமரர் சங்கமுஞ் சம்புவும்
பரவரிய நிருபன்விர கன்சுடுஞ் சம்பனன்
செம்பொன்மேனிப்
பரமனெழில் புனையுமர வங்களுங் கங்கையுந்
திருவளரு முளரியொடு திங்களுங் கொன்றையும்
பரியகுமி ழறுகுகன தும்பையுஞ் செம்பையுந்
துன்றுமூலச்

சடைமுடியி லணியுநல சங்கரன் கும்பிடுங்
குமரனறு முகவன்மது ரந்தருஞ் செஞ்சொலன்
சரவணையில் வருமுதலி கொந்தகன் கந்தனென்
றுய்ந்துபாடித்
தணியவொலி புகலும்வித மொன்றிலுஞ் சென்றிலன்
பகிரவொரு தினையளவு பண்புகொண் டண்டிலன்
தவநெறியி லொழுகிவழி பண்படுங் கங்கணஞ்
சிந்தியாதோ

கடுகுபொடி தவிடுபட மந்திரந் தந்திரம்
பயிலவரு நிருதருட லம்பிளந் தம்பரங்
கதறிவெகு குருதிநதி பொங்கிடுஞ் சம்ப்ரமங்
கண்டுசேரக்
கழுகுநரி கொடிகருட னங்கெழுந் தெங்குநின்
றலகைபல திமிலைகொடு தந்தனந் தந்தனங்
கருதியிசை பொசியுநசை கண்டுகண் டின்புறுந்
துங்கவேலா

அடல்புனையு மிடைமருதில் வந்திணங் குங்குணம
பெரியகுரு பரகுமர சிந்துரஞ் சென்றடங்
கடவிதனி லுறைகுமரி சந்திலங் குந்தனந்
தங்குமார்பா
அருணமணி வெயிலிலகு தண்டையம் பங்கயங்
கருணைபொழி வனகழலி லந்தமுந் தம்பமென்
றழகுபெற நெறிவருடி யண்டருந் தொண்டுறுந்
தம்பிரானே.

871

புழுகொடுபனி நீர்ச வாதுட னிருகர்மிகு மார்பி லேபன
புளகிதஅபி ராம பூஷித கொங்கையானை
பொதுவினில்விலை கூறு மாதர்கள் மணியணிகுழை
மீதுதாவடி
பொருவனகணை போல்வி லோசன வந்தியாலே
மெழுகெனவுரு காவ ஞர்தம திதயகலக மோடு மோகன
வெகுவிதபரி தாப வாதனை கொண்டுநாயேன்
மிடைபடுமல மாயை யால்மிக கலவியஅறி
வேக சாமிநின்
விதரணசிவ ஞான போதகம் வந்துதாராய்
எழுகிரிநிலையோடவாரிதி மொகுமொகுவென வீசமேதினி
யிடர்கெடஅசு ரேசர் சேனைமு றிந்துபோக
இமையவர்சிறை மீள நாய்நரி கழுகுகள்கக ராசன்
மேலிட
ரணமுககண பூத சேனைகள் நின்றுலாவச்
செழுமதகரி நீல கோமள அபிநவமயி லேறு சேவக
செயசெயமுரு காகு காவளர் கந்தவேளே
திரைபொருகரை மோது காவிரி வருபுனல்வயல் வாவி
சூழ்தரு
திருவிடைமரு தூரில் மேவிய தம்பிரானே.

திரிபுவனம்

872

தனுநுதல் வெயர்வெழ விழிகுழி தரவளை
சத்திக் கச்சில தித்திக் கப்படும் அன்புபேசித்
தழுவிய மகளிர்த முகிழ்முலை யுரமிசை
தைக்கச் சர்க்கரை கைக்கப் பட்டன
தொண்டையூறல்

கனவிலு நுகர்தரு கலவியின் வலையிடை
கட்டுப் பட்டுயிர் தட்டுப் பட்டழி கின்றதோதான்
கதிபெற விதியிலி மதியிலி யுனதிரு
கச்சூற் றச்சிறு செச்சைப் பத்மப தம்பெறேனோ
மூனமலி குலிசைதன் மருகமத புளகித
முத்தச் சித்ரத னத்துக் கிச்சித அம்புராசி
முறையிட முதுநிசி சரர்திரள் முதுகிட
முட்டப்பொட்டெழ வெட்டிக்குத்தும டங்கல்வீரா
அனுபவ மளிதரு நிகழ்தரு மொருபொருள்
அப்பர்க் கப்படி யொப்பித் தர்ச்சனை கொண்டநாதா
அகிலமு மழியினு நிலைபெறு திரிபுவ
னத்துப்பொற்புறுசித்திச்சித்தர்கள் தம்பிரானே.

சோமீச்சுரம்

873

கரியகுழல் சரியமுகம் வேர்வாட வாசமுறு
களபமுலை புளகமெழ நேரான வேல்விழிகள்
கயல்பொருது செயலதென நீள்பூச லாடநல
கனிவாயின்
கமழ்குமுத அதரவிதழ் தேனூறல் பாயமிகு
கடலமுத முதவியிரு தோள்மாலை தாழவளை
கலகலென மொழிபதற மாமோக காதலது
கரைகாணு
தெரியணுகு மெழுகுபத மாய்மேவி மேவியிணை
யிருவருட லொருவரென நாணுது பாயல்மிசை
யிளமகளிர் கலவிதனி லேமூழ்கி யாமுகினு
மிமையாதே
இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையுமு னழகுபுனை யீராறு தோள்நிரையும்
இருபதமு மறுமுகமும் யானோத ஞானமதை
யருள்வாயே
உரியதவ நெறியில்நம நாராய ணயவென
ஒருமதலை மொழியளவி லோராத கோபமுட
னுனதிறைவ னெதனிலுள னோதாய டாவெனுமு
னுறுதூணில்
உரமுடைய அரிவடிவ தாய்மோதி வீழவிர
லுகிர்புதைய இரணியனை மார்பீறி வாகைபுனை
உவணபதி நெடியவனும் வேதாவும் நான்மறையு
முயர்வாக

வரியளிக ளிசைமுரல வாகான தோகையிள
மயிலிடையில் நடனமிட ஆகாச மூடுருவ
வளர்கமுகின் விரிகுலைகள் பூணார மாகியிட
மதில்சூழும்
மருதரசர் படைவிடுதி வீடாக நாடிமிக
மழவிடையின் மிசையிவரு சோமீசர் கோயில்தனில்
மகிழ்வுபெற வுறைமுருக னேபேணு வானவர்கள்
பெருமாளே.

கும்பகோணம்

874

இந்துகதிர்ச் சேரருணப் பந்திநடுத் தூரொளிபட்
டின்பரசப் பாலமுதச் சுவைமேவு
எண்குணமுற் றேனடனச் சந்த்ரவொளிப் பீடகமுற்
றெந்தைநடித் தாடுமணிச் சபையூடே

கந்தமெழுத் தோடுறுசிற் கெந்தமணப் பூவிதழைக்
கண்டுகளித் தேயமுதக் கடல்மூழ்கிக்
கந்தமதித் தாயிரவெட் டண்டமதைக் கோல்புவனக்
கண்டமதைக் காணஎனக் கருள்வாயே

திந்ததிமித் தீதகுடட் டுண்டுமிடட் டாடுடுடிட்
டிந்தமெனக் காளமணித் தவிலோசை
சிந்தைதிகைத் தேழுகடற் பொங்கவரிச் சூர்மகுடச்
செண்டுகுலைத் தாடுமணிக் கதிர்வேலா

குந்தியரித் தாழ்துளபச் செந்திருவைச் சேர்களபக்
கொண்டல்நிறத் தோன்மகளைத் தரைமீதே
கும்பிடகைத் தாளமெடுத் தம்பொனுருப் பாவைபுகழ்க்
கும்பகொணத் தாறுமுகப் பெருமாளே.

875

தும்பிமுகத் தானைபணைக் கொம்பதெனத் தாவிமயற்
றுரந்தமெனப் பாயுமுலைக் கனமாதர்
தும்பிமலர்ச் சோலைமுகிற் கங்குலிருட் காரினிறத்
தொங்கல்மயிற் சாயலெனக் குழல்மேவிச்
செம்பொனுருக் கானமொழிச் சங்கினொளிக் காமநகைச்
செங்கயலைப் போலும்விழிக் கணையாலே

சிந்தைதகர்த் தாளுமிதச் சந்த்ரமுகப் பாவையர்தித்
    திந்திமெனுற் றுடுமவர்க் குழல்வேறே

தும்பிவரச் சாதிதிருக் கொம்புவரக் கூடவனச்
    சந்தமயிற் சாய்விலகிச் சிறைபோகச்
  சண்டர்முடித் தூள்கள்படச் சிந்தியரக் கோர்கள்விழத்
    தங்கநிறத் தாள்சிறையைத் தவிர்மாயோன்

கொம்புகுறிக் காளமடுத் திந்தமெனுற் றுடிநிரைக்
    கொண்டுவளைத் தேமகிழச் சுதனீண
  கொஞ்சுசுகப் பாவையிணைக் கொங்கைதனிற் றுவிமகிழ்க்
    கும்பகொணத் தாறுமுகப் பெருமாளே.

876

கெண்டைநே ரொத்தவிழி மங்கைமோ கக்கலவை
    கெந்தவா சப்புழுகு மணநாறுங்
  கிம்புரி சக்களப கொங்கையா னைச்சிறிது
    கிஞ்சுகா ணப்பெருகி யடியேனும்

மண்டிமோ சக்கலவி கொண்டுகா மித்துருகி
    வண்டனு கட்புவியி லுழலாமல்
  வந்துஞா னப்பொருளி லொன்றுபோ தித்துனது
    மஞ்சுதா ளைத்தினமு மருள்வாயே

அண்டர்வா ழப்பிரபை சண்டமே ருக்கிரிய
    ளைந்துவீ ழப்பொருத கதிர்வேலா
  அஞ்சுவா யிற்பரனை நெஞ்சிலூ றித்தவசி
    னன்புளா ரைச்சிறையி டசுரோரைக்

கொண்டுபோய் வைத்தகழு நெஞ்சிலே றக்கழுகு
    கொந்தியா டத்தலையை யரிவோனே
  கொண்டல்சூ ழக்கழனி சங்குலா விப்பரவு
    கும்பகோ ணத்திலுறை பெருமாளே.

877

பஞ்சுசேர் நிர்த்தப் பதமாதர்
    பங்கமார் தொக்கிற் படியாமற்
செஞ்சொல்சேர் சித்ரத் தமிழாலுன்
    செம்பொனூர் வத்தைப் பெறுவேனோ

பஞ்சபா ணத்தற் பொருதேவர்
பங்கில்வாழ் சத்திக் குமரேசா
குஞ்சரீ வெற்புத் தனநேயா
கும்பகோ ணத்திற் பெருமாளே.

878

மாலைதனில் வந்து வீதிதனில் நின்று
வாசமலர் சிந்து குழல்கோதி
வாரிருத னங்கள் பூணொடுகு லுங்க
மால்பெருகி நின்ற மடவாரைச்
சாலைவழி வந்து போமவர்க ணின்று
தாழ்குழல்கள் கண்டு தடுமாறித்
தாகமயல் கொண்டு மாலிருள ழுந்தி
சாலமிக நொந்து தவியாமற்
காலையிலெ ழுந்து னுமமொழி ழிந்து
காதலுமை மைந்த எனவோதிக்
காலமுமு ணர்ந்து ஞானவெளி கண்கள்
காணஅரு ளென்று பெறுவேனோ
கோலமுட னன்று சூர்படையின் முன்பு
கோபமுட னின்ற குமரேசா
கோதையிரு பங்கின் மேவவளர் கும்ப
கோணநகர் வந்த பெருமாளே.

879

கறுத்த குஞ்சியும் வெளிறியெ ழுங்கொத்
துருத்த வெண்பலு மடையவி ழுந்துட்
கருத்து டன்திகழ் மதியும ருண்டுச் சுருள்நோயாற்
கலக்க முண்டல மலமுற வெண்டிப்
பழுத்தெ ழும்பிய முதுகுமு டங்கக்
கழுத்தில் வந்திளை யிருமலொ துங்கக்
கொழுமேனி
அறத்தி ரங்கியொர் தடிகைந டுங்கப்
பிடித்தி டும்புறு மனைவியு நிந்தித்
தடுத்த மைந்தரும் வசைகள்வி ளம்பச் சடமாகி

அழுக்க டைந்திடர் படுமுடல் பங்கப்
பிறப்பெ னுங்கட லழியலொ ழிந்திட்
டடுத்தி ருந்திரு வடிதனை யென்றுற் றிடுவேனோ

புறத்த லம்பொடி படமிக வுங்கட்
டறப்பெ ருங்கடல் வயிறுகு ழம்பப்
புகட்ட ரங்கிய விரகது ரங்கத் திறல்வீரா
பொருப்பு ரம்படர் கிழிபட வென்றட்
டரக்கர் வன்றலை நெரியநெ ருங்கிப்
புதைக்கு றுந்தசை குருதிகள் பொங்கப்
பொரும்வேலா

சிறுத்த தண்டைய மதலையொ ரஞ்சச்
சினத்து மிஞ்சரி திரிதரு குன்றத்
தினைபபு னந்திகழ் குறமகள் கொங்கைக்கிரிமேவிச்
செருக்கு நெஞ்சுடை முருகசி கண்டிப்
பரிச்சு மந்திடு குமரக டம்பத்
திருக்கு டந்தையி லுறைதரு கந்தப் பெருமாளே.

880

செனித்தி டுஞ்சல சாழலு மூழலும்
விளைத்தி டுங்குடல் பீறியு மீறிய
செருக்கொ டுஞ்சதை பீளையு மீளையு முடனூடே
தெளித்தி டும்பல சாதியும் வாதியும்
இரைத்தி டுங்குல மேசில கால்படர்
சினத்தி டும்பவ நோயென வேயிதை
யணவோருங்

கனைத்தி டுங்கலி காலமி தோவென
வெடுத்தி டுஞ்சுடு காடுபு காவென
கவிழ்த்தி டுஞ்சட மோபொடி யாய்விடு
முடல்பேணிக்
கடுக்க னுஞ்சில பூடண மாடைகள்
இருக்கி டுங்கலை யேபல வாசைகள்
சுழித்தி டுஞ்சிவ யோகமு ஞானமு மருள்வாயே

தனத்த னந்தன தானன தானன
திமித்தி திந்திமி தீதக தோதக
தகுத்து துந்துமி தாரைவி ராணமொ டடல்பேரி

சமர்த்த மொன்றிய தானவர் சேனையை
வளைத்து வெஞ்சின வேல்விடு சேவக
சமத்து ணர்ந்திடு மாதவர் பாலருள் புரிவோனே
தினைப்பு னந்தனி லேமய லாலொரு
மயிற்ப தந்தனி லேசர ணென்ன
திருப்பு யந்தரு மோகன மானினை யணைவோனே
சிவக்கொ ழுஞ்சுட ரேபர னாகிய
தவத்தில் வந்தருள் பாலக்ரு பாகர
திருக்கு டந்தையில் வாழ்முரு காசுரர் பெருமாளே.

கொட்டையூர்
881

பட்டுமணிக் கச்சிறுகக் கட்டியவிழ்த் துத்தரியப்
பத்தியின்முத் துச்செறிவெற் பிணையாமென்
பற்பமுகைக் குத்துமுலைத் தத்தையர்கைப் புக்குவசப்
பட்டுருகிக் கெட்டவினைத் தொழிலாலே

துட்டனெனக் கட்டனெனப் பித்தனெனப்
ப்ரட்டனெனச்
சுற்றுமறச் சித்தனெனத் திரிவேனைத்
துக்கமறுத் துக்கமலப் பொற்பதம்வைத் துப்பதவிச்
சுத்தியணைப் பத்தரில்வைத் தருள்வாயே

சுட்டபொருட் கட்டியின்மெய்ச் செக்கமலப்
பொற்கொடியைத்
துக்கமுறச் சொர்க்கமுறக் கொடியாழார்
சுத்தரதத் திற்கொடுபுக் குக்கடுகித் தெற்கடைசிச்
சுற்றுவனத் திற்சிறைவைத் திடுதீரன்

கொட்டமறப் புற்றரவச் செற்றமறச் சத்தமறக்
குற்றமறச் சுற்றமறப் பலதோளின்
கொற்றமறப் பத்துமுடிக் கொத்துமறுத் திட்டதிறற்
கொற்றர்பணிக் கொட்டைநகர்ப் பெருமாளே.

சிவபுரம்
882

மனமெ னும்பொருள் வானறை கால்கனல்
புனலு டன்புவி கூடிய தோருடல்
வடிவு கொண்டதி லேபதி மூணெழு வகையாலே

வருசு கந்துய ராசையி லேயுழல்
மதியை வென்றுப ராபர ஞானநல்
வழிபெ றும்படி நாயடி யேனைநி னருள்சேராய்

செனனி சங்கரி ஆரணி நாரணி
விமலி யெண்குண பூரணி காரணி
சிவைப ரம்பரை யாகிய பார்வதி அருள்பாலா
சிறைபு குஞ்சுரர் மாதவர் மேல்பெற
அசுரர் தங்கிளை யானது வேரற
சிவனு கந்தருள் கூர்தரு வேல்விடு முருகோனே

கனக னங்கையி னுலறை தூணிடை
மனித சிங்கம தாய்வரை பார்திசை
கடல்க லங்கிட வேபொரு தேயுகிர் முனையாலே
கதற வென்றுடல் கீணவ னுருயி
ருதிர முஞ்சித றுதமு தாயுனு
கமல வுந்திய னகிய மால்திரு மருகோனே

தினக ரன்சிலை வேளருள் மாதவர்
சுரர்க ளிந்திர னுருர காதிபர்
திசைமு கன்செழு மாமறை யோர்புக ழுழகோனே
திரும டந்தையர் நாலிரு வோர்நிறை
அகமொ டம்பொனி னுலய நீடிய
சிவபு ரந்தனில் வாழ்குரு நாயக பெருமாளே.

திருநாகேச்சுரம்

883

ஆசார வீனக் குதர்க்க துட்டர்கள்
மாதாபி தாவைப் பழித்த துட்டர்கள்
ஆமாவி னூனைச் செகுத்த துட்டர்கள் பரதாரம்
ஆகாதெ னுமற் பொசித்த துட்டர்கள்
நானாவு பாயச் சரித்ர துட்டர்க
ளாவேச நீரைக் குடித்த துட்டர்கள்
தமியோர்சொ நம்

கூசாது சேரப் பறித்த துட்டர்கள்
ஊரார்க ளாசைப் பிதற்று துட்டர்கள்
கோலால வாள்விற் செருக்கு துட்டர்கள்
குருசேவை

கூடாத பாவத் தவத்த துட்டர்கள்
ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள்
கோமாள நாயிற் கடைப்பி றப்பினி லுழல்வாரே

வீசாவி சாலப் பொருப்பெ டுத்தெறி
பேரார வாரச் சமுத்தி ரத்தினில்
மீளாம லோடித் துரத்தி யுட்குறு மொருமாவை
வேரோடு வீழத் தறித்த டுக்கிய
போராடு சாமர்த் தியத்தி ருக்கையில்
வேலாயு தாமெய்த் திருப்பு கழ்ப்பெறு வயலூரா

நாசாதி ப்ரரரத் ததுக்க மிக்கவர்
மாயாவி காரத் தியக்க றுத்தருள்
ஞானோப தேசப் ப்ரசித்த சற்குரு வடிவான
நாதாவெ னுமுற் றுதித்தி டப்புவி
யாதார மாய்கைக் குமுட்ட முற்றருள்
நாகேச நாமத் தகப்பன் மெச்சிய பெருமாளே.

கூந்தலூர்

884

தரையினில் வெகுவழி சார்ந்த மூடனை
வெறியனை நிறைபொறை வேண்டி டாமத
சடலனை மகிமைகள் தாழ்ந்த வீணனை மிகுகேள்வி
தவநெறி தனைவிடு தாண்டு காலியை
யவமதி யதனில்பொ லாங்கு தீமைசெய்
சமடனை வலியஅ சாங்க மாகிய தமியேனை

விரைசெறி குழலியர் வீம்பு நாரியர்
மதிமுக வனிதையர் வாஞ்சை மோகியர்
விழிவலை மகளிரொ டாங்கு கூடிய வினையேனை
வெகுமல ரதுகொடு வேண்டி யாகிலு
மொருமல ரிலைகொடு மோர்ந்து யானுனை
விதமுறுபரிவொடு வீழ்ந்துதாடொழ அருள்வாயே

ஒருபது சிரமிசை போந்த ராவண
னிருபது புயமுட னேந்து மேதியு
மொருகணை தனிலற வாங்கு மாயவன் மருகோனே

உனதடி யவர்புக ழாய்ந்த நூலின
ரமரர்கள் முனிவர்க ளீந்த பாலகர்
உயர்கதி பெறஅரு ளோங்கு மாமயி லுறைவோனே
குரைகழல் பணிவொடு கூடம்பி டார்பொரு
களமிசை யறமது தீர்ந்த சூரர்கள்
குலமுழு தனைவரு மாய்ந்து தூளெழ முனிவோனே
கொடுவிட மதுதனை வாங்கி யேதிரு
மிடறினி லிருவென ஏந்து மீசுரர்
குருபர னெனவரு கூடந்த லூருறை பெருமாளே.

திருச்சத்திமுத்தம்

885

கடகரிம ருப்பிற்க திர்த்துப்ர மிக்கமிக
வுரமிடநெ ருக்கிப்பி டித்துப்பு டைத்துவளர்
கனககுட மொத்துக்க னத்துப்பெ ருத்தமணி
யணியாலே
கதிர்திகழு செப்பைக்க திக்கப்ப தித்துமகிழ்
கமலமுகை பட்சத்தி ருத்திப்பொ ருத்துமுலை
கமழ்விரைகொள் செச்சைக்க லப்பைப்பொ
தித்ததனை விலகாது
கடுவைவடு வைப்பற்றி விற்சிக்க வைத்தசெய
லெனநிறமி யற்றிக்கு யிற்றிப்பு ரட்டிவரு
கயல்விழிவெ ருட்டித்து ரத்திச்செ விக்குழையின்
மிசைதாவுங்
களமதன னுக்குச்ச யத்தைப்ப டைத்துலவு
கடுமொழிப யிற்றக்க ளைத்துக்கொ டிச்சியர்கள்
கணியினில கப்பட்ட ழுத்தத்து யர்ப்படுவ
தொழியேனோ
அடலைபுனை முக்கட்ப ரற்குப்பொ ருட்சொலரு
மறைதனையு ணர்த்திச்செ கத்தைப்பெ ருத்தமயில்
அதனைமுன டத்திக்க ணத்திற்றி ரித்துவரு
மழகோனே
அபகடமு ரைத்தத்த மெத்தப்ப டைத்துலகி
லெளியரைம ருட்டிச்செ கத்திற்பி ழைக்கவெணு
மசடர்தம னத்தைக்க லக்கித்து ணித்தடரு
மதிசூரா

விடவரவ ணைக்குட்டு யிற்கொட்க்ரு பைக்கடவு
ளுலவுமலை செப்பைச்செ விக்கட்செ றித்துமிக
விரைவிலுவ ணத்திற்சி றக்கப்ரி யத்தில்வரு
மொருமாயோன்
விழைமருக கொக்கிற்ச முத்ரத்தி லூற்றவணை
நெறுநெறென வெட்டுக்ர சத்தித்த னிப்படைய
விடையவர்தி ருச்சத்தி முத்தத்தி னிற்குலவு
பெருமாளே.

திருவலஞ்சுழி

886

மகர குண்டல மீதே மோதுவ
வருண பங்கய மோபூ வோடையில்
மருவு செங்கழு நீரோ நீவிடு வடிவேலோ
மதன்வி டுங்கணை யோவா ளோசில
கயல்கள் கெண்டைக ளோசே லோகொலை
மறலி யென்பவ னோமா னோமது நுகர்கீத

முகர வண்டின மோவான் மேலெழு
நிலவ ருந்துபு ளோமா தேவருண்
முதிய வெங்கடு வோதே மாவடு வகிரோபார்
முடிவெ னுங்கட லோயா தோவென
வுலவு கண்கொடு நேரே சூறைகொள்
முறைய றிந்தப சாசே போல்பவ ருறவாமோ

நிகரில் வஞ்சக மாரீ சாதிகள்
தசமு கன்படை கோடா கோடிய
நிருத ரும்பட வோரே வேவியெ யடுபோர்செய்
நெடிய னங்கனு மானோ டேயெழு
பதுவெ ளங்கவி சேனா சேவித
நிருப னம்பரர் கோமான் ராகவன் மருகோனே

சிகர வும்பர்கள் பாகீ ராதிகள்
பிரபை யொன்றுபி ராசா தாதிகள்
சிவச டங்கமொ டீசா னாதிகள் சிவமோனர்
தெளியு மந்த்ரக லாபா யோகிக
ளயல்வி ளங்குசு வாமீ காமரு
திருவ லஞ்சுழி வாழ்வே தேவர்கள் பெருமாளே.

திருப்பழையாறை

887

தோடுற்றுக் காதள வோடிய
வேலுக்குத் தானிக ராயெழு
சூதத்திற் காமனி ராசத விழியாலே
சோடுற்றத் தாமரை மாமுகை
போலக்கற் பூரம ளாவிய
தோல்முத்துக் கோடென வீறிய முலைமாதர்

கூடச்சிக் காயவ ருழிய
மேபற்றிக் காதலி னோடிய
கூளச்சித் தாளனை மூளனை வினையேனைக்
கோபித்துத் தாயென நீயொரு
போதத்தைப் பேசவ தாலருள்
கோடித்துத் தானடி யேனடி பெறவேணும்

வேடிக்கைக் காரவு தாரகு
ணபத்மத் தாரணி காரண
வீரச்சுத் தாமகு டாசமர் அடுதீரா
வேலைக்கட் டாணிம காரத
சூரர்க்குச் சூரனை வேல்விடு
வேழத்திற் சீரரு ளூறிய இளையோனே

ஆடத்தக் காருமை பாதியர்
வேதப்பொற் கோவண வாடையர்
ஆலித்துத் தானரு ளூறிய முருகோனே
ஆடப்பொற் கோபுர மேவிய
ஆடிக்கொப் பாமதிள் சூழ்பழை
யாறைப்பொற் கோயிலின் மேவிய பெருமாளே.

திருச்சக்கிரப்பள்ளி

888

திட்டெ னப்பல செப்பைய டிப்பன
பொற்கு டத்தையு டைப்பன வுத்தர
திக்கி னிற்பெரு வெற்பைவி டுப்பன வதின்மேலே
செப்ப வத்திம ருப்பையொ டிப்பன
புற்பு தத்தையி மைப்பில ழிப்பன
செய்த்த லைக்கம லத்தைய லைப்பன திறமேய

புட்ட ஊனக்கக னத்தில்வி டுப்பன
சித்த முற்பொர விட்டுமு றிப்பன
புட்ப விக்கன்மு டிக்குறி யுய்ப்பன இளநீரைப்
புக்கு டைப்பன முத்திரை யிட்டத
னத்தை விற்பவர் பொய்க்கல விக்குழல்
புத்தி யுற்றமை யற்றிட எப்பொழு தருள்வாயே

துட்ட நிக்ரக சத்தித ரப்ரப
லப்ர சித்தச மர்த்தத மிழ்த்ரய
துட்க ரக்கவி தைப்புக லிக்கர செனுநாமச்
சொற்க நிற்கசொ லட்சண தட்சண
குத்த ரத்தில கத்திய னுக்கருள்
சொற்கு ருத்வம கத்துவ சத்வஷண் முகநாத

சுட்ட றச்சமை யத்தைவ ளர்ப்பவ
ளத்தன் முற்புகழ் செப்பவ நுக்ரக
சத்து வத்தைய ளித்திடு செய்ப்பதி மயிலேறி
சட்ப தத்திரள் மொய்த்தம ணப்பொழில்
மிக்க ரத்நம திற்புடை சுற்றிய
சக்கி ரப்பளி முக்கணர் பெற்றருள் பெருமாளே.

திருக்குரங்காடுதுறை

889

அலங்கார முடிக்கிரணத் திரண்டாறு முகத்தழகிற்
கசைந்தாடு குழைக்கவசத் திரடோளும்
அலந்தாம மணித்திரளைப் புரண்டாட நிரைத்தகரத்
தணிந்தாழி வனைக்கடகச் சுடர்வேலுஞ்

சிலம்போடு மணிச்சுருதிச் சலங்கோசை மிகுத்ததிரச்
சிவந்தேறி மணத்தமலர்ப் புனைபாதந்
திமிந்தோதி திமித்திமிதித் தனந்தான தனத்தனனத்
தினந்தோறு நடிப்பதுமற் புகல்வேனோ

இலங்கேசர் வனத்துள்வனக் குரங்கேவி யழற்புகையிட்
டிளந்தாது மலர்த்திருவைச் சிறைமீளும்
இளங்காள முகிற்கடுமைச் சரங்கோடு கரத்திலெடுத்
திருங்கான நடக்குமவற் கினியோனே

குலங்கோடு படைத்தசுரப் பெருஞ்சேனை யழிக்கமுனைக்
கொடுந்தாரை வெயிற்கயிலைத் தொடும்வீரா
கொழுங்காவின் மலர்ப்பொழிலிற் கரும்பாலை
புணர்க்குமிசைக்
குரங்காடு துறைக்குமரப் பெருமாளே.

890

குறித்தநெஞ் சாசை விரகிகள்
நவிற்றுசங் கீத மிடறிகள்
குதித்தரங் கேறு நடனிகள் எவரோடுங்
குறைப்படுங் காதல் குனகிகள்
அரைப்பணங் கூறு விலையினர்
கொலைக்கொடும் பார்வை நயனிகள் நகரேகை

பொறித்தசிங் கார முலையினர்
வடுப்படுங் கோவை யிதழிகள்
பொருட்டினந் தேடு கபடிகள் தவர்சோரப்
புரித்திடும் பாவ சொருபிகள்
உருக்குசப் போக சரசிகள்
புணர்ச்சிகொண் டாடு மருளது தவிர்வேனோ

நெறித்திருண் டாறு பதமலர்
மணத்தபைங் கோதை வகைவகை
நெகிழ்க்குமஞ் சோதி வனசரி மணவாளா
நெருக்குமிந் ராதி யமரர்கள்
வளப்பெருஞ் சேனை யுடையவர்
நினைக்குமென் போலு மடியவர் பெருவாழ்வே

செறித்தமந் தாரை மகிழ்புனை
மிகுத்ததண் சோலை வகைவகை
தியக்கியம் பேறு நதியது பலவாறுந்
திரைக்கரங் கோலி நவமணி
கொழித்திடுஞ் சாரல் வயலணி
திருக்குரங் காடு துறையுறை பெருமாளே.

891

குடங்கள் நிறைத்தேறு தடங்கள் குறித்தார
வடங்கள் அசைத்தார செயநீலங்
குதம்பை யிடத்தேறு வடிந்த குழைக்காது
குளிர்ந்த முகப்பார்வை வலையாலே

உடம்பு மறக்கூனி நடந்து மிகச்சாறி
யுலந்து மிகக்கோலு மகலாதே
உறங்கி விழிப்பாய பிறந்த பிறப்பேனு
முரங்கொள பொற்பாத மருள்வாயே

விடங்கள் கதுப்பேறு படங்க ணடித்தாட
விதங்கொள் முதற்பாய லுறைமாயன்
விலங்கை முறித்தோடி யிடங்கள் வளைத்தேறு
விளங்கு முகிற்கான மருகோனே

தடங்கொள் வரைச்சாரல் நளுங்கு மயிற்பேடை
தழங்கு மியற்பாடி யளிசூழத்
தயங்கு வயற்சாரல் குரங்கு குதித்தாடு
தலங்க ளிசைப்பான பெருமாளே.

காவளூர்

892

மானை நேர்விழி யொத்தம டந்தையர்
பாலை நேர்மொழி யொத்துவி ளம்பியர்
வாச மாமலர் கட்டும ரம்பைய ரிருதோளும்
மார்பு மீதினு முத்துவ டம்புரள்
காம பூரண பொற்கட கம்பொர
வாரி நீலவ ளைக்கைபு லம்பிட அநுராகம்

ஆன நேரில்வி தத்திர யங்களும்
நாண மாறம யக்கியி யம்பவும்
ஆடை சோரநெ கிழ்த்தியி ரங்கவும் உறவாடி
ஆர வாரந யத்தகு ணங்களில்
வேனி லூல்களை கற்றவி ளம்பவும்
ஆகு மோகவி பத்துமொ ழிந்துனை யடைவேனோ

சான கீதுய ரத்தில ருஞ்சிறை
போன போதுதொ குத்தசி னங்களில்
தாப சோபமொ ழிப்பஇ லங்கையு மழிவாகத்
தாரை மாநெரு சுக்கிரி பன்பெற
வாலி வாகுத லத்தில்வி ழுந்திட
சாத வாளிதொ டுத்தமு குந்தனன் மருகோனே

கான வேடர்சி றுக்குடி லம்புன
மீதில் வாழித ணத்திலு றைந்திடு
காவல் கூருகு றத்திபு ணர்ந்திடு மணிமார்பா
காவு லாவிய பொற்கமு கின்திரள்
பாளை வீசம லர்த்தட முஞ்செறி
காவ ளூர்தனில் முத்தமி ழுந்தெரி பெருமாளே.

தஞ்சை
893

அம்பு ராசியிற் கெண்டை சேலொளித்
தஞ்ச வேமணிக் குழைவீசும்
அங்க ணூரிடத் தின்ப சாகரத்
தங்கி மூழ்குமிச் சையினாலே
எம்பி ரானுனைச் சிந்தி யாதொழித்
திந்த்ர சாலஇப் ப்ரமைதீர
இங்கு வாவெனப் பண்பி னாலழைத்
தெங்கு மானமெய்ப் பொருள்தாராய்
கொம்பு போலிடைத் தொண்டை போலிதழ்க்
கொண்டல் போல்குழற் கனமேருக்
குன்று போல்முலைப் பைங்கி ராதியைக்
கொண்ட கோலசற் குணவேலா
சம்ப ராரியைக் கொன்ற தீவிழிச்
சம்பு போதகக் குருநாதா
சண்ட கோபுரச் செம்பொன் மாளிகைத்
தஞ்சை மாநகர்ப் பெருமாளே.

894

கந்த வார்குழல் கோதி மாலை யைப்பு னைந்து
மஞ்ச ளாலழ காக மேனி யிற்றி மிர்ந்து
கண்ட மாலைக ளான ஆணி முத்த ணிந்து
தெருவூடே
கண்ட பேரையெ லாம வாவி னிற்கொ ணர்ந்து
வண்ப யோதர பார மேரு வைத்தி றந்து
கண்களாகியகூர வேலைவிட்டெறிந்து விலைகூறி
வந்த பேர்களை யேகை யாலெ டுத்த ணைந்து
கொண்டு தேனித ழூறு வாயை வைத்த ருந்தி
மந்த மாருதம் வீசு பாய லிற்பு ணர்ந்து
மயல்பூணு

மங்கை மாரநு போக தீவி னைப்ப வங்கள்
மங்கி யேகிடு மாறு ஞான வித்தை தந்து
வண்டு லாவிய நீப மாலை சற்றி லங்க வருவாயே

இந்த்ர தாருவை ஞால மீதி னிற்கொ ணர்ந்த
சங்க பாணிய ஞதி கேச வப்ர சங்க
னென்று வாழ்மணி மார்பன் வீர விக்ர மன்றன்
மருகோனே

எண்டி சாமுக வேலை ஞால முற்று மண்டு
கந்த தாருக சேனை நீறு பட்டொ துங்க
வென்று பேரொளி சேர்ப்ர காசம் விட்டி லங்கு
கதிர்வேலா

சந்த்ர சேகரி நாக பூஷ ணத்தி யண்ட
முண்ட நாரணி யால போஜ னத்தி யம்பை
தந்த பூரண ஞான வேள்கு றத்தி துஞ்சு
மணிமார்பா

சண்ட நீலக லாப வாசி யிற்றி கழ்ந்து
கஞ்சன் வாசவன் மேவி வாழ்ப திக்கு யர்ந்த
தஞ்சை மாநகர் ராஜ கோபு ரத்தமர்ந்த பெருமாளே.

895

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையி லலைவேனோ
விஞ்சுறு மாவுன தடிசேர
விம்பம தாயரு ளருளாதோ
நஞ்சமு தாவுணு மரனுர்தம்
நன்குமராவுமை யருள்பாலா
தஞ்சென வாமடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே.

சப்தஸ்தானம்

896

மருவு லாவிடு மோதிகு லைப்பவர்
சமர வேலெனு நீடுவி ழிச்சியர்
மனதி லேகப டுருப ரத்தைய ரதிகேள்வர்
மதன ளேடுறழ் பூசலி டைச்சிய
ரிளைஞ ராருயிர் வாழுமு லைச்சியர்
மதுர மாமொழி பேசுகு ணத்தியர் தெருமீதே

சருவி யாரையும் வாவென ழைப்பவர்
பொருளி லேவெகு ஆசைப ரப்பிகள்
சகல தோதக மாயைப டிப்பரை யணுகாதே
சலச மேவிய பாதநி னைத்துமு
னருணை நாடதி லோது திருப்புகழ்
தணிய வோகையி லோதஎ னக்கருள் புரிவாயே

அரிய கானக மேவுகு றத்தித
னிதணி லேசில நாளும னத்துட
னடவி தோறுமெ வாழியல் பத்தினி மணவாளா
அசுரர் வீடுகள் நூறுபொ டிப்பட
உழவர் சாகர மோடியொ ளித்திட
அமரர் நாடுபொன் மாரிமி குத்திட நினைவோனே

திருவின் மாமர மார்பழ னப்பதி
அயிலு சோறவை யாளுது றைப்பதி
திசையி னுன்மறை தேடிய முற்குடி விதியாதிச்
சிரமு மாநிலம் வீழ்தரு மெய்ப்பதி
பதும நாயகன் வாழ்பதி நெய்ப்பதி
திருவை யாறுட னேழுதி ருப்பதி பெருமாளே.

திருவையாறு

897

சொரியு மாமுகி லோஇரு ளோகுழல்
சுடர்கொள் வாளிணை யோபிணை யோவிழி
சுரர்த மாரமு தோகுயி லோமொழி யிதழ்கோவை
துவர தோஇல வோதெரி யாஇடை
துகளி லாவன மோபிடி யோநடை
துணைகொள் மாமலை யோமுலை தானென
உரையாடிப்

பரிவி னுலெனை யாளுக நாளொரு
பழுதி லானென வாணுத லாரொடு
பகடி யேபடி யாவொழி யாஇடர் படுமாயப்
பரவை மீதழி யாவகை ஞானிகள்
பரவு சீர்புக ழேயது வாமிகு
பரம வீடது சேர்வது மாவது மொருநாளே

கரிய மேனிய னுனிரை யாள்பவன்
அரிய ராவணை மேல்வளர் மாமுகில்
கனகன் மார்பது பீறிய வாளரி கனமாயக்

கபடன் மாமுடி யாறுட னுலுமொர்
கணையி னுல்நில மீதுற நூறிய
கருணை மால்கவி கோபக்ரு பாகரன் மருகோனே

திரிபு ராதிகள் தூளெழ வானவர்
திகழ வேமுனி யாவருள் கூர்பவர்
தெரிவை பாதியர் சாதியி லாதவர் தருசேயே

சிகர பூதர நீறுசெய் வேலவ
திமிர மோகர வீரதி வாகர
திருவை யாறுறை தேவக்ரு பாகர பெருமாளே.

திருப்பூந்துருத்தி

898

வீங்கு பச்சிள நீர்போல் மாமுலை
சேர்ந்த ணைத்தெதிர் மார்பூ டேபொர
வேண்டு சர்க்கரை பால்தே னேரிதழ் உண்டுதோயா

வேண்டு ரைத்துகில் வேருய் மோகன
வாஞ்சை யிற்களி கூரா வாள்விழி
மேம்ப டக்குழை மீதே மோதிட வண்டிராசி

ஓங்கு மைக்குழல் சாதா வீறென
வீந்து புட்குரல் கூவா வேள்கலை
யோர்ந்தி டப்பல க்ரீடா பேதமு யங்குமாகா

ஊண்பு ணர்ச்சியு மாயா வாதனை
தீர்ந்து னக்கெளி தாயே மாதவ
மூன்று தற்குமெய்ஞ் ஞாஞ சாரம்வ ழங்குவாயே

தாங்கு நிற்சரர் சேஞ நீதரு
ஞங்கு ருத்ரகு மாரா கோஷண
தாண்ட வற்கருள் கேகீ வாகன துங்கவீரா

சாங்கி பற்சுகர் சீநா தீசுர
ரேந்த்ரன் மெச்சிய வேலா போதக
சாந்த வித்தக ஸ்வாமீ நீபவ லங்கன்மார்பா

பூங்கு ளத்திடை தாரா வோடன
மேய்ந்த செய்ப்பதி நாதா மாமலை
போன்ற விக்ரக சூரா ரிபகி ரண்டரூபா
போந்த பத்தர்பொ லாநோய் போயிட
வேண்ட நுக்ரக போதா மேவிய
பூந்து ருத்தியில் வாழ்வே தேவர்கள் தம்பிரானே.

திருநெய்த்தானம்

899

முகிலைக் காரைச் சருவிய குழலது
சரியத் தாமத் தொடைவகை நெகிழ்தர
முளரிப் பூவைப் பனிமதி தனைநிகர் முகம்வேர்வ
முனையிற் காதிப் பொருகணை யிணையிள
வடுவைப் பானற் பரிமள நறையிதழ்
முகையைப் போலச் சமர்செயு மிருவிழி
குழைமோதத்

துகிரைக் கோவைக் கனிதனை நிகரிதழ்
பருகிக் காதற் றுயரற வளநிறை
துணைபொற் றோளிற் குழைவுற மனமது களிகூரச்
சுடர்முத் தாரப் பணியணி ம்ருகமத
நிறைபொற் பாரத் திளகிய முகிழ்முலை
துவளக் கூடித் துயில்கினு முனதடி மறவேனே

குகுகுக் கூகுக் குகுகுகு குகுவென
திமிதித் தீதித் திமிதியென் முரசொடு
குழுமிச் சீறிச் சமர்செயு மசுரர்கள் களமீதே
குழறிக் கூளித் திரளொழ வயிரவர்
குவியக் கூடிக் கொடுவர அலகைகள்
குணலிட் டாடிப் பசிகெட அயில்விடு குமரேசா

செகசெச் சேசெச் செகவென முரசொலி
திகழச சூழத் திருநட மிடுபவர்
செறிகட் காளப் பணியணி யிறையவர் தருசேயே
சிகரப் பாரக் கிரியுறை குறமகள்
கலசத் தாமத் தனகிரி தழுவிய
திருநெய்த் தானத் துறைபவ சுரபதி பெருமாளே.

திருப்பழுவூர்

900

விகட சங்கட வார்த்தை பேசிகள்
அவல மங்கைய ருத்தை நாறிகள்
விரிவ டங்கிட மாற்றும் வாறென வருவார்தம்
விதம்வி தங்களை நோக்கி யாசையி
லுபரி தங்களை மூட்டி யேதம
இடும ருந்தொடு சோற்றை யேயிடு விலைமாதர்

சகல மஞ்சன மாட்டி யேமுலை
படவ ளைந்திசை மூட்டி யேவரு
சரச இங்கித நேத்தி யாகிய சுழலாலே
சதிமு ழங்கிட வாய்ப்ப ஞ்ஞனது
மலர வுந்தியை வாட்டி யேயிடை
தளர வுங்கணை யாட்டும் வேசிய ருறவாமோ

திகிரி கொண்டிரு ளாக்கி யேயிரு
தமையர் தம்பியர் மூத்த தாதையர்
திலக மைந்தரை யேற்ற சூரரை வெகுவான
சேனம டங்கலு மாற்றி யேயுடல்
தகர அங்கவர் கூட்டை யேநரி
திருகி யுண்டிட ஆர்த்த கூளிக ளடர்பூமி

அகடு துஞ்சிட மூட்டு பாரத
முடிய அன்பர்க ளேத்த வேயரி
யருளு மைந்தர்கள் வாழ்த்து மாயவன் மருகோனே
அமர ரந்தணர் போற்ற வேகிரி
கடல திர்ந்திட நோக்கு மாமயி
லழகொ டும்பழு வூர்க்குள் மேவிய பெருமாளே.

பெரும்புலியூர்

901

சதங்கைமணி வீரச் சிலம்பினிசை பாடச்
சரங்களொளி வீசப் புயமீதே
தனங்கள்குவ டாடப் படர்ந்தபொறி மால்பொற்
சரங்கண்மறி காதிற் குழையாட

இதங்கொள்மயி லேறொத் துகந்தநகை பேசுற்
றிரம்பையழ கார்மைக் குழலாரோ
டிழைந்தமளி யோடுற் றழுந்துமெனை நீசற்
றிரங்கியிரு தாளைத் தருவாயே
சிதம்பரகு மாரக் கடம்புதொடை யாடச்
சிறந்தமயில் மேலுற் றிடுவோனே
சிவந்தகழு காடப் பிணங்கள்மலை சாயச்
சினந்தசுரர் வேரைக் களைவோனே
பெதும்பையெழு கோலச் செயங்கொள்சிவ காமிப்
ப்ரசண்டஅபி ராமிக் கொருபாலா
பெரும்புனம தேகிக் குறம்பெணொடு கூடிப்
பெரும்புலியுர் வாழ்பொற் பெருமாளே.

நெடுங்களம்

902

பஞ்சபுல னும்பழைய ரண்டுவினை யும்பிணிகள்
பஞ்செனஎ ரிந்துபொடி யங்கமாகிப்
பண்டறவு டன்பழைய தொண்டர்களு டன்பழகி
பஞ்சவர்வி யன்பதியு டன்குலாவக்
குஞ்சரமு கன்குணமொ டந்தவனம் வந்துலவ
கொஞ்சியசி லம்புகழல் விந்துநாதங்
கொஞ்சமயி லின்புறமெல் வந்தருளி யென்கவலை
கொன்றருள்நி றைந்தகழ லின்றுதாராய்
எஞ்சியிடை யுஞ்சுழல அம்புவிழி யுஞ்சுழல
இன்பரச கொங்கைகர முங்கொளாமல்
எந்தவுடை சிந்தபல மிஞ்சியமு தம்புரள
இந்துநுத லும்புரள கங்குல்மேகம்
அஞ்சுமள கம்புரள மென்குழைக ளும்புரள
அம்பொனுரு மங்கைமண முண்டபாலா
அன்பர்குல வுந்திருநெ டுங்களவ ளம்பதியி
லண்டரய னும்பரவு தம்பிரானே.

குறட்டி

903

கூரிய கடைக்க ணுலு மேருநிக ரொப்ப தான
கோடதனில் மெத்த வீறு முலையாலுங்

கோபவத ரத்தி னாலு மேவிடுவிதத்து ளால
கோலவுத ரத்தி னாலு மொழியாலும்

சீரியவ ளைக்கை யாலு மேகலைநெ கிழ்ச்சி யேசெய்
சீருறுநு சுப்பி னாலும் விலைமாதர்
சேறுதனி னித்த முழ்கி நாளவமி றைத்து மாயை
சேர்தருமு ளத்த னாகி யுழல்வேனே

தாரணித னக்குள் வீறி யேசமர துட்ட னான
ராவணன்மி குத்த தானை பொடியாகச்
சாடுமுவ ணப்ப தாகை நீடுமுகி லொத்த மேனி
தாதுறைபு யத்து மாயன் மருகோனே

வாரணமு ரித்து மாதர் மேகலைவ ளைக்கை நாண
மாபலிமு தற்கொ ணாதன் முருகோனே
வாருறுத னத்தி னார்கள் சேருமதி ளுப்ப ரீகை
வாகுளகு றட்டி மேவு பெருமாளே.

904

நீரிழிவு குட்ட மீளை வாதமொடு பித்த மூல
நீள்குளிர் வெதுப்பு வேறு முளநோய்கள்
நேருறு புழுக்கள் கூடு நான்முக னெடுத்த வீடு
நீடிய விரத்த மூளை தசைதோல்சீ

பாரிய நவத்து வார நாறுமு மலத்தி லாறு
பாய்பிணி யியற்று பாவை நரிநாய்பேய்
பாறொடு கழுக்கள் கூகை தாமிவை புசிப்ப தான
பாழுட லெடுத்து வீணி லுழல்வேனே

நாரணி யறத்தி னாரி ஆறுசம யத்தி பூத
நாயக ரிடத்து காமி மகமாயி
நாடக நடத்தி கோல நீலவரு ணத்தி வேத
நாயகி யுமைச்சி நீலி திரிசூலி

வாரணி முலைச்சி ஞான பூரணி கலைச்சி நாக
வாணுத லளித்த வீர மயிலோனே
மாடமதில் முத்து மேடை கோபுர மணத்த சோலை
வாகுள குறட்டி மேவு பெருமாளே.

அத்திப்பட்டு

905

கருகியறி வகலவுயிர் விட்டுக் கிக்கிளைஞர்
கதறியழ விரவுபறை முட்டக் கொட்டியிட
கனகமணி சிவிகையில மர்த்திக் கட்டையினி
லிடைபோடாக்

கரமலர்கொ டரிசியினை யிட்டுச் சித்ரமிகு
கலையையுரி செய்துமறைகள் பற்றப் பற்றுகனல்
கணகணென எரியவுடல் சுட்டுக் கக்ஷியவர்
வழியேபோய்

மருவுபுனல் முழுகிமனை புக்குத் துக்கமறு
மனிதர் தமை யுறவுநிலை சுட்டுச் சுட்டியுற
மகிழ்வுசெய்து அழுதுபட வைத்தத் துட்டன்மதன்
மலராலே

மயல்விளைய அரிவையர்கள் கைப்பட் டெய்த்துமிக
மனமழியு மடிமையைநி னைத்துச் சொர்க்கபதி
வழியையிதுவழியெனவுரைத்துப் பொற்கழல்கள்
தருவாயே

பொருவின்மலை யரையனருள் பச்சைச் சித்ரமயில்
புரமெரிய இரணியத னுக்கைப் பற்றியியல்
புதியமுடு கரியதவ முற்றுக் கச்சியினி லுறமேவும்

புகழ்வனிதை தருபுதல்வ பத்துக் கொத்துமுடி
புயமிருப தறவுமெய்த சக்ரக் கைக்கடவுள்
பொறியரவின் மிசைதுயிலு சுத்தப் பச்சைமுகில்
மருகோனே

அரியமர கதமயிலி லுற்றுக் கத்துகட
லதுசுவற அசுரர்கிளை கெட்டுக் கட்டையற
அமரர்பதி யினியகுடி வைத்தற் குற்றமிகு
மிளையோனே

அருணமணி வெயில்பரவு பத்துத் திக்குமிகு
மழகுபொதி மதர்மகுட தத்தித் தத்திவளர்
அணியகய லுகளும்வயல் அத்திப் பட்டிலுறை
பெருமாளே.

அத்திக்கரை

906

தொக்கைக்கழு விப்பொற் றகுமுடை
சுற்றிக்கல னிட்டுக் கடிதரு
சொக்குப்புலி யப்பிப் புகழுறு களியாலே
சுத்தத்தைய கற்றிப் பெரியவர்
சொற்றப்பிய கத்தைப் புரிபுல
சுற்றத்துட னுற்றிப் புவியிடை யலையாமல்

முக்குற்றம கற்றிப் பலகலை
கற்றுப்பிழை யற்றுத் தனையுணர்
முத்தர்க்கடி மைப்பட் டிலகிய அறிவாலே
முத்தித்தவ சுற்றுக் கதியுறு
சத்தைத்தெரி சித்துக் கரையகல்
முத்திப்புண ரிக்குட் புகவரு ளருள்வாயே

திக்கெட்டும டக்கிக் கடவுள
ருக்குப்பணி கற்பித் தருளறு
சித்தத்தொட டுத்துப் படைகொடு பொருசூரர்
செச்சைப்புய மற்றுப் புகவொரு
சத்திப்படை விட்டுச் சுரர்பதி
சித்தத்துயர் கெட்டுப் பதிபெற அருள்வோனே

அக்கைப்புனை கொச்சைக் குறமக
ளச்சத்தையொ ழித்துக் கரிவரும்
அத்தத்தி லழைத்துப் பரிவுட னணைவோனே
அப்பைப்பிறை யைக்கட் டியசடை
அத்தர்க்கரு மைப்புத் திரவிரி
அத்திக்கரை யிச்சித் துறைதரு பெருமாளே.

கந்தனூர்

907

விந்துபே தித்தவடி வங்களா யெத்திசையு
மின்சரா சர்க்குலமும் வந்துலாவி
விண்டுபோய் விட்டவுடல் சிந்தைதானுற்றறியு
மிஞ்சநீ விட்டவடி வங்களாலே

வந்துநா யிற்கடைய னுெந்துஞா னப்பதவி
வந்துதா இக்கணமெ யென்றுகூற
மைந்தர்தா விப்புகழ தந்தைதா யுற்றுருகி
வந்துசே யைத்தழுவல் சிந்தியாதோ

அந்தகா ரத்திலிடி யென்பவாய் விட்டுவரு
மங்கிபார் வைப்பறையர் மங்கிமாள
அங்கைவேல் விட்டருளி யிந்த்ரலோ கத்தின்மகி
ழுண்டரே றக்கிருபை கொண்டபாலா

எந்தனு விக்குதவு சந்த்ரசே ர் வைச்சடைய
ரெந்தைபா கத்துறையு மந்தமாது
எங்குமாய் நிற்குமொரு கந்தனூர் சத்திபுக
ழெந்தைபூ சித்துமகிழ் தம்பிரானே.

வாலிகொண்டபுரம்

908

ஈயெ றும்புநரி நாய்க ணங்கழுகு
காக முண்பவுட லேசு மந்துஇது
ஏல்வ தென்றுமத மேமொ ழிந்துமத
வும்பல்போலே
ஏது மென்றனிட கோலெ னும்பரிவு
மேவி நம்பியிது போது மென்கசில
ரேய்த னங்கள்தனி வாகு சிந்தைதவச
னங்கள்பேசிச்

சீத தொங்கலழ காவ ணிந்துமணம்
வீச மங்கையர்க ளாட வெண்கவரி
சீற கொம்புகுழ லூத தண்டிகையி லந்தமாகச்
சேர்க னம்பெரிய வாழ்வு கொண்டுழலு
மாசை வெந்திடவு ஞசை மிஞ்சிசிவ
சேவை கண்டுனது பாத தொண்டனென
அன்புதாராய்

சூதி ருந்தவிடர் மேயி ருண்டகிரி
சூரர் வெந்துபொடி யாகி மங்கிவிழ
சூரி யன்புரவி தேர்ந டந்துநடு பங்கினூடச்
சோதி யந்தபிர மாபு ரந்தரனு
மாதி யந்தமுதல் தேவ ருந்தொழுது
சூழ மன்றில்நட மாடு மெந்தைமுத லன்புகூர

வாது கொண்டவுணர் மாள செங்கையயி
லேவி யண்டர்குடி யேற விஞ்சையர்கள்
மாதர் சிந்தைகளி கூர நின்றுநட
னங்கொள்வோனே
வாச கும்பதன மானை வந்துதினை
காவல் கொண்டமுரு காஎ னும்பெரிய
வாலி கொண்டபுர மேய மர்ந்துவளர்
தம்பிரானே.

திருமாந்துறை
909

ஆங்குடல்வ ளைந்து நீங்குபல்நெ கிழ்ந்து
ஆய்ஞ்சுதளர் சிந்தை தடுமாறி
ஆர்ந்துளக டன்கள் வாங்கவும றிந்து
ஆண்டுபல சென்று கிடையோடே
ஊங்கிருமல் வந்து வீங்குகுடல் நொந்து
ஓய்ந்துணர்வ ழிந்து உயிர்போமுன்
ஓங்குமயில் வந்து சேண்பெறஇ சைந்து
ஊன்றியப தங்கள் தருவாயே
வேங்கையுமு யர்ந்த தீம்புனமி ருந்த
வேந்திழையி னின்ப மணவாளா
வேண்டுமவர் தங்கள் பூண்டபத மிஞ்ச
வேண்டியப தங்கள் புரிவோனே
மாங்கனியு டைந்து தேங்கவயல் வந்து
மாண்புநெல்வி ளைந்த வளநாடா
மாந்தர்தவ ரும்பர் கோன்பரவி நின்ற
மாந்துறைய மர்ந்த பெருமாளே.

வயலூர்
910

என்றால் பிறக்கவும் என்றா லிறக்கவும்
என்றால் துதிக்கவும் கண்களாலே
என்றா லழைக்கவும் என்றால் நடக்கவும்
என்றா லிருக்கவும் பெண்டிர்வீடு
என்றால் சுகிக்கவும் என்றால் முசிக்கவும்
என்றால் சலிக்கவும் தொந்தநோயை
என்றா லெரிக்கவும் என்றால் நினைக்கவும்
என்றால் தரிக்கவும் இங்குநானார்

கன்னு நுரித்தளன் மன்னு எனக்குநல்
கர்ணு மிர்தப்பதம் தந்தகோவே
கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
கண்ணு டியிற்றடம் கண்டவேலா
மன்னு னதக்கனை முன்னுள் முடித்தலை
வன்வா ளியிற்கொளும் தங்கருபன்
மன்னு குறத்தியின் மன்னு வயற்பதி
மன்னு முவர்க்கொரு தம்பிரானே.

911

கடல்போற் கணைவிழி சிலைபோற் பிறைநுதல்
கனிபோற் றுகிரிதழ் எழிலாகும்
கரிபோற் கிரிமுலை கொடிபோற் றுடியிடை
கடிபோற் பணியரை யெனவாகும்
உடல்காட் டினிமையி லெழில்பாத் திரமிவ
ளுடையாற் கெறுவித நடையாலும்
ஒருநாட் பிரிவது மரிதாய்ச் சுழல்படும்
ஒழியாத் துயரது தவிரேனோ
குடலீர்த் தசுரர்க ளுடல்காக் கைகள்நரி
கொளிவாய்ப் பலஅல கைகள்பேய்கள்
தொலைபோர்க் களமிசை தினமேற் றமரர்கள்
குடியேற் றியகுக வுயர்தாழை
மடல்கீற் றினிலெழு விரைபூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனி லுறைவோனே
மலைமேற் குடியுறை கொடுவேட் டுவருடை
மகள்மேற் ப்ரியமுள பெருமாளே.

912

கமலத் தேகு லாவு மரிவையை
நிகர்பொற் கோல மாதர் மருள்தரு
கலகக் காம நூலை முழுதுண ரிளைஞோர்கள்
கலவிக் காசை கூர வளர்பரி
மளகற் பூர தூம கனதன
கலகத் தாலும் வானி னசையுமி னிடையாலும்
விமலச் சோதி ரூப இமகர
வதனத் தாலு நாத முதலிய
விரவுற் றுறு கால்கள் சுழலிருள் குழலாலும்

வெயிலெப் போதும் வீசு மணிவளை
அணிபொற் றோள்க ளாலும் வடுவகிர்
விழியிற் பார்வை யாலு மினியிடர் படுவேனோ

சமரிற் பூதம் யாளி பரிபிணி
கனகத் தேர்கள் யானை யவுணர்கள்
தகரக் கூர்கொள் வேலை விடுதிற லுருவோனே
சமுகப் பேய்கள் வாழி யெனஎதிர்
புகழக் கானி லாடு பரிபுர
சரணத் தேக வீர அமைமன மகிழ்வீரா

அமரர்க் கீச னுன சசிபதி
மகள்மெய்த் தோயு நாத குறமக
ளணையச் சூழு நீத கரமிசை யுறுவேலா
அருளிற் சீர்பொ யாத கணபதி
திருவக் கீசன் வாழும் வயலியி
னழகுக் கோயில் மீதில் மருவிய பெருமாளே.

913

கமையற்ற சீர்கேடர் வெகுதர்க்க கோலாலர்
கலையுற்று மாயாது மந்த்ரவாதக்
கடைகெட்ட ஆபாத முறுசித்ர கோமாளர்
கருமத்தின் மாயாது கொண்டுபூணுஞ்

சமயத்த ராசார நியமத்தின் மாயாது
சகளத்து ளோநாளு நண்புளோர்செய்
சரியைக்கி யாயோக நியமத்தின் மாயாது
சலனப்ப டாஞானம் வந்துதாராய்

அமரிற்சு ராபான திதிபுத்ர ராலோக
மதுதுக்க மேயாக மிஞ்சிடாமல்
அடமிட்ட வேல்வீர திருவொற்றி யூர்நாதர்
அருணச்சி காநீல கண்டபார

மமபட்ச மாதேவ ரருமைச்சு வாமிநி
மலநிட்க ளாமாயை விந்துநாதம்
வரசத்தி மேலான பரவத்து வேமேலை
வயலிக்குள் வாழ்தேவர் தம்பிரானே.

914

குருதி கிருமிகள் சலமல மயிர்தசை
மருவு முருவமு மலமல மழுகொடு
குலவு பலபணி பரிமள மறுசுவை மடைபாயல்
குளிரி லுறையக மிவைகளு மலமல
மனைவி மகவனை யநுசர்கள் முறைமுறை
குனகு கிளைஞர்க ளிவர்களு மலமல மொருநாளூ
சுருதி வழிமொழி சிவகலை யலதினி
யுலக கலைகளு மலமல மிலகிய
தொலைவி லுனைநினை பவருற வலதினி யயலார்பால்
சுழல்வ தினிதென வசமுடன் வழிபடு
முறவு மலமல மருளலை கடல்கழி
துறைசெ லறிவினை யெனதுள மகிழ்வுற
அருள்வாயே
விருது முரசுகள் மொகுமொகு மொகுவென
முகுற ககபதி முகில்திகழ் முகடதில்
விகட இறகுகள் பறையிட அலகைகள் நடமாட
விபுத ரரகர சிவசிவ சரணென
விரவு கதிர்முதி ரிமகரன் வலம்வர
வினைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும்
வடிவேலா
மருது நெறுநெறு நெறுவென முறிபட
வுருளு முரலொடு தவழரி மருகசெ
வனச மலர்சுனை புலிநுழை முழையுடை யவிராலி
மலையி லுறைகிற அறுமுக குருபர
கயலு மயிலையு மகரமு முகள்செநெல்
வயலி நகரியி லிறையவ அருள்தரு பெருமாளே.

915

குயிலோமொழி அயிலோவிழி கொடியோஇடை
பிடியோநடை
குறியீர்தனி செறியீரினி யென்றுபாடிக்
குனகாவடி பிடியாவிதழ் கடியாநகம் வகிராவுடை
குலையாவல்கு லளையாவிரு கொங்கைமீதிற்
பயிலாமன மகிழ்மோகித சுகசாகர மடமாதர்கள்
பகையேயென நினையாதுற நண்புகூரும்

பசுபாசமு மகிலாதிக பரிபூரண புரணுகர
பதிநேருநி னருளால்மெயு ணர்ந்திடேனோ
வெயில்வீசிய கதிராயிர வருணோதய விருணாசன
விசையேழ்பரி ரவிசேயெனு மங்கராசன்
விசிகாகவ மயல்பேடிகைபடுபோதுசன்னிதியானவன்
விதிதேடிய திருவாளிய ரன்குமாரா
அயலூருறை மயிலாபல கலைமானுழை புலிதோல்களை
யகிலாரம தெறிகாவிரி வண்டல்மேவும்
அதிமோகர வயலூர்மிசை திரிசேவக முருகேசுர
அமராபதி யதில்வாழ்பவர் தம்பிரானே.

916

கோவை வாயி தழுக்குந் தாக போக மளிக்குங்
கோதை மாதர் முலைக்குங் குறியாலுங்
கோல மாலை வளைக்குந் தோளி னாலு மணத்தங்
கோதி வாரி முடிக்குங் குழலாலும்
ஆவி கோடி யவிக்குஞ் சேலி னாலு மயக்குண்
டாசை யாயினு நித்தந் தளராதே
ஆசி லாத மறைக்குந் தேடொ ணாதொ ருவர்க்கொன்
றுடல் தாள்க ளெனக்கின் றருள்வாயே
சேவி லேறு நிருத்தன் தோகை பாக னளிக்குந்
த்யாக சீல குணத்தன் திருமாலும்
தேடொ ணாத பதத்தன் தீதி லாத மனத்தன்
தேயு வான நிறத்தன் புதல்வோனே
காவி டாத திருச்செங் கோடு நாடு தனக்குங்
காவி சூழ்வ யலிக்கும் ப்ரியமானய்
காதி மோதி யெதிர்க்குஞ் சூர தீரர் ப்ரமிக்குங்
கால னுடல் தவிர்க்கும் பெருமாளே.

917

தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணைநி னைப்பி லடியேனைத்
தாதவிழ்க டுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்தி யவிராலி

மாமலையி னிற்ப நீகருதி யுற்று
வாவெனஅ ழைத்தென் மனதாசை
மாசினைய றுத்து ஞானமுத ளித்த
வாரமினி நித்த மறவேனே
காமனையெ ரித்த தீநயன நெற்றி
காதியசு வர்க்க நதிவேணி
கானிலுறை புற்றி லாடுபணி யிட்ட
காதுடைய அப்பர் குருநாதா
சோமனொ டருக்கன் மீனுலவு மிக்க
சோலைபுடை சுற்று வயலூரா
சூடிய தடக்கை வேல்கொடுவி டுத்து
சூர்தலை துணித்த பெருமாளே.

918

திருவு ரூப நேராக அழக தான மாமாய
திமிர மோக மானார்கள் கலைமூடுஞ்
சிகரி யூடு தேமாலை யடவி யூடு போயாவி
செருகு மால னுசார வினையேனைக்
கருவி மூது சீரோதி யடிமை பூண லாமாறு
கனவி லாள்சு வாமீநின் மயில்வாழ்வுங்
கருணை வாரி கூரேக முகமும் வீர மாருத
கழலு நீப வேல்வாகு மறவேனே
சருவ தேவ தேவாதி நமசி வாய நாமாதி
சயில நாரி பாகாதி புதல்வோனே
சதம கீவல் போர்மேவு குலிச பாணி மால்யானை
சகச மான சாரீசெ யிளையோனே
மருவு லோக மீரேழு மளவி டாவொ ணுவான
வரையில் வீசு தாள்மாயன் மருகோனே
மநுநி யாய சோணாடு தலைமை யாக வேமேலை
வயலி மீது வாழ்தேவர் பெருமாளே.

919

நெய்த்த சுரிகுழ லறலோ முகிலோ
பத்ம நறுநுதல் சிலையோ பிறையோ
நெட்டை யிணைவிழி கணையோ பிணையோ
இனிதூறும்

நெக்க அமுதிதழ் கனியோ துவரோ
சுத்த மிடறது வளையோ கமுகோ
நிற்கு மிளமுலை குடமோ மலையோ
அறவேதேய்ந்

தெய்த்த இடையது கொடியோ துடியோ
மிக்க திருவரை அரவோ ரதமோ
இப்பொ னடியிணை மலரோ தளிரோ எனமாலாய்
இச்சை விரகுடன் மடவா ருடனே
செப்ப மருளுட னவமே திரிவேன்
ரத்ன பரிபுர இருகா லொருகால் மறவேனே

புத்த ரமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க அனல்வய மிகஏ டுயவே உமையாள்தன்
புத்ர னெனஇசை பகர்நூல் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம்வாழ்
பொற்ப கவுணியர் பெருமா னுருவாய்
வருவோனே

சத்த முடையஷண் முகனே குகனே
வெற்பி லெறிசுட ரயிலா மயிலா
சத்தி கணபதி யிளையா யுளையா யொளிகூருஞ்
சக்ர தரஅரி மருகா முருகா
உக்ர இறையவர் புதல்வா முதல்வா
தட்ப முளதட வயலூ ரியலூர் பெருமாளே.

920

மூலம றைக்கவும் வாசலி லேதலை
மறைய நிற்கவும் ஆசையு ளோரென
முகிழ்ந கைச்சிறு தூதிணை யேவவு முகமோடே
முகம ழுத்தவும் ஆசைகள் கூறவு
நகம ழுத்தவும் லீலையி லேயுற
முறைம சக்கவும் வாசமு லாமல ரணைமீதே
கலைநெ கிழ்க்கவும் வாலிப ரானவர்
உடல்ச ளப்பட நாள்வழி நாள்வழி
கறைய ழிக்கவு நானென வேயணி விலையீதே
கடிய சத்திய மாமென வேசொலி
யவர்கொ டப்பண மாறிட வீஞெடு
கடுக டுத்திடு வாரொடு கூடிய தமையாதோ

மலையை மத்தென வாசுகி யேகடை
கயிறெ னத்திரு மாலொரு பாதியு
மருவு மற்றது வாலியு மேலிட அலையாழி

வலய முட்டவொ ரோசைய தாயொலி
திமிதி மித்திமெ னவெழ வேயலை
மறுகி டக்கடை யாவெழ மேலெழு மமுதோடே

துலைவ ருத்திரு மாமயில் வாழ்வுள
வயலை யற்புத னேவினை யானவை
தொடர றுத்திடு மாரிய கேவலி மணவாளா

துவள்க டிச்சிலை வேள்பகை வாதிரு
மறுவொ ரெட்டுட னுயிர மேலொரு
துகள றுத்தணி யாரழ காசுரர் பெருமாளே.

921

மேகலை நெகிழ்த்துக் காட்டி வார்குழல் விரித்துக் காட்டி
வேல்விழி புரட்டிக் காட்டி யழகாக
மேனியை மினுக்கிக் காட்டி நாடக நடித்துக் காட்டி
வீடுக ளழைத்துக் காட்டி மதராசன்

ஆகம முரைத்துக் காட்டி வாரணி தனத்தைக் காட்டி
யாரொடு நகைத்துக் காட்டி விரகாலே
ஆதர மனத்தைக் காட்டி வேசைகள் மயக்கைக் காட்ட
ஆசையை யவர்க்குக் காட்டி யழிவேனோ

மோகன விருப்பைக் காட்டி ஞானமு மெடுத்துக் காட்டி
மூதமிழ் முனிக்குக் கூட்டு குருநாதா
மூவுல களித்துக் காட்டி சேவலை யுயர்த்திக் காட்டு
மூரிவில் மதற்குக் காட்டு வயலூரா

வாகையை முடித்துக் காட்டி கானவர் சமர்த்தைக் காட்டி
வாழ்மயில் நடத்திக் காட்டு மிளையோனே
மாமலை வெதுப்பிக் காட்டி தானவர் திறத்தைக் காட்டி
வானவர் சிரத்தைக் காத்த பெருமாளே.

922

வாளின் முனையினு நஞ்சினும் வெஞ்சம
ராஜ நடையினு மம்பதி னும்பெரு
வாதை வகைசெய்க ருங்கணு மெங்கணு மரிதான

வாரி யமுதுபொ சிந்துக சிந்தசெ
வாயு நகைமுக வெண்பலு நண்புடன்
வாரு மிருமெனு மின்சொலு மிஞ்சிய பனிநீருந்
தூளி படுநவ குங்கும முங்குளி
ரார மகில்புழு குப்புனு சம்ப்ரம
சோதி வளர்வன கொங்கையு மங்கையு
மெவரேனுந்
தோயு மளறெனி தம்பமு முந்தியு
மாயை குடிகொள்கு டம்பையுள் மன்பயில்
சூளை யரையெதிர் கண்டும ருண்டிட
லொழிவேனோ
காளி திரிபுரை யந்தரி சுந்தரி
நீலி கவுரிப யங்கரி சங்கரி
காரு ணியசிவை குண்டலி சண்டிகை த்ரிபுராரி
காதல் மனைவிப ரம்பரை யம்பிகை
ஆதி மலைமகள் மங்கலை பிங்கலை
கான நடனமு கந்தவள் செந்திரு அயன்மாது
வேளி னிரதிய ருந்ததி யிந்திர
தேவி முதல்வர்வ ணங்குத்ரி யம்பகி
மேக வடிவர்பின் வந்தவள் தந்தரு ளிளையோனே
வேலு மயிலுநி னைந்தவர் தந்துயர்
தீர வருள்தரு கந்தநி ரந்தர
மேலை வயலையு கந்துள நின்றருள் பெருமாளே.

923

விகட பரிமள ம்ருகமத இமசல
வகிர படிரமு மளவிய களபமு
மட்டித்தி தழ்த்தொடைமு டித்துத்தெ ருத்தலையில்
உலவி யிளைஞர்கள் பொருளுட னுயிர்கவர்
கலவி விதவிய னரிவையர் மருள்வலை
யிட்டுத்து வக்கியிடர் பட்டுத் தியக்கியவர்
விரவு நவமணி முகபட எதிர்பொரு
புரண புளகித இளமுலை யுரமிசை
தைக்கக் கழுத்தொடுகை யொக்கப்பி ணித்திறுகி
யன்புகூர
விபுத ரமுதென மதுவென அறுசுவை
அபரி மிதமென இலவிதழ் முறைமுறை

துய்த்துக்க ளித்துங்கம் வைத்துப்ப லிற்குறியின்
வரையு முறைசெய் து முனிவரு மனவலி
கரையு மரிசன பரிசன ப்ரியவுடை
தொட்டுக்கு லைத்துநுதல் பொட்டுப்ப டுத்திமதர்
விழிகள் குழைபொர மதிமுகம் வெயர்வெழ
மொழிகள் பதறிட ரதிபதி கலைவழி
கற்றிட்ட புட்குரல்மி டற்றிற்ப யிற்றிமடு
வுந்திமூழ்கிப்

புகடு வெகுவித கரணமு மருவிய
வகையின் முகிலென இருளென வனமென
ஒப்பித்த நெய்த்தபல புட்பக்கு ழற்சரிய
அமுத நிலைமல ரடிமுதல் முடிகடை
குமுத பதிகலை குறைகலை நிறைகலை
சித்தத்த ழுத்தியநு வர்க்கத்து ருக்கியொரு
பொழுதும் விடலரி தெனுமநு பவமவை
முழுது மொழிவற மருவிய கலவியி
தத்துப்ரி யப்படந டித்துத்து வட்சியினில்
நைந்துசோரப்

புணரு மிதுசிறு சுகமென இகபரம்
உணரு மறிவிலி ப்ரமைதரு திரிமலம்
அற்றுக்க ருத்தொருமை யுற்றுப்பு லத்தலையில்
மறுகு பொறிகழல் நிறுவியெ சிறிதுமெய்
உணர்வு முணர்வுற வழுவற வொருஜக
வித்தைக்கு ணத்ரயமும் நிர்த்தத்து வைத்துமறை
புகலு மநுபவ வடிவினை யளவறு
அகில வெளியையு மொளியையு மறிசிவ
தத்வப்ர சித்திதனை முத்திச்சி வக்கடலை
யென்றுசேர்வேன்

திகுட திகுகுட திகுகுட திகுகுட
தகுட தகுகுட தகுகுட தகுகுட
திக்குத்தி குத்திகுட தக்குத்த குத்தகுட
டுமிட டுமிமிட டுமிமிட டுமிமிட
டமட டமமட டமமட டமமட
டுட்டுட்டு டுட்டுமிட டட்டட்ட டட்டமட
திகுர்தி திகுதிகு திகுகுர்தி திகுகுர்தி
தகுர்தி தகுதகு தகுகுர்தி தகுகுர்தி
திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி
என்றுபேரி

திமிலை கரடிகை பதலைச லரிதவில்
தமர முரசுகள் குடமுழ வொடுதுடி
சத்தக்க ணப்பறைகள் மெத்தத்தொ னித்ததிர
அசுரர் குலஅரி அமரர்கள் ஜயபதி
குசல பசுபதி குருவென விருதுகள்
ஒத்தத்தி ரட்பலவு முற்றிக்க லிக்களழு
சிகர கொடுமுடி கிடுகிடு கிடுவென
மகர சலநிதி மொகுமொகு மொகுவென
எட்டுத்தி சைக்களிறு மட்டற்ற றப்பிளிற
நின்றசேடன்

மகுட சிரதலம் நெறுநெறு நெறுவென
அகில புவனமும் ஹரஹர ஹரவென
நக்ஷத்ர முக்கிவிழ வக்கிட்ட துட்டகுண
நிருதர் தலையற வடிவெனு மலைசொரி
குருதி யருவியின் முழுகிய கழுகுகள்
பக்கப்ப ழுத்தவுடல் செக்கச்சி வத்துவிட
வயிறு சரிகுடல் நரிதின நிணமவை
எயிறு அலகைகள் நெடுகிய குறளிகள்
பக்ஷித்து நிரத்தமிட ரக்ஷித்த லைப்பரவி யும்பர்வாழ

மடிய அவுணர்கள் குரகத கஜரத
கடக முடைபட வெடிபட எழுகிரி
அற்றுப்ப றக்கவெகு திக்குப்ப டித்துநவ
நதிகள் குழைதர இபபதி மகிழ்வுற
அமர்செய் தயில்கையில் வெயிலெழ மயில்மிசை
அக்குக்கு டக்கொடிசெ ருக்கப்பெ ருக்கமுடன்
வயலி நகருறை சரவண பவகுக
இயலு மிசைகளு நடனமும் வகைவகை
சத்யப்ப டிக்கினித கஸ்த்யர்க்கு ணர்த்தியருள்
தம்பிரானே.

924

அரிமரு கோனேநமோவென் றறுதியி லானேநமோவென்
றறுமுக வேளே நமோவென் றுனபாதம்
அரகர சேயே நமோவென் றிமையவர் வாழ்வே
நமோவென்
றருணசொ ரூபா நமோவென் றுளதாசை

பரிபுர பாதா சுரேசன் றருமக ளோதா வரரவின்
பகைமயில் வேலா யுதாடம் பரநாளும்
பகர்தலி லாதாளை யேதுஞ் சிலதறி யாவேழைநானுன்
பதிபசு பாசோப தேசம் பெறவேணும்
கரதல சூலாயு தாமுன் சலபதி போலார வாரங்
கடினசு ராபான சாமுண் டியுமாடக்
கரிபரி மேலேறு வானுஞ் செயசெய சேளுப தீயென்
களமிசை தானேறி யேயஞ் சியசூரன்
குரல்விட நாய்பேய்கள் பூதங் கழுகுகள் கோமாயு காகங்
குடல்கொள வேபூச லாடும் பலதோளா
குடதிசை வாராழி போலும் படர்நதி காவேரி சூழுங்
குளிர்வய லூரார மேவும் பெருமாளே.

925

ஆரமுலை காட்டி மாரநிலை காட்டி
யாடையணி காட்டி அநுராக
ஆலவிழி காட்டி ஓசைமொழி காட்டி
ஆதரவு காட்டி எவரோடும்
ஈரநகை காட்டி நேரமிகை காட்டி
யேவிணைகள் காட்டி யுறவாடி
ஏதமயல் காட்டு மாதாவலை காட்டி
யீடழிதல் காட்ட லமையாதோ
வீரவப ராட்டு சூரர்படை காட்டில்
வீழனலை யூட்டி மயிலூர்தி
வேலையுறை நீட்டி வேலைதனி லோட்டு
வேலவிளை யாட்டு வயலூரா
சேரமலை நாட்டில் வாரமுடன் வேட்ட
சீலிகுற வாட்டி மணவாளா
தேசுபுகழ் தீட்டி யாசைவரு கோட்டி
தேவாசிறை மீட்ட பெருமாளே.

926

இகல்கடின முகபடவி சித்ரத்து திக்கைமத
மத்தக்க ளிற்றையெதிர்
புளகதன மிளகஇனி தெட்டிக்க முத்தொடுகை
கட்டிப்பி ணித்திறுகி

யிதழ்பொதியி னமுதுமுறை மெத்தப்பு சித்துருகி
முத்தத்தை யிட்டுநக தந்தமான

இடுகுறியும் வரையையுற நெற்றித்த லத்திடையி
லெற்றிக்க லக்கமுற
இடைதுவள வுடைகழல இட்டத்த ரைப்பையது
தொட்டுத்தி ரித்துமிக
இரணமிடு முரணர்விழி யொக்கக்க றுத்தவிழி
செக்கச்சி வக்கவளை செங்கைசோர

அகருவிடு ம்ருகமதம ணத்துக்க னத்தபல
கொத்துக்கு ழற்குலைய
மயில்புறவு குயில்ஞிமிறு குக்கிற்கு ரற்பகர
நெக்குக்க ருத்தழிய
அமளிபெரி தமளிபட வக்கிட்டு மெய்க்கரண
வர்க்கத்தி னிற்புணரு மின்பவேலை

அலையின்விழி மணியின்வலை யிட்டுப்பொ ருட்கவர
கட்டுப்பொ றிச்சியர்கள்
மதனகலை விதனமறு வித்துத்தி ருப்புகழை
யுற்றுத்து திக்கும்வகை
அபரிமித சிவஅறிவு சிக்குற்று ணர்ச்சியினில்
ரக்ஷித்த ளித்தருள்வ தெந்தநாளோ

திகுடதிகு தகுடதகு திக்குத்தி குத்திகுட
தத்தித்த ரித்தகுட
செகணசெக சகணசக செக்கச்செ கச்செகண
சத்தச்ச கச்சகண
திகுதிகுர்தி தகுதகுர்த திக்குத்தி குத்திகுர்தி
தக்குத்த குத்தகுர்த திங்குதீதோ

திரிரிதிரி தரிரிதரி தித்தித்தி ரித்திரிரி
தத்தித்த ரித்தரிரி
டிகுடடகு டகுடடிகு டிட்டிட்டி குட்டிகுடி
டட்டட்ட குட்டகுட
தெனதிமிர்த தவில்மிருக டக்கைத்தி ரட்சலிகை
பக்கக்க ணப்பறைத வண்டைபேரி

வகைவகையின் மிகவதிர வுக்ரத்த ரக்கர்படை
பக்கத்தி னிற்சரிய

எழுதுதுகில் முழுதுலவி பட்டப்ப கற்பருதி
விட்டத்த மித்ததென
வருகுறளி பெருகுகுரு திக்குட்கு ளித்துழுது
தொக்குக்கு னிப்புவிட வென்றவேலா

வயலிநகர் பயில்குமர பத்தர்க்க நுக்ரகவி
சித்ரப்ர சித்தமுறு
அரிமருக அறுமுகவ முக்கட்க ணத்தர்துதி
தத்வத்தி றச்சிகர
வடகுவடில் நடனமிடு மப்பர்க்கு முத்திநெறி
தப்பற்று ரைக்கவல தம்பிரானே

927

இலகு முலைவிலை யசடிகள் கசடிகள்
கலைகள் பலவறி தெருளிகள் மருளிக
ளெயிறு கடிபடு முதடிகள் பதடிகள் எவரோடும்
இனிய நயமொழி பழகிக ளழகிகள்
மடையர் பொருள்பெற மருவிகள் சருவிகள்
யமனு மிகையென வழிதரு முழிதரும் விழிவாளால்

உலக மிடர்செயு நடலிகள் மடலிகள்
சிலுகு சிலரொடு புகலிக ளிகலிக
ளுறவு சொலவல தூரகிகள் விரகிகள் பிறைபோலே
உகிர்கை குறியிடு கமுகிகள் சமுகிகள்
பகடி யிடவல கபடிகள் முகடிகள்
உணர்வு கெடும்வகை பருவிக ளுருவிக ளுறவாமோ

அலகை புடைபட வருவன பொருவன
கலக கணநிரை நகுவன தகுவன
அசுரர் தசைவழி நிமிர்வன திமிர்வன பொடியாடி
அலரி குடதிசை யடைவன குடைவன
தரும வநிதையு மகிழ்வன புகழ்வன
அகில புவனமு மரகர கரவென அமர்வேள்வி

திலத நுதலுமை பணிவரு செயமகள்
கலையி னடமிட வெரிவிரி முடியினர்
திரள்ப லுயிருடல குவடுக ளெனநட மயிலேறிச்
சிறிது பொழுதினி லயில்விடு குருபர
அறிவு நெறியுள அறுமுக இறையவ
த்ரிசிர கிரியயல் வயலியி லினிதுறை பெருமாளே.

திருத்தவத்துறை

928

காரணி யுங்குழ லைக்கு வித்திடு
கோகன கங்கொடு மெத்தெ னப்பிறர்
காணவ ருந்திமு டித்தி டக்கடு விரகாலே
காதள வுங்கய லைப்பு ரட்டிம
ருதிகள் வஞ்சமி குத்தி டப்படி
காமுக ரன்புகு வித்த கைப்பொரு ளூறவாகிப்
பூரண கும்பமெ னப்பு டைத்தெழு
சீதள குங்கும மொத்த சித்திர
பூஷித கொங்கையி லுற்று முத்தணி பிறையான
போருவை யொன்றுநெ கிழ்த்து ருக்கிமெய்
யாரையும் நெஞ்சைவி லைப்ப டுத்திடு
பூவையர் தங்கள்ம யக்கை விட்டிட அருள்வாயே
வீரபு யங்கிரி யுக்ர விக்ரம
பூத கணம்பல நிர்த்த மிட்டிட
வேக முடன்பறை கொட்டி டக்கழு கினமாட
வீசிய பம்பர மொப்பெ னக்களி
வீசந டஞ்செய்வி டைத்த னித்துசர்
வேதப ரம்பரை யுட்க ளித்திட வரும்வீரா
சீரணி யுந்திரை தத்து முத்தெறி
காவிரி யின்கரை மொத்து மெத்திய
சீர்புனை கின்றதி ருத்த வத்துறை வரும்வாழ்வே
சீறியெ திர்ந்தவ ரக்க ரைக்கெட
மோதிய டர்ந்தருள் பட்ச முற்றிய
தேவர்கள்தஞ்சிறை வெட்டிவிட்டருள் பெருமாளே.

929

நிரைத்த நித்தில நீள்மணி மாலைகள்
பொறுத்த வெற்பிணை மார்முலை மேலணி
நெறித்த நெய்க்குழல் வாள்விழி மாமதி முகமானுர்
நெளித்த சிற்றிடை மேல்கலை யாடையை
யுடுத்தி யத்தமு ளோர்தமை யேமயல்
நிரப்பி நித்தமும் வீதியில் நேருறு நெறியாலே

கரைத்தி தக்குயில் போல்மொழி மாதர்கள்
வலைக்கு ளிற்சுழ லாவகை யேயுன
கழற்று தித்திடு வாழ்வது தான்மன துறமேவிக்

கதித்த பத்திமை சாலடி யார்சபை
மிகுத்தி ழிக்குண பாதக னேனுயர்
கதிக்க டுத்துயர் வாகவு மேயரு ளுரையாதோ

வரைத்த நுக்கரர் மாதவ மேவின
ரகத்தி டத்தினில் வாழ்சிவ னுர்திரு
மணிச்செ விக்குள்மெய்ஞ் ஞானம தோதிய
வடிவேலா

மதித்த முத்தமி ழாய்வினர் மேலவ
ருரைத்து ளத்திரு வாசக மானது
மனத்து ளொத்தழ கார்புகழ் வீசிய மணிமாடத்

திரைக்க டற்பொரு காவிரி மாநதி
பெருக்கெ டுத்துமெ பாய்வள நீர்பொலி
செழித்த நெற்செநெல் வாரிக ளேகுவை குவையாகச்

செருக்கு செய்ப்பதி வாழ்முரு காவறம்
வளர்த்த நித்யகல் யாணிக்ரு பாகரி
திருத்த வத்துறை மாநகர் தானுறை பெருமாளே.

பூவாளூர்

930

காலன் வேற்கணை யீர்வா ளாலமு
நேர்க ணுற்கொலை சூழ்மா பாவிகள்
காம சாத்திர வாய்பா டேணிக ளெவரேனுங்

காத லார்க்கும்வி னுவாய் கூறிகள்
போக பாத்திர மாமூ தேவிகள்
காசு கேட்டிடு மாயா ரூபிக ளதிமோக

மாலை மூட்டிகள் வானூ டேநிமிர்
ஆனை போற்பொர நேரே போர்முலை
மார்பு காட்டிகள் நாணு பேதக மெனமாயா

மாப ராக்கிக ளோடே சீரிய
போது போக்குத லாமோ நீயினி
வாவெ னுப்பரி வாலே யாள்வது மொருநாளே

பால ருத்திரு வாயா லோதிய
ஏடு நீர்க்கெதிர் போயே வாதுசெய்
பாடல் தோற்றிரு நாலா மாயிர — சமண்மூடர்

பாரின் மேற்கழு மீதே யேறிட
நீறி டாத்தமிழ் நாடி டேறிட
பாது காத்தரு ளாலே கூனிமி — ரிறையோனும்

ஞால மேத்திய தோர்மா தேவியும்
ஆல வாய்ப்பதி வாழ்வா மாறெணு
ஞான பாக்கிய பாலா வேலவ — மயில்வீரா

ஞான தீக்ஷித சேயே காவிரி
யாறு தேக்கிய கால்வாய் மாமழ
நாடு போற்றிய பூவா ளூருறை — பெருமாளே.

திருப்பராய்த்துறை

931

வாசனை மங்கையர் போற்று சிற்றடி
பூஷண கிண்கிணி யார்ப்ப ரித்திட
மாமலை ரண்டென நாட்டு மத்தக — முலையானை

வாடைம யங்கிட நூற்ற சிற்றிழை
நூலிடை நன்கலை தேக்க இக்குவில்
மாரன்வி டுங்கணை போற்சி வத்திடு — விழியார்கள்

நேசிகள் வம்பிக ளாட்ட மிட்டவர்
தீயர்வி ரும்புவர் போற்சு ழற்றியெ
நீசனெ னும்படி யாக்கி விட்டொரு — பிணியான

நீரின்மி குந்துழ லாக்கை யிற்றிட
யோகமி குந்திட நீக்கி யிப்படி
நீயக லந்தனில் வீற்றி ருப்பது — மொருநாளே

தேசம டங்கலு மேத்து மைப்புய
லாயனெ டுந்தகை வாழ்த்த வச்சிர
தேகமி லங்கிய தீர்க்க புத்திர — முதல்வோனே

தீரனெ னும்படி சாற்று விக்ரம
சூரன டுங்கிட வாய்த்த வெற்புடல்
தேயந டந்திடு கீர்த்தி பெற்றிடு — கதிர்வேலா

மூசளி பம்பிய நூற்றி தழ்க்கம
லாசனன் வந்துல காக்கி வைத்திடு
வேதன கந்தையை மாற்றி முக்கண ஏறிவாக
மூதறி வுந்திய தீக்ஷை செப்பிய
ஞானம்வி ளங்கிய மூர்த்தி யற்புத
மூவரி லங்குப ராய்த்து றைப்பதி பெருமாளே.

தென்கடம்பந்துறை

932

புணரியும ணங்கனம் புஞ்சுரும் புங்கருங்
கயலிநெடு கெண்டையுஞ் சண்டனும் கஞ்சமும்
புதுநிலவ ருந்தியுந் துஞ்சுநஞ் சும்பொருப்
பெறிவேலும்
பொருவெனஇ கன்றகன் றங்குமிங் குஞ்சுழன்
றிடைகடைசி வந்துவஞ் சம்பொதிந் திங்கிதம்
புவியிளைஞர் முன்பயின் றம்பொனின் கம்பிதக்
குழைமோதிக்
குணலையொடு மிந்த்ரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரிந்தருஞ் சங்கடஞ் சந்ததங்
கொடுமைசெய் து சங்கொடுஞ் சிங்கிதங் குங்கடைக்
கணினூர்பால்
குலவுபல செந்தனந் தந்துதந் தின்புறுந்
த்ரிவிதகர ணங்களுங் கந்தநின் செம்பதங்
குறுகும்வகை யந்தியுஞ் சந்தியுந் தொந்தமற்
றமைவேனோ
துணர்விரிக டம்பமென் தொங்கலும் பம்புறும்
புழுகுமச லம்பசுஞ் சந்தனங் குங்குமந்
தொகுகளப முந்துதைந் தென்றுநன் கொன்றுபத்
திருதோளுந்
தொலைவில்சண்மு கங்களுந் தந்த்ரமந் த்ரங்களும்
பழநிமலை யும்பரங் குன்றமுஞ் செந்திலுந்
துதிசெயுமெ யன்பர்தஞ் சிந்தையுஞ் சென்று
செய்ப் பதிவாழ்வாய்
கணபணபு யங்கமுங் கங்கையுந் திங்களுங்
குரவுமறு குங்குறுந் தும்பையுங் கொன்றையுங்
கமழ்சடில சம்புவுங் கும்பிடும் பண்புடைக்
குருநாதா

கனகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
குறுமுனிக மண்டலங் கொண்டுமுன் கண்டிடுங்
கதிசெய்நதி வந்துறுந் தென்கடம் பந்துறைப்
பெருமாளே.

கருவூர்

933

மதியால்வித் தகனாகி—மனதாலுத் தமனாகிப்
பதிவாகிச் சிவஞான—பரயோகத் தருள்வாயே
நிதியேநித் தியமேயென்—நினைவேநற் பொருளாயோய்
கதியேசொற் பரவேளே—கருவூரிற் பெருமாளே.

934

சஞ்சல சரித பரநாட்டர்கள்
மந்திரி குமரர் படையாட்சிகள்
சங்கட மகிபர் தொழஆக்கினை முடிசூடித்
தண்டிகை களிறு பரிமேற்றனி
வெண்குடை நிழலி லுலவாக்கன
சம்ப்ரம விபவ சவுபாக்கிய முடையோராய்க்
குஞ்சமும் விசிற இறுமாப்பொடு
பஞ்சணை மிசையி லிசையாத்திரள்
கொம்புகள் குழல்கள் வெகுவாத்திய மியல்கீதங்
கொங்கணி மகளிர் பெருநாட்டிய
நன்றென மனது மகிழ்பார்த்திபர்
கொண்டய னெழுதும் யமகோட்டியை யுணராரே
பஞ்சவர் கொடிய வினைநூற்றுவர்
வென்றிட சகுனி கவருற்பொருள்
பங்குபட யவனி பதிதோற்றிட அயலேபோய்ப்
பண்டையில் விதியை நினையாப்பனி
ரண்டுடை வருஷ முறையாப்பல
பண்புடன் மறைவின் முறையாற்றிரு வருளாலே
வஞ்சனை நழுவி நிரைமீட்சியில்
முந்துத முடைய மனைவாழ்க்கையின்
வந்தபி னுரிமை யதுகேட்டிட இசையாநாள்
மண்கொள விசையன் விடுதேர்ப்பரி
யுந்தினன் மருக வயலூர்க்குக
வஞ்சியி லமரர் சிறைமீட்டருள் பெருமாளே.

935

முகிலள கஞ்சரி யாக்குழை யிகல்வன கண்சிவ வாச்சிவ
முறுவல்மு கங்குறு வேர்ப்பெழ வநுபோக
முலைபுள கஞ்செய வார்த்தையு நிலையழி யும்படி
கூடப்பிட
முகுளித பங்கய மாக்கர நுதல்சேரத்
துயரொழு குஞ்செல பாத்திர மெலியமி குந்துத ராக்கினி
துவளமு யங்கிவி டாய்த்தரி வையர்தோளின்
துவயலி நின்றன வ்யாத்தமும் வயலியல் வஞ்சியில்
மேற்பயில்
சொருபமு நெஞ்சிலி ராப்பகல் மறவேனே
சகலம யம்பர மேச்சுரன் மகபதி யுய்ந்திட வாய்த்தருள்
சரவண சம்பவ தீர்க்கஷண் முகமாகிச்
சருவுக்ர வுஞ்சசி லோச்சய முருவவெ றிந்தகை
வேற்கொடு
சமரமு கந்தனில் நாட்டிய மயிலேறி
அகிலமு மஞ்சிய வாக்ரம விகடப யங்கர ராக்கத
வசுரர கங்கெட வார்த்திடு கொடிகூவ
அமரர டங்கலு மாட்கொள வமரர்த லங்குடி யேற்றிட
வமரரை யுஞ்சிறை மீட்டருள் பெருமாளே.

936

இளநிர்க் குவட்டுமுலை யமுதத் தடத்தைகனி
யிரதக் குடத்தையெணு மரபோடே
இருகைக் கடைத்துஇடை துவளக் குழற்சரிய
இதழ்சர்க்க ரைப்பழமொ டுறழூறல்
முளரிப்பு வொத்தமுக முகம்வைத் தருத்திநல
முதிரத்து வறபஅலகுல் மிசைமூழ்கி
மொழிதத்தை யொப்பகடை விழிகட் சிவப்பமளி
முழுகிச்சு கிக்கும்வினை யறஆளாய்
களினப் பதக்கழலு மொளிர்செச்சை பொற்புயமெ
னயனத்தி லுற்றுநட மிடும்வேலா
கரனுக் கமைத்தகொடி யிரதச்சு தக்களவ
னறைபுட்ப நற்றுளவன் மருகோனே

களபத தனத்திசுக சரசக் குறத்திமுக
கமலப்புயத்துவளி மணவாளா
கடலைக் குவட்டவுணை யிரணப் படுத்தியுயர்
கருவைப் பதிக்குளுறை பெருமாளே.

937

தசையா கியகற்றையினுல் முடியத்
தலைகா லளவொப் பனையாயே
தடுமா றுதல்சற் றொருநா ளுலகிற்
றவிரா வுடலத் தினைநாயேன்
பசுபா சமும்விட் டறிவா லறியப்
படுபூ ரணநிட் களமான
பதிபா வனையுற் றநுபூ தியிலப்
படியே யடைவித் தருள்வாயே
அசலே சுரர்புத் திரனே குணதிக்
கருணோ தயமுத் தமிழோனே
அகிலா கமவித் தகனே துகளற்
றவர்வாழ் வயலித் திருநாடா
கசிவா ரிதயத் தமிர்தே மதுபக்
கமலா லயன்மைத் துனவேளே
கருணா கரசற் குருவே குடகிற்
கருவூ ரழகப் பெருமாளே.

938

நித்தப் பிணிகொடு மேவிய காயமி
தப்புப் பிருதிவி வாயுவு தேயுவு
நிற்பொற் ககனமொ டாமிவை பூதக லவைமேவி
நிற்கப் படுமுல காளவு மாகரி
டத்தைக் கொளவுமெ நாடிடு மோடிடு
நெட்டுப்பணிகலைபூணிடு நானெனு மடவாண்மை
எத்தித் திரியுமி தேதுபொ யாதென
வுற்றுத் தெளிவுண ராதுமெய் ஞானமொ
டிச்சைப் படஅறியாதுபொய் மாயையி லுழல்வேனை
எத்திற் கொடுநின தாரடி யாரொடு
முய்த்திட் டுனதரு ளாலுயர் ஞானமு
திட்டுத் திருவடியாமுயர் வாழ்வுற இனிதாள்வாய்

தத்தத் தனதன தானன தானன
தித்தித் திமிதிமி தீதக தோதக
டத்தக் குடகுகு தாகுட தீகுட வெனபேரிச்
சத்தத் தொலிதிகை தாவிட வானவர்
திக்குக் கெடவரு சூரர்கள் தூள்பட
சர்ப்பச் சதமுடி நாணிட வேலதை யெறிவோனே
வெற்றிப் பொடியணி மேனியர் கோகுல
சத்திக் கிடமருள் தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழ காணிய ரருள்பாலா
வெற்புத் தடமுலை யாள்வளி நாயகி
சித்தத் தமர்கும ராஎமை யாள்கொள
வெற்றிப் புகழ்கரு வூர் தனில் மேவிய பெருமாளே.

939

முட்டம ருட்டி யிருகுழை தொட்டக டைக்க ணியலெனு
மொட்டைவி ளைத்து முறையளித் திடுமாதர்
முத்தமி ரத்ன மரகதம் வைத்தவி சித்ர முகபட
மொச்சிய பச்சை யகில்மணத் தனபாரம்
கட்டிய ணைத்து நகநுதி பட்டக ழுத்தி லிறுகிய
கைத்தல மெய்த்து வசனமற் றுயிர்சோருங்
கட்டமு யக்கி னநுபவம் விட்டவி டற்கு நியமித
கற்பனை பக்ஷி முடனளித் தருளாதோ
வெட்டிய கட்க முனைகொடு வட்டகு ணத்து ரணமுக
விக்ரம வுக்ர வெகுவிதப் படைவீரா
வெற்றியை யுற்ற குறவர்கள் பெற்றகொ டிக்கு
மிகமகிழ்
வித்தக சித்த வயலியிற் குமரேசா
கிட்டிய பற்கொ டசுரர்கள் மட்டற வுட்க வடலொடு
கித்திந டக்கு மலகைசுற் றியவேலா
கெட்டவ ருற்ற துணையென நட்டருள் சிட்ட பசுபதி
கெர்ப்பபு ரத்தி லறுமுகப் பெருமாளே.

நெருவூர்

940

குருவு மடியவ ரடியவ ரடிமையு
மருண மணியணி கணயண விதகர
குடில செடிலினு நிகரென வழிபடு குணசீலர்

குழுவி லொழுகுதல் தொழுகுதல் விழுகுத
லழுகு தலுமிலி நலமிலி பொறையிலி
குசல கலையிலி தலையிலி நிலையிலி விலைமாதர்

மருவு முலையெனு மலையினி லிடறியு
மளக மெனவள ரடவியில் மறுகியு
மகர மெறியிரு கடலினில் முழுகியு முழலாமே

வயலி நகரியி லருள்பெற மயில்மிசை
யுதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலு மறவேனே

உருவு பெருகயல் கரியதொர் முகிலெனு
மருது நெறிபட முறைபட வரைதனி
லுரலி னுடுதவழ் விரகுள இளமையு மிகமாறி

உமிழ நிரைகளி னிடர்கெட வடகிரி
கவிகை யிடவல மதுகையு நிலைகெட
வுலவில் நிலவறை யுருவிய வருமையு மொருநூறு

நிருப ரணமுக வரசர்கள் வலிதப
விசயன் ரதமுதல் நடவிய வெளிமையு
நிகில செகதல முறைசெயு மரிதிரு மருகோனே

நிலவு சொரிவளை வயல்களு நெடுகிய
குடக தமனியு நளினமு மருவிய
நெருவை நகருறை திருவுரு வழகிய பெருமாளே.

திருவெஞ்சமாக்கூடல்

941

வண்டுபோற் சாரத் தருள்தேடி
மந்திபோற் காலப் பிணிசாடிச்
செண்டுபோற் பாசத் துடனுடிச்
சிந்தைமாய்த் தேசித் தருள்வாயே
தொண்டராற் காணப் பெறுவோனே
துங்கவேற் கானத் துறைவோனே
மிண்டராற் காணக் கிடையானே
வெஞ்சமாக் கூடற் பெருமாளே.

திருப்பாண்டிக்கொடுமுடி

942

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி
இடர்கள்பட் டலையப் புகுதாதே
திருவருட் கருணைப் ப்ரபையாலே
திரமெனக் கதியைப் பெறுவேனோ
அரியயற் கறிதற் கரியானே
அடியவர்க் கெளியற் புதநேயா
குருவெனச் சிவனுக் கருள்போதா
கொடுமுடிக் குமரப் பெருமாளே.

943

காந்தட் கரவளை சேந்துற் றிடமத
காண்டத் தரிவைய ருடனூரி
காந்தத் துறவென வீழ்ந்தப் படிகுறி
காண்டற் கநுபவ விதமேவிச்
சாந்தைத் தடவிய கூந்தற் கருமுகில்
சாய்ந்திட் டயில்விழி குழைமீதே
தாண்டிப் பொரவுடை திண்டித் தனகிரி
தாங்கித் தழுவுத லொழியேனோ
மாந்தர்க் கமரர்கள் வேந்தற் கவரவர்
வாஞ்சைப் படியருள் வயலூரா
வான்கிட் டியபெரு மூங்கிற் புனமிசை
மான்சிற் றடிதொழு மதிகாமி
பாந்தட் சடைமுடி யேந்திக் குலவிய
பாண்டிக் கொடுமுடி யுடையாரும்
பாங்கிற் பரகுரு வாங்கற் பனையொடு
பாண்சொற் பரவிய பெருமாளே.

சேலம்

944

பரிவுறு நாரற் றழல்மதி வீசச்
சிலைபொரு காலுற் றதனாலே
பணிபடு சோலைக் குயிலது கூவக்
குழல்தனி யோசைத் தரலாலே

மருவியல் மாதுக் கிருகயல் சோரத்
தனிமிக வாடித் தளராதே
மனமுற வாழத் திருமணி மார்பத்
தருள்முரு காவுற் றணைவாயே
கிரிதனில் வேல்விட் டிருதொளை யாகத்
தொடுகும ராமுத் தமிழோனே
கிளரொளி நாதர்க் கொருமக ளுகித்
திருவளர் சேலத் தமர்வோனே
பொருகிரி சூரக் கிளையது மாளத்
தனிமயி லேறித் திரிவோனே
புகர்முக வேழக் கணபதி யாருக்
கிளையவி நோதப் பெருமாளே.

ராஜபுரம்

945

சங்கு வார்முடி பொற்கழல் பொங்கு சாமரை கத்திகை
தண்டு மாகரி பெற்றவன் வெகுகோடிச்
சந்த பாஷைகள் கற்றவன் மந்த்ர வாதிச துர்க்கவி
சண்ட மாருத மற்றுள கவிராஜப்
பங்கி பாலச ரச்வதி சங்க நூல்கல்வி தித்தப்ர
பந்த போதமு ரைத்திடு புலவோன்யான்
பண்டை மூவெழு வர்க்கெதிர் கண்ட நீயுமெ னச்சில
பஞ்ச பாதக ரைப்புகழ் செயலாமோ
வெங்கை யானைவ னத்திடை துங்க மாமுத லைக்குவெ
ருண்டு மூலமெ னக்கரு டனிலேறி
விண்ப ராவஅ டுக்கிய மண்ப ராவஅ தற்குவி
தம்ப ராவஅ டுப்பவன் மருகோனே
கொங்க ணுதித ரப்பெறு கொங்கி னூடுசு கித்திடு
கொங்கின் வீரக ணப்ரிய குமராபொற்
கொங்கு லாவுகு றக்கொடி கொங்கை யேதழு விச்செறி
கொங்கு ராஜபு ரத்துறை பெருமாளே.

விஜயமங்கலம்

946

கலக சம்ப்ரமத் தாலேவி லோசன
மலர்சி வந்திடப் பூணுர மானவை
கழல வண்டெனச் சாரீரம் வாய்விட அபிராமக்

கனத னங்களிற் கோமாள மாகியெ
பலந கம்படச் சீரோடு பேதக
கரண முஞ்செய்துட் பாலூறு தேனித ழமுதூறல்

செலுவி மென்பணைத் தோளோடு தோள்பொர
நிலைகு லைந்திளைத் தேராகு மாருயிர்
செருகு முந்தியிற் போய்வீழு மாலுட னநுராகந்

தெரிகு மண்டையிட் டாராத சேர்வையி
லுருகி மங்கையர்க் காளாகி யேவல்செய்
திடினு நின்கழல் சீர்பாத நானினி மறவேனே

உலக கண்டமிட் டாகாச மேல்விரி
சலதி கண்டிடச் சேராய மாமவ
ருடன்ம டிந்திடக் கோபாலர் சேரியில் மகவாயும்

உணர்சி றந்தசக் ராதார நாரணன்
மருக மந்திரக் காபாலி யாகிய
உரக கங்கணப் பூதேசர் பாலக வயலூரா

விலைத ருங்கொலைப் போர்வேடர் கோவென
இனையு மங்குறப் பாவாய்வி யாகுலம்
விடுவிடென் றுகைக்கூர்வேலையேவிய இளையோனே

விறல்சு ரும்புநற் க்ரீதேசி பாடிய
வுரைசெய் பங்கயப் பூவோடை மேவிய
விஜய மங்கலத் தேவாதி தேவர்கள் பெருமாளே.

சிங்கை (காங்கேயம்)

947

சஞ்சரியு கந்து நின்றுமுரல் கின்ற
தண்குவளை யுந்து குழலாலுந்

தண்டரள தங்க மங்கமணி கின்ற
சண்டவித கும்ப கிரியாலும்

நஞ்சவினை யொன்றி தஞ்சமென வந்து
நம்பிவிட நங்கை யுடனுசை

நண்புறெனை யின்று நன்றில்வினை கொன்று
நன்றுமயில் துன்றி வரவேணும்

கஞ்சமலர் கொன்றை தும்பைமகிழ் விஞ்சி
கந்திகமழ் கின்ற கழலோனே

கன்றிடுபி ணங்கள் தின்றிடுக ணங்கள்
கண்டுபொரு கின்ற கதிர்வேலா
செஞ்சொல்புனை கின்ற எங்கள்குற மங்கை
திண்குயம ணைந்த திருமார்பா
செண்பகமி லங்கு மின்பொழில்சி றந்த
சிங்கையில மர்ந்த பெருமாளே.

948

சந்திதொறு நாண மின்றியகம் வாடி
உந்திபொரு ளாக அலைவேனோ
சங்கைபெற நாளு மங்கமுள மாதர்
தங்கள்வச மாகி அலையாமற்
சுந்தரம தாக எந்தன்வினை யேக
சிந்தைகளி கூர அருள்வாயே
தொங்குசடை மீது திங்களணி நாதர்
மங்கைரண காளி தலைசாயத்
தொந்திதிமி தோதி தந்திதிமி தாதி
என்றுநட மாடு மவர்பாலா
துங்கமுள வேடர் தங்கள்குல மாதை
மங்களம தாக அணைவோனே
கந்தமுரு கேச மிண்டசுரர் மாள
அந்தமுனை வேல்கொ டெறிவோனே
கம்பர்கயி லாசர் மைந்தவடி வேல
சிங்கைநகர் மேவு பெருமாளே.

பட்டாலியூர்

949

இருகுழை யிடறிக் காது மோதுவ
பரிமள நளினத் தோடு சீறுவ
இணையறு வினையைத் தாவி மீளுவ வதிசூர
எமபடர் படைகெட் டோட நாடுவ
அமுதுடன் விடமொத் தாளை யீருவ
ரதிபதி கலைதப் பாது சூழுவ முனிவோரும்

உருகிட விரகிற் பார்வை மேவுவ
பொருளது திருடற் காசை கூறுவ
யுகமுடி விதெனப் பூச லாடுவ வடிவேல்போல்
உயிர்வதை நயனக் காதல் மாதர்கள்
மயல்தரு கமரிற் போய்வி ழாவகை
உனதடி நிழலிற் சேர வாழ்வது மொருநாளே

முருகவிழ் தொடையைச் சூடி நாடிய
மரகத கிரணப் பீலி மாமயில்
முதுரவி கிரணச் சோதி போல்வய லியில்வாழ்வே
முரண்முடி யிரணச் சூலி மாலினி
சரணெனு மவர்பற் றுன சாதகி
முடுகிய கடினத் தாளி வாகினி மதுபானம்

பருகினர் பரமப் போக மோகினி
அரகர வெனும்வித் தாரி யாமளி
பரிபுர சரணக் காளி கூளிகள் நடமாடும்
பறையறை சுடலைக் கோயில் நாயகி
இறையொடு மிடமிட் டாடு காரணி
பயிரவி யருள்பட் டாலி யூர்வரு பெருமாளே.

950

கத்தூரி யகரு ம்ருகமத வித்தார படிர இமசல
கற்பூர களப மணிவன மணிசேரக்
கட்டார வடமு மடர்வன நிட்டூர கலக மிடுவன
கச்சோடு பொருது நிமிர்வன தனமாதர்

கொத்தூரு நறவ மெனவத ரத்தூறல் பருகி யவரொடு
கொற்சேரி யுலையில் மெழுகென வுருகாமே
கொக்காக நரைகள் வருமுன மிக்காய விளமை யுடன்முயல்
குற்றேவல் அடிமை செயும்வகை யருளாதோ

அத்தூர புவன தரிசன நித்தார கனக நெடுமதி
லச்சான வயலி நகரியி லுறைவேலா
அச்சோவெ னவச வுவகையி லுட்சோர்த லுடைய பரவையொ
டக்காகி விரக பரிபவ மறவேபார்

பத்தூரர் பரவ விரைவுசெல் மெய்த்தூதர் விரவ வருடரு
பற்றுய பரம பவுருஷ குருநாதா
பச்சோலை குலவு பனைவளர் மைச்சோலை மயில்கள்
நடமிடு
பட்டாலி மருவு மமரர்கள் பெருமாளே.

951

சங்கைக்கத் தோடு சிலுகிடு சங்கிச்சட் கோல சமயிகள்
சங்கற்பித் தோதும் வெகுவித கலைஞானச்
சண்டைக்குட் கேள்வி யலமல மண்டற்குப் பூசை
யிடுமவர்
சம்பத்துக் கேள்வி யலமல மிமவானின்
மங்கைக்குப் பாக னிருடிக ளெங்கட்குச் சாமி யெனவடி
வந்திக்கப் பேசி யருளிய சிவநூலின்
மந்த்ரப்ரஸ்த் தார தரிசன யந்த்ரத்துக் கேள்வி
யலமலம்
வம்பிற்சுற் றுது பரகதி யருள்வாயே
வெங்கைச்சுக் ரீபர் படையையி லங்கைக்குப்
போக விடவல
வென்றிச்சக் ரேசன் மிகமகிழ் மருகோனே
வெண்பட்டுப் பூணல் வனகமு கெண்பட்டுப் பாளை
விரிபொழில்
விஞ்சிட்டுச் சூழ வெயில்மறை வயலூரா
கொங்கைக்கொப் பாகும் வடகிரி செங்கைக்கொப் பாகு
நறுமலர்
கொண்டைக்கொப் பாகும் முகிலென வனமாதைக்
கும்பிட்டுக் காதல்குனகிய இன்பச்சொற் பாடுமிளையவ
கொங்கிற்பட் டாலி நகருறை பெருமாளே.

திருமுருகன்பூண்டி

952

அவசியமுன் வேண்டிப் பலகாலும்
அறிவினுணர்ந் தாண்டுக் கொருநாளில்
தவசெபமுந் தீண்டிக் கனிவாகிச்
சரணமதும் பூண்டற் கருள்வாயே
சவதமொடுந் தாண்டித் தகரூர்வாய்
சடுசமயங் காண்டற் கரியானே
சிவகுமரன் பீண்டிற் பெயரானே
திருமுருகன் பூண்டிப் பெருமாளே.

அவிநாசி

953

இறவாமற் பிறவாமல்—எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான—பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப்புணர்வோனே—குகனேசொற் குமரேசா
அறநாலைப் புகல்வோனே—அவிநாசிப் பெருமாளே.

954

பந்தப்பொற் பாரப யோதர
முந்திச்சிற் றுடைகை மேகலை
பண்புற்றுத் தாளொடு மேவிய துகிலோடே
பண்டெச்சிற் சேரியில் வீதியில்
கண்டிச்சிச் சாரொடு மேவியெ
பங்குக்கைக் காசுகொள் வேசியர் பனிநீர்தோய்
கொந்துச்சிப் பூவணி கோதையர்
சந்தச்செத் தாமரை வாயினர்
கும்பிட்டுப் பாணியர் வீணிய ரநுராகங்
கொண்டுற்றுப் பாயலின் மூழ்கினு
மண்டிச்செச் சேயென வானவர்
கொஞ்சுற்றுத் தாழ்பத தாமரை மறவேனே
அந்தத்தொக் காதியு மாதியும்
வந்திக்கத் தானவர் வாழ்வுறும்
அண்டத்துப் பாலுற மாமணி யொளிவீசி
அங்கத்தைப் பாவைசெய் தாமென
சங்கத்துற் றூர்தமி ழோதவு
வந்துக்கிட் டார்கழு வேறிட வொருகோடிச்
சந்தச்செக் காளநி சாசரர்
வெந்துக்கத் தூளிப டாமெழ
சண்டைக்கெய்த் தாரம ராபதி குடியேறத்
தங்கச்செக் கோலசை மீசவக
கொங்கிற்றெக் காரவி நாசியில்
தண்டைச்சிக் காரயில் வேல்விடு பெருமாளே.

955

மனத்தி ரைந்தெழு மீளையு மேலிட
கறுத்த குஞ்சியு மேநரை யாயிட
மலர்க்க ணண்டிரு ளாகியு மேநடை தடுமாறி
வருத்த முந்தர தாய்மனை யாள்மக
வெறுத்தி டங்கிளை யோருடன் யாவரும்
வசைக்கு றுஞ்சொலி னுல்மிக வேதின நகையாட

எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதிர் சூலமு மேகையி
லெடுத்தெ றிந்தழல் வாய்விட வேபய முறவேதான்
இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தாள்மல ராகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்

கனத்த செந்தமி ழால்நினை யேதின
நினைக்க வுந்தரு வாயுன தாரருள்
கருத்தி ருந்துறை வாயென தாருயிர் துணையாகக்
கடற்ச லந்தனி லேயொளி சூரனை
யுடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா

அனத்த னுங்கம லாலய மீதுறை
திருக்க லந்திடு மாலடி நேடிய
அரற்க ரும்பொருள் தானுரை கூறிய குமரேசா
அறத்தை யுந்தரு வோர்கன பூசுரர்
நினைத்தி னந்தொழு வாரம ராய்புரி
யருட்செ றிந்தவி நாசியுள் மேவிய பெருமாளே.

திருப்புக்கொளியூர்

956

பக்குவ வாசார லட்சண சாகாதி
பட்சண மாமோன சிவயோகர்
பத்தியி லாறுறு தத்துவ மேல்வீடு
பற்றுநி ராதார நிலையாக

அக்கண மேமாய துர்க்குணம் வேருக
அப்படை யேஞான வுபதேசம்

அக்கற வாய்பேசு சற்குரு நாதாவு
னற்புத சீர்பாத மறவேனே
உக்கிர வீராறு மெய்ப்புய னேநீல
வுற்பல வீராசி மணநாற
ஒத்தநி லாவீசு நித்தில நீராவி
யுற்பல ராசீவ வயலூரா
பொக்கமி லாவீர விக்ரம மாமேனி
பொற்ப்ரபை யாகார அவிநாசிப்
பொய்க்கலி போமாறு மெய்க்கருள் சீரான
புக்கொளி யூர்மேவு பெருமாளே.

957

மதப்பட்டவி சாலக போலமு
முகப்பிற்சன வாடையு மோடையு
மருக்கற்புர லேபல லாடமு மஞ்சையாரி
வயிற்றுக்கிடு சீகர பாணியு
மிதற்செக்கர்வி லோசன வேகமு
மணிச்சத்தக டோரபு ரோசமு மொன்றுகோல

விதப்பட்டவெ ளானையி லேறியு
நிறைக்கற்பக நீழலி லாறியும்
விஷத்துர்க்கன சூளிகை மாளிகை யிந்த்ரலோகம்
விளக்கச்சுரர் சூழ்தர வாழ்தரு
பிரப்புத்வகு மாரசொ ரூபக
வெளிப்பட்டெனை யாள்வய லூரிலி ருந்தவாழ்வே

இதப்பட்டிட வேகம லாலய
வொருத்திக்கிசை வானபொ ருயிர
மியற்றப்பதி தோறுமு லாவிய தொண்டர்தாள
இசைக்கொக்கவி ராசத பாவனை
யுளப்பெற்றெடு பாடிட வேடையி
லிளைப்புக்கிட வார்மறை யோனென வந்துகானிற்

றிதப்பட்டெதி ரேபொதி சோறினை
யவிழ்த்திட்டவி நாசியி லேவரு
திசைக்குற்றச காயனு மாகிம றைந்துபோமுன்
செறிப்பித்தக ராவதின வாய்மக
வழைப்பித்தபு ராணக்ரு பாகர
திருப்புக்கொளி யூருடை யார்புகழ் தம்பிரானே.

958

வனப்புற்றெழு கேத மேவு கோகிலம்
அழைக்கப்பொரு மார னேவ தாமலர்
மருத்துப்பயில் தேரி லேறி மாமதி தொங்கலாக
மறுத்துக்கடல் பேரி மோத வேயிசை
பெருக்கப்படை கூடி மேலெ மூவணி
வகுத்துக்கொடு சேம மாக மாலையில் வந்துகாதிக்

கனக்கப்பறை தாய ளாவ நீள்கன
கருப்புச்சிலை காம ரோவில் வாளிகள்
களித்துப்பொர வாசம்வீசுவார்குழல் மங்கைமார்கள்
கலக்குட்படு பேத மாகி மாயும
துனக்குப்ரிய மோக்ரு பாக ராஇது
கடக்கப்படு நாம மான ஞானம
தென்றுசேர்வேன்

புனத்திற்றினை காவ லான காரிகை
தனப்பொற்குவ டேயு மோக சாதக
குனித்தப்பிறை சூடும் வேணி நாயகர் நன்குமாரா
பொறைக்குப்புவி போலு நீதி மாதவர்
சிறக்கத்தொகு பாசி சோலை மாலைகள்
புயத்துற்றணி பாவ சூர ருருயிர் கொண்டவேலா

சினத்துக்கடி வீசி மோது மாகட
லடைத்துப்பிசி தாச ருதி மாமுடி
தெறிக்கக்கணை யேவு வீர மாமனும் உந்திமீதே
செனித்துச்சதுர் வேத மோது நாமனு
மதித்துப்புகழ் சேவ காவி மூமலி
திருப்புக்கொளி யூரில் மேவு தேவர்கள்
தம்பிரானே.

திருநணு [பவானி]

959

கலைமேவு ஞானப் பிரகாசக் கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே பதிஞான வாழ்வைத்
தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின் மனமேவு வாலக் குமரேசா
சிலைவேட சேவற் கொடியோனே திருவாணி கூடற்
பெருமாளே.

பேரூர்

960

தீராப் பிணிதீர — சீவாத் துமஞான
ஊராட் சியதான — ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே — பாலாக் கிரிராசே
பேராற் பெரியோனே — பேரூர்ப் பெருமாளே.

961

மைச்ச ரோருக நச்சு வாள்விழி
மாறு ரோடே நாணுர் நீயா ரெனுமாறு
வைத்த போதக சித்த யோகியர்
வாணுள் கோணுள் வீணுள் காணு ரதுபோலே

நிச்ச மாகவு மிச்சை யானவை
நேரே தீரா வூரே பேரே பிறவேயென்
நிட்க ராதிகண் முற்பு காதினி
நீயே தாயாய் நாயேன் மாயா தருள்வாயே

மிச்ச ரோருக வச்ர பாணியன்
வேதா வாழ்வே நாதா தீதா வயலூரா
வெற்பை யூடுரு வப்ப டாவரு
வேலா சீலா பாலா காலா யுதமாளி

பச்சை மாமயில் மெச்ச வேறிய
பாகா சூரா வாகா போகா தெனும்வீரா
பட்டி யாள்பவர் கொட்டி யாடினர்
பாரூ ராசூழ் பேரூ ராள்வார் பெருமாளே.

கொடும்பாளூர்

962

கலைஞரெனுங் கற்புக் கலியுகபந் தத்துக்
கடனபயம் பட்டுக் கசடாகுங்
கருமசடங் கச்சட் சமயிகள்பங் கிட்டுக்
கலகலெனுங் கொட்புற் றுடன்மோதும்

அலகில்பெருந் தர்க்கப் பலகலையின் பற்றற்
றரவியிடந் தப்பிக் குறியாத

அறிவையறிந் தப்பற் றதனினெடுஞ் சற்றுற்
றருள்வசனங் கிட்டப் பெறலாமோ
கொலைஞரெனுங் கொச்சைக் குறவரிளம் பச்சைக்
கொடிமருவுஞ் செச்சைப் புயமார்பா
கொடியநெடுங் கொக்குக் குறுகவுணன் பட்டுக்
குரைகடல்செம் பச்சக் கரவாளச்
சிலைபகஎண் டிக்குத் திகிரிகளும் பத்துத்
திசைகளினுந் தத்தச் செகமேழுந்
திருகுசிகண் டிப்பொற் குதிரைவிடுஞ் செட்டித்
திறலகொடும் பைக்குட் பெருமாளே.

கீரனூர்

963

ஈர மோடுசி ரித்துவ ருத்தவும்
நாத கீதந டிப்பிலு ருக்கவும்
ஏவ ராயினு மெத்திய ழைக்கவு மதராஜன்
ஏவின் மோதுக ணிட்டும ருட்டவும்
வீதி மீதுத லைக்கடை நிற்கவும்
ஏறு மாறும னத்தினி னைக்கவும் விலைகூறி
ஆர பார தனத்தைய சைக்கவு
மாலை யோதிகு லைத்துமு டிக்கவும்
ஆடை சோரஅ விழ்த்தரை சுற்றவும் அதிமோக
ஆசை போல்மன இஷ்டமு ரைக்கவு
மேல்வி ழாவெகு துக்கம்வி ளைக்கவும்
ஆன தோதக வித்தைகள் கற்பவ ருறவாமோ
பார மேருப ருப்பத மத்தென
நேரி தாகஎ டுத்துட னட்டுமை
பாக ராரப டப்பணி சுற்றிடு கயிறாகப்
பாதி வாலிபி டித்திட மற்றொரு
பாதி தேவர்பி டித்திட லக்ஷ்மி
பாரி சாதமு தற்பல சித்திகள் வருமாறு
கீர வாரிதி யைக்கடை வித்ததி
காரி யாயமு தத்தைய ளித்தக்ரு
பாளு வாகிய பச்சுரு வச்சுதன் மருகோனே
கேடி லாவள கைப்பதி யிற்பல
மாட கூடம லர்ப்பொழில் சுற்றிய
கீர னூருறை சத்தித ரித்தருள் பெருமாளே.

குளந்தைநகர்

964

தரங்க வார்குழற் றநுநுதல் விழியாலந்
தகைந்த மாமுலைத் துடியிடை மடமாதர்
பரந்த மாலிருட் படுகுழி வசமாகிப்
பயந்து காலனுக் குயிர்கொடு தவியாமல்

வரந்த ராவிடிற் பிறரெவர் தருவாரே
மகிழ்ந்து தோகையிற் புவிவலம் வருவோனே
குரும்பை மாமுலைக் குறமகண் மணவாளா
குளந்தை மாநகர்த் தளியுறை பெருமாளே.

தனிச்சயம்

965

இலைச்சுருட் கொடுத்தணைத் தலத்திருத் திமட்டைகட்
கிதத்தபுட் குரற்கள்விட் டநுராகம்
எழுப்பிமைக் கயற்கணைக் கழுத்தைமுத் தமிட்டணைத்
தெடுத்திதழ்க் கடித்துரத் திடைதாவி

அலைச்சலுற் றிலச்சையற் றரைப்பைதொட்
டுழைத்துழைத்
தலக்கணுற் றுயிர்க்களைத் திடவேதான்
அறத்தவித் திளைத்துறத் தனத்தினிற் புணர்ச்சிபட்
டயர்க்குமிப் பிறப்பினித் தவிராதோ

கொலைச்செருக் கரக்கரைக் கலக்குமிக் ககுக்குடக்
கொடித்திருக் கரத்தபொற் பதிபாடுங்
குறித்தநற் றிருப்புகழ்ப் ப்ரபுத்துவக் கவித்துவக்
குருத்துவத் தெனைப்பணித் தருள்வோனே

தலைச்சுமைச் சடைச்சிவற் கிலக்கணத் திலக்கியத்
தமிழ்த்ரயத் தகத்தியற் கறிவோதுஞ்
சமர்த்தரிற் சமர்த்தபச் சிமத்திசைக் குளுத்தமத்
தனிச்சயத் தினிற்பிளைப் பெருமாளே.

966

உரைத்த சம்ப்ரம வடிவு திரங்கிக்
கறுத்த குஞ்சியும் வெளிறிய பஞ்சொத்
தொலித்தி டுஞ்செவி செவிடுற வொண்கட் குருடாகி

உரத்த வெண்பலு கழுவிம தங்கெட்
டிரைத்து கிண்கிணெ ணிருமலெ ழுந்திட்
டுளேப்பு டன்தலை கிறுகிறெ னும்பித்
தமுமேல்கொண்

டரத்த மின்றிய புழுவினும் விஞ்சிப்
பழுத்து ளஞ்செயல் வசனம்வ ரம்பற்
றடுத்த பெண்டிரு மெதிர்வர நிந்தித் தனேவோரும்
அசுத்த னென்றிட வுணர்வது குன்றித்
துடிப்ப துஞ்சிறி துளதில தென்கைக்
கவத்தை வந்துயி ரலமரு மன்றைக் கருள்வாயே

திரித்தி ரிந்திரி ரிரிரிரி ரின்றிட்
டுடுட்டு டுண்டுடு டுடுடுடு டுண்டுட்
டிகுட்டி குண்டிகு டிகுடிகு டிண்டிட் டிகுதீதோ
திமித்தி மிந்திமி திமிதிமி யென்றிட்
டிடக்கை துந்துமி முரசுமு ழங்கச்
செருக்க ளந்தனில் நிருதர்த யங்கச் சிலபேய்கள்

தரித்து மண்டையி லுதிரம ருந்தத்
திரட்ப ருந்துகள் குடர்கள்பி டுங்கத்
தருக்கு சம்புகள் நிணமது சிந்தப் பொரும்வேலா
தடச்சி கண்டியில் வயலியி லன்பைப்
படைத்த நெஞ்சினி லியல்செறி கொங்கிற்
றனிச்ச யந்தனி லினிதுறை கந்தப் பெருமாளே.

மதுரை

967

பரவு நெடுங்கதி ருலகில் விரும்பிய
பவனி வரும்படி யதனாலே
பகர வளங்களு நிகர விளங்கிய
இருளே விடிந்தது நிலவாலே

வரையினி லெங்கணு முலவி நிறைந்தது
வரிசைத ரும்பத மதுபாடி
வளமொடு செந்தமி முரைசெய அன்பரு
மகிழவ ரங்களு மருள்வாயே

அரஹர சுந்தர அறுமுக என்றுனி
அடியர்ப ணிந்திட மகிழ்வோனே

அசலநெ டுங்கொடி அமையுமை தன்சுத
குறமக ளிங்கித மணவாளா
கருதரு திண்புய சரவண குங்கும
களபம ணிந்திடு மணிமார்பா
கனகமி கும்பதி மதுரைவ ளம்பதி
யதனில்வ ளர்ந்தருள் பெருமாளே.

968

பழிப்பர் வாழ்த்துவர் சிலசில பெயர்தமை
ஒருத்தர் வாய்ச்சுரு ளொருவர்கை யுதவுவர்
பணத்தை நோக்குவர் பிணமது தழுவுவர்
அளவளப் பதனாலே
படுக்கை வீட்டினு ளவுஷத முதவுவர்
அணைப்பர் கார்த்திகை வருதென வுறுபொருள்
பறிப்பர் மாத்தையி லொருவிசை வருகென
அவரவர்க் குறவாயே
அழைப்ப ராஸ்திகள் கருதுவ ரொருவரை
முடுக்கி யோட்டுவ ரழிகுடி யரிவையர்
அலட்டி னுற்பிணை யெருதென மயலெனு
நரகினிற் சுழல்வேனோ
அவத்த மாய்ச்சில படுகுழி தனில்விழும்
விபத்தை நீக்கியு னடியவ ருடனெனை
அமர்த்தி யாட்கொள மனதினி லருள்செய்து
கதிதனைத் தருவாயே
தழைத்த சாத்திர மறைபொரு ளறிவுள
குருக்கள் போற்சிவ நெறிதனை யடைவொடு
தகப்ப னுர்க்கொரு செவிதனி லுரைசெய்த
முருகவித் தகவேளே
சமத்தி னுற்புகழ் சனகியை நலிவுசெய்
திருட்டு ராக்கத னுடலது துணிசெய்து
சயத்த யோத்தியில் வருபவ னரிதிரு
மருமகப் பரிவோனே
செழித்த வேற்றனை யசுரர்க ளுடலது
பிளக்க வோச்சிய பிறகம ரர்கள்பதி
செலுத்தி யீட்டிய சுரபதி மகள்தனை
மணமதுற் றிடுவோனே

திறத்தி னுற்பல சமணரை யெதிரெதிர்
கழுக்க ளேற்றிய புதுமையை யினிதொடு
திருத்த மாய்ப்புகழ் மதுரையி லுறைதரும்
அறுமுகப் பெருமாளே.

969

சீத வாசனைம லர்க்குழல்பி லுக்கிமுக
மாய வேல்விழிபு ரட்டிநகை முத்தமெழ
தேமல் மார்பினிள பொற்கிரிப எப்பளென
தொங்கலாரஞ்
சேரு மோவியமெ னச்சடமி னுக்கிவெகு
வாசை நேசமும்வி ளைத்துஇடை யுற்றவரி
சேலைகாலில்விழவிட்டுநடை யிட்டுமயி லின்கலாபச்
சாதி யாமெனவெ ருட்டிநட மிட்டுவலை
யான பேர்தமையி ரக்கவகை யிட்டுகொடி
சாக நோய்பிணிகொ டுத்திடர்ப டுத்துவர்கள்
பங்கினூடே
தாவி மூழ்கிமதி கெட்டவல முற்றவனை
பாவ மானபிற விக்கடலு ழப்பவனை
தாரு லாவுபத பத்தியிலி ருத்துவது மெந்தநாளோ
வாத வூரனைம தித்தொருகு ருக்களென
ஞான பாதம்வெளி யிட்டுநரி யிற்குழுவை
வாசி யாமெனந டத்துவகை யுற்றரச னன்புகாண
மாடை யாடைதர பற்றிமுன கைத்துவைகை
யாறின் மீதுநட மிட்டுமணெ டுத்துமகிழ்
மாது வாணிதரு பிட்டுநுகர் பித்தனருள்
கந்தவேளே
வேத லோகர்பொனி லத்தர்தவ சித்தரதி
பார சீலமுனி வர்க்கமுறை யிட்டலற
வேலை யேவியவு ணக்குலமி றக்கநகை
கொண்டசீலா
வேத மீனகம லக்கணர்மெய் பச்சைரகு
ராம ரீனமயி லொக்கமது ரைப்பதியின்
மேவி வாழமரர் முத்தர்சிவ பத்தர்பணி
தம்பிரானே.

970

புருவச் செஞ்சிலை கொண்டிரு கணைவிழி
யெறியக் கொங்கையி ரண்டெனு மதகரி
பொரமுத் தந்தரு மிங்கித நயவித மதனூலே

புகலச் சங்கிசை கண்டம தனிலெழ
உருவச் செந்துவர் தந்தத ரமுமருள்
புதுமைத் தம்பல முஞ்சில தரவரு மனதாலே
பருகித் தின்றிட லஞ்சுக மெனமன
துருகிக் குங்கும சந்தன மதிவியர்
படியச் சம்ப்ரம ரஞ்சித மருள்கல வியினாலே
பலருக் குங்கடை யென்றெனெ யிகழவு
மயலைத் தந்தரு மங்கையர் தமைவெகு
பலமிற் கொண்டிடு வண்டனு முனதடி
பணிவேனோ
திருவைக் கொண்டொரு தண்டக வனமிசை
வரவச் சங்கொடு வந்திடு முழையுடல்
சிதறக் கண்டக வெங்கர னொடுதிரி சிரனோடு
திரமிற் றங்கிய கும்பக னொருபது
தலைபெற் றும்பரை வென்றிடு மவனொடு
சிலையிற் கொன்றமு குந்தன லகமகிழ்
மருகோனே
மருவைத் துன்றிய பைங்குழ லுமையவள்
சிவனுக் கன்பரு ளம்பிகை கவுரிகை
மலையத் தன்தரு சங்கரி கருணைசெய் முருகோனே
வடவெற் பங்கய லன்றணி குசசர
வனையிற் றங்கிய பங்கய முகதமிழ்
மதுரைச் சங்கிலி மண்டப இமையவர்
பெருமாளே.

971

முகமெ லாநெய் பூசித் தயங்கு
நுதலின் மீதி லேபொட் டணிந்து
முருகு மாலை யோதிக் கணிந்த மடமாதர்
முதிரு மார பாரத் தனங்கள்
மிசையி லாவி யாய்நெக் கழிந்து
முடிய மாலி லேபட் டலைந்து பொருள்தேடிச்
செகமெ லாமு லாவிக் கரந்து
திருட னாகி யேசற் றுழன்று
திமிர னாகி யோடிப் பறந்து திரியாமல்
தெளியு ஞான மோதிக் கரைந்து
சிவபு ராண நூலிற் பயின்று
செறியு மாறு தாளைப் பரிந்து தரவேணும்

அகர மாதி யாம க்ஷரங்க
ளவனி கால்வி ஞரப் பொடங்கி
அடைய வேக ரூபத் திலொன்றி முதலாகி

அமரர் காண வேயத் தமன்றி
லரிவை பாட ஆடிக் கலந்த
அமல நாத ஞர்முற் பயந்த முருகோனே

சகல வேத சாமுத் ரியங்கள்
சமய மாறு லோகத் ரயங்கள்
தரும நீதி சேர்தத் துவங்கள் தவயோகம்

தவறி லாம லாளப் பிறந்த
தமிழ்செய் மாறர் கூன்வெப் பொடன்று
தவிர ஆல வாயிற் சிறந்த பெருமாளே.

972

ஏலப்பனி நீரணி மாதர்கள்
கானத்தினு மேயுற வாடிடு
மீரத்தினு மேவளை சேர்கர மதனுலும்

ஏமக்கிரி மீதினி லேகரு
நீலக்கய மேறிய னேரென
ஏதுற்றிடு மாதன மீதினு மயலாகிச்

சோலைக்குயில் போல்மொழி யாலுமெ
தூரசுற்றிடு நூலிடை யாலுமெ
தோமிற்கத லீநிக ராகிய தொடையாலும்

சோமப்ரபை வீசிய மாமுக
சாலத்திலு மாகடு வேல்விழி
சூதத்தினு நானவ மேதின முழல்வேனே

ஆலப்பணி மீதினில் மாசறு
மாழிக்கிடை யேதுயில் மாதவ
ஞனைக்கினி தாயுத வீயருள் நெடுமாயன்

ஆதித்திரு நேமியன் வாமன
னீலப்புயல் நேர்தரு மேனியன்
ஆரத்துள வார்திரு மார்பினன் மருகோனே

கோலக்கய மாவுரி போர்வையர்
ஆலக்கடு வார்கள நாயகர்
கோவிற்பொறி யால்வரு மாசுத குமரேசா

கூர்முத்தமிழ் வாணர்கள் வீறிய
சீரற்புத மாநக ராகிய
கூடற்பதி மீதினில் மேவிய பெருமாளே.

973

நீதத் துவமாகி — நேமத் துணையாகிப்
பூதத் தயவான — போதைத் தருவாயே
நாதத் தொனியோனே — ஞானக் கடலோனே
கோதற் றமுதானே — கூடற் பெருமாளே.

974

மனநினை சுத்தஞ் சூது காரிகள்
அமளிவி ளைக்குங் கூளி மூளிகள்
மதபல நித்தம் பாரி நாரிக ளழகாக

வளைகுழை முத்தும் பூணும் வீணிகள்
விழலிகள் மெச்சுண் ட ாடி பாடிகள்
வரமிகு வெட்கம் போல வோடிகள் தெருவூடே

குனகிகள் பக்ஷம் போல பேசிகள்
தனகிக ளிச்சம் பேசி கூசிகள்
குசலிகள் வர்க்கஞ் சூறை காரிகள் பொருளாசைக்

கொளுவிக ளிஷ்டம் பாறி வீழ்பட
அருளமு தத்தின் சேரு மோர்வழி
குறிதனி லுய்த்துன் பாத மேறிட அருள்தாராய்

தனதன தத்தந் தான தானன
டுடுடுடு டுட்டுண் டுடு டுடுடு
தகுதிகு தத்தந் தீத தோதக எனபேரி

தவில்முர சத்தந் தாரை பூரிகை
வளைதுடி பொற்கொம் பார சூரரை
சமர்தனில் முற்றும் பாறி நூறிட விடும்வேலா

திணைவன நித்தங் காவ லாளியள்
நகைமுறை முத்தின் பாவை மான்மகள்
திகழ்பெற நித்தங் கூடி யாடிய முருகோனே
திரிபுர நக்கன் பாதி மாதுறை
யழகிய சொக்கன் காதி லோர்பொருள்
செலவரு ளித்தென் கூடல் மேவிய பெருமாளே.

975

முத்துநவ ரத்னமணி பத்திநிறை சத்தியிட
மொய்த்தகிரி முத்திதரு வெனவோதும்
முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
முப்பதுமு வர்க்கசுர ரடிபேணி

பத்துமுடி தத்தும்வகை யுற்றகணை விட்டஅரி
பற்குனனை வெற்றிபெற ரதமூரும்
பச்சைநிற முற்றபுய லச்சமற வைத்தபொருள்
பத்தர்மன துற்றசிவம் அருள்வாயே

தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு
தெய்த்ததென தெய்த்ததென தெனஞென
திக்குவென மத்தளமி டக்கைதுடி தத்ததகு
செச்சரிகை செச்சரிகை யெனஆடும்

அத்தனுட னொத்தநட நித்ரிபுவ னத்திநவ
சித்தியருள் சத்தியருள் புரிபாலா
அற்பவிடை தற்பமது முற்றுநிலை பெற்றுவள
ரற்கனக பத்மபுரி பெருமாளே.

976

அலகில வுணரைக் கொன்ற தோளென
மலைதொளை யுருவச் சென்ற வேலென
அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரீக
அடியென முடியிற் கொண்ட கூதள
மெனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநெக் கென்பெலாமுரு கன்புறுதோ

கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய பொங்களாவுங்

கலைகளு மொழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு ருதன
கரணமு மொழியத் தந்த ஞானமி ருந்தவாறென்

இலகுக டலைகற் கண்டு தேனொடு
மிரதமு றுதினைப் பிண்டி பாகுடன்
இனிமையி னுகருற் றெம்பி ரானொரு கொம்பினாலே
எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று தாதையை யன்றுசூழ

வலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுண முண்டுலாவு
மரகத கலபச் செம்புள் வாகன
மிசைவரு முருகச் சிம்பு ளேயென
மதுரையில் வழிபட் டும்பரார்தொழு தம்பிரானே.

977

ஆனைமுக வற்கு நேரிளைய பத்த
ஆறுமுக வித்த கமரேசா
ஆதியர னுக்கும் வேதமுதல் வற்கும்
ஆரணமு ரைத்த குருநாதா

தானவர்கு லத்தை வாள்கொடுது ணித்த
சால்சதுர்மி குத்த திறல்வீரா
தாளிணைக ளுற்று மேவியபு தத்தில்
வாழ்வொடுசி றக்க அருள்வாயே

வானெழுபு விக்கு மாலுமய னுக்கும்
யாவரொரு வர்க்கு மறியாத
மாமதுரை சொக்கர் மாதுமைக ளிக்க
மாமயில்ந டத்து முருகோனே

தேனெழுபு னத்தில் மான்விழிகு றத்தி
சேரமரு வுற்ற திரள்தோளா
தேவர்கள்க ருத்தில் மேவியப யத்தை
வேல்கொடுத ணித்த பெருமானே.

ஸ்ரீ புருஷமங்கை

978

ஆடல்மத னம்பின் மங்கைய
ராலவிழி யின்பி றங்கொளி
யாரமத லம்பு கொங்கையின் மயலாகி
ஆதிகுரு வின்ப தங்களை
நீதியுட னன்பு டன்பணி
யாமல்மன நைந்து நொந்துட லழியாதே

வேடரென நின்ற ஐம்புல
னுலுகர ணங்க ளின்தொழில்
வேறுபட நின்று ணர்ந்தருள் பெறுமாறென்
வேடைகெட வந்து சிந்தனை
மாயையற வென்று துன்றிய
வேதமுடி வின்ப ரம்பொரு ளருள்வாயே

தாடகையு ரங்க டிந்தொளிர்
மாமுனிம கஞ்சி றந்தொரு
தாழ்வறந டந்து திண்சிலை முறியாவொண்
ஜாநகித னங்க லந்தபின்
ஊரில்மகு டங்க டந்தொரு
தாயர்வச னஞ்சி றந்தவன் மருகோனே

சேடன்முடி யுங்க லங்கிட
வாடைமுழு தும்ப ரந்தெழ
தேவர்கள்ம கிழ்ந்து பொங்கிட நடமாடுஞ்
சீர்மயில மஞ்சு துஞ்சிய
சோலைவளர் செம்பொ னுந்திய
ஸ்ரீபுருட மங்கை தங்கிய பெருமாளே.

979

கார்குழல்கு லைந்த லைந்து வார்குழையி சைந்த சைந்து
காதலுறு சிந்தை யுந்து மடமாதர்
காமுகர கங்க லங்க போர்மருவ முந்தி வந்த
காழ்கடிய கும்ப தம்ப இருகோடார்

பேர்மருவு மந்தி தந்தி வாரணஅ னங்க னங்க
பேதையர்கள் தங்கள் கண்கள் வலையாலே
பேரறிவு குந்து நொந்து காதலில லைந்த சிந்தை
பீடையற வந்து நின்ற னருள்தாராய்
ஏர்மருவு தண்டை கொண்ட தாளசைய வந்த கந்த
ஏகமயி லங்க துங்க வடிவேலா
ஏமனுமை மைந்த சந்தி சேவலணி கொண்டு அண்ட
ரீடெறஇ ருந்த செந்தில் நகர்வாழ்வே
தேருகள்மி குந்த சந்தி வீதிகள ணிந்த கெந்த
சீரலர்கு லுந்து யர்ந்த பொழிலோடே
சேரவெ யிலங்கு துங்க வாவிக ளிசைந்தி ருந்த
ஸ்ரீபுருட மங்கை தங்கு பெருமாளே.

980

வேனின்மத னைந்து பாணம்விட நொந்து
வீதிதொறு நின்ற மடவார்பால்
வேளையென வந்து தாளினில்வி ழுந்து
வேடைகெட நண்பு பலபேசித்
தேனினும ணைந்த வாயமுத முண்டு
சீதளத னங்க ளினின்மூழ்கித்
தேடியத னங்கள் பாழ்படமு யன்று
சேர்கதிய தின்றி யுழல்வேனோ
ஆனிரைது ரந்து மாநிலம ளந்தொ
ராலிலையி லன்று துயில்மாயன்
ஆயர்மனை சென்று பால்தயிர ளைந்த
ஆரணமு குந்தன் மருகோனே
வானவர்பு கழ்ந்த கானவர்ப யந்த
மானெடுவி ளங்கு மணிமார்பா
மாமறைமு ழங்கு ஸ்ரீபுருட மங்கை
மாநகர மர்ந்த பெருமாளே.

இலஞ்சி

981

கரங்க மலமின தரம்ப வளம்வளை
களம்ப கழிவிழி மொழிபாகு
கரும்ப முதுமுலை குரும்பை குருகுப
கரும்பி டியினடை யெயின்மாதோ

டரங்க நககன தனங்கு தலையிசை
யலங்க நியமுற மயில்மீதே
அமர்ந்து பவவினை களைந்து வருகொடி
யவந்த கனகல வருவாயே

தரங்க முதியம கரம்பொ ருததிரை
சலந்தி நதிகும ரெனவான
தலம்ப ரவமறை புலம்ப வருசிறு
சதங்கை யடிதொழு பவராழி

இரங்கு தொலைதிரு வரங்கர் மருகப
னிரண்டு புயமலை கிழவோனே
இலங்கு தரதமிழ் விளங்க வருதிரு
இலஞ்சி மருவிய பெருமாளே.

982

கொந்தள வோலை குலுங்கிட வாளிச்
சங்குட ழுழி கழன்றிட மேகக்
கொண்டைகள் மாலை சரிந்திட வாசப் பனிநீர்சேர்
கொங்கைகள் மார்பு குழைந்திட வாளிக்
கண்கயல் மேனி சிவந்திட கோவைக்
கொஞ்சிய வாயி ரசங்கொடு மோகக் கடலூடே

சந்திர ஆர மழிந்திட நூலிற்
பங்கிடை யாடை துவண்டிட நேசத்
தந்திட மாலு ததும்பியு மூழ்குற் றிடுபோதுன்
சந்திர மேனி முகங்களு நீலச்
சந்த்ரகி மேல்கொ டமர்ந்திடு பாதச்
சந்திர வாகு சதங்கையு மோசற் றருள்வாயே

சுந்தரர் பாட லுகந்திரு தாளைக்
கொண்டுநல் தூது நடந்தவ ராகத்
தொந்தமொ டாடி யிருந்தவள் ஞானச் சிவகாமி
தொண்டர்க ளாக மமர்ந்தவள் நீலச்
சங்கரி மோக சவுந்தரி கோலச்
சுந்தரி காளி பயந்தரு ளானைக் கிளையோனே

இந்திர வேதர் பயங்கெட சூரைச்
சிந்திட வேல்கொ டெறிந்துநல் தோகைக்
கின்புற மேவி யிருந்திடு வேதப் பொருளோனே

எண்புன மேவி யிருந்தவள் மோகப்
பெண்திரு வாளை மணந்திய லார்சொற்
கிஞ்சிய ளாவு மிலஞ்சி விசாகப் பெருமாளே.

983

சுரும்பணி கொண்டல் நெடுங்குழல் கண்டு
துரந்தெறி கின்ற விழிவேலால்
சுழன்று சுழன்று துவண்டு துவண்டு
சுருண்டு மயங்கி மடவார்தோள்

விரும்பி வரம்பு கடந்து நடந்து
மெலிந்து தளர்ந்து மடியாதே
விளங்கு கடம்பு விழைந்தணி தண்டை
விதங்கொள் சதங்கை யடிதாராய்

பொருந்த லமைந்து சிதம்பெற நின்ற
பொலங்கிரி யொன்றை யெறிவோனே
புகழ்ந்து மகிழ்ந்து வணங்கு குணங்கொள்
புரந்தரன் வஞ்சி மணவாளா

இரும்புன மங்கை பெரும்புள கஞ்செய்
குரும்பை மணந்த மணிமார்பா
இலஞ்சியில் வந்த இலஞ்சிய மென்று
இலஞ்சி யமர்ந்த பெருமாளே.

984

மாலையில் வந்து மாலை வழங்கு
மாலை யநங்கன் மலராலும்
வாடை யெழுந்து வாடை செறிந்து
வாடை யெறிந்த அனலாலுங்

கோல மழிந்து சால மெலிந்து
கோமள வஞ்சி தளராமுன்
கூடிய கொங்கை நீடிய அன்பு
கூரவு மின்று வரவேணும்

கால னடுங்க வேலது கொண்டு
கானில் நடந்த முருகோனே
கான மடந்தை நாண மொழிந்து
காத லிரங்கு குமரேசா

சோலை வளர்ந்து சாலி விளைந்து
சூழு மிலஞ்சி மகிழ்வோனே
சூரிய னஞ்ச வாரியில் வந்த
சூரனை வென்ற பெருமாளே.

திருக்குற்றாலம்

985

ஏடுக்கொத் தாரலர் வார்குழ
லாடப்பட் டாடைநெ லாவிய
ஏதப்பொற் றேள்மிசை மூடிய கரமாதர்
ஏதத்தைப் பேசுப ணுளிகள்
வீசத்துக் காசைகொ டாடிகள்
ஏறிட்டிட் டேணியை வீழ்விடு முழுமாயர்

மாடொக்கக் கூடிய காமுகர்
மூழ்குற் றுக் காயமொ டேவரு
வாயுப்புற் றூலவி யாதிக ளிவைமேலாய்
மாசுற்றுப் பாசம்வி டாசம
னூர்புக்குப் பாழ்நர கேவிழு
மாயத்தைச் சீவியு ணுதர வருள்வாயே

தாடுட்டுட் டுடுடு டீடிமி
டுடுட்டுட் டுடுடு டாடமி
தானத்தத் தானத னுவென வெகுபேரி
தானெத்தப் பூதப சாசுகள்
வாய்விட்டுச் சூரர்கள் சேனைகள்
சாகப்பொற் றேகையி லேறிய சதிரோனே

கூடற்கச் சாலைசி ராமலை
காவைப்பொற் காழிவெ ணூர்திகழ்
கோடைக்கச் சூர்கரு வூரிலு முயர்வான
கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலமு லாவிய பெருமாளே.

986

வேதத்திற் கேள்வி யிலாதது
போதத்திற் காண வொணாதது
வீசத்திற் றூர மிலாதது கதியாளர்
வீதித்துத் தேடரி தானது
ஆதித்தற் காய வொணாதது
வேகத்துத் தீயில் வெகாதது சுடர்கானம்

வாதத்துக் கேயவி யாதது
காதத்திற் பூவிய லானது
பாசத்திற் பேரொளி யானது மதமூறு
மாயத்திற் காய மதாசல
தீதர்க்குத் தூரம தாகிய
வாழ்வைச்சற் காரம தாஇனி யருள்வாயே

காதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதென
காதறபட் டோதியு மேவிடு கதிகாணார்
காணப்பட் டேகொடு நோய்கொடு
வாதைப்பட் டேமதி தீதக
லாமறகெட் டேதடு மாறிட அடுவோனே

கோதைப்பித் தாயொரு வேடுவ
ரூபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே
கோதிற்பத் தாரொடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் றாலமு லாவிய பெருமாளே.

987

முத்தோலைத ஊனக்கி ழித்தயி
லைப்போரி கலிச்சி வத்துமு
கத்தாம ரையிற்செ ருக்கிடும் விழிமானார்
முற்றாதிள கிப்ப ணைத்தணி
கச்சாரம றுத்த நித்தில
முத்தாரம ழுத்து கிர்க்குறி யதனாலே

வித்தாரக வித்தி றத்தினர்
பட்டோலைநி கர்த்தி ணைத்தெழு
வெற்பானத னத்தில் நித்தலு முழல்வேனோ

மெய்த்தேவர்து தித்தி டத்தரு
பொற்பார்கம லப்ப தத்தினை
மெய்ப்பாகவ ழுத்தி டக்ருபை புரிவாயே

பத்தானமு டித்த லைக்குவ
டிற்றுடவ ரக்க ருக்கிறை
பட்டாவிவி டச்செ யித்தவன் மருகோனே

பற்பாசன்மி கைச்சி ரத்தைய
றுத்தாதவ னைச்சி னத்துறு
பற்போகவு டைத்த தற்பரன் மகிழ்வோனே

கொத்தார்கத லிப்ப ழக்குலை
வித்தாரவ ருக்கை யிற்சுளை
கொத்தோடுதி ரக்கு தித்தெழு கயலாரங்

கொட்டாசுழி யிற்கொ ழித்தெறி
சிற்றாறுத னிற்க ளித்திடு
குற்றாலரி டத்தி லுற்றருள் பெருமாளே.

ஆய்க்குடி

988

வாட்படச் சேனைபட வோட்டியொட் டாரையிறு
மாப்புடைத் தாளரசர் பெருவாழ்வும்
மாத்திரைப் போதிலிடு காட்டினிற் போமெனஇல்
வாழ்க்கைவிட் டேறுமடி யவர்போலக்

கோட்படப் பாதமலர் பார்த்திளைப் பாறவினை
கோத்தமெய்க் கோலமுடன் வெகுரூபக்
கோப்புடைத் தாகியல மாப்பினிற் பாரிவரு
கூத்தினிப் பூரையிட அமையாதோ

தாட்படக் கோபவிஷ பாப்பினிற் பாலன்மிசை
சாய்த்தொடுப் பாரவுநிள் கழல்தாவிச்
சாற்றுமக் கோரவுரு கூற்றுதைத் தார்மவுலி
தாழ்க்கவஜ் ராயுதனு மிமையோரும்

ஆட்படச் சாமபர மேட்டியைக் காவலிடு
மாய்க்குடிக் காவலவு ததிமீதே
ஆர்க்குமத் தானவரை வேற்கரத் தால்வரையை
ஆர்ப்பெழச் சாடவல பெருமாளே.

திருப்புத்தூர்

989

கருப்புச் சாப னனைய இளைஞர்கள்
ப்ரமிக்கக் காத லுலவு நெடுகிய
கடைக்கட் பார்வை யினிய வனிதையர் தனபாரங்

களிற்றுக் கோடு கலச மலிநவ
மணிச்செப் போடை வனச நறுமலர்
கனத்துப் பாளை முறிய வருநிக ரிளநீர்போற்

பொருப்பைச் சாடும் வலியை யுடையன
அறச்சற் றுன இடையை நலிவன
புதுக்கச் சார வடமொ டடர்வன எனநாளும்

புகழ்ச்சிப் பாட லடிமை யவரவர்
ப்ரியப்பட் டாள வுரைசெ யிழிதொழில்
பொகட்டெப் போது சரியை கிரியைசெய்
துயிர்வாழ்வேன்

இருட்டுப் பாரில் மறலி தனதுடல்
பதைக்கக் கால்கொ டுதைசெய் தவன்விழ
எயிற்றுப் போவி யமர ருடலவர் தலைமாலை

எலுப்புக் கோவை யணியு மவர்மிக
அதிர்த்துக் காளி வெருவ நொடியினி
லெதிர்த்திட் டாடும் வயிர பயிரவர் நவநீத

திருட்டுப் பாணி யிடப முதுகிடை
சமுக்கிட் டேறி யதிர வருபவர்
செலுத்துப் பூத மலகை யிலகிய படையாளி

செடைக்குட் பூளை மதிய மிதழிவெ
ளெருக்குச் சூடி குமர வயலியல்
திருப்புத் தூரில் மருவி யுறைதரு பெருமாளே.

990

வேலை தோற்க விழித்துக் காதினி
லோலை காட்டி நகைத்துப் போதொரு
வீடு காட்டி யுடுத்தப போர்வையை நெகிழ்வாகி
மேனி காட்டி வளைத்துப் போர்முலை
யானை காட்டி மறைத்துத் தோதக
வீறு காட்டி யெதிர்த்துப் போரெதிர் வருவார்மேல்

கால மேற்க வுழப்பிக் கூறிய
காசு கேட்டது கைப்பற் றுஇடை
காதி யோட்டி வருத்தப் பாடுடன் வருவார்போல்
காதல் போற்று மலர்ப்பொற் பாயலின்
மீத ணுப்பு மசட்டுச் சூளைகள்
காம நோய்ப்படு சித்தத் தீவினை யொழியேனோ

ஆல கோட்டு மிடற்றுச் சோதிக
பாலி பார்ப்பதி பக்ஷித் தால்நட
மாடி தாத்திரி பட்சித் தாவென வுமிழ்வாளி
ஆடல் கோத்த சிலைக்கைச் சேவக
னேடை பூத்த தளக்கட் சானவி
யாறு தேக்கிய கற்றைச் சேகர சடதாரி

சீல மாப்பதி மத்தப் பாரிட
சேனை போற்றிடு மப்பர்க் கோதிய
சேத னூர்த்தப்ர சித்திக் கேவரு முருகோனே
சேல ருக்கயல் தத்தச் சூழ்வய
லூர வேற்கர விப்ரர்க் காதர
தீர தீர்த்த திருப்புத் தூருறை பெருமாளே.

திருவாடானை

991

ஊனுரு முட்பிணியு மானுக வித்தவுட
லூதாரி பட்டொழிய வுயிர்போனால்
ஊரார் குவித்துவர ஆவா வெனக்குறுகி
ஓயா முழக்கமெழ அழுதோய

நானு விதச்சிவிகை மேலே கிடத்தியது
நாரு தெடுத்தடவி யெரியூடே

நாணுமல் வைத்துவிட நீறுமெ னிப்பிறவி
நாடா தெனக்குனருள் புரிவாயே

மானுக துத்திமுடி மீதே நிருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே
வாழ்வா யிருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வானோரு மட்டகுல கிரியாவும்

ஆனு வரக்கருடன் வானோர் பிழைக்கவரு
மாலால முற்றவமு தயில்வோன்முன்
ஆசார பத்தியுடன் ஞானக மத்தையரு
ளாடானை நித்தமுறை பெருமாளே.

உத்தரகோசமங்கை

992

கறபக ஞானக் கடவுண்மு னண்டத்
திற்புத சேனைக் கதிபதி யின்பக்
கட்கழை பாகப் பமமுது வெண்சர்க்
கரைபால்தேன்
கட்டிள நீர்முக் கனிபய றம்பொற்
றெப்பையி னேறிட் டருளிய தந்திக்
கட்டிளை யாய்பொற் பதமதி றைஞ்சிப் பரியாய

பொற்சிகி யாய்கொத் துருண்மணி தண்டைப்
பொற்சரி நாதப் பரிபுர என்றுப்
பொற்புற வோதிக் கசிவொடு சிந்தித் தினிதேயான்
பொற்புகழ் பாடிச் சிவபத மும்பெற்
றுப்பொருள் ஞானப் பெருவெளி யும்பெற்
றுப்புக லாகத் தமுதையு முண்டிட் டிடுவேனோ

தெற்பமு ளாகத் திரள்பரி யும்பற்
குப்பைக ளாகத் தசுரர்பி ணந்திக்
கெட்டையு மூடிக் குருதிகள் மங்குற் செவையாகித்
திக்கய மாடச் சிலசில பம்பைத்
தத்தன தானத் தடுடுடு வெங்கச்
செப்பறை தாளத் தகுதொகு வெங்கச் சிலபேரி

உற்பன மாகத் தடிபடு சம்பத்
தற்புத மாகத் தமரர்பு ரம்பெற்
றுட்செல்வ மேவிக் கணமலர் சிந்தத் தொடுவேலா

உட்பொருள் ஞானக் குறமக ளும்பற்
சித்திரை நீடப் பரிமயில் முன்பெற்
றுத்தர கோசத் தலமுறை கந்தப் பெருமாளே.

இராமேசுரம்

993

வாலவய தாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிளை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகிமட கூடமொடு
பொருள்தேடி
வாசபுழு கோடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவரா சைதனி லேசுழல
சிலநாள்போய்த்
தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுகமாறிதடி யோடுதிரி யுறுநாளிற்
சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுட லழிவேனோ
நாலுமுக னாதியரி யோமெனஅ தாரமுறை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிரமோடுசிகை தூளிபட தாளமிடு மிளையோனே
நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வாணமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ்
மயில்வீரா
ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீலிபக னேடொருவி ராதனெழு
மோதகடலோடுவிறல்ராவணகுழாமமரில் பொடியாக
ஓகைதழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காஎனவெ
யோதமறைராமெசுர மேவுகுமராவமரர் பெருமாளே.

994

வானோர் வழுத்துனது பாதார பத்மமலர்
மீதே பணிக்கும்வகை யறியாதே
மானார் வலைக்கணதி லேதூளி மெத்தையினி
லூடே யணைத்துதவு மதனாலே

தேனே கருப்பிலெழு பாகோ விதற்கிணைக
 ளேதோ வெனக்கலவி பலகோடி
 தீரா மயக்கினெடு நாகா படத்திலெழு
 சேருடல் பெற்றதுய ரொழியேனோ
மேனாடு பெற்றுவளர் சூராதி பற்கெதிரி
 னூடேகி நிற்குமிரு கழலோனே
 மேகார வுக்ரபரி தானேறி வெற்றிபுனை
 வீரா குறச்சிறுமி மணவாளா
ஞானா பரற்கினிய வேதாக மப்பொருளை
 நாணா துரைக்குமொரு பெரியோனே
 நாரா யணற்குமரு காவீறு பெற்றிலகு
 ராமே சுரத்திலுறை பெருமாளே.

இந்தம்பலம்

995

அமல கமலவுரு சங்கந் தொனித்தமறை
 அரிய பரமவெளி யெங்கும் பொலித்தசெய
 லளவு மசலமது கண்டங் கொருத்தருள வறியாத
 தகர முதலுருகொ ளம்பந் தொரக்ஷரமொ
 டகில புவனாதி யண்டங் களுக்குமுத
 லருண கிரணவொளி யெங்கெங் குமுற்றுமுதல்
 நடுவான
கமல துரியமதி லிந்துங் கதிர்ப்பரவு
 கனக நிறமுடைய பண்பம் படிக்கதவ
 ககன சுழிமுனையி லஞ்சுங் களித்தமுத சிவயோகம்
 கருணை யுடனறிவி தங்கொண் டிடக்கவுரி
 குமர குமரகுரு வென்றென் றுரைப்பமுது
 கனிவு வரஇளமை தந்துன் பதத்திலெனை
 யருள்வாயே
திமிலை பலமுருடு திந்திந் திமித்திமித
 டுமுட டுமுடுமுட டுண்டுண் டுமுட்டுமுட
 திகுட திகுடதிகு திந்திந் திகுர்த்திகுர்த திகுதீதோ

செகண செகணசெக செஞ்செஞ் செகக்கணென
அகில முரகன்முடி யண்டம் பிளக்கவெகு
திமிர்த குலவிருது சங்கந் தொனித்தசுரர் களமீதே.

அமரர் குழுமிமலர் கொண்டடங் கிறைத்தருள
அரிய குருகுகொடி யெங்குந் தழைத்தருள
அரியொ டயன்முனிவ ரண்டம் பிழைத்தருள
விடும்வேலா

அரியின் மகள்தனமொ டங்கம் புதைக்கமுக
அழகு புயமொடணை யின்பங் களித்துமகிழ்
அரிய மயிலயில்கொ டிந்தம் பலத்தின்மகிழ்
பெருமாளே..

எழுகரைநாடு
996

விரகற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்
மிகவுமி ராப்பகல் பிறிதுப ராக்கற
விழைவுகு ராப்புனை யுங்குமார

முருகஷ டாக்ஷர சரவண கார்த்திகை
முலைநுகர் பார்த்திப என்றுபாடி
மொழிகுழ றுத்தொழு தழுதழு தாட்பட
முழுதும லாப்பொருள் தந்திடாயோ

பரகதி காட்டிய விரகசி லோச்சய
பரமப ராக்ரம சம்பராரி
படவிழி யாற்பொரு பசுபதி போற்றிய
பகவதி பார்ப்பதி தந்தவாழ்வே

இரைகடல் தீப்பட நிசிசரர் கூப்பிட
எழுகிரி யார்ப்பெழ வென்றவேலா
இமையவர் நாட்டினில் நிறைகுடி யேற்றிய
எழுகரை நாட்டவர் தம்பிரானே..

ஒடுக்கத்துச்செறிவாய்
997

வழக்குச் சொற்பயில் வாற்ச ளப்படு
மருத்துப் பச்சிலை தீற்று மட்டைகள்
வளைத்துச் சித்தச சாத்தி ரக்கள வதனாலே

மனத்துக் கற்கஜள நீற்று ருக்கிகள்
சுகித்துத் தெட்டிக ளூர்த்து திப்பரை
மருட்டிக் குத்திர வார்த்தை செப்பிகள் மதியாதே

கழுத்தைக் கட்டிய ணுப்பி நட்பொடு
சிரித்துப் பற்களை காட்டி கைப்பொருள்
கழற்றிக் கற்புகர் மாற்று ரைப்பது கரிசாணி
கணக்கிட் டுப்பொழு தேற்றி வைத்தொரு
பிணக்கிட் டுச்சிலு காக்கு பட்டிகள்
கலைக்குட்புக்கிடு பாழ்த்தபுத்தியை யொழியேனோ

அழற்கட் டப்பறை மோட்ட ரக்கரை
நெருக்கிப் பொட்டெழ நூக்கி யக்கணம்
அழித்திட் டுக்குற வாட்டிபொற்றன கிரிதோய்வாய்
அகப்பட் டுத்தமிழ் தேர்த்த வித்தகர்
சமத்துக் கட்டியி லாத்த முற்றவன்
அலைக்குட் கட்செவி மேற்ப டுக்கையி
லுறைமாயன்

உழைக்கட் பொற்கொடி மாக்கு லக்குயில்
விருப்புற் றுப்புணர் தோட்க்ரு பைக்கடல்
உறிக்குட் கைத்தல நீட்டு மச்சுதன் மருகோனே
உரைக்கச் செட்டிய ருய்ப்பன் முத்தமிழ்
மதித்திட் டுச்செறி நாற்க விப்புணர்
ஒடுக்கத்துச்செறிவாய்த்தலத்துறை பெருமாளே.

காமத்தூர்

998

ஆகத் தேதப் பாமற் சேரிக்
காரைகைத் தேறற் கணையாலே
ஆலப் பாலைப் போலக் கோலத்
தாயக் காயப் பிறையாலே

போகத் தேசற் றேதற் பாயற்
பூவிற் றீயிற் கருகாதே
போதக் காதற் போகத் தாளைப்
பூரித் தாரப் புணராயே

தோகைக் கேயுற் றேறித் தோயச்
சூர்கெட் டோடப் பொரும்வேலா
சோதிக் காலைப் போதக் கூவத்
தூவற் சேவற் கொடியோனே

பாகொத் தேசொற் பாகத் தாளைப்
பாரித் தார்நற் குமரேசா
பாரிற் காமத் தூரிற் சீலப்
பாவத் தேவப் பெருமாளே..

முள்வாய்

999

மின்னார் பயந்த மைந்தர் தன்னு டினங்கு விந்து
வெவ்வே றுழன்று ழன்று மொழிகூற
விண்மேல் நமன்க ரந்து மண்மே லுடம்பொ ருங்க
மென்று ளறிந்த டைந்து உயிர்போமுன்

பொன்னார் சதங்கை தண்டை முந்நூல் கடம்ப ணிந்து
பொய்யார் மனங்கள் தங்கு மதுபோலப்
பொல்லே னிறைஞ்சி ரந்த சொன்னீ தெரிந்த ழுங்கு
புன்னு யுளுங்க வின்று புகுவாயே

பன்னு ளிறைஞ்சு மன்பர் பொன்னு டுறங்கை தந்து
பன்னு கணைந்து சங்க முறவாயிற்
பன்னூல் முழங்கலென்று விண்ணோர் மயங்க நின்று
பண்ணூது கின்ற கொண்டல் மருகோனே

முன்னாய் மதன்க ரும்பு வின்னோர் தடந்தெ ரிந்து
முன்னோர் பொருங்கை யென்று முனையாட
மொய்வார நிமிர்ந்த கொங்கை மெய்ம்மாதர்
வந்தி றைஞ்சு
முள்வாய் விளங்க நின்ற பெருமாளே.

வாகைமாநகர்

1000

ஆலை யான மொழிக்கு மாளை யூடு கிழிக்கு
மால கால விழிக்கு முறுகாதல்
ஆசை மாத ரழைக்கு மோசை யான தொனிக்கு
மார பார முலைக்கு மழுகான

ஓலை மேவு குழைக்கு மோடை யானை நடைக்கு
மோரை சாயு மிடைக்கு மயல்மேவி
ஊறு பாவ வுறுப்பி லூறல் தேறு கரிப்பி
லூர வோடு விருப்பி லுழல்வேனோ

வேலை யாக வளைக்கை வேடர் பாவை தனக்கு
மீறு காத லளிக்கு முகமாய
மேவு வேடை யளித்து நீடு கோல மளித்து
மீள வாய்மை தெளித்து மிதண்மீது

மாலை யோதி முடித்து மாது தாள்கள் பிடித்து
வாயி லூறல் குடித்து மயல்தீர
வாகு தோளி லணைத்து மாக மார்பொ ழிலுற்ற
வாகை மாநகர் பற்று பெருமாளே.

விசுவை

1001

திருகுசெ றிந்த குழலை வகிர்ந்து
முடிமலர் கொண்டொ ரழகாகச்
செயவரு துங்க முகமும் விளங்க
முலைகள்கு லுங்க வருமோக

அரிவையர் தங்கள் வலையில் விழுந்து
அறிவுமெ லிந்து தளராதே
அமரர்ம கிழ்ந்து தொழுது வணங்கு
ணடியிணை யன்பொ டருள்வாயே

வரையையமு னிந்து விழவெ கடிந்து
வடிவெலெ றிந்த திறலோனே
மதுரித செஞ்சொல் குறமட மங்கை
நகிலது பொங்க வரும்வேலா

விரைசெறி கொன்றை யறுகுபு னைந்த
விடையரர் தந்த முருகோனே
விரைமிகு சந்து பொழில்கள் துலங்கு
விசுவைவி ளங்கு பெருமாளே.

க்ஷேத்திரக்கோவை

1002

கும்ப கோணமொ டாரூர்சி தம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூர மம்பெறு சிவகாசி

கொந்து லாவிய ராமேசு ரந்தனி
வந்து பூஜைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர்ப ரங்கிரி தனில்வாழ்வே

செம்பு கேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ செகநாதஞ்

செஞ்சொ லேரக மாவாவி னன்குடி
குன்று தோறுடன் மூதூர்வி ரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில்
வருதேவே

கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்பு லாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர வயலூரா

கந்த மேவிய போரூர்ந டம்புரி
தென்சி வாயமு மேயாய கம்படு
கண்டி யூர்வரு சாமிக டம்பணி மணிமார்பா

எம்பி ரானொடு வாதாடு மங்கைய
ரும்பர் வாணிபொ னீள்மால்ச வுந்தரி
எந்த நாள்தொறு மேர்பாக நின்றுறு துதியோதும்

இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய்ம ணந்துல
கெங்கு மேவிய தேவால யந்தொறு பெருமாளே.

பொதுப் பாடல்கள்

1003

வேத வித்தகா சாமீ நமோநம
வேல்மி குத்தமா சூரா நமோநம
வீம சக்ரயூ காளா நமோநம விந்துநாத
வீர பத்மசீர் பாதா நமோநம
நீல மிக்ககூ தாளா நமோநம
மேக மொத்தமா யூரா நமோநம விண்டிடாத

போத மொத்தபேர் போதா நமோநம
பூத மற்றுமே யானாய் நமோநம
பூர ணத்துளே வாழ்வாய் நமோநம துங்கமேவும்
பூத ரத்தெலாம் வாழ்வாய் நமோநம
ஆறி ரட்டிநீள் தோளா நமோநம
பூஷ ணத்துமா மார்பா நமோநம புண்டரீக

மீதி ருக்குநா மாதோடு சேயிதழ்
மீதி ருக்குமே ரார்மாபு லோமசை
வீர மிக்கஏழ் பேர்மாதர் நீடினம் நின்றுநாளும்
வேத வித்தகீ வீமா விராகிணி
வீறு மிக்கமா விஞ்ஞ கரேமக
மேரு வுற்றுவாழ் சீரே சிவாதரெ யங்கராகீ

ஆதி சத்திசா மாதேவி பார்வதி
நீலி துத்தியார் நீஞ்ஞக பூஷணி
ஆயி நித்தியே கோமேர மாதவி யென்றுதாழும்
ஆர்யை பெற்றசீ ராளா நமோநம
சூரை யட்டுநீள் பேரா நமோநம
ஆர ணத்தினுர் வாழ்வே நமோநம தம்பிரானே.

1004

போத நிர்க்குண போதா நமோநம
நாத நிஷ்கள நாதா நமோநம
பூர ணக்கலை சாரா நமோநம பஞ்சபாண
பூபன் மைத்துன பூபா நமோநம
நீப புஷ்பக தாளா நமோநம
போக சொர்க்கபு பாலா நமோநம சங்கமேறும்

மாத மிழ்த்ரய சேயே நமோநம
வேத னத்ரய வேளே நமோநம
வாழ்ஜ கத்ரய வாழ்வே நமோநம என்றுபாத
வாரி ஜத்தில்வி ழாதே மகோததி
யேழ்பி றப்பினில் மூழ்கா மனேபவ
மாயை யிற்சுழி யூடே விடாதுக லங்கலாமோ

கீத நிர்த்தவெ தாளா டவீநட
நாத புத்திர பாகீ ரதீகிரு
பாச முத்திர ஜீமூத வாகனர் தந்திபாகா
கேக யப்பிர தாபா முலாதிப
மாலி கைக்கும ரேசா விசாகக்ரு
பாலு வித்ரும காரா ஷடானன புண்டரீகா

வேத வித்தக வேதா விநோதகி
ராத லக்ஷ்மிகி ரீடா மகாசல
வீர விக்ரம பாரா வதானவ கண்டசூர
வீர நிட்டுர வீராதி காரண
தீர நிர்ப்பய தீராபி ராமவி
நாய கப்ரிய வேலாயு தாசுரர் தம்பிரானே.

1005

ஆவி காப்பது மேற்பத மாத லாற்புரு டார்த்தமி
தாமெ னுப்பர மார்த்தம துணராதே
ஆனை மேற்பரி மேற்பல சேனை போற்றிட வீட்டொட
நேக நாட்டொடு காட்டொடு தடுமாறிப்
பூவை மார்க்குரு காப்புதி தான கூத்தொடு பாட்டொடு
பூவி னுற்றம ருத்தன கிரிதோயும்
போக போக்யகலாத்தொடு வாழ்பராக்கொடி ராப்பகல்
போது போக்கியெ னுக்கையை விடலாமோ
தேவி பார்ப்பதி சேர்ப்பர பாவ னுர்க்கொரு சாக்ரஅ
தீத தீக்ஷைப ரீக்ஷைக ளறவோதுந்
தேவ பாற்கர நாற்கவி பாடு லாக்ஷண மோக்ஷதி
யாக ராத்திகழ் கார்த்திகை பெறுவாழ்வே
மேவி னுர்க்கருள் தேக்குது வாத சாக்ஷச டாக்ஷர
மேரு வீழ்த்தப ராக்ரம வடிவேலா
வீர ராக்கத ரார்ப்பெழ வேத தாக்ஷக னுக்கெட
வேலை கூப்பிட வீக்கிய பெருமாளே.

1006

ஏக மாய்ப்பல வாய்ச்சிவ போக மாய்த்தெளி வாய்ச்சிவ
மீதெ ழுக்குரு வார்த்தையை யுணராதே
ஏழு பார்க்கும்வி யாக்கிரன் யானெ னுப்பரி தேர்க்கரி
யேறு மாப்பிறு மாப்புட னரசாகித்
தோகை மார்க்கொரு காற்றெலை யாத வேட்கையி
னுற்கெடு
சோர்வி னுற்கொடி தாக்கையை யிழவாமுன்
சோதி காட்டவ ராச்சுத நாத னுர்க்கருள் போற்றிய
தூரி தாப்பர மார்த்தம தருள்வாயே
நாக மேற்றுயில் வார்க்கய னுன பேர்க்கரி யார்க்கொரு
ஞான வார்த்தையி னுற்குரு பரனுய
நாத நாட்டமு ருப்பல காலும் வேட்கையி னுற்புகல்
நாவ லோர்க்கரு ளாற்பத மருள்வாழ்வே
வேக மேற்கொ ளராப்புடை தோகை மேற்கொடு
வேற்கொடு
வீர மாக்குலை யாக்குல வரைசாய
மேலை நாட்டவர் பூக்கொடு வேல போற்றியெ
னுத்தொழ
வேலை கூப்பிட வீக்கிய பெருமாளே.

1007

அகரமுத லெனவுரைசெய் ஐம்பந்தொ ரக்ஷரமும்
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும டங்குந்த னிப்பொருளை
எப்பொருளு மாய
அறிவையறி பவரறியும் இன்பந்த னைத்துரிய
முடிவைஅடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய
அணுவையணு வினின்மலமு நெஞ்சுங்கு
ணத்ரயமு மற்றதொரு காலம்
நிகழும்வடி வினைமுடிவி லொன்றென்றி ருப்பதனை
நிறைவுகுறை வொழிவறநி றைந்தெங்கு நிற்பதனை
நிகர்பகர அரியதைவி சும்பின்பு ரத்ரயமெ
ரித்தபெரு மானும்
நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது
ணர்த்தியருள் வாயே

தகுதகுகு தகுதகுகு தந்தந்த குத்தகுகு
டிகுடிகுகு டிகுடிகுகு டிண்டிண்டி குக்குடிகு
தகுதகெண கெணசெகுத தந்தந்த ரித்தகுத
தத்ததகு தீதோ
தனதனன தனதனன தந்தந்த னத்ததன
டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுண்டு டுட்டுடுடு
தரரரர ரிரிரிரிரி யென்றென்றி டக்கையுமு
டுக்கையுமி யாவும்
மொகுமொகென அதிரமுதி ரண்டம்பி ளக்கநிமிர்
அலகைகர ணமிடவுல கெங்கும்ப்ர மிக்கநட
முடுகுபயி ரவர்பவுரி கொண்டின்பு றப்படுக
ளத்திலொரு கோடி
முதுகழுகு கொடிகருட னங்கம்பொ ரக்குருதி
நதிபெருக வெகுமுகக வந்தங்கள் நிர்த்தமிட
முரசதிர நிசிசரரை வென்றிந்தி ரற்கரச
ளித்தபெரு மாளே.

1008

அரிய வஞ்சக ரறவே கொடியவ
ரவலர் வன்கண ரினியா ரவகுண
ரசட ரன்பில ரவமே திரிபவ ரதிமோக
அலையில் மண்டிய வழியே யொழுகியர்
வினைநி ரம்பிடு பவமே செறிபவ
ரருள்து றந்தவ ரிடம்வாழ் சவலைகள் நரகேற
உரிய சஞ்சல மதியா னதுபெறு
மனஇ டும்பர்க ளிடமே தெனஅவ
ருபய அங்கமு நிலையா கிடவொரு கவியாலே
உலக முண்டவர் மதனு ரிமையவர்
தருவெ னும்படி மொழியா வவர்தர
உளது கொண்டுயி ரவமே விடுவது தவிராதோ
கரிய கொந்தள மலையா ளிருதன
அமுது ணுங்குரு பரனே திரைபடு
கடல டும்படி கணையே வியஅரி மருகோனே
கருணை கொண்டொரு குறமா மகளிடை
கலவி தங்கிய குமரா மயில்மிசை
கடுகி யெண்டிசை நொடியே வலம்வரு
மிளையோனே

திரிபு ரங்கனல் நகையா லெரிசெய்து
பொது நடம்புரி யரனு ரிடமுறை
சிவைச வுந்தரி யுமையா ளருளிய புதல்வோனே
சிகர வெண்கரி அயிரா வதமிசை
வருபு ரந்தர னமரா பதியவர்
சிறைவி டும்படி வடிவேல் விடவல பெருமாளே.

1009

ஆராத காத லாகி மாதர்த மாபாத சூட மீதி லேவிழி
யாலோல னுய்வி கார மாகியி லஞ்சியாலே
ஆசாப சாசு மூடி மேலிட ஆசார வீன னாகி யேமிக
ஆபாச னாகி யோடி நாளும ழிந்திடாதே
ஈராறு தோளு மாறு மாமுக மோடாரு நீப வாச மாலையு
மேறுன தோகை நீல வாசியு மன்பினாலே
ஏனோரு மோது மாறு தீதற நானுசுபாடி யாடிநாடொறு
மீடேறு மாறு ஞான போதக மன்புறுதோ
வாராகி நீள்க பாலி மாலினி மாமாயி யாயி தேவி யாமளை
வாசாம கோச ராப ராபரை யிங்குளாயி
வாதாடி மோடி காடு காளுமை மாஞால லீலி யால
போசனி
மாகாளி சூலி வாலை யோகினி யம்பவானி
சூராரி மாபு ராரி கோமளை தூளாய பூதி பூசு நாரணி
சோணுச லாதி லோக நாயகி தந்தவாழ்வே
தோளாலும் வாளி னாலு மாறிடு தோலாத வான நாடு
சூறைகொள்
சூராரி யேவி சாக னேசுரர் தம்பிரானே.

1010

ஆராதன ராடம் பரத்து மாறுதுச வாலம் பனத்து
மாவாகன மாமந் திரத்து மடலாலும்
ஆருர்தெச மாமண் டபத்தும் வேதாகம மோதுந்
தலத்தும்
மாமாறெரி தாமிந் தனத்து மருளாதே
நீராளக நீர்மஞ் சனத்த நீடாரக வேதண்ட மத்த
நீநானற வேறின்றி நிற்க நியமாக
நீவாவென நீயிங் கழைத்து பாராவர வாநந்த சித்தி
நேரேபர மாநந்த முத்தி தரவேணும்

வீராகர சாமுண்டி சக்ர பாராகண பூதங் களிக்க
வேதாளச மூகம் பிழைக்க அமராடி
வேதாமுறை யோவென் றரற்ற ஆகாசக பாலம்பிளக்க
வேர்மாமர மூலந் தறித்து வடவாலும்
வாராகர மேழுங் குடித்து மாசூரொடு போரம் பறுத்து
வாஞ்சன மேலுந் துணித்த கதிர்வேலா
வானாடர சாளும் படிக்கு வாவாவென வாவென்
றழைத்து
வானோர்பரி தாபந் தவிர்த்த பெருமாளே.

1011

ஆலா லத்தைய முத்திய வேல்போல் நற்குழை
யைப்பொரு
தாகா ரைத்தொடர் கைக்கெணும் விழியாலே
ஆளா மற்றவர் சுற்றிட மீளா மற்றலை யிட்டறி
வார்போ கச்செயல் விச்சைகள் விலைகூறிக்

கோலா லக்கண மிட்டுவ ராதார் நெக்குரு கப்பொருள்
கூறு கப்பெறில் நிற்கவு மிலதானூர்
கூடா நட்புமு ரைத்திடு கேடா விட்டகல் மட்டைகள்
கோமா ளத்துய ருட்பய முறலாமோ

பாலா மக்கட லிற்றுயில் மாலோ ரெட்டுத லைக்கிரி
பால்பார் வைக்கள விட்டுமை யுறுபோதிற்
பார்மே லிக்கனு டற்பொறி யாய்வீ ழச்சுடும் வித்தகர்
பாலா பத்தரி டத்தியல் பயில்வோனே

மேலா யத்தொடு திக்கடை மேவார் வெற்பொட ரக்கரை
வேர்மா ளப்பொரு திட்டொளி விடும்வேலா
மேனா டர்ச்சிறை விட்டருள் மீளா விக்கிர மத்தொடு
வேதா வைச்சிறை யிட்டருள் பெருமாளே.

1012

ஆறுத ஞான புத்தி யைக்கொ டுத்ததும்
ஆராயு நூல்க ளிற்க ருத்த ளித்ததும்
ஆதேச வாழ்வி னிற்ப்ர மித்தி ளைத்துயி ரழியாதே
ஆசாப யோதி யைக்க டக்க விட்டதும்
வாசாம கோச ரத்தி ருத்து வித்ததும்
ஆபாதனேன்மிகப்ரசித்திபெற்றினி துலகேழும்

யாருக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற வோதி யெத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும் இடராழி
ஏருத மாம லத்ர யக்கு ணத்ரய
நாருவி கார புற்பு தப்பி றப்பற
ஏதேம மாயெ னக்க நுக்ர கித்ததும் மறவேனே
மாநாக நாண்வ லுப்பு றத்து வக்கியொர்
மாமேரு பூத ரத்த னுப்பி டித்தொரு
மாலாய வாளி யைத்தொ டுத்த ரக்கரி லொருமூவர்
மாளாது பாத கப்பு ரத்ர யத்தவர்
தூளாக வேமு தற்சி ரித்த வித்தகர்
வாழ்வேவ லாரி பெற்றெ டுத்த கற்பக வனமேவும்
தேநாய கான னத்து தித்த வுத்தம
வானுடர் வாழ விக்ர மத்தி ருக்கழல்
சேராத சூர னைத்து ணித்த டக்கிய வரைமோதிச்
சேருய சோரி புக்க ளக்கர் திட்டெழ
மாருநி சாச ரக்கு லத்தை யிப்படி
சீராவி னுல றுத்த றுத்தொ துக்கிய பெருமாளே.

1013

இடமருவுஞ் சீற்ற வேலெ டுத்து
விடமுழுதுந் தேக்கி யேநி றைத்து
இருகுழையுந் தாக்கி மீள்க யற்கண் வலையாலே
இனிமையுடன் பார்த்து ளேய ழைத்து
முகபடமுஞ் சேர்த்து வார முத்தும்
இருவரையுங் காட்டி மாலெ ழுப்பி விலைபேசி
மடலவிழும் பூக்க ளால்நி றைத்த
சுருளளகந் தூற்றி யேமு டித்து
மறுகிடைநின் றூர்க்க வேந கைத்து நிலையாக
வருபொருள்கண் டேற்க வேப றிக்கும்
அரிவையர்தம் பேச்சி லேமு ழுக்க
மனமுருகுந் தூர்த்த னுயி ளைத்து விடலாமோ
படிமுழுதுங் கூர்த்த மாகு லத்தி
முதுமறையின் பேச்சி நூலி டைச்சி
பகிர்மதியம் பூத்த தாழ்ச டைச்சி யிருநாழி

படிகொட றங் காத்த மாப ரைச்சி
மணிவயிரங் கோத்த தோள்வ ளேச்சி
பலதிசையும் போய்க்கு லாவி ருப்பி நெடுநீலி

அடுபுலியின் தோற்ப டாமு டைச்சி
சமரமுகங் காட்டு மால்வி டைச்சி
அகிலமுமுண் டார்க்கு நேரி ளேச்சி பெருவாழ்வே

அரியயனின் றேத்த வேமி குத்த
விபுதர்குலம் பேர்க்க வாளே டுத்த
அசுரர்குலம் பாழ்க்க வேலெ டுத்த பெருமாளே.

1014

இடர்மொய்த்துத் தொடரிற்பொய்க் குடிலக்கிக் கிடையிட்டிட்
டினிமைச்சுற் றமுமற்றைப் புதல்வோரும்
இனமொப்பித் திசையச்சொற் பலகத்திட் டிழியப்பிற்
கிடையத்துக் கமும்விட்டிட் டவரேக

விடமெத்தச் சொரிசெக்கட் சமன்வெட்டத் தனமுற்றிட்
டுயிர்வித்துத் தணையெற்றிக் கொடுபோமுன்
வினைபற்றற் றறநித்தப் புதுமைச்சொற்கொடுவெட்சிப்
புயவெற்றிப் புகழ்செப்பப் பெறுவேனோ

அடர்செக்கர்ச் சடையிற்பொற் பிறையப்புப் புனையப்பர்க்
கறிவொக்கப் பொருள்கற்பித் திடுவோனே
அலகைக்குட் பசிதித்தப் பலகைக்கொத் ததுபட்டிட்
டலறக்குத் துறமுட்டிப் பொரும்வேலா

கடலுக்குட் படுசர்ப்பத் தினில்மெச்சத் துயில்பச்சைக்
கிரிகைக்குட் டிகிரிக்கொற் றவன்மாயன்
கமலத்திற் பயில்நெட்டைக் குயவற்கெட் டிசையர்க்குக்
கடவுட்சக் கிரவர்த்திப் பெருமாளே.

1015

இரவினிடை வேள்தொ டுத்து டன்று
முறுகுமலர் வாளி யைப்பி ணங்கி
யிருகுழையு மோதி யப்ப டங்கு கடலோடே

எதிர்பொருது மானி னைத்து ரந்து
சலதிகிழி வேல்த னைப்பொ ருந்தி
யினியமுத ஆல முற்ற கண்கள் வலையாலே

முரணிளைஞ ராவி யைத்தொ டர்ந்து
விசிறிவளை மாத ரைக்க லந்து
மொழியதர கோவை யிக்க ருந்தி யமுதாகு
முகிழ்முகுளி தார வெற்ப ணைந்து
சுழிமிதுன வாவி யிற்பு குந்து
முழுகியழி யாம னற்ப தங்கள் தரவேணும்

திரையுலவு சாக ரத்தி லங்கை
நகரிலுறை ராவ ணற்கி யைந்த
தெசமுடியு மீரு பத்தொ ழுங்கு திணிதோளுஞ்
சிதையவொரு வாளி யைத்து ரந்த
அரிமருக தீத றக்க டந்து
தெளிமருவு கார ணத்த மர்ந்த முருகோனே

அரணமதிள் சூழ்பு ரத்தி ருந்து
கருதுமொரு மூவ ருக்கி ரங்கி
யருளுமொரு நாய கற்ப ணிந்த குருநாதா
அகல்முடிவை யாதி யைத்தெ ளிந்து
இரவுபக லாக நெக்க விழ்ந்த
அடியவர்கள் பாட லுக்கி சைந்த பெருமாளே.

1016

இரவொ டும்பக லேமா றுதே
அநுதி னந்துய ரோயா தேயே
யெரியு முந்தியி னுலே மாலே பெரிதாகி
இரைகொ ளும்படி யூடே பாடே
மிகுதி கொண்டொழி யாதே வாதே
யிடைக ளின்சில நாளே போயே வயதாகி

நரைக ளும்பெரி தாயே போயே
கிழவ னென்றொரு பேரே சார்வே
நடைக ளும்பல தாறே மாறே விழலாகி
நயன முந்தெரி யாதே போனல்
விடிவ தென்றடி யேனே தானே
நடன குஞ்சித வீடே கூடா தழிவேனோ

திருந டம்புரி தாளீ தூளீ
மகர குண்டலி மாரீ சூரீ
திரிபு ரந்தழ லேவீ சார்வீ யபிராமி

சிவனி டந்தரி நீலீ சூலீ
கவுரி பஞ்சவி யாயீ மாயீ
சிவைபெ ணம்பிகை வாலா சீலா அருள்பாலா

அரவ கிங்கிணி வீரா தீரா
கிரிபு ரந்தொளிர் நாதா பாதா
அழகி ளங்குற மானுர் தேனுர் மணவாளா

அரிய ரன்பிர மாவோ டேமு
வகைய ரிந்திர கோமா னீள்வா
னமரர் கந்தரு வானே ரேனுர் பெருமாளே.

1017

இருகுழை மீதோடி மீளவும் கயல்களு.மாலால காலமும்
ரதிபதி கோலாடு பூசலு மெனவேநின்
றிலகிய கூர்வேல் விலோசன ம்ருகமத பாடீர பூஷித
இளமுலை மாமாத ரார்வச முருகாதே

முருகவிழ் கூடதாள மாலிகை தழுவிய சீர்பாத தூளியின்
முழுகிவி டாய்போ மனேலயம் வரவோது
முழுமதி மாயாவி காரமு மொழிவது வாசாம கோசர
முகுளித ஞானேப தேசமு மருள்வேணும்

அருமறை நூலோதும்வேதிய னிரணியரூபாந மோவென
அரிகரி நாராய ணுவென ஒருபாலன்
அவனெவனுதாரமேதென இதனுள னேவோதுநீயென
அகிலமும் வாழ்வான நாயக னெனவேகி

ஒருகணை தூணேடு மோதிட விசைகொடு தோள்போறு வாளரி
யுகிர்கொடு வாரா நிசாசர னுடல்பீறு
முலகொரு தாளான மாமனு முமையொரு கூறுன தாதையு
முறைதரு தேவாசு ராதிபர் பெருமாளே.

1018

இருமுலை மலையென ஒப்பிட் டேயவர்
இருவிழி யதனில கப்பட் டேமன
மிசைபட வசனமு ரைத்திட் டேபல மினிதோடே
இடையது துவளகு லுக்கிக் காலணி
பரிபுர வொலிகள்தொ னிக்கப் பூதர
இளமுலை குழையஅணைத்துக்கேயுர மணியோடே

மரகத பவள மழுத்திப் பூஷண
மணிபல சிதறி நெறித்துத் தானுக
மருமலர் புனுகு தரித்துப் பூவணை மதராஜன்
மருவிய கலவி தனக்கொப் பாமென
மகிழ்வொடு ரசிது மிகுத்துக் கோதையை
மருவியு முருகி களைத்துப் பூமியி லுழல்வேனோ

திரிபுர மெரிய நகைத்துக் காலனை
யுதைபட மதனை யழித்துச் சாகர
திரைவரு கடுவை மிடற்றிற் றுனணி சிவனார்தந்
திருவருள் முருக பெருத்துப் பாரினில்
சியொதனன் மடிய மிகுத்துப் பாரத
செயமுறு மரிதன் மனத்துக் காகிய மருகோனே

நரிகழு வதுகள் களிக்கச் சோரிகள்
ரணகள முழுதுமி குத்துக் கூளிகள்
நடமிட அசுரர் குலத்துக் காலனை நிகராகி
நனிகடல் கதற பொருப்புத் தூளெழ
நணுகிய இமையவ ருக்குச் சீருற
நணுகலர் மடியதொ லைத்துப் பேர்பெறு
பெருமாளே.

1019

இலகிய வேலோ சேலோ ஒளிவிடு வாளோ போதோ
எமன்விடு தூதோ மானோ விடமீதோ
எனவிழி கூறு வாரா அரிவையர் தோளு டாடா
இறுதியில் வேறாய் மாறு நினைவாலே

பலபல கோளாய் மாலா யுழலும தாலுல் வீணே
படிறுசொ லாகா லோகா யதனுகிப்

பரிவுட னுடாய் வீடா யடிமையு மீடே றுதே
பணிதியில் மூழ்கா மாயா விடுவேனோ.

அலைகடல் கோகோ கோகோ எனவுரை கூறு வோடா
அவுணரை வாடா போடா எனலாகி
அழகிய வேலால் வாளால் நிலவிய சீரா வாலே
யவருடல் வாளு ளீரா எதிராகி

மலைமிகு தோளா போதா அழகிய வாலா பாலா
மகபதி வாழ்வே சேயே மயில்வீரா
மறைதொழு கோவே தேவே நறைசெறி பூவே நீரே
வளவிய வேளே மேலோர் பெருமாளே.

1020

உமையெனு மயில்பெற்ற மயில்வா கனனே
வனிதைய ரறுவர்க்கு மொருபா லகனே
உளமுரு கியபத்த ருறவே மறவே னெனவோதி
உருகுத லொருசற்று மறியேன் வறியேன்
இருவினை யிடையிட்ட கொடியே னடியேன்
உணர்விலி பெறமுத்தி தருவாய் துகிர்வாய்
மடமாதர்

அமையென வளர்சித்ர இருதோள் தழுவா
அமுதென மதுரித்த கனிவா யணுகா
அமளியி லணைவுற்ற அநுரா கமகோ ததிமூழ்கி
அநவரத தமுமுற்ற மணிமா முலைதோய்
கலவியி னலமற்ப சுகமா கினுமா
அநுபவ மிதுசற்றும் விடவோ இயலா தியலாதே.

தமனிய குலசக்ர கிரியோ கடலோ
விடமென முடிவைத்த முதுபே ரிருளோ
தனுவென முனையிட்ட கொலைமூ விலைவேல்
கொடுபார்வை

தழலெழ வருமுக்ர எமபா தகனோ
யுகஇறு தியில்மிக்க வடவா னலமோ
தனியிவ னெனமிக்க பிசிதா சனபூ பதியாகி

இமையவ ரனைவர்க்கும் அறையோ அறையோ
அரியயன் முழுதுக்கும் அறையோ அறையோ
எழுபுவி யுலகுக்கும் அறையோ அறையோ
பொரவாரும்

எனவரு மொருதுட்டன் முறையோ முறையோ
வடகுல கிரியெட்டும் அபிதா அபிதா
எனவொரு அயில்தொட்ட அரசே யிமையோர்
பெருமாளே.

1021

உரைத்த பற்றுட னடிகள்ப ணிந்திட்
டிருத்தி மெத்தென இளநகை யுஞ்சற்
றுமிழ்த்த டைக்கல மெனஎதிர் கும்பிட்
டணைமேல்வீழ்ந்

துடுத்த பொற்றுகி லகலல்கு லுந்தொட்
டெடுத்த ணைத்திதழ் பெருகமு தந்துய்த்
துனக்கெனக்கெனவுருகிமுயங்கிட் டுளம்வேறாய்

அருக்கி யத்தனை யெனுமவ சம்பட்
டறுத்தொ துக்கிய நகநுதி யுந்தைத்
தறப்பி தற்றிட அமளிக லங்கித் தடுமாறி
அளைத்து ழைத்திரு விழிகள்சி வந்திட்
டயர்த்தி தத்தொடு மொழிபவ ருந்திக்
கடுத்த கப்படு கலவியில் நொந்தெய்த் திடலாமோ

தரைக்க டற்புகு நிருதர்த யங்கச்
சளப்ப டத்தட முடிகள்பி டுங்கித்
தகர்த்தொலித்தெழு மலையொடுதுண்டப் பிறைசூடி
தனுக்கி ரித்திரி தரஎதி ருங்கொக்
கினைப்ப தைத்துட லலறிட வஞ்சத்
தருக்க டக்கிய சமர்பொரு துங்கத் தனிவேலா

பருப்ப தப்ரிய குறுமுனி வந்தித்
திருக்கு முத்தம நிருதர்க லங்கப்
படைப்பெ லத்தொடு பழயக்ர வுஞ்சக் கிரிசாடிப்
படர்ப்ப றைக்குரு குடலுதி ரங்குக்
குடக்கொ டிக்கிடு குமரகொ டுங்கற்
பதத்தி றுத்துகு பசியசி கண்டிப் பெருமாளே

1022

உலகத்தினில் மாதரு மைந்தரும்
உறுசுற்றமும் வாழ்வொடு றுங்கிளை
உயர்துக்கமு மோடுற வென்றுற வருகாலன்

உதிரத்துட னேசல மென்பொடு
உறுதிப்பட வேவள ருங்குடில்
உதிரக்கனல் மீதுற என்றனை யொழியாமுன்

கலகக்கலை நூல்பல கொண்டெதிர்
கதறிப்பத ருவுரை வென்றுயர்
கயவர்க்குள ளுய்வினை நெஞ்சொடு களிகூருங்
கவலைப்புல மோடுற என்துயர்
கழிவித்துன தாளிணை யன்பொடு
கருதித்தொழும் வாழ்வது தந்திட நினைவாயே

இலகப்பதி னாலுல கங்களும்
இருளக்கடி வானெழு மம்புலி
யெழில்மிக்கிட வேணியில் வந்துற எருதேறி
இருகைத்தல மான்மழு வும்புனை
யிறையப்பதி யாகிய இன்சொலன்
இசையப்பரி வோடினி தன்றரு ளிளையோனே

மலைபட்டிரு கூறெழ வன்கடல்
நிலைகெட்டபி தாவென அஞ்சகர்
வலியற்றசு ரேசரு மங்கிட வடிவேலால்
மலைவித்தக வானவ ரிந்திரர்
மலர்கைக்கொடு மாதவ ருந்தொழ
வடிவுற்றொரு தோகையில் வந்தருள் பெருமாளே.

1023

உறவின்முறை கதறியழ ஊராரு மாசையற
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
உலகிலுள பலரரிசி வாய்மீதிலேசொரியு மந்தநாளில்
உனதுமுக கருணைமல ரோரா று மாறிருகை
திரள்புயமுமெழில்பணிகொள்வார்காது நீள்விழியு
முபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமும் அந்தமார்பும்

மறையறைய அமரர்தரு பூமாரி யேசொரிய
மதுவொழுகு தரவில்மணி மீதேமு நூலொளிர
மயிலின்மிசை யழகுபொலி யாளாய்மு னரடியர் வந்துகூட

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனை யாளஇஙன்
வந்திடாயோ

பிறையெயிறு முரணசுரர் பேராது பாரில்விழ
அதிரஎழு புவியுலக மீரேழு மோலமிட
பிடிகளிறி னடல்நிரைகள் பாழாக வேதிசையில்
நின்றநாகம்

பிரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிணமு முணவுசெய்து பேயோடு
மாடல்செய வென்றதீரா

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருட
கரடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியி னிளமரம தேயாகி நீடியுயர்
குன்றுலாவி

கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
வொருபுறம துறவளரு மாதாபெ ருவருள்செய்
குமரகு ருபரஅமரர் வாழுடர் பேணஅருள்
தம்பிரானே.

1024

உறவு சிங்கிகள் காமா காரிகள்
முறைம சங்கிக ளாசா வேசிகள்
உதடு கன்றிகள் நாணு வீணிகள் நகரேகை
உடைய கொங்கையின் மீதே தூசிகள்
பிணமெ னும்படி பேய்நீ ராகிய
உணவை யுண்டுடை சோர்கோ மாளிகள்
கடல்ஞாலத்

தறவு நெஞ்சுபொ லாமா பாவிகள்
வறுமை தந்திடு பாழ்மூ தேவிக
ளணிநெ ருங்கிக ளாசா பாஷண மடமாதர்
அழகு யர்ந்தபொய் மாயா ரூபிகள்
கலவி யின்பமெ னுவே சோருதல்
அலமலந்து மாறு தோர்கதி யருள்வாயே

பறவை யென்கிற கூடார் மூவரண்
முறையி டுந்தமர் ளொருர் தேரரி
பகழி குன்றவி லாலே நீறெழ வொருமூவர்

பதஙி ஊனந்துவி டாதே தாள்பெற
அருள்பு ரிந்தபி ராஞர் மாபதி
பரவு கந்தசு வாமீ கானக மதின்மேவுங்
குறவர் தங்கள்பி ரானே மாமரம்
நெறுநெ றென்றடி வேரோ டேஙிலே
குலைய வென்றிகொள் வேலே யேவிய புயவீரா
குயில்க ளன்றில்கள் கூகூ கூவென
மலர்கள் பொங்கிய தேன்வீழ் காமிசை
குறவர் சுந்தரி யோடே கூடிய பெருமாளே.

1025

ஊனோடு வாதுயிர் தரித்து மட்டற
வூசாடு பாழ்குடி லெடுத்த திற்படி
ஓயாத மாமய லுழற்றி னிற்படு வம்பனேனை
ஊதாரி யாய்விடு சமத்தில் நிற்பது
மாராத காதலை மனத்தில் வைப்பது
மூரோடு போயெதிர் பிணக்கி னிறபது
முந்திடாதே
தேனூறு வாய்மொழி பரத்தை யர்க்கொரு
நாய்போல வேயவர் வசத்தில் நிற்பது
சீர்கேட தாய்விடு சிறுப்பி ளைத்தன மென்றுநீபச்
சீதாள மாமலர் தொடுத்த பத்தர்கள்
சீராடி நாண்மல ரெனப்ரி யப்படு
சீர்பாத போதக மநுக்ர கிப்பது மெந்தநாளோ
மாஞக பாயலில் படுக்கை யிட்டவர்
மாமேரு வாரியில் திரித்து விட்டவர்
மாடோடு போய்வரு மிடைக்கு லத்தவ ரன்றுவாவி
வாய் நாக மோலிட பிடித்த சக்கிர
வாளேவி யேகர விணைத்த றித்தவர்
மாமாய னுயுல களித்த வித்தகர் தங்கைவாழ்வே
காஞரு மாமலை தினைப்பு னத்தினில்
கால்மேல்வி ழாவொரு குறச்சி றுக்கியை
காணாது போயியல் புணர்ச்சி யிட்டருள்
கந்தவேளே
காரேழு மாமலை யிடித்து ருக்கெட
காராழி யேழவை கலக்கி விட்டுயர்
காவான நாடர்கள் பகைச்ச வட்டிய தம்பிரானே.

1026

எட்டுட னொருதொளை வாயா யதுபசு
மட்கல மிருவினை தோயா மிகுபிணி
யிட்டிடை செயவொரு போதா கிலுமுயிர் நிலையாக
எப்படி யுயர்கதி நாமே றுவதென
எட்பகி ரினுமிது வோரார் தமதம
திச்சையி னிடருறு பேரா சைகொள்கட
லதிலேவீழ்

முட்டர்க ணெறியினில் வீழா தடலொடு
முப்பதி னறுபதின் மேலா மறுவரு
முற்றுத லறிவரு ஞானோ தயவொளி வெளியாக
முக்குண மதுகெட நானா வெனவரு
முத்திரை யழிதர ஆரா வமுதன
முத்தமிழ் தெரிகனி வாயா லருளுவ தொருநாளே

திட்டென எதிர்வரு மாகா ளியினொடு
திக்கிட தரிகிட தீதோ மெனவொரு
சித்திர வெகுவித வாதா டியபத மலராளன்
செப்புக வெனமுன மோதா துணர்வது
சிற்சுக பரவெளி யீதே யெனஅவர்
தெக்ஷண செவிதனி லேபோ தனையருள்
குருநாதா

மட்டற அமர்பொரு சூரா திபனுடல்
பொட்டெழ முடுகிவை வேலா லெறிதரு
மற்புய மரகத மாதோ கையில்நட மிடுவோனே
வச்சிர கரதல வானோ ரதிபதி
பொற்புறு கரிபரி தேரோ டழகுற
வைத்திடு மருமக னேவா ழமரர்கள் பெருமாளே.

1027

எத்தி யிருகுழையை மோதி மீனமதின்
முட்டி யிடறியம தூதர் போலமுகி
லெட்டி வயவர்கர வாளை வேல்முனையை யெதிர்சீறி
எத்தி சையினுமொரு காம ராஜன்மிக
வெற்றி யரசுதனை யாள வீசியட
லெற்றி யிளைஞருயிர் கோலு நீலவிழி மடமாதர்

வித்தை தனிலுருகி யாசை யாகியவர்
கைக்குள் மருவுபொரு ளான ஆகும்வரை
மெத்தை தனிலுருகி மோக மாகிவிட அதன்மேலே
வெட்க மிலைநடவு மேகு மேகுமினி
மற்ற வரையழையு மாத ரேயெனமுன்
விட்டபடிறிகள் தம்நேசஆசைகெட அருள்வாயே
ஒத்த வரிகமுகு வாளை தாவுபுனல்
அத்தி நகரமர சான வாள்நிருபன்
ஒக்கு நினைவுமுனி லாமல் வாகுபெல நிலைகூற
உற்ற தருமனடல் வீமன் வேல்விசையன்
வெற்றி நகுலசக தேவர் தேர்தனிலும்
ஒத்து முடுகிவிடு பாகன் வாளமரி லசுரேசன்
பத்து முடிகள்துக ளாக வாகுஇரு
பத்து மொருகணையில் வீழ நேரவுணர்
பட்டு மடியஅமர் மோது காளமுகில் மருகோனே
பச்சை மயிலில்வரு வீர வேல்முருக
துட்ட நிருதர்குல கால வானவர்கள்
பத்தி யுடனடியில் வீழ வாழ்வுதவு பெருமாளே.

1028

ஒக்க வண்டெழு கொண்டைகு லைந்திட
வெற்பெ னுங்கன கொங்கைகு ழைந்திட
உற்ப லங்கள்சி வந்துகு விந்திட இந்த்ரகோபம்
ஒத்த தொண்டைது வண்டமு தந்தர
மெச்சு தும்பிக ருங்குயில் மென்புற
வொக்க மென்தொனி வந்து பிறந்திட அன்புகூர
மிக்க சந்திர ஞென்றுநி லங்களில்
விக்ர மஞ்செய்தி லங்குந கம்பட
மெத்த மென்பொரு ளன்பள வுந்துவ ளின்பமாதர்
வித்த கந்தரு விந்துத புங்குழி
பட்ட ழிந்துந லங்குகு ரம்பையை
விட்டகன்றுநினம்புயமென்பத
மென்றுசேர்வேன்
மைக்க ருங்கட லன்றெரி மண்டிட
மெய்க்ர வுஞ்சசி லம்புடல் வெம்பிட
மற்று நன்பதி குன்றிய ழிந்திட வும்பர்நாடன்

வச்சி ரங்கைய ணிந்துப தம்பெற
மெச்சு குஞ்சரி கொங்கைபு யம்பெற
மத்த வெஞ்சின வஞ்சகர் தங்களை நுங்கும்வேலா

தூக்கு டங்கொடி கொண்டப ரம்பர
சக்ர மண்டல மெண்டிசை யும்புகழ்
கோட்க கொன்றைய ணிந்தசி ரஞ்சர ணங்கிகாரா
கொத்த விழ்ந்தக டம்பலர் தங்கிய
மிக்க வங்கண கங்கண திண்புய
கொற்ற வங்குற மங்கைவி ரும்பிய தம்பிரானே.

1029

ஓது வித்தவர் கூலிகொ டாதவர்
மாத வர்க்கதி பாதக மானவர்
ஊச லிற்கன லாயெரி காளையர் மறையோர்கள்
ஊர்த னக்கிட ரேசெயு மேழைகள்
ஆர்த னக்குமு தாசின தாரிகள்
ஓடி யுத்தம ரூதிய நாடின ரிரவோருக்

கேது மித்தனை தானமி டாதவர்
பூத லத்தினி லோரம தானவர்
ஈசர் விஷ்ணுவை சேவைசெய் வோர்தமை யிகழ்வோர்கள்
ஏக சித்ததி யானமி லாதவர்
மோக முற்றிடு போகித மூறினர்
ஈன ரித்தனை பேர்களு மேழ்நர குழல்வாரே

தாத தத்தத தாதத தாதத
தூது துத்துது தூதுது தூதுது
சாச சச்சச சாசச சாசச சசசாச
தாட டட்டட டாடட டாடட
டூடு டுட்டுடு டூடுடு டூடுடு
தாடி டிட்டிடி டீடிடி டீடிடி டிடிடீடி

தீதி தித்திதி தீதிதி தீதிதி
தோதி குத்திகு தோதிகு தோதிகு
சேகு செக்குகு சேகுகு சேகுகு செகுசேகு
சேயெ னப்பல ராடிட மாகலை
ஆயு முத்தமர் கூறிடும் வாசக
சேகு சித்திர மாகநி றுடிய பெருமாளே.

1030

ஓலைத ரித்தகு ழைக்கு மப்புற
மோடிநி றத்தும தர்த்து நெய்த்தற
லோதிநி ழற்குள ளிக்கு லத்துட னென்றிஞானம்
ஓதிமி குத்தத வத்த வர்க்கிட
ரோகைசெ லுத்திவ டுப்ப டுத்தகி
யூடுவி டத்தையி ருத்தி வைத்தக ணம்பினுலே

மாலைம யக்கைவி ளைத்து நற்பொருள்
வாசமு லைக்குள கப்ப டுத்தியில்
வாவென முற்றிந டத்தி யுட்புகு மந்தமாதர்
மாயம யக்கையொ ழித்து மெத்தென
வானவ ருக்கரு ளுற்ற அக்ஷர
வாய்மையெ னக்குமி னித்த ளித்தருள் தந்திடாதோ

வேலைய டைக்கஅ ரிக்கு லத்தொடு
வேணுமெ னச்சொலு மக்க ணத்தினில்
வேகமொ டப்பும லைக்கு லத்தைந ளன்கைமேலே
வீசஅ வற்றினை யொப்ப மிட்டணை
மேவிய ரக்கர்ப திக்குள் முற்பட
வீடண னுக்கருள் வைத்த வற்றமை யன்கள்மாளக்

காலயி லக்கணை தொட்ட ருட்கன
மாலமை திக்கரை யிற்ற ரித்துல
காளஅ ளித்தப்ர புத்வ ருட்கடல் தந்தகாமன்
காயமொ ழித்தவர் பெற்ற கொற்றவ
நானில வித்தகி னைப்பு னத்தொரு
காதல்மி குத்துமி கப்ர மித்தருள் தம்பிரானே.

1031

கடைசி வந்தகன் றுரைபு கன்றிரு
குழையை யுந்துரந் தரிப ரந்தொளிர்
கரிய கண்துறந் தவாநி றந்தொலை படவோடக்
கலைநெ கிழ்ந்திருங் குழல்ச ரிந்திட
முலைசு மந்தசைந் திடையொ சிந்துயிர்
கவர இங்கிதங் கெறுவி தம்பெற விளையாடும்

படைம தன்பெருங் கிளைதி ருந்திய
அதர கிஞ்சுகந் தனையு ணர்ந்தணி
பணிநி தம்பஇன் பசுக முந்தர முதிர்காம
பரவ சந்தணிந் துணையு ணர்ந்தொரு
மவுன பஞ்சரம் பயில்த ருஞ்சுக
பதம டைந்திருந் தருள்பொ ருந்தும தொருநாளே

வடமெ டுஞ்சிலம் புகள்பு லம்பிட
மகித லம்ப்ரியங் கொடும கிழ்ந்திட
வருபு ரந்தரன் தனபு ரம்பெற முதுகோப
மகர வெங்கருங் கடலொ டுங்கிட
நிசிச ரன்பெருங் குலமொ ருங்கிற
வனச னின்றழும் படிநெ ருங்கிய வொருசூதம்

அடியொ டும்பிடுங் கியத டங்கர
வடிவ அஞ்சுரும் புறவி ரும்பிய
அடவி யுந்தொழும் பொடுதொ ழும்படி யநுராக
அவச மும்புனைந் தறமு னைந்தெழு
பருவ தஞ்சிறந் தகன தந்தியின்
அமுத மென்குயங் களின்மு யங்கிய பெருமாளே.

1032

கதறிய கலைகொடு சுட்டாத் தீர்பொருள்
பதறிய சமயிக ளெட்டாப் பேரொளி
கருவற இருவினை கெட்டாற் காண்வரு மென்றறைகங்
கருகிய வினைமன துட்டாக் காதது
சுருதிக ளுருகியொர் வட்டாய்த் தோய்வது
கசடற முழுதையும் விட்டாற் சேர்வது
ணர்ந்திடாதே.

விதமது கரமுரல் மொட்டாற் சாடிய
ரதிபதி யெனவரு துட்டாத் மாவுடன்
வினைபுரி பவரிடு முற்றுச் சாலிரு புண்டரீக
ம்ருகமத முகுளித மொட்டாற் கார்முக
நுதலெழு தியசிறு பொட்டாற் சாயக
விரகுடை விழிவலை பட்டாற் றுதுந லங்கலாமோ

பதமலர் மிசைகழல் கட்டாப் பாலக
சுருதிக ளடிதொழ எட்டாத் தேசிக
பருகென வனமுலை கிட்டாத் தாரகை தந்துநாளும்

பரிவுற வெகுமுக நெட்டாற் றூடொரு
படுகையி னிடைபுழு வெட்டாப் பாசடை
படர்வன பரிமள முட்டாட் டாமரை தங்கிவாழுஞ்

சததள அமளியை விட்டாற் றேறிய
சலநிதி குறுகிட வொட்டாச் சூரொடு
தமனிய குலகிரி பொட்டாய்த் தூளெழ
வென்ற கோவே

தழைதரு குழைதரு பட்டாட் சாலவு
மழகிய கலவிதெ விட்டாக் காதலி
தலைமக நிலமடி தட்டாத் தேவர்கள் தம்பிரானே.

1033

கலவியி னலமுறை யாமட வார்சந்
தனத் தனங்களில் வசம தாகி யவரவர்
பாதாதி கேச மளவும் பாடுங்
கவிஞ ருய்த்திரி வேனைக் காமக் ரோதத்
தூர்த்தனை யபராதக்

கபடனை வெகுபரி தாபனை நாளும்
ப்ரமிக்கு நெஞ்சனை உருவ மாறி முறைமுறை
ஆசார வீன சமயந் தோறுங்
களவு சாத்திர மோதிச் சாதித் தேனைச்
சாத்திர நெறிபோயையம்

புலன்வழி யொழுகிய மோகனை மூகந்
தனிற் பிறந்தொரு நொடியின் மீள அழிதரு
மாதேச வாழ்வை நிலையென் றேயம்
புவியின் மேற்பசு பாசத் தேபட் டேனைப்
பூக்கழ லிணைசேரப்

பொறியிலி தனையதி பாவியை நீடுங்
குணத் ரயங்களும் வரும நேக வினைகளு
மாயா விகார முழுதுஞ் சாடும்
பொருளின் மேற்சிறி தாசைப் பாடற் றேனைக்
காப்பது மொருநாளே

குலகிரி தருமபி ராம மயூரம்
ப்ரியப் படும்படி குவளை வாச மலர்கொடு
வாரா வுலாவி யுணரும் யோகங்
குலைய வீக்கிய வேளைக் கோபித் தேறப்
பார்த்தரு ளியபார்வைக்

குரிசிலு மொருசுரர் பூசுர ேைமென்
றதற் கனந்தர மிரணி யாய நமவென
நாராய ணாய நமவென் றோதுங்
குதலை வாய்ச் சிறி யோனுக் காகத் தூணிற்
றோற்றிய வசபாணிப்

பலநக நுதியி னிசாசர னுகங்
கிழித் தளைந்தணி துளசி யோடு சிறுகுடல்
தோண்மாலை யாக அணியுங் கோவும்
பரவி வாழ்த்திட வேகற் றூரச் சோதிப்
பாற்பணி யிறைவாகைப்

படமுக வடலயி ராபத மேறும்
ப்ரபுப் பயங்கெட வடப ராரை வரைகெட
வேலேவி வாவி மகரஞ் சீறும்
பரவை கூப்பிட மோதிச் சூர்கெட் டோடத்
தாக்கிய பெருமாளே.

1034

கறுத்து நீவிடு கூர்வேலி னுங்கடை
சிவத்து நீடிய வாய்மீன வொண்குழை
கடக்க வோடிய ஆலால நஞ்சன வஞ்சநீடு

கயற்க ணார்கனி வாயூற லுண்டணி
கழுத்து மாகமு மேகீப வங்கொடு
கலக்க மார்பக பாடீர குங்கும கொங்கைமீதே

உறுத்து மாரமு மோகாவ டங்களு
மறுத்து நேரிய கூர்வாள்ந கம்பட
உடுத்த ஆடையும் வேறாயு முன்றுக முன்றுவீழ

உருக்கு நாபியின் மூழ்காம ருங்கிடை
செருக்கு மோகன வாராத ரங்களை
யொழிக்க வோர்வகை காணேனு றுந்துணை
யொன்றுகாணேன்

நிறத்த நூபுர பாதார விந்தமு
முடுத்த பீலியும் வாரார்த னங்களும்
நிறத்தி லேபடு வேலான கண்களும் வண்டுபாட

நெறித்த வோதியு மாயான்ம னம்பர
தவிக்க மால்தர லாமோ கலந்திட
நினைக்க லாமென வேல்வேடர் கொம்புட
னண்புகூர்வாய்

மறித்த வாரிதி கோகோவெ னும்படி
வெறுத்த ராவணன் வாணாளை யம்பினில்
வதைத்த மாமனு மேவார்பு ரங்கனல் மண்டமேரு
வளைத்த தாதையு மாறுன குன்றமு
மனைத்து லோகமும் வேதாக மங்களும்
மதித்த சேவக வானோரு மும்பர்கள் தம்பிரானே.

1035

குறிப்பரிய குழற்குமதி நுதற்புருவ விலுக்குமிரு
குழைக்கும்வடு விழிக்குமெழு குமிழாலுங்
கொடிப்பவள இதழ்க்குமிகு சுடர்த்தரள நகைக்குமமு
தினுக்குமிக வுறத்தழுவு குறியாலும்

அறப்பெரிய தனக்குமன நடைக்குமினி னிடைக்குமல
ரடிக்குமிள நகைக்குமுள மயராதே
அகத்தியனொ டுரைத்தபொரு ளளித்தருளி அரிப்பிரம
ரளப்பரிய பதக்கமல மருள்வாயே

கறுத்தடரு மரக்கரணி கருக்குலைய நெருக்கியொரு
கணத்திலவர் நிணத்தகுடல் கதிர்வேலாற்
கறுத்தருளி யலக்கணுறு சுரர்க்கவர்கள் பதிக்குரிமை
யளித்திடரை யறுத்தருளு மயில்வீரா

செறுத்துவரு கரித்திரள்கள் திடுக்கிடவல் மருப்பையரி
சினத்தினொடு பறித்தமர்செய் பெருகானிற்
செலக்கருதிய றக்கொடிய சிலைக்குறவர்கொடித்தனது
சிமிழ்த்தனமு னுறத்தழுவு பெருமாளே.

1036

குனகியொரு மயில்போல வாராம ஞேலீலை
விளையவிலை நிணையாம லேயேகி மீளாத
கொடியமனதநியாய மாபாதகாபோதியென ஆசைக்

கொளுவஅதில் மயலாகி வீறேடு போய்நீள
மலரமளி தனிலேறி யாமாறு போமாறு
குலவிநல மொழிகூறி வாரேறு பூணார முலைமூழ்கி

மனமுருக மதராஜ கோலாடு மாபூசல்
விளையவிழி சுழலாடி மேலோதி போய்மீள
மதிவதன மொளிவீச நீராள மாய்மேவி யநுராக
வகைவகையி லதிமோக வாராழி யூடான
பொருளளவ தளவாக யாரோடு மாலான
வனிதையர்கள் வசமாய நாயேனு மீடேற
அருள்வாயே

எனதுமொழி வழுவாமல் நீயேகு கான்மீதி
லெனவிரகு குலையாத மாதாவு நேரோத
இசையுமொழி தவறும லேயேகி மாமாது
மிளையோனும்
இனிமையொடு வருமாய மாரீச மானுவி
குலையவரு கரதூஷ ணுவீரர் போர்மாள
இறுகிநெடு மரமேழு தூளாக வேவாலி யுயிர்சீறி

அநுமனெடு கவிகூட வாராக நீராழி
யடைசெய்தணை தனிலேறி மாபாவி யூர்மேவி
அவுணர்கிளைகெடநூறியாலாலமாகோப நிருதேசன்
அருணமணி திகழ்பார வீராக ராமோலி
யொருபதுமொர் கணைவீழ வேமோது போராளி
அடல்மருக குமரேச மேலாய வானோர்கள்
பெருமாளே.

1037

கொலைவிழி சுழலச் சுழலச் சிலைநுதல் குவியக் குவியக்
கொடியிடை துவளத் துவளத் தனபாரக்
குறியணி சிதறச் சிதறக் கரவளை கதறக் கதறக்
குயில்மொழி பதறப் பதறப் ப்ரியமோகக்

கலவியி லொருமித் தொருமித் திலவிதழ் பருகிப் பருகிக்
கரமொடு தழுவித் தழுவிச் சிலநாளிற்
கையிலுள பொருள்கெட் டருள்கெட் டணவரும்
விடுசிச் சியெனக்
கடியொரு செயலுற் றுலகிற் றிரிவேனோ

சலநிதி சுவறச் சுவறத் திசைநிலை பெயரப் பெயரத்
தடவரை பிதிரப் பிதிரத் திடமேருத்
தமனிய நெடுவெற் பதிரப் பணிமணி சிரம்விட் டகலச்
சமனுடல் கிழியக் கிழியப் பொருசூரன்

பெலமது குறையக்குறையக்கருவிகள்பறையப்பறையப்
பிறநரி தொடரத் தொடரத் திரள்கூகை
பெடையொடு குழறக் குழறச் சுரபதி பரவப் பரவப்
ப்ரபையயில் தொடுநற் குமரப் பெருமாளே.

1038

சந்தனங் கலந்த குங்கு மம்புனைந் தணிந்த கொங்கை
சந்திரந் ததும்ப சைந்து தெருவூடே
சங்கினங் குலுங்க செங்கை யெங்கிலும்பணிந்து டம்பு
சந்தனந் துவண்ட சைந்து வருமாபோல்

கொந்தளங் குலுங்க வஞ்சி லம்புபொங்க இன்சு கங்கள்
கொஞ்சிபொன் தொடர்ந்தி டும்பொன்மடவார் தோள்
கொங்கைபைங் கரம்பு ணர்ந்த ழிந்துணங்க லுந்த
விர்ந்து
கொஞ்சுநின் சரண்க ளண்ட அருள்தாராய்

தந்தனந்த செஞ்சி லம்பு கிண்கிணின்கு லங்கள் கொஞ்ச
தண்டையம்ப தம்பு லம்ப வருவோனே
சந்தனம்புனைந்தகொங்கை கண்களுஞ்சிவந்துபொங்க
சண்பகம் புனங்கு றம்பொன் அணைமார்பா

வந்தநஞ் சுகந்த மைந்த கந்தரன் புணர்ந்த வஞ்சி
மந்தரம் பொதிந்த கொங்கை யுமையீனும்
மைந்தனென் றுகந் துவிஞ்சுமன்பணிந்தசிந்தையன்பர்
மங்கலின் றுளம்பு குந்த பெருமாளே.

1039

சுருதி வெகுமுகபு ராண கோடிகள்
சரியை கிரியைமக யோக மோகிகள்
துரித பரசமய பே தவாதிகள் என்றுமோடித்
தொடர வுணரஅரி தாய தூரிய
பொருளை யணுகியநு போக மானவை
தொலைய இனியவொரு ஸ்வாமி யாகிய
நின்ப்ரகாசங்

கருதி யுருகியவி ரோதி யாயருள்
பெருகு பரமசுக மாம கோததி
கருணை யடியரொடு கூடி யாடிம கிழ்ந்துநீபக்

கனக மணிவயிர நூபு ராரிய
கிரண சரணஅபி ராம கோமள
கமல யுகளமற வாது பாடநி னைந்திடாதோ

மருது நெறுநெறென மோதி வேரொடு
கருது மலகைமுலை கோதி வீதியில்
மதுகை யொடுதறுக ணுனைவீரிட வென்றுதாளால்

வலிய சகடிடறி மாய மாய்மடி
படிய நடைபழகி யாயர் பாடியில்
வளரு முகில்மருக வேல்வி நோதசி கண்டிவீரா

விருதர் நிருதர்குல சேனை சாடிய
விஜய கடதடக போல வாரண
விபுதை புளகதன பார பூஷண அங்கிராத

விமலை நகிலருண வாகு பூதர
விபுத கடககிரி மேரு பூதர
விகட சமரசத கோடி வானவர் தம்பிரானே.

1040

சுற்றத் தவர்களு மக்களு மிதமுள
சொற்குற் றரிவையும் விட்டது சலமிது
சுத்தச் சலமினி சற்றிது கிடைபடு மெனமாழ்கித்

துக்கத் தொடுகொடி தொட்டியெ யழுதழல்
சுட்டக் குடமொடு சுட்டெரி கனலொடு
தொக்குத் தொகுதொகு தொக்கென இடுபறை
பிணமூடச்

சற்றெப் புளதொரு சச்சையு மெழுமுடல்
சட்டப் படவுயிர் சற்றுடன் விசியது
தப்பிற் றவறுறு மத்திப நடையென உரையாடிச்

சத்திப் பொடுகரம் வைத்திடர் தலைமிசை
தப்பிற் றிதுபிழை யெப்படி யெனுமொழி
தத்தச் சடம்விடு மப்பொழு திருசர ணருள்வாயே

சிற்றிற் கிரிமகள் கொத்தலர் புரிகுழல்
சித்ரப் ப்ரபைபுனை பொற்பின ளிளமயில்
செற்கட் சிவகதி யுத்தமி களிதர முதுபேய்கள்
திக்குச் செககெண தித்தரி திகுதிகு
செச்செச் செணக்ருத டொட்டரி செணக்ருத
டெட்டெட் டுடுடுடு தத்தரி தரியென நடமாடுங்

கொற்றப் புலியதள் சுற்றிய அரனருள்
குட்டிக் கரிமுக னிக்கவ லமுதுசெய்
கொச்சைக் கணபதி முக்கண னிளையவ களமீதே
குப்புற் றுடனெழு சச்சரி முழவியல்
கொட்டச் சுரர்பதி மெய்த்திட நிசிசரர்
கொத்துக் கிளையுடல் பட்டுக அமர்செய்த
பெருமாளே.

1041

செங்க னற்புகை யோமாதிகள் குண்ட மிட்டெழு
சோமாசிகள்
தெண்டெ னத்துணை தாள்மேல்விழ அமராடிச்
சிந்த னைப்படு மோகாதியி லிந்த்ரி யத்தினிலோடாசில
திண்டி றற்றவ வாள்வீரரொ டிகலாநின்

றங்கம் வெட்டிய கூர்வாள்விழி மங்கை யர்க்கற
மாலாய்மன
மந்தி பட்டிருள் மூடாவகை யவிரோத
அந்த நிற்குண ஞானோதய சுந்த ரச்சுட ராராயந
லன்பு வைத்தரு ளாமோர்கழ லருளாதோ

கொங்க டுத்தகு ராமாலிகை தண்கடுக்கைது ழாய்தாதகி
கும்பி டத்தகு பாகீரதி மதிமீது
கொண்டசித்ரகலா சூடிகை யிண்டெருக்கணிகாகோதர
குண்ட லத்தர்பி னாகாயுத ருடனேயச்

சங்கு சக்ரக தாபாணியு மெங்க ளுக்கொரு வாழ்வேசுரர்
தங்க ளைச்சிறை மீளாயென அசுரேசன்
தஞ்ச மற்றிட வேதாகர னஞ்ச வெற்புக வீராகர
சண்ட விக்ரம வேலேவிய பெருமாளே.

1042

சேலையடர்த் தாலமிகுத் தேயுழையைச் சீறுவிதித்
 தூறுசிவப் பேறுவிழிக் கணையாலே
தேனிரதத் தேமுழுகிப் பாகுநிகர்த் தாரமுதத்
 தேறலெனக் கூறுமொழிச் செயலாலே

ஆலிலையைப் போலும்வயிற் ருலளகத் தாலதரத்
 தாலுமிதத் தாலும்வளைப் பிடுவோர்மேல்
ஆசையினைத் தூரவிடுத் தேபுகழ்வுற் றேப்ரியநற்
 ருளிணையைச் சேரஎனக் கருள்வாயே

காலனைமெய்ப் பாதமெடுத் தேயுதையிட் டேமதனைக்
 காயஎரித் தேவிதியிற் றலையூடே
காசினியிற் காணஇரப் போர்மதியைச் சூடியெருத்
 தேறிவகித் தூருதிரைக் கடல்மீதில்

ஆலமிடற் ருனையுரித் தோலையுடுத் தீமமதுற்
 ருடியிடத் தேயுமைபெற் றருள்வாழ்வே
ஆழியினைச் சூரனைவெற் பேழினையுற் றேயயில்விட்
 டாதுலருக் காறுமுகப் பெருமாளே.

1043

சொக்குப்பொட் டெத்திக் கைப்பொரு
 ளைக்கெத்திற் பற்றிச் சிக்கொடு
 சுற்றுப்பட் டெற்றித் தெட்டிகள் முலைமீதே
சுற்றுப்பொற் பட்டுக் கச்சினர்
 முற்றிக்குத் தத்தைக் கொப்பென
 சொற்பித்துக் கற்பிற் செப்பிய துயராலே

சிக்குப்பட் டுட்கிப் பற்கொடு
 வெற்றிக்கைக் குத்துப் பட்டிதழ்
 தித்திப்பிற் கொத்துப் பித்துயர் கொடுநாயேன்
திக்குக்கெட் டொட்டுச் சிட்டென
 பட்டத்துற் புத்திக் கட்டற
 செப்பத்துற் பற்றற் கற்புத மருள்வாயே

தக்குத்தக் குக்குக் குக்குட
 டுட்டுட்டுட் டுட்டுட் டுட்டென
 தக்குத்திக் கெட்டுப் பொட்டெழ விருதோதை

தத்தித்தித் தித்தித் தித்தென
தெற்றுத்துட் டக்கட் டர்ப்படை
சத்திக்கொற் றத்திற் குத்திய முருகோனே

துக்கித்திட் டத்தித் துக்கக
நெக்குப்பட் டெக்கித் துட்டறு
சுத்தப்பொற் பத்தர்க் குப்பொரு ளருள்வேலா
துற்றப்பொற் பச்சைக் கட்கல
பச்சித்ரப் பக்ஷிக் கொற்றவ
சொக்கர்க்கர்த் தத்தைச் சுட்டிய பெருமாளே.

1044

தரணிமிசை அனையினிட வுந்தியின் வந்துகுந்
துளிபயறு கழலினிய அண்டமுங் கொண்டதின்
தசையுதிர நிணநிறைய அங்கமுந் தங்கவொன்
பதுவாயுந்
தருகரமொ டினியபத முங்கொடங் கொன்பதும்
பெருகியொரு பதினவணி வந்துகண் டன்புடன்
தநயனென நடைபழகி மங்கைதன் சிங்கியின்
வசமாகித்

திரிகியுடல் வளையநடை தண்டுடன் சென்றுபின்
கிடையெனவு மருவிமனை முந்திவந் தந்தகன்
சிதறவுயிர் பிணமெனவெ மைந்தரும் பந்துவும்
அயர்வாகிச்
செடமிதனை யெடுமெடுமி னென்றுகொண் டன்புடன்
சுடலைமிசை யெரியினிட வெந்துபின் சிந்திடுஞ்
செனனமிது தவிரஇரு தண்டையுங்
கொண்டபைங் கழல்தாராய்

செருவெதிரு மசுரர்கிளை மங்களங் கெங்கணும்
கழுகருட னயனமிது கண்டுகொண் டம்பரந்
திரியமிகு அலகையுடன் வெங்கணந் தங்களின்
மகிழ்வாகிச்
சினவசுர ருடலமது தின்றுதின் றின்புடன்
டுமுடுமுட டுமுடுமுட டுண்டுடுண் டுண்டுடுண்
டிமிலைபறை முழவுதுடி பம்பையுஞ் சங்கமுந்
தவமோதச்

சரவரிசை விடுகுமர அண்டர் தம் பண்டுறுஞ்
சிறையைவிட வருமுருக என்றுவந் திந்திரன்
சதுமுகனு மடிபரவ மண்டுவெஞ் சம்பொருங்
கதிர்வேலா
சகமுழுது மடையஅமு துண்டிடுங் கொண்டலுந்
தெரிவரிய முடியினர வங்களுந் திங்களுஞ்
சலமிதழி யணியுமொரு சங்கரன் தந்திடும்
பெருமாளே.

1045

தனஞ்சற்றுக் குலுங்கப்பொற் கலன்கட்பட் டிலங்கப்பொற்
சதங்கைக்கற் சிலம்பொத்திக் கையில்வீணை
ததும்பக்கைக் குழந்தைச் சொற் பரிந்தற்புக்
கிதங்கப்பொற்
சரஞ்சுற்றிட் டிணங்கக்கட் சரவேலால்
தினம்பித்திட் டிணங்கிச்சொற் கரங்கட்டிப்
புணர்ந்திட்டுத்
தினந்தெட்டிக் கை ன்பற்றிக் கொளுமாதர்
சிலம்பத்திற் றிரிந்துற்றிட் டவம்புக்கக்
குணஞ்செற்றுச்
சிவம்பெற்றுத் தவம்பற்றக் கழல்தாராய்
தனந்தத்தத் தனந்தத்தத் தடுண்டுட்டுட் டிடிண்டிட்டிட்
டடண்டட்டட் டிமிண்டுட்டுட் டியல்தாளந்
தகுந்தொத்தித் திமிந்தித்தித் தவண்டைக்குட்
கயர்ந்துக்கத்
தகண்டத்தர்க் குடன்பட்டுற் றசுராரைச்
சினந்தத்திக் கொளுந்தக்கைச் சரந்தொட்டுச்
சதம்பொர்ப்பைச்
சிரந்தத்தப் பிளந்துட்கக் கிரிதூளாச்
செகந்திக்குச் சுபம்பெற்றுத் துலங்கப்போர்க்
களம்புக்குச்
செயம்பற்றிக் கொளுஞ்சொக்கப் பெருமாளே.

1046

நரையொடு பற்க ழன்று தோல்வற்றி
நடையற மெத்த நொந்து காலெய்த்து
நயனமி ருட்டி நின்று கோலுற்று நடைதோயா
நழுவும்வி டக்கை யொன்று போல்வைத்து
நமனென மெத்த வந்த வாழ்வுற்று
நடலைப டுத்து மிந்த மாயத்தை நகையாதே

விரையொடு பற்றி வண்டு பாடுற்ற
ம்ருகமத மப்பி வந்த வோதிக்கு
மிளிருமை யைச்செ றிந்த வேல்கட்கும் வினையோடு
மிகுகவி னிட்டு நின்ற மாதர்க்கு
மிடைபடு சித்த மொன்று வேனுற்றுன்
விழுமிய பொற்ப தங்கள் பாடற்கு வினவாதோ
உரையொடு சொற்றெ ரிந்த மூவர்க்கு
மொளிபெற நற்ப தங்கள் போதித்து
மொருபுடை பச்சை நங்கை யோடுற்று முலகூடே
உறுபலி பிச்சை கொண்டு போயுற்று
முவரிவி டத்தை யுண்டு சாதித்து
முலவிய முப்பு ரங்கள் வேவித்து முறநாகம்
அரையொடு கட்டி யந்த மாய்வைத்து
மவிர்சடை வைத்த கங்கை யோடொக்க
அழகுதி ருத்தி யிந்து மேல்வைத்து மரவோடே
அறுகொடு நொச்சி தும்பை மேல்வைத்த
அரியய னித்தம் வந்து பூசிக்கும்
அரநிம லர்க்கு நன்றி போதித்த பெருமாளே.

1047

நிமிர்ந்த முதுகுங் குனிந்து சிறந்த முகமுந் திரங்கி
நிறைந்த வயிறுஞ் சரிந்து தடியூணி
நெகிழ்ந்து சடலந் தளர்ந்து விளங்கு விழியங் கிருண்டு
நினைந்த மதியுங் கலங்கி மனையாள்கண்
டுமிழ்ந்து பலருங் கடிந்து சிறந்த வியலும் பெயர்ந்து
உறைந்த உயிருங் கழன்று விடுநாள்முன்
உகந்து மனமுங் குளிர்ந்து பயன்கொள்
தருமம் புரிந்து
ஒடுங்கி நினையும் பணிந்து மகிழ்வேனோ
திமிந்திமெனவெங்கணங்கள்குணங்கள் பலவுங்குழும்பி
திரண்ட சதியும் புரிந்து முதுசூரன்
சிரங்கை முழுதுங் குடைந்து நிணங்கொள் குடலுந்
தொளைந்து
சினங்க ழுகொடும் பெருங்கு ருதிமூழ்கி
அமிழ்ந்தி மிகவும் பிணங்கள் அயின்றுமகிழ்கொண்டு
மண்ட
அடர்ந்த அயில்முன் துரந்து பொருவேளே
அலங்கலெனவெண்கடம்புபுனைந்து புணருங் குறிஞ்சி
அணங்கை மணமுன் புணர்ந்த பெருமாளே.

1048

தங்க மிகுந்த முலைக்க டாமலை
பொங்க விரும்பிய முத்து மாலைகள்
தங்க அணிந்து முறுக்கும் வேசியர் மொழியாலே
சஞ்சல மிஞ்சி மயக்கி யேஒரு
மஞ்ச மிருந்து சுகிக்க வேவளர்
சந்து சுகந்த முடித்து நூலிடை இடையாடக்

கொங்கை குலுங்க வளைத்து வாயத
ரங்க ளருந்தி ருசிக்க வேமத
குங்கும மிஞ்சு கழுத்தி லேகுயி லெனஓசை
கொண்டவர் இந்த விதத்தி னுடர
சங்கிலி கொண்டு பிணித்து மாமயில்
கொஞ்சி மகிழ்ந்த வறட்டு வீணியர் உறவாமோ

திங்கள் அரும்பு சலத்தி லேவிடம்
வந்தது கண்டு பயப்ப டாதவர்
சிந்தை நடுங்கி இருக்க வேமயில் மிசையேறிச்
சிங்க முகன்தலை வெட்டி மாமுகன்
அங்க மறுந்து கிடக்க வேவரு
சிம்பு ளெனும்படி விட்ட வேலுள குருநாதா

மங்கை மடந்தை கதிக்கு நாயகி
சங்கரி சுந்தரி அத்தி யானனை
மைந்த னெனும்படி பெற்ற ஈசுரி தருபாலா
மந்திர தந்திர முத்த யோகியர்
அஞ்சலி செங்கை முடிக்க வேஅருள்
வந்து தரும்படி நித்த மாடிய பெருமாளே.

1049

நீரு மென்பு தோலி னுலு மாவ தென்கை கால்க ளோடு
நீளு மங்க மாகி மாய வுயிரூறி
நேச மொன்று தாதைதாய ராசை கொண்ட
போதில் மேவி
நீதி யொன்று பால னாகி யழிவாய்வந்
தூரு மின்ப வாழ்வு மாகி யூன மொன்றி லாது மாத
ரோடு சிந்தை வேடை கூர உறவாகி

ஊழி யைந்த கால மேதி யோனும் வந்து பாசம் வீச
ஊனு டம்பு மாயு மாய மொழியாதோ

சூரனண்ட லோக மேன்மை சூறை கொண்டு
போய்வி டாது
தோகை யின்கண் மேவி வேலை விடும்வீரா
தோளி லென்பு மாலை வேணி மீது கங்கை சூடி யாடு
தோகை பங்க ரோடு சூது மொழிவோனே

பாரை யுண்ட மாயன் வேயை யூதி பண்டு பாவ லோர்கள்
பாடல் கண்டு ஏகு மாலின் மருகோனே
பாத கங்கள் வேறிநூறி நீதி யின்சொல் வேதவாய்மை
பாடு மன்பர் வாழ்வ தான பெருமாளே

1050

பகல்மட்கச் செக்கர்ப் ப்ரபைவிடு
நவரத்னப் பத்தித் தொடைநக
நுதிபட்டிட் டற்றுச் சிதறிட இதழூறல்
பருகித்தித் திக்கப் படுமொழி
பதறக்கைப் பத்மத் தொளிவளை
வதறிச்சத் திக்கப் புளகித தனபாரம்

அகலத்திற் றைக்கப் பரிமள
அமளிக்குட் சிக்கிச் சிறுகென
இறுகக்கைப் பற்றித் தழுவிய அநுராக
அவசத்திற் சித்தத் தறிவையு
மிகவைத்துப் பொற்றித் தெரிவையர்
வசம்விட்டர்ச் சிக்கைக் கொருபொழு
துணர்வேனோ

இகல்வெற்றிச் சத்திக் கிரணமு
முரணிர்த்தப் பச்சைப் புரவியு
மிரவிக்கைக் குக்டத் துவசமு மறமாதும்
இடைவைத்துச் சித்ரத் தமிழ்கொடு
கவிமெத்தச் செப்பிப் பழுதற
எழுதிக்கற் பித்துத் திரிபவர் பெருவாழ்வே

புகலிற்றார்க் கிட்டுப் ப்ரபையுறு
கலகச்செற் றச்சட் சமயிகள்
புகலற்குப் பற்றற் கரியதொ ருபதேசப்

பொருளைப்புட் பித்துக் குருபர
னெனமுக்கட் செக்கர்ச் சடைமதி
புனையப்பர்க் கொப்பித் தருளிய பெருமாளே.

1051

பத்தித்தர ளக்கொத் தொளிர்வரி
பட்டப்புள கச்செப் பிளமுலை
பட்டிட்டெதிர் கட்டுப் பரதவ ருயர்தாளப்
பத்மத்திய ரற்புக் கடுகடு
கட்சத்தியர் மெத்தத் திரவிய
பட்சத்திய ரிக்குச் சிலையுரு விலிசேருஞ்

சித்தத்தரு ணர்க்குக் கனியத
ரப்புத்தமு தத்தைத் தருமவர்
சித்ரக்கிர ணப்பொட் டிடுபிறை நுதலார்தஞ்
செட்டிற்படு கட்டக் கனவிய
பட்சத்தரு ளற்றுற் றுனதடி
சிக்கிட்டிடை புக்கிட் டலைவது தவிராதோ

மத்தப்பிர மத்தக் கயமுக
னைக்குத்திமி தித்துக் கழுதுகள்
மட்டிட்டஇ ரத்தக் குருதியில் விளையாட
மற்றைப்பதி னெட்டுக் கணவகை
சத்திக்கந டிக்கப் பலபல
வர்க்கத்தலை தத்தப் பொருபடை யுடையோனே

முத்திப்பர மத்தைக் கருதிய
சித்தத்தினில் முற்றத் தவமுனி
முற்பட்டுழை பெற்றுத் தருகுற மகள்மேல்மால்
முற்றித்திரி வெற்றிக் குருபர
முற்பட்டமு ரட்டுப் புலவனை
முட்டைப்பெயர் செப்பிக் கவிபெறு பெருமாளே.

1052

பரதவித புண்டரிக பாதத் தாட்டிகள்
அமுதுபொழி யுங்குமுத கீதப் பாட்டிகள்
பலர்பொருள்க வர்ந்திடுக லாமிட் டோட்டிகள்
கொடிதாய

பழுதொழிய அன்புமுடை யாரைப் போற்சிறி
தழுதழுது கண்பிசையு மாசைக் கூற்றிகள்
பகழியென வந்துபடு பார்வைக் கூற்றினர்
ஒருகாம

விரகம்விளை கின்றகழு நீரைச் சேர்த்தகில்
ம்ருகமதமி குந்தபனி நீரைத் தேக்கியெ
விபுதர்பதி யங்கதல மேவிச் சாற்றிய தமிழ்நூலின்
விததிகமழ் தென்றல்வர வீசிக் கோட்டிகள்
முலைகளில்வி ழுந்துபரி தாபத் தாற்றினில்
விடியளவு நைந்துருகு வேனைக் காப்பது
மொருநாளே

உரகபணை பந்தியபி ஷேகத் தாற்றிய
சகலவுல குந்தரும மோகப் பார்ப்பதி
யுடனுருவுபங்குடையநாகக்காப்பனும் உறிதாவும்
ஒருகளவு கண்டுதனி கோபத் தாய்க்குல
மகளிர்சிறு தும்புகொடு மோதிச் சேர்த்திடும்
உரலொடுதவழ்ந்தநவநீதக் கூற்றனு மதிகோபக்
கரவிகட வெங்கடக போலப் போர்க்கிரி
கடவியபு ரந்தரனும் வேளைப் போற்றுகை
கருமமென வந்துதொழ வேதப் பாற்பதி பிறியாத
கடவுளமு னிந்தமர ரூரைக் காத்துயர்
கரவடக்ர வுஞ்சகிரி சாயத் தோற்றெழு
கடலெனவுடைந்தவுண ரோடத் தாக்கிய
பெருமாளே.

1053

பழுதற வோதிக் கடந்து பகைவினை தீரத் துறந்து
பலபல யோகத் திருந்து மதராசன்
பரிமள பாணத் தயர்ந்து பனைமட லூர்தற் கிசைந்து
பரிதவி யாமெத்த நொந்து மயல்கூர
அழுதழு தாசைப் படுங்க ணபிநய மாதர்க் கிரங்கி
யவர்விழி பாணத்து நெஞ்ச மறைபோய்நின்
றழிவது யான்முற் பயந்த விதிவச மோமற்றை யுன்று
னருள்வச மோஇப்ர மந்தெ ரிகிலேனே
எழுதரு வேதத்து மன்றி முழுதினு மாய்நிற்கு மெந்தை
யெனவொரு ஞானக் குருந்த ருளமேவும்

இருவுரு வாகித் துலங்கி யொருகன தூணிற் பிறந்து
இரணியன் மார்பைப் பிளந்த தனியாண்மை
பொழுதிசை யாவிக்ர மன்தன் மருகபு ராரிக்கு மைந்த
புளகப டீரக் குரும்பை யுடன்மேவும்
புயல்கரி வாழச் சிலம்பின் வனசர மானுக் குகந்து
புனமிசை யோடிப் புகுந்த பெருமாளே.

1054

பாணிக்குட் படாதுசாதகர் காணச்சற்றொணாதுவாதிகள்
பாஷிக்கத் தகாது பாதக பஞ்சபூத
பாசத்திற் படாதுவேறொரு பாயத்திற்புகாது பாவனை
பாவிக்கப் பெறாது வாதனை நெஞ்சமான
ஏணிக்கெட் டொணாது மீதுயர் சேணுக்குச் சமான
நூல்வழி
யேறிப்பற் றொணாது நாடினர் தங்களாலும்
ஏதுச்செப் பொணாத தோர்பொருள் சேரத்துக் கமாம
கோதறு
யேறச்செச் சைநாறு தாளைவ ணங்குவேனோ
ஆணிப்பொற் ப்ரதாப மேருவை வேலிட்டுக் கடாவி
வாசவன்
ஆபத்தைக் கெடாநி சாசரர் தம்ப்ரகாசம்
ஆழிச்சத் ரசாயை நீழலி லாதித்தப் ப்ரகாச நேர்தர
ஆழிச்சக் ரவாள மாள்தரும் எம்பிரானே
மாணிக்கப் ப்ரவாள நீலம தாணிப்பொற் கிராதை நூபுர
பாதத்ப் பாத சேகர சம்புவேதா
வாசிக்கப் படாத வாசகம் ஈசர்க்குச் சுவாமி யாய்முதல்
வாசிப்பித் ததேசி காசுரர் தம்பிரானே.

1055

பால்மொழி படித்துக் காட்டி ஆடையை நெகிழ்த்துக்
காட்டி
பாயலி லிருத்திக் காட்டி யநுராகம்
பாகிதழ் கொடுத்துக்காட்டி நூல்களைவிரித்துக்காட்டி
பார்வைகள் புரட்டிக் காட்டி யுறவாகி
மேல்நக மழுத்திக் காட்டி தோதக விதத்தைக் காட்டி
மேல்விழு நலத்தைக் காட்டு மடவார்பால்
மேவிடு மயக்கைத் தீர்த்து சீர்பத நினைப்பைக் கூட்டு
மேன்மையை யெனக்குக் காட்டி யருள்வாயே

காலனை யுதைத்துக்காட்டி யாவியை வதைத்துக்காட்டி
காரணம் விளைத்துக் காட்டி யொருகாலங்
கானினில் நடித்துக் காட்டி யாலமு மிடற்றிற் காட்டி
காமனை யெரித்துக் காட்டி தருபாலா
மாலுற நிறத்தைக் காட்டி வேடுவர் புனத்திற் காட்டில்
வாலிப மிளைத்துக் காட்டி அயர்வாகி
மான்மகள் தனத்தைச் சூட்டி ஏனென அழைத்துக் கேட்டு
வாழ்வுறு சமத்தைக் காட்டு பெருமாளே.

1056

புகரில் சேவல தந்துர சங்க்ரம
நிருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
பொருத சேவக குன்றவர் பெண்கொடி மணவாள
புனித பூசுர ருஞ்சுர ரும்பணி
புயச பூதர என்றிரு கண்புனல்
பொழிய மீமிசை யன்புது ளும்பிய மனதுகி
அகில பூதவு டம்புமு டம்பினில்
மருவு மாருயி ருங்கர ணங்களு
மவிழ யானுமி ழந்தஇ டந்தனி லுணர்வாலே
அகில வாதிக ளுஞ்சம யங்களும்
அடைய ஆமென அன்றென நின்றதை
யறிவி லேனறி யும்படி யின்றருள் புரிவாயே
மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலய மாருத மும்பல வெம்பரி
மளசி லீமுக மும்பல மஞ்சரி வெறியாடும்
மதுக ராரம்வி குஞ்சணி யுங்கர
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராஜனை வெந்துவி ழும்படி முனிபால
முகில்வி லோசன ரஞ்சிறு திங்களு
முதுப கீரதி யும்புனை யுஞ்சடை
முடியர் வேதமு நின்றும ணங்கமழ் அபிராமி
முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரித்ரி யம்பகி தந்தருள்
முருக னேசுர குஞ்சரி ரஞ்சித பெருமாளே.

1057

புருவத்தை நெறித்து விழிக்கயல்
பயிலிட்டு வெருட்டி மதித்திரு
புதுவட்டை மினுக்கி யளிக்குல மிசைபாடும்
புயல்சற்று விரித்து நிரைத்தொளி
வளையிட்ட கரத்தை யசைத்தகில்
புனைமெத்தை படுத்த பளிக்கறை தனிலேறிச்

சரசத்தை விளைத்து முலைக்கிரி
புளகிக்க அணைத்து நகக்குறி
தனைவைத்து முகத்தை முகத்துட னுறமேவித்
தணிவித்தி ரதத்த தரத்துமி
ழமுதத்தை யளித்து வுருக்கிகள்
தருபித்தை யகற்றி யுனைத்தொழ முயல்வேனோ

பரதத்தை யடக்கி நடிப்பவர்
த்ரிபுரத்தை யெரிக்க நகைப்பவர்
பரவைக்குள் விடத்தை மிடற்றிடு பவர்தேர்கப்
பரையுற்ற கரத்தர் மிகப்பகி
ரதியுற்ற சிரத்தர் நிறத்துயர்
பரவத்தர் பொருப்பி லிருப்பவ ருமையாளர்

சுரர்சுத்தர் மனத்துறை வித்தகர்
பணிபத்தர் பவத்தை யறுப்பவர்
சுடலைப்பொடி யைப்பரி சிப்பவர் விடையேறுந்
துணையொத்த பதத்த ரெதிர்த்திடு
மதனைக்கடி முத்தர் கருத்தமர்
தொலைவற்ற க்ருபைக்குளுதித்தருள் பெருமாளே.

1058

புவிக்குன் பாத மதைநினை பவர்க்குங் கால தரிசனை
புலக்கண் கூடு மதுதனை அறியாதே
புரட்டும் பாத சமயிகள் நெறிக்கண் பூது படிறரை
புழுக்கண் பாவ மதுகொளல் பிழையாதே

கவிக்கொண் டாடு புகழினை படிக்கும் பாடு திறமிலி
கலைக்கும் பாவ சுழல்படு மடிநாயேன்

கலக்குண்டாகு புவி தனி லெனக்குண்டாகுபணிவிடை
கணக்குண் டாதல் திருவுள மறியாதோ
சிவத்தின் சாமி மயில்மிசை நடிக்குஞ் சாமி யெமதுளே
சிறக்குஞ் சாமி சொருபமி தொளிகாணச்
செழிக்குஞ் சாமி பிறவியை யொழிக்குஞ்சாமி பவமதை
தெறிக்குஞ் சாமி முனிவர்க ளிடமேவுந்
தவத்தின் சாமி புரிபிழை பொறுக்குஞ் சாமி குடிநிலை
தரிக்குஞ் சாமி யசுரர்கள் பொடியாகச்
சதைக்குஞ் சாமி யெமைபணி விதிக்குஞ் சாமிசரவண
தகப்பன் சாமி யெனவரு பெருமாளே.

1059

பூசல்த ருங்கய லும்பொ ருந்திய
வாசந றுங்குழ லுந்து லங்கிய
பூரண கும்பமெ னுந்த னங்களு மடமாதர்
போகம டங்கலை யும்பு ணர்ந்தநு
ராகம்வி ளைந்துவ ரும்பெ ரும்பிழை
போயக லும்படி யொன்றை யன்புற நினையாதே
ஆசையெ னும்படி யுந்த னங்களு
மோகைந டந்திட வுந்தி னங்களும்
ஆருட னும்பகை கொண்டு நின்றுற நடமாடி
ஆடிய பம்பர முன்சு ழன்றெதி
ரோடிவி ழும்படி கண்ட தொன்றுற
ஆவிய கன்றுவி டும்ப யங்கெட அருள்வாயே
வாசவ னன்புவி ளங்க நின்றசு
ரேசர்கு லங்கள டங்க லுங்கெட
வானவர் நின்றுதி யங்கு கின்றதொர் குறைதீர
வாரிய திர்ந்துப யந்து நின்றிட
மேருஅ டங்கஇ டிந்து சென்றிட
வாகைபு னைந்தொரு வென்றி கொண்டரு ளிளையோனே
வீசிய தென்றலொ டந்தி யும்பகை
யாகமு யங்கஅ நங்க னும்பொர
வேடையெ னும்படி சிந்தை நொந்திட அடைவாக

வேடர்செ ழும்புன வஞ்சி யஞ்சன
வேலினு ளங்கள்க லங்கி யின்புற
வேளையெனும்படி சென்றிறைஞ்சிய பெருமாளே.

1060

பூசல் வந்திரு தோடார் காதொடு
மோதி டுங்கயல் மானுர் மானமில்
போக மங்கையர் கோடா கோடிய மனதானுர்
பூர குங்கும தூளா மோதப
டீர சண்பக மாலா லாளித
பூத ரங்களின் மீதே மூழ்கிய அநுராக

ஆசை யென்கிற பாரா வாரமு
மேறு கின்றில ஞுஞ பேதஅ
நேக தந்த்ரக்ரி யாவே தாகம கலையாய
ஆழி யுங்கரை காணே னூபுர
பாத பங்கய மோதே னேசில
ஞயி னுங்குரு நாதா நீயருள் புரிவாயே

வாச வன்பதி பாழா காமல்நி
சாச ரன்குலம் வாழா தேயடி
மாள வன்கிரி கூருய் நீறெழ நெடுநேமி
மாத வன்தரு வேதா வோடலை
மோது தெண்கடல் கோகோ கோவென
மாமு றிந்திட நீள்வே லேவிய இளையோனே

வீசு தென்றலும் வேள்பூ வாளியு
மீறு கின்றமை யாமோ காமவி
டாய்கெ டும்படி காவா யாவியை யெனஏனல்
மீது சென்றுற வாடா வேடுவர்
பேதை கொங்கையின் மீதே மால்கொடு
வேடை கொண்டபி ரானே வானவர் பெருமாளே.

1061

பொங்குங்கொடியகூற்றனு நஞ்சும்பொதுவில் நோக்கிய
பொங்கும் புதிய நேத்திர வலைவீசிப்
பொன்கண்டிளகுகூத்திகள் புன்கண்கலவிவேட்டுயிர்
புண்கொண் டுருகி யாட்படு மயல்தீரக்

கொங்கின் புசக கோத்திரி பங்கங் களையு மாய்க்குடி
கொங்கின் குவளை பூக்கிற கிரிசோணை
குன்றங் கதிரை பூப்பர முன்துன் றமரர் போற்றிய
குன்றம் பிறவும் வாழ்த்துவ தொருநாளே
எங்கும் பகர மாய்க்கெடி விஞ்சும் பகழி வீக்கிய
வெஞ்சண் டதனு வேட்டுவர் சரணூ
விந்தம் பணிய வாய்த்தரு ளந்தண் புவன நோற்பவை
மென்குங் குமகு யாத்திரி பிரியாதே
எங்குங் கலுழி யார்த்தெழ எங்குஞ் சுருதி கூப்பிட
எங்குங் குருவி யோச்சிய திருமானை
என்றென் றவசமாய்த்தொழுதென் றும் புதிய கூட்டமொ
டென்றும் பொழுது போக்கிய பெருமாளே

1062

பொருத கயல்விழி புரட்டிக் காட்டுவர்
புளக தனவட மசைத்துக் காட்டுவர்
புயலி னளகமும் விரித்துக் காட்டுவர் பொதுமாதர்
புனித விதழ்மது நகைத்துக் காட்டுவர்
பொலிவி னிடைதுகில் குலைத்துக் காட்டுவர்
புதிய பரிபுர நடித்துக் காட்டுவ ரிளைஞோரை
உருக அணைதனி லணைத்துக் காட்டுவர்
உடைமை யடையவெ பறித்துத் தாழ்க்கவெ
உததி யமுதென நிகழ்த்திக் கேட்பவர் பொடிமாயம்
உதர மெரிதர மருத்திட் டாட்டிக
ளுயிரி னிலைகளை விரித்துச் சேர்ப்பவ
ருறவுகலவியைவிடுத்திட்டாட்கொளநினையாதோ
மருது பொடிபட வுதைத்திட் டாய்ச்சேரி
மகளி ருறிகளை யுடைத்துப் போட்டவர்
மறுக வொருகயி றடித்திட் டார்ப்புற அழுதூறும்
வளரு நெடுமுகி லெதிர்த்துக் காட்டென
வசட னிரணிய னுரத்தைப் பேர்த்தவன்
மழையி னிரைமலை யெடுத்துக் காத்தவன் மருகோனே
விருது பலபல பிடித்துச் சூர்க்கிளை
விகட தடமுடி பறித்துத் தோட்களை
விழவு முறியவு மடித்துத் தாக்கிய அயில்வீரா

வெகுதி சலதியை யெரித்துத் தூட்பட
விணசெ யசுரர்கள் பதிக்குட் பாய்ச்சிய
விபுத மலரடி விரித்துப் போற்றினர் பெருமாளே.

1063

மங்காதிங் காக்குஞ் சிறுவரு
முண்டேயிங் காற்றுந் துணைவியும்
வம்பாருந் தேக்குண் டிடவறி தெனும்வாதை
வந்தேபொன் தேட்டங் கொடுமன
நொந்தேயிங் காட்டம் பெரிதெழ
வண்போதன் தீட்டுந் தொடரது படியேமன்

சங்காரம் போர்ச்சங் கையிலுடல்
வெங்கானம் போய்த்தங் குயிர்கொள
சந்தேகந் தீர்க்குந் தனுவுட னணுகாமுன்
சந்தாரஞ் சாத்தும் புயவியல்
கந்தாஎன் றேத்தும் படியென
சந்தாபந் தீர்த்தென் றடியிணை தருவாயே

கங்காளன் பார்த்தன் கையிலடி
யுண்டேதிண் டாட்டங் கொளுநெடு
கன்சாபஞ் சார்த்துங் கரதல னொருதேறி
கந்தாவஞ் சேர்த்தண் புதுமல
ரம்பான்வெந் தார்ப்பொன் றிடவிழி
கண்டான்வெங் காட்டங் கனலுற நடமாடி

அங்காலங் கோத்தெண் டிசைபுவி
மங்காதுண் டாற்கொன் றதிபதி
அந்தாபந் தீர்த்தம் பொருளிணை யருள்வோனே
அன்பாலந் தாட்கும் பிடுமவர்
தம்பாவந் தீர்த்தம் புவியிடை
அஞ்சாநெஞ் சாக்கந் தரவல பெருமாளே.

1064

மதன தனுநிக ரிடைக்கே மன
முருக வருபிடி நடைக்கே யிரு
வனச பரிபுர மலர்க்கே மது கரம்வாழும்

வகுள ம்ருகமத மழைக்கே மணி
மகர மணிவன குழைக்கே மட
மகளிர் முகுளித முலைக்கே கட லமுதாறும்

அதர மதுரித மொழிக்கே குழை
யளவு மளவிய விழிக்கே தள
வனைய தொருசிறு நகைக்கே பனி மதிபோலும்

அழகு திகழ்தரு நுதற்கே யாந
வரத மவயவ மனைத்தா டினு
மவச முறுமயல் தவிர்த்தாள் வது மொருநாளே

உததி புதைபட அடைத்தா தவன்
நிகரி லிரதமும் விடுக்கா நக
ரொருநொ டியில்வெயி லெழச்சா நகி துயர்தீர

உபய வொருபது வரைத்தோள் களு
நிசிச ரர்கள்பதி தசக்ரீ வமு
முருள ஒருகணை தெரித்தா னும வனஞான

திதமி லவுணர்த மிருப்பா கிய
புரமு மெரியெழ முதற்பூ தர
திலத குலகிரி வளைத்தா னும கிழவானோர்

திருவ நகர்குடி புகச்சீ கர
மகர சலமுறை யிடச்சூ ரொடு
சிகர கிரிபொடி படச்சா டிய பெருமாளே.

1065

மதனேவிய கணையாலிரு வினையால்புவி கடல்சாரமும்
வடிவாயுடல் நடமாடுக முடியாதேன்
மனமாயையொடிருகாழ்வினை யறமூதுடை மலம்வேரற
மகிழ்ஞானக அநுபூதியி னருள்மேவிப்

பதமேவுமு னடியாருடன் விளையாடுக அடியேன்முனெ
பரிபூரண கிருபாகர முடன்ஞான
பரிமேலழ குடனேறிவி ணவர்பூமழை யடிமேல்விட
பலகோடிவெண் மதிபோலவெ வருவாயே

சதகோடிவெண் மடவார்கட லெனசாமரை யசையாமுழு
சசிசூரியர் சுடராமென வொருகோடிச்

சடைமாமுடி முனிவோர் சர ணெனவேதியர்
மறையோதுக
சதிநாடக மருள்வேணிய னருள்பாலா
விதியானவ னிளையாளென துாமேவிய வளிநாயகி
வெகுமாலுற தனமேலணை முருகோனே
வெளியாசையொ டடைபூவணர்மருகாமணி முதிராடக
வெயில்வீசிய அழகாதமிழ் பெருமாளே.

1066

மாடமதிட் சுற்று மொக்க வைத்திட
வீடுகனக் கத்த னத்தி லச்சுறு
மாலிபமொத் துப்ர புத்த னத்தினி லடைவாக
மாதர்பெருக் கத்த ருக்க மற்றவர்
சூழவிருக் கத்த ரிக்க இப்படி
வாழ்கையில்மத் தப்ர மத்த சித்திகொள்
கடைநாளிற்
பாடையினிற் கட்டி விட்டு நட்டவர்
கூடஅரற் றிப்பு டைத்து றுப்புள
பாவையெடுத் துத்த ழற்கி ரைப்பட விடலாய
பாடுதொலைத் துக்க ழிக்க அக்ருபை
தேடுமெனைத் தற்பு ரக்க வுற்றிரு
பாதுகையைப் பற்றி நிற்க வைத்தெனை
யருளாதோ
ஆடகவெற் பைப்பெ ருத்த மத்தென
நாகவடத் தைப்பி ணித்து ரத்தம
ரார்கள்பிடித் துத்தி ரித்தி டப்புகை யனலாக
ஆழிகொதித் துக்க தற்றி விட்டிமை
யோர்களொளிக் கக்க ளித்த உக்கிர
ஆலவிடத் தைத்த ரித்த அற்புதர் குமரேசா
வேடர்சிறுக் கிக்கி லச்சை யற்றெழு
பாரும்வெறுத் துச்சி ரிப்ப நட்பொடு
வேளையெனப் புக்கு நிற்கும் வித்தக இளையோனே
வேகமிகுத் துக்க திக்கும் விக்ரம
சூரர்சிரத் தைத்து ணித்த டக்குதல்
வீரமெனத் தத்து வத்து மெச்சிய பெருமாளே.

1067

மாண்டாரெ லும்பணி யுஞ்சடை
யாண்டாரி றைஞ்ச மொழிந்ததை
வான்பூத லம்பவ னங்கனல் புனலான
வான்பூத முங்கர ணங்களு
நான்போயொ டுங்கஅ டங்கலு
மாய்ந்தால்வி ளங்கும தொன்றினை யருளாயேல்

வேண்டாமை யொன்றைய டைந்துள
மீண்டாறி நின்சர ணங்களில
வீழ்ந்தாவல் கொண்டுரு கன்பினை யுடையேனும்
வேந்தாக டம்புபு னைந்தருள்
சேந்தாச ரண்சர ணென்பது
வீண்போம தொன்றல என்பதை யுணராதோ

ஆண்டார்த லங்கள ளந்திட
நீண்டார்மு குந்தர்த டந்தனில்
ஆண்டாவி துஞ்சிய தென்றுமு தலைவாயுற்
றுங்கோர் சிலம்புபு லம்பிட
ஞான்றூது துங்கச லஞ்சலம்
ஆம்பூமு ழங்கிய டங்கும ளவில்நேசம்

பூண்டாழி கொண்டுவ னங்களி
லேய்ந்தாள வென்று வெறுந்தனி
போந்தோல மென்றுத வும்புயல் மருகோனே
பூம்பாளை யெங்கும ணங்கமழ்
தேங்காவில நின்றதொர் குன்றவர்
பூந்தோகை கொங்கைவி ரும்பிய பெருமாளே.

1068

மாறுபொரு கால னுக்கும் வானிலெழு மாம திக்கும்
வாரிதுயி லாவ தற்கும் வசையேசொல்
மாயமட வார்த மக்கும் ஆயர்குழ லூதி சைக்கும்
வாயுமிள வாடை யிற்கு மதனாலே
வேறுபடு பாய லுக்கு மேயெனது பேதை யெய்த்து
வேறுபடு மேனி சற்று மழியாதே.

வேடர்குல மாதி னுக்கு வேடைகெட வேங டித்து
மேவுமிரு பாத முற்று வரவேணும்

ஆறுமிடை வாள ரக்கர் நீறுபட வேலெ டுத்த
ஆறுமுக னேகு றத்தி மணவாளா
ஆழியுல கேழ டக்கி வாசுகியை வாய டக்கி
ஆலுமயி லேறி நிற்கு மிளையோனே

சீறுபட மேரு வெற்பை நீறுபட வேசி னத்த
சேவலவ நீப மொய்த்த திரள்தோளா
சேருமட லால்மி குத்த சூர்கொடு போய டைத்த
தேவர்சிறை மீள விட்ட பெருமாளே.

1069

மின்னினில் நடுக்க முற்ற நுண்ணிய நுசுப்பில் முத்த
வெண்ணகையில் வட்ட மொத்து அழகார
விம்மியிள கிக்க தித்த கொம்மைமுலை யிற்கு னித்த
வின்னுதலி லிட்ட பொட்டில் விலைமாதர்

கன்னல்மொழி யிற்சி றக்கு மன்னநடை யிற்க றுத்த
கண்ணினிணை யிற்சி வத்த கனிவாயிற்
கண்ணழிவு வைத்த புத்தி ஷண்முகநி னைக்க வைத்த
கன்மவச மெப்ப டிக்கு மறவேனே

அன்னநடை யைப்ப ழித்த மஞ்ஞைமலை யிற்கு றத்தி
யம்மையட விப்பு னத்தில் விளையாடும்
அன்னையிறு கப்பி ணித்த பன்னிருதி ருப்பு யத்தி
லன்னியஅ ரக்க ரத்த னையுமாளப்

பொன்னுலகி னைப்பு ரக்கு மன்னநல்வ்ர தத்தை விட்ட
புன்மையர்பு ரத்ர யத்தர் பொடியாகப்
பொன்மலைவ ளைத்தெ ரித்த கண்ணுதலி டத்திலுற்ற
புண்ணிய வொருத்தி பெற்ற பெருமாளே.

1070

முத்தமு லாவு தனத்தியர் சித்தச னூலைசெ லுத்திகள்
முத்தமி டாம னுருக்கிக ளிளைஞோர்பால்
முட்டவுலாவிமருட்டிகள் நெட்டிலைவேலின்விழிச்சியர்
முப்பது கோடி மனத்திய ரநுராகத்

தத்தைகளாசை விதத்தியர் கற்புர தோளின் மிணுக்கிகள்
தப்புறு மாறக மெத்திக ளளவோநான்
தட்டழி யாது திருப்புகழ் கற்கவு மோதவு முத்தமிழ்
தத்துவ ஞான மெனக்கருள் புரிவாயே

மத்தக யானை யுரித்தவர் பெற்றகு மார இலட்சுமி
மைத்துன னாகிய விக்ரமன் மருகோனே
வற்றிடவாரிதி முற்றிய வெற்றிகொள் சூரர்பதைப்புற
வற்புறு வேலைவி டுத்தரு ளிளையோனே

சித்திர மான குறத்தியை யுற்றொரு போது புனத்திடை
சிக்கென வேதழு விப்புணர் மணவாளா
செச்சையுலாவுபதத்தின மெய்த்தவர்வாழ்வுபெறத்தரு
சித்தவி சாக வியற்சுரர் பெருமாளே.

1071

முருகு லாவிய மைப்பாவு வார்குழல்
முளரி வாய்நெகிழ் வித்தார வேல்விழி
முடுகு வோர்குலை வித்தான கோடெனு முலையாலே
முறைமை சேர்கெட மைத்தார்வு வார்கடல்
முடுகு வோரென எய்த்தோடி யாகமு
மொழியும் வேறிடு பித்தேறி னூரெனு
முயல்வேகொண்

டுருகு வார்சில சிற்றூம னோலைய
முயிரு மாகமு மொத்தாசை யோடுள
முருகி தீமெழு கிட்டான தோவென வுரையாநண்
புலக வாவொழி வித்தார் மனோலைய
முணர்வு நீடிய பொற்பாத சேவடி
யுலவு நீயெனை வைத்தாள வேயருள் தருவாயே

குருகு லாவிய நற்றூழி சூழ்நகர்
குமர னேமுனை வெற்பார் பராபரை
குழக பூசுரர் மெய்க்காணும் வீரர்தம் வடிவேலா
குறவர் சீர்மக ளைத்தேடி வாடிய
குழையு நீள்கர வைத்தோடி யேயவர்
குடியி லேமயி லைக்கோடு சோதிய வுரவோனே

மருகு மாமது ரைக்கூடல் மால்வரை
வளைவு ளாகிய நக்கீர ரோதிய
வளகை சேர்தமி ழுக்காக நீடிய கரவோனே

மதிய மேவிய சுற்றுத வேணியர்
மகிழ நீநொடி யற்றுன போதினில்
மயிலை நீடுல கைச்சூழ வேவிய பெருமாளே.

1072

முலைமேலிற் கலிங்க மொன்றிட
முதல்வானிற் பிறந்த மின்பிறை
நுதல்மேல்முத் தரும்ப புந்தியி லிதமார

முகநேசித் திலங்க வும்பல
வினைமூசிப் புரண்ட வண்கடல்
முரணேசைக் கமைந்த வன்சர மெனமூவா

மலர்போலச் சிவந்த செங்கணில்
மருள்கூர்கைக் கிருண்ட அஞ்சனம்
வழுவாமற் புனைந்து திண்கய மெனநாடி

வருமாதர்க் கிரங்கி நெஞ்சமு
மயலாகிப் பரந்து நின்செயல்
மருவாமற் கலங்கும் வஞ்சக மொழியாதோ

தொலையாநற் றவங்க ணின்றுனை
நிலையாகப் புகழ்ந்து கொண்டுள
அடியாருட் டுலங்கி நின்றருள் துணைவேளே

துடிநேரொத் திலங்கு மென்கொடி
யிடைதோகைக் கிசைந்த வொண்டொடி
சுரர்வாழப் பிறந்த சுந்தரி மணவாளா

மலைமாளப் பிளந்த செங்கையில்
வடிவேலைக் கொடந்த வஞ்சக
வடிவாகக் கரந்து வந்தமர் பொருசூரன்

வலிமாளத் துரந்த வன்திறல்
முருகாமற் பொருந்து திண்புய
வடிவாமற் றநந்த மிந்திரர் பெருமாளே.

1073

முனைய ழிந்தது மேட்டிகு லைந்தது
வயது சென்றது வாய்ப்ப லூதிர்ந்தது
முதுகு வெஞ்சிலை காட்டிவ ளைந்தது ப்ரபையான
முகமி ழிந்தது நோக்குமி.ருண்டது
இருமல் வந்தது தூக்கமொ ழிந்தது
மொழிதளர்ந்தது நாக்குவிழுந்தது அறிவேபோய்

நினைவ யர்ந்தது நீட்டல்மு டங்கலு
மவச மும்பல ஏக்கமு முந்தின
நெறிம றந்தது மூப்புமு திர்ந்தது பலநோயும்
நிலுவை கொண்டது பாய்க்கிடை கண்டது
சலம லங்களி ஞற்றமெ ழுந்தது
நிமிஷ மிங்கினி யாச்சுதென் முன்பினி
தருள்வாயே

இனைய இந்திர னேற்றமு மண்டர்கள்
தலமு மங்கிட வோட்டியி ருஞ்சிறை
யிடுமி டும்புள ராக்கதர் தங்களில் வெகுகோடி
எதிர்பொ ரும்படி போர்க்குளெ திர்ந்தவர்
தசைசி ரங்களு நாற்றிசை சிந்திட
இடிமு ழங்கிய வேற்படை யொன்றனை
யெறிவோனே

தினைவ னங்கிளி காத்தச வுந்தரி
அருகு சென்றடி போற்றிம ணஞ்செய்து
செகம றிந்திட வாழ்க்கைபு ரிந்திடு மிளையோனே
திரிபு ரம்பொடி யாக்கிய சங்கரர்
குமர கந்தப ராக்ரம செந்தமிழ்
தெளிவு கொண்டடி யார்க்குவி ளம்பிய
பெருமாளே.

1074

மைக்குக்கைப் புக்கக் கயல்விழி
யெற்றிக்கொட் டிட்டுச் சிலைமதன்
வர்க்கத்தைக் கற்பித் திடுதிற மொழியாலே
மட்டிட்டுத் துட்டக் கெருவித
மிட்டிட்டுச் சுற்றிப் பரிமள
மச்சப்பொற் கட்டிற் செறிமல ரணைமீதே

புக்குக்கைக் கொக்கப் புகுமொரு
அற்பச்சிற் றிற்பத் தெரிவையர்
பொய்க்குற்றுச் சுற்றித் திரிகிற புலையேனைப்
பொற்பித்துக் கற்பித் துனதடி
அர்ச்சிக்கச் சற்றுக் க்ருபைசெய
புத்திக்குச் சித்தித் தருளுவ தொருநாளே

திக்குக்குத் திக்குத் திகுதிகு
டுட்டுட்டுட் டுட்டுட் டுடுடுடு
தித்தித்தித் தித்தித் திதியென நடமாடுஞ்
சித்தர்க்குச் சுத்தப் பரமநல்
முத்தர்க்குச் சித்தக் க்ருபையுள
சித்தர்க்குப் பத்தர்க் கருளிய குருநாதா

ஒக்கத்தக் கிட்டுத் திரியசுர்
முட்டக்கொட் டற்றுத் திரிபுர
மொக்கக்கெட் டிட்டுத் திகுதிகு வெனவேக
உற்பித்துக் கற்பித் தமரரை
முற்பட்டக் கட்டச் சிறைவிடு
மொட்குக்டக் கொற்றக் கொடியுள பெருமாளே.

1075

மோது மறலியொரு கோடி வேற்படை
கூடி முடுகியெம தாவி பாழ்த்திட
மோக முடையவெகு மாதர் கூட்டமு மயலாரும்
மூளு மளவில்விசை மேல்வி ழாப்பரி
தாப முடனும்விழி நீர்கொ ளாக்கொடு
மோக வினையில்நெடு நாளின் மூத்தவ
ரிளையோர்கள்

ஏது கருமமிவர் சாவெ னுச்சிலர்
கூடி நடவுமிடு காடெ னுக்கடி
தேழு நரகினிடை வீழ்மெ னுப்பொறி யறுபாவி
ஏழு புவனமிகு வான நாட்டவர்
சூழு முனிவர்கிளை தாமு மேத்திட
ஈச னருள்குமர வேத மார்த்தெழ வருவாயே

சூது பொருதரும னுடு தோற்றிரு
வாறு வருஷம்வன வாச மேற்றியல்
தோகை யுடனுமெவி ராட ராச்சிய முறைநாளிற்

தூறை நிரைகொடவ ரேக மீட்டெதி
ராளு முரிமைதரு மாறு கேட்டொரு
தூது செலஅடுவ லாண்மை தாக்குவ னெனமீள

வாது சமர்திருத ரான ராட்டிர
ராஜ குமரர்துரி யோத னற்பிறர்
மாள நிருபரொடு சேனை தூட்பட வரிசாப

வாகை விஜயனடல் வாசி பூட்டிய
தேரை முடுகுநெடு மால்ப ராக்ரம
மாயன் மருகஅமர் நாடர் பார்த்திப பெருமாளே.

1076

வடிகட்டிய தேனென வாயினி
லூறு துப்பன வூறலை யார்தர
வரைவிற்றிக மூடலி லேதரு மடவார்பால்

அடிபட்டலை பாவநிர் மூடனை
முகடித்தொழி லாமுன நீயுன
தடிமைத்தொழி லாகஎ நாளினி லருள்வாயோ

பொடிபட்டிட ராவணன் மாமுடி
சிதறச்சிலை வாளிக ளேகொடு
பொருகைக்கள மேவிய மாயவன் மருகோனே

கொடுமைத்தொழி லாகிய கானவர்
மகிமைக்கொள வேயவர் வாழ்சிறு
குடிலிற்குற மாதொடு மேவிய பெருமாளே.

1077

வட்ட முலைக்கச் சவிழ்த்து வைத்துள
முத்து வடத்தைக் கழுத்தி லிட்டுரு
மைக்கு வளைக்கட் குறிப்ப மூத்திய பொதுமாதர்

மட்டம ளிக்குட் டிருத்தி முத்தணி
மெத்தை தனக்குட் செருக்கி வெற்றிலை
வைத்த பழுப்பச் சிலைச்சு ருட்கடி யிதழ்கோதிக்

கட்டி யணைத்திட் டெடுத்து டுத்திடு
பட்டை யவிழ்த்துக் கருத்தி தத்தொடு
கற்ற கலைச்சொற் களிற்ப யிற்றுள முயல்போதுங்

கைக்கு ளிசைத்துப் பிடித்த கட்கமும்
வெட்சி மலர்ப்பொற் பதத்தி ரட்சணை
கட்டு மணிச்சித் திரத்தி றத்தையு மறவேனே

கொட்ட மிகுத்திட் டரக்கர் பட்டணம்
இட்டு நெருப்புக் கொளுத்தி யத்தலை
கொட்டை பரப்பச் செருக்க ளத்திடை யசுரோரைக்

குத்தி முறித்துக் குடிப்ப ரத்தமும்
வெட்டி யழித்துக் கனக்க ளிப்பொடு
கொக்கரி யிட்டுத் தெரித்தடுப்பன வொருகோடிப்

பட்ட பிணத்தைப் பிடித்தி ழுப்பன
சச்சரி கொட்டிட் டடுக்கெ டுப்பன
பற்கள் விரித்துச் சிரித்தி ருப்பன வெகுபூதம்

பட்சி பறக்கத் திசைக்குள் மத்தளம்
வெற்றி முழக்கிக் கொடிப்பி டித்தயில்
பட்டற விட்டுத் துரத்தி வெட்டிய பெருமாளே.

1078

வளைகர மாட்டி வேட்டி னிடைதுயில் வாட்டி யீட்டி
வரிவிழி தீட்டி யேட்டின் மணம்வீசும்
மழைகுழல்காட்டிவேட்கை வளர்முலை காட்டிநோக்கின்
மயில்நடை காட்டி மூட்டி மயலாகப்

புளகித வார்த்தை யேற்றி வரிகலை வாழ்த்தி யீழ்த்து
புணர்முலை சேர்த்து வீக்கி விளையாடும்
பொதுமட வார்க்குஏற்ற வழியுறு வாழ்க்கை வேட்கை
புலைகுண மோட்டி மாற்றி யருள்வாயே

தொளையொழு கேற்ற நோக்கி பலவகை வாச்சி தூர்த்து
சுடரடி நீத்த லேத்து மடியார்கள்
துணைவன்மை நோக்கி நோக்கி னிடைமுறை யாய்ச்சி
மார்ச்சொல்
சொலியமு தூட்டி யாட்டு முருகோனே

இளநகை யோட்டி மூட்டர் குலம்விழ வாட்டி யேட்டை
யிமையவர் பாட்டை மீட்ட குருநாதா
இயல்புவி வாழ்த்தி யேத்த எனதிடர் நோக்கி நோக்க
மிருவினை காட்டி மீட்ட பெருமாளே.

1079

வாடையில் மதனைய ழைத்துற்று
வால்வளை கலகலெ னக்கற்றை
வார்குழல் சரியமு டித்திட்டு துகிலாரும்
மால்கொள நெகிழவு டுத்திட்டு
நூபுர மிணையடி யைப்பற்றி
வாய்விட நுதல்மிசை பொட்டிட்டு வருமாய

நாடக மகளிர்ந டிப்புற்ற
தோதக வலையில கப்பட்டு
ஞாலமு முழுதுமி கப்பித்த னெனுமாறு
நாணமு மரபுமொ ழுக்கற்று
நீதியு மறிவும றக்கெட்டு
நாயடி மையுமடி மைப்பட்டு விடலாமோ

ஆடிய மயிலினை யொப்புற்று
பீலியு மிலையுமு டுத்திட்டு
ஆரினு மழகுமி கப்பெற்று யவளுளும்
ஆகிய விதண்மிசை யுற்றிட்டு
மானின மருளவி ழித்திட்டு
ஆயுத கவணொரு கைச்சுற்றி விளையாடும்

வேடுவர் சிறுமியொ ருத்திக்கு
யான்வழி யடிமையெ னச்செப்பி
வீறுள அடியிணை யைப்பற்றி பலகாலும்
வேதமு மமரரு மெய்ச்சக்ர
வாளமு மறியவி லைப்பட்டு
மேருவில் மிகவுமெ ழுத்திட்ட பெருமாளே.

1080

விரைசொரியு ம்ருகமதமு மலரும் வாய்த்திலகு
விரிகுழலு மவிழநறு மெழுகு கோட்டுமுலை
மிசையில்வரு பகலொளியை வெருவ வோட்டுமணி
வகையாரம்
விடுதொடைகள் நகநுதியி லறவும் வாய்த்தொளிர
விழிசெருக மொழிபதற அமுது தேக்கியகை
விதறிவளை கலகலென அழகு மேற்பொழிய
அலர்மேவும்

இருசரண பரிபுரசு ருதிக ளார்க்கவச
மிலகுகடல் கரைபுரள இனிமை கூட்டியுள
மிதம்விளைய இருவரெனு மளவு காட்டரிய
அநுராகத்
திடைமுழுகி யெனதுமன தழியு நாட்களினு
மிருசரண இயலும்விளை யெறியும் வேற்கரமு
மெழுதரிய திருமுகமு மருளு மேத்தும்வகை
தரவேணும்
அரிபிரம ரடிவருட வுததி கோத்தலற
அடல்வடவை யனலுமிழ அலகை கூட்டமிட
அணிநிணமு மலைபெருக அறையும் வாச்சியமு
மகலாது
அடல்கழுகு கொடிகெருட னிடைவி டாக்கணமு
மறுகுறளு மெறிகுருதி நதியின் மேற்பரவ
அருணரண முகவயிர வர்களு மார்ப் பரவ
மிடநாளும்
பரவுநிசி சரர்முடிகள் படியின் மேற்குவிய
பவுரிகொடு திரியவரை பலவும் வேர்ப்பறிய
பகர்வரிய ககனமுக டிடிய வேட்டைவரு மயில்வீரா
படருநெறி சடையுடைய இறைவர் கேட்குரிய
பழயமறை தருமவுன வழியை யார்க்குமொரு
பரமகுரு பரனெனவு மறிவு காட்டவல
பெருமாளே.

1081

வேலொத்து வென்றி யங்கை வேளுக்கு வெஞ்ச ரங்க
ளாமிக்க கண்க ளென்று மிருதோளை
வேயொக்கு மென்று கொங்கை மேல்வெற்ப தென்று
கொண்டை
மேகத்தை வென்ற தென்று மெழில்மாதர்
கோலத்தை விஞ்ச வெஞ்சொல் கோடித்து வஞ்ச நெஞ்சர்
கூடத்தில் நின்று நின்று குறியாதே
கோதற்ற நின்ப தங்கள் நேர்பற்றி யின்ப மன்பு
கூர்கைக்கு வந்து சிந்தை குறுகாதோ
ஞாலத்தை யன்ற ளந்து வேலைக்கு ளுந்து யின்று
நாடத்தி முன்பு வந்த திருமாலும்
நாடத்த டஞ்சி லம்பை மாவைப்பி ளந்த டர்ந்து
நாகத்த லங்கு லுங்க விடும்வேலா

ஆலித்தெ ழுந்த டர்ந்த ஆலத்தை யுண்ட கண்ட
ராகத்தில் மங்கை பங்கர் நடமாடும்
ஆதிக்கு மைந்த னென்று நீதிக்குள் நின்ற அன்பர்
ஆபத்தி லஞ்ச லென்ற பெருமாளே.

1082

இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரொடு கூடிக் கலவாதே
முத்தமிழை யோதித் தளராதே
முத்தியடி யேனுக் கருள்வாயே
தத்துவமெய்ஞ் ஞானக் குருநாதா
சத்தசொரு பாபுத் தமுதோனே
நித்தியக்ரு தாநற் பெருவாழ்வே
நிர்த்தஜெக ஜோதிப் பெருமாளே.

1083

என்பந்தவி னைத்தொடர் போக்கிவி சையமாகி
இன்பந்தனை யுற்றும காப்ரிய மதுவாகி
அன்புந்திய பொற்கிணி பாற்கட லமுதான
அந்தந்தனி லிச்சைகொ ளாற்பத மருள்வாயே
முன்புந்திநி னைத்துரு வாற்சிறு வடிவாகி
முன்றிந்தியெ னப்பர தாத்துட னடமாடித்
தம்பந்தம றத்தவ நோற்பவர் குறைதீரச்
சம்பந்தனெ னத்தமிழ் தேக்கிய பெருமாளே.

1084

கருப்பற் றூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே.

1085

கருப்பை யிற்சுக் கிலத்து லைத்துற் பவித்து மறுகாதே
கபட்ட சட்டர்க் கிதத்த சித்ரத் தமிழ்க்க ளுரையாதே

விருப்ப முற்றுத் துதித்தெ னைப்பற் றெனக்க ருதுநீயே
வெளிப்ப டப்பற் றிடப்ப டுத்தத் தருக்கி மகிழ்வோனே

பருப்ப தத்தைத் தொளைத்த சத்திப் படைச்ச மரவேளே
பணிக்குலத்தைக்கவர்ப்பதத்துக்களித்த மயிலோனே

செருப்பு றத்துச் சினத்தை முற்றப்பரப்பு மிசையோனே
தினைப்பு னத்துக் குறத்தி யைக்கைப் பிடித்த
பெருமாளே.

1086

கொடியமத வேள்கைக் கணையாலே
குரைகடலொடு நீலக் கடலாலே
நெடியபுகழ் சோலைக் குயிலாலே
நிலைமைகெடு மானைத் தழுவாயே

கடியரவு பூணர்க் கினியோனே
கலைகள்தெரி மாமெய்ப் புலவோனே
அடியவர்கள் நேசத் துறைவேலா
அறுமுகவி னோதப் பெருமாளே.

1087

கோடான மேருமலைத் தனமாதர்
கோமாள மானவலைக் குழலாதே
நாடோறு மேன்மைபடைத் திடவேதான்
நாயேனை யாளநினைத் திடொணாதோ

ஈடேற ஞானமுரைத் தருள்வோனே
ஈரா று தோள்கள்படைத் திடுவோனே
மாடேறு மீசர்தமக் கினியோனே
மா தானை யாறுமுகப் பெருமாளே.

1088

சமய பத்தி வ்ருதாத்தனை நினையாதே
சரண பத்ம சிவார்ச்சனை தனைநாடி

அமைய சற்குரு சாத்திர மொழிநூலால்
அருளெ னக்கினி மேற்றுணை தருவாயே

உமைமு லைத்தரு பாற்கொடு அருள்கூறி
உரிய மெய்த்தவ மாக்கிந லுபதேசத்
தமிழ்த லைக்கரை காட்டிய திறலோனே
சமண ரைக்கழு வேற்றிய பெருமாளே.

1089

சருவிய சாத்திரத் திரளான
சடுதிக மாஸ்பதத் தமையாத
அருமறை யாற்பெறற் கரிதாய
அனிதய வார்த்தையைப் பெறுவேனோ
நிருதரை மூக்கறுத் தெழுபார
நெடுதிரை யார்ப்பெழப் பொருதோனே
பொருளடி யாற்பெறக் கவிபாடும்
புலவரு சாத்துணைப் பெருமாளே.

1090

சினத்துச் சீறிய வழிகாணச்
சிரித்துப் பேசியு மயல்பூண
கனத்துப் போர்செயு முலைதோணக்
கலைக்குட் பாதியு மறைவாக
மனத்துக் காறுதல் வருமாறு
மலைப்பப் பேணியு மிகவாய
தனத்தைச் சூறைகொள் மடவார்தம்
சதிக்குப் போம்வழி தவிர்வேனோ
தெனத்தத் தாதென எனவேபண்
திருத்தத் தோடளி யிசைபாடும்
புனத்துக் காவல்கொள் குறமாதின்
புணர்ச்சிக் கேயொரு வழிதேடி
இனத்துக் காவல ரறியாமல்
இணக்கித் தோகையை மகிழ்வோயென்
றெனக்குத் தாளிணை யருள்வாய்சூர்
இறக்கப் போர்செய்த பெருமாளே.

1091

தீதுற் றேயெழு திங்களாலே
தீயைத் தூவிய தென்றலாலே
போதுற் றுடும நங்கனாலே
போதப் பேதைந லங்கலாமோ
வேதத் தோனை முனிந்தகோவே
வேடப் பாவைவி ரும்புமார்பா
ஓதச் சூதமெ றிந்தவேலா
ஊமைத் தேவர்கள் தம்பிரானே.

1092

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

1093

தேனியல்சொற் கணிமாதர்
சேவைதனைக் கருதாதே
யானெனதற் றிடுபோதம்
யானறிதற் கருள்வாயே
வானவருக் கரசான
வாசவனுக் கினியோனே
ஆனைமுகற் கிளையோனே
ஆறுமுகப் பெருமாளே.

1094

நாரியர்க ளாசையைக் கருதாதே
நானுனிரு பாதபத் மமுநாட
ஆரமுத மானசர்க் கரைதேனே
ஆனஅநு பூதியைத் தருவாயே

காரணம தானவுத் தமசீலா
கானகுற மாதினைப் புணர்வோனே
சூரர்கிளை தூளெழப் பொரும்வேலா
தோகைமயில் வாகனப் பெருமாளே.

1095

நாளு மிகுத்த கசிவாகி
ஞான நிருத்த மதைநாடும்
ஏழை தனக்கு மநுபூதி
ராசி தழைக்க அருள்வாயே
பூளை யெருக்கு மதிநாக
பூண ரளித்த சிறியோனே
வேளை தனக்கு சிதமாக
வேழ மழைத்த பெருமாளே.

1096

நித்தமுற் றுனைநினைத்து மிகநாடி
நிட்டைபெற் றியல்கருத்தர் துணையாக
நத்தியுத் தமதவத்தி னெறியாலே
லக்யலக் கணநிருத்த மருள்வாயே
வெற்றிவிக் ரமவரக்கர் கிளைமாள
விட்டநத் துகரனுக்கு மருகோனே
குற்றமற் றவருளத்தி லுறைவோனே
குக்குடக் கொடிதரித்த பெருமாளே.

1097

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.

1098

பட்டுப் படாத மதனாலும்
பக்கத்து மாதர் வசையாலும்
சுட்டுச் சுடாத நிலவாலும்
துக்கத்தி லாழ்வ தியல்போதான்
தட்டுப் படாத திறல்வீரா
தர்க்கித்த சூரர் குலகாலா
மட்டுப் படாத மயிலோனே
மற்றொப்பி லாத பெருமாளே.

1099

பரவைக் கெத்தனை விசைதூது
பகரற் குற்றவ ரெனமாணுன்
மரபுக் குச்சித ப்ரபுவாக
வரமெத் தத்தர வருவாயே
கரடக் கற்பக னிளையோனே
கலைவிற் கட்குற மகள்கேள்வா
அரனுக் குற்றது புகல்வோனே
அயனைக் குட்டிய பெருமாளே.

1100

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காக்ஷியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

1101

புத்தகத் தேட்டிற் றீட்டி முடியாது
பொற்புறக் கூட்டிக் காட்டி யருள்ஞான
வித்தகப் பேற்றைத் தேற்றி யருளாலே
மெத்தெனக் கூட்டிக் காக்க நினைவாயே

தத்தைபுக் கோட்டிக் காட்டி லுறைவாளைச்
சற்கரித் தேத்திக் கீர்த்தி பெறுவோனே
கைத்தலத் தீக்குப் பார்த்து நுழையாத
கற்பகத் தோப்புக் காத்த பெருமாளே.

1102

பொன்னை விரும்பிய பொதுமாதர்
புன்மை விரும்பியெ தடுமாறும்
என்னை விரும்பிநி யொருகால்நின்
எண்ணி விரும்பவு மருள்வாயே
மின்னை விரும்பிய சடையாளர்
மெய்யின் விரும்பிய குருநாதா
அன்னை விரும்பிய குறமானை
அண்மி விரும்பிய பெருமாளே.

1103

மனைமக்கள் சுற்ற மெனுமாயா
வலையைக்க டக்க அறியாதே
வினையிற்செ ருக்கி யடிநாயேன்
விழலுக்கி றைத்து விடலாமோ
சுனையைக்க லக்கி விளையாடு
சொருபக்கு றத்தி மணவாளா
தினநற்ச ரித்ர முளதேவர்
சிறைவெட்டி விட்ட பெருமாளே.

1104

வாரிமீ தேயெழு திங்களாலே
மாரவே ளேவிய அம்பினாலே
பாரெலா மேசிய பண்பினாலே
பாவியே னாவிம யங்கலாமோ
சூரனீள் மார்புதொ ளைந்தவேலா
சோதியே தோகைய மர்ந்தகோவே
மூரிமால் யானைம ணந்தமார்பா
மூவர்தே வாதிகள் தம்பிரானே.

1105

வானப் புக்குப் பற்றும ருத்துக் கனல்மேவு
மாயத் தெற்றிப் பொய்க்குடி லொக்கப் பிறவாதே
ஞானச் சித்திச் சித்திர நித்தத் தமிழாலுன்
நாமத் தைக்கற் றுப்புகழ் கைக்குப் புரிவாயே

கானக் கொச்சைச் சொற்குற விக்குக் கடவோனே
காதிக் கொற்றப் பொற்குல வெற்பைப்
பொரும்வேலா
தேனைத் தத்தச் சுற்றிய செச்சைத் தொடையோனே
தேவச் சொர்க்கச் சக்கிர வர்த்திப் பெருமாளே.

1106

அடியார்ம னஞ்சலிக்க எவராகி லும்பழிக்க
அபராதம் வந்துகெட்ட பிணிமூடி
அனைவோரும் வந்துசிச்சி யெனநால்வ ருஞ்சிரிக்க
அனலோட ழனறுசெத்து விடுமாபோற்

கடையேன்ம லங்கள்முற்று மிருநோயு டன்பிடித்த
கலியோடி றந்துசுத்த வெளியாகிக்
களிகூர என்றனுக்கு மயிலேறி வந்துமுத்தி
கதியேற அன்புவைத்து னருள்தாராய்

சடைமீது கங்கைவைத்து விடையேறு மெந்தைசுத்த
தழல்மேனி யன்சிரித்தொர் புரமூணும்
தவிடாக வந்தெதிர்த்த மதனுக முஞ்சிதைத்த
தழல்பார்வை யன்றளித்த குருநாதா

மிடிதீர அண்டருக்கு மயிலேறி வஞ்சர்கொட்டம்
வெளியாக வந்துநிர்த்த மருள்வோனே
மினனூல்ம ருங்குல்பொற்பு முலைமாதி ளங்குறத்தி
மிகுமாலொ டன்புவைத்த பெருமாளே.

1107

அடியில்வி டாப்பிண மடையவி டாச்சிறி
தழியுமுன் வீட்டுமு னுயர்பாடை
அழகொடு கூட்டுமி னழையுமின் வார்ப்பறை
யழுகையை மாற்றுமி னெதியாமுன்

எடுமினி யாக்கையை யெனஇடு காட்டெரி
யிடைகொடு போய்த்தமர் சுடுநாளில்
எயினர்கு லோத்தமை யுடன்மயில் மேற்கடி
தென துயிர் காத்திட வரவேணும்

மடுவிடை போய்ப்பரு முதலையின் வாய்ப்படு
மதகரி கூப்பிட வளையூதி
மழைமுகில் போற்கக பதிமிசை தோற்றிய
மகிபதி போற்றிடு மருகோனே

படர்சடை யாத்திகர் பரிவுற ராட்சதர்
பரவையி லார்ப்பெழ விடும்வேலாற்
படமுனி யாப்பணி தமனிய நாட்டவர்
பதிகுடி யேற்றிய பெருமாளே.

1108

அப்படி யேழு மேழும்வ குத்துவ ழாது போதினி
னக்ரம்வி யோம கோளகை மிசைவாழும்
அக்ஷர தேவி கோவின்வி திப்படி மாறி மாறிய
லைத்துரு வாய காயம தடைவேகொண்

டிப்படி யோனி வாய்தொறு முற்பவி யாவி ழாவுல
கிற்றடு மாறி யேதிரி தருகாலம்
எத்தனை யூழி காலமெ னத்தெரி யாது வாழியி
னிப்பிற வாது நீயருள் புரிவாயே

கற்பக வேழ மேய்வன பச்சிள ஏனல் மீதுறை
கற்புடை மாது தோய்தரு மபிராம
கற்புர தூளி லேபன மற்புய பாக சாதன
கற்பக லோக தாரண கிரிசால

விப்ரச மூக வேதன பச்சிம பூமி காவல
வெட்சியு நீப மாலையு மணிவோனே
மெத்திய ஆழி சேறெழ வெற்பொடு சூர னீறெழ
விக்ரம வேலை யேவிய பெருமாளே.

1109

அயில்வி லோசனங் குவிய வாசகம்
பதற ஆனனங் குறுவேர்வுற்
றளக பாரமுங் குலைய மேல்விழுந்
ததர பானமுண் டியல்மாதர்

சயில பாரகுங் கும்ப யோதரந்
தழுவு மாதரந் தமியேனுல்
தவிரொ ணுதுநின் கருணை கூர்தருந்
தருண பாதமுந் தரவேணும்

கயிலை யாளியுங் குலிச பாணியுங்
கமல யோனியும் புயகேசன்
கணப ணுமுகங் கிழிய மோதுவெங்
கருட வாகனந் தனிலேறும்

புயலி லேகரும் பரவ வானிலும்
புணரி மீதினுங் கிரிமீதும்
பொருநி சாசரன் தனது மார்பினும்
புதைய வேல்விடும் பெருமாளே

1110

அருக்கி மெத்ததோள் திருத்தி யுற்றுமார்
பசைத்து வக்குமா லிளைஞோரை
அழைத்து மிக்ககா சிழைத்து மெத்தைமீ
தணைத்து மெத்தமா லதுகூர

உருக்கி யுட்கொள்மா தருக்கு ளெய்த்துநா
வுலற்றி யுட்குநா ணுடன்மேவி
உழைக்கு மத்தைநீ யொழித்து முத்திபா
லுறக்கு ணத்ததா ளருள்வாயே

சுருக்க முற்றமால் தனக்கு மெட்டிடா
தொருத்தர் மிக்கமா நடமாடுஞ்
சுகத்தி லத்தர்தா மிகுத்த பத்திகூர்
சுரக்க வித்தைதா னருள்வோனே

பெருக்க வெற்றிகூர் திருக்கை கொற்றவேல்
பிடித்து குற்றமா ரொருசூரன்
பெலத்தை முட்டிமார் தொளைத்து நட்டுளோர்
பிழைக்க விட்டவோர் பெருமாளே.

1111

அரும்பி னுற்றனிக் கரும்பி னுற்றெடுத்
தடர்ந்து மேற்றெறித் தமராடும்
அநங்க னுர்க்கிளைத் தயர்ந்த ணுப்பியெத்
தரம்பை மார்க்கடைக் கலமாகிக்

குரும்பை போற்பணைத் தரும்பு ருக்கொதித்
தெழுந்து கூற்றெனக் கொலைசூழுங்
குயங்கள் வேட்டறத் தியங்கு தூர்த்தனைக்
குணாங்க ளாக்கிநற் கழல்சேராய்
பொருந்தி டார்ப்புரத் திலங்கை தீப்படக்
குரங்கி ஞற்படைத் தொருதேரிற்
புகுந்து நூற்றுவர்க் கொழிந்து பார்த்தனுக்
கிரங்கி யாற்புறத் தலைமேவிப்
பெருங்கு ரூட்டைவிட் டுறங்கு காற்றெனப்
பிறங்க வேத்தியக் குறுமாசூர்
பிறங்க லார்ப்பெழச் சலங்கள் கூப்பிடப்
பிளந்த வேற்கரப் பெருமாளே.

1112

அலமல மிப்புலாற் புலையுடல் கட்டனேற்
கறுமுக நித்தர்போற் றியநாதா
அறிவிலி யிட்டுணுப் பொறியிலி சித்தமாய்த்
தணிதரு முத்திவீட் டணுகாதே
பலபல புத்தியாய்க் கலவியி லெய்த்திடாப்
பரிவொடு தத்தைமார்க் கிதமாடும்
பகடிது டுக்கன்வாய்க் கறையனெ னத்தராப்
படியில்ம னித்தர் தூற் றிடலாமோ
குலகிரி பொற்றலாய்க் குரைகடல் வற்றலாய்க்
கொடியஅ ரக்கரார்ப் பெழவேதக்
குயவனை நெற்றியேற் றவனெதிர் குட்டிஞற்
குடுமியை நெட்டைபோக் கியவீரா
கலைதலை கெட்டபாய்ச் சமணரை நட்டகூர்க்
கழுநிரை முட்டஏற் றியதாளக்
கவிதையும் வெற்றிவேற் கரமுடன் வற்றிடாக்
கருணையு மொப்பிலாப் பெருமாளே.

1113

அளக பார முங்கு லைந்து அரிய பார்வை யுஞ்சி வந்து
அணுகி யாக மும்மு யங்கி யமுதூறல்
அதர பான மும்நு கர்ந்து அறிவுசோர வும்மொழிந்து
அவச மாக வும்பு ணர்ந்து மடவாரைப்

பளக முவி யுந்த ளர்ந்து பதறு மாக மும்ப யந்து
பகலி ராவை யும்ம றந்து திரியாமற்
பரம ஞான முங்தெ ளிந்து பரிவு நேச முங்கி ளர்ந்து
பகரு மாறு செம்ப தங்கள் தரவேணும்

துளப மாய னுஞ்சி றந்த கமல வேத னுப்பு கழ்ந்து
தொழுது தேட ரும்ப்ர சண்ட னருள்பாலா
சுரர்கள் நாய கன்ப யந்த திருவை மாமணம்புணர்ந்து
சுடரு மோக னம்மி குந்த மயில்பாகா

களப மார்பு டன்த யங்கு குறவர் மாது டன்செ றிந்து
கலவி நாட கம்பொ ருந்தி மகிழ்வோனே
கடிய பாத கங்த விர்ந்து கழலை நாடொ றுங்கி ளர்ந்து
கருது வார்ம னம்பு குந்த பெருமாளே.

1114

ஆசார வீன னறிவிலி கோபாப ராதி யவகுண
னுகாத நீச னநுசிதன் விபரீதன்
ஆசாவி சார வெகுவித மோகாச ரீத பரவச
னுகாச நீர்ம னனல்வளி யுருமாறி

மாசான நாலெண் வகைதனை நீநானெ னுத அறிவுளம்
வாயாத பாவி யிவனென நினையாமல்
மாதாபி தாவி னருணைல மாறும காரி லெனையினி
மாஞான போத மருள்செய நினைவாயே

வீசால வேலை சுவறிட மாசூரர் மார்பு தொளைபட
வேதாள ராசி பசிகெட அறைகூறி
மேகார வார மெனஅதிர் போர்யாது தான ரெமபுர
மீதேற வேல்கொ டமர்செயு மிளையோனே

கூசாது வேட னுமிழ்தரு நீராடி யூனு ணெனுமுறை
கூறு மனீய அவனுகர் தருசேடங்
கோதாமெ னும லமுதுசெய் வேதாக மாதி முதல்தரு
கோலோக நாத குறமகள் பெருமாளே.

1115

ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து நடுவேயன்
பானநூ லிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான

வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி யனிபாட
மாத்ருகா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி லணிவேளே

மூசுகா னத்து மீதுவாழ் முத்த
மூரல்வே டிச்சி தனபார
மூழ்குநீ பப்ர தாபமார் பத்த
மூரிவே ழத்தின் மயில்வாழ்வே

வீசுமீ னப்ப யோதிவாய் விட்டு
வேகவே தித்து வருமாசூர்
வீழமோ திப்ப ராரைநா கத்து
வீரவேல் தொட்ட பெருமாளே.

1116

ஆசைக் கொளுத்திவெகு வாகப் பசப்பிவரு
மாடைப் பணத்தையெடெ னுறவாடி
ஆரக் கழுத்துமுலை மார்பைக் குலுக்கிவிழி
யாடக் குலத்துமயில் கிளிபோலப்

பேசிச் சிரித்துமயிர் கோதிக் குலைத்துமுடி
பேதைப் படுத்திமய லிடுமாதர்
பீறற் சலத்துவழி நாறப் படுத்தியெனை
பீடைப் படுத்துமய லொழியாதோ

தேசத் தடைத்துபிர காசித் தொலித்துவரி
சேடற் பிடித்துதறு மயில்வீரா
தேடித் துதித்தஅடி யார்சித்த முற்றருளு
சீர்பொற் பதத்தஅரி மருகோனே

நேசப் படுத்தியிமை யோரைக் கெடுத்தமுழு
நீசற் கனத்தமுற விடுவேலா
நேசக் குறத்திமய லோடுற் பவித்தபொனி
நீர்பொற் புவிக்குள்மகிழ் பெருமாளே.

1117

ஆசை நேச மயக்கிகள் காசு தேடு மனத்திகள்
ஆவி சோர வுருக்கிகள் தெருமீதே
யாவ ரோடு நகைப்பவர் வேறு கூறு விளைப்பவர்
ஆல கால விழிச்சிகள் மலைபோலு

மாசி லாத தனத்தியர் ஆடை சோர நடப்பவர்
வாரி யோதி முடிப்பவர் ஒழியாமல்
வாயி லூற லளிப்பவர் நாளு நாளு மினுக்கிகள்
வாசல் தேடி நடப்பது தவிர்வேனோ

ஓசை யான திரைக்கடல் ஏழு ஞாலமு முற்றருள்
ஈச ரோடுற வுற்றவள் உமையாயி
யோகி ஞானி பரப்ரமி நீலி நாரணி யுத்தமி
ஓல மான மறைச்சிசொல் அபிராமி

ஏசி லாத மலைக்கொடி தாய்ம னோமணி சற்குணி
ஈறி லாதம லைக்கொடி அருள்பாலா
ஏறு மேனி யொருத்தனும் வேத னொடு சமர்த்தனும்
ஈச னோடு ப்ரியப்படு பெருமாளே.

1118

ஆல மேற்ற விழியினர் சால நீட்டி யழுதழு
தாக மாய்க்க முறைமுறை பறைமோதி
ஆடல் பார்க்க நிலையெழு பாடை கூட்டி விரையம
யான மேற்றி யுறவின ரயலாகக்

கால மாச்சு வருகென ஓலை காட்டி யமபடர்
காவ லாக்கி யுயிரது கொடுபோமுன்
காம வாழ்க்கை பொடிபட ஞானம் வாய்த்த கழலிணை
காத லாற்க ருதுமுணர் தருவாயே

வேல கீர்த்தி விதரண சீலர் வாழ்த்து சரவண
வியாழ கோத்ர மருவிய முருகோனே
வேடர் நாட்டில் விளைபுன ஏனல் காத்த சிறுமியை
வேட மாற்றி வழிபடு மிளையோனே

ஞால மேத்தி வழிபடு மாறு பேர்க்கு மகவென
நாணல் பூத்த படுகையில் வருவோனே
நாத போற்றி யெனமுது தாதை கேட்க அநுபவ
ஞான வார்த்தை யருளிய பெருமாளே.

1119

ஆலுமயில் போலுற்ற தோகையர்க ளேமெத்த
ஆரவட மேலிட்ட முலைமீதே
ஆனதுகி லேயிட்டு வீதிதனி லேநிற்க
ஆமவரை யேசற்று முரையாதே

வேலுமழ கார்கொற்ற நீலமயில் மேலுற்று
வீறுமுன தார்பத்ம முகமாறு
மேவியிரு பாகத்தும் வாழுமனை மார்தக்க
மேதகவு நானித்த முறையோனே

காலுமுக வேதற்கு மாலிலையில் மாலுக்கு
நாடவரி யார்பெற்ற வொருபாலா
நாணமுடை யாள்வெற்றி வேடர்குல மீதொக்க
நாடுகுயில் பார்மிக்க எழில்மாது

வேலைவிழி வேடச்சி யார்கணவ னேமத்த
வேழமுக வோனுக்கு மிளையோனே
வீரமுட னேயுற்ற சூரனணி மார்பத்து
வேலைமிக வேவிட்ட பெருமாளே.

1120

இடையித்தனை யுளதத்தைய
ரிதழ்துய்த்தவ ரநுபோகம்
இளகிக்கரை புரளப்புள
கிதகற்புர தனபாரம்

உடன்மற்கடை படுதுற்குண
மறநிற்குண வுணர்வாலே
ஒருநிஷ்கள வடிவிற்புக
வொருசற்றருள் புரிவாயே

திடமற்றெளிர் நளினப்ரம
சிறைபுக்கன னெனவேகுந்
தெதிபட்சண க்ருதபட்சண
செகபட்சண னெனவோதும்

விடபட்சணர் திருமைத்துனன்
வெருவச்சுரர் பகைமேல்வேல்
விடுவிக்ரம கிரியெட்டையும்
விழவெட்டிய பெருமாளே.

1121

இருகுழை மீது தாவடி யிடுவன வோதி நீழலி
னிடமது லாவி மீள்வன நுதல்தாவி
இழிவன காம வேதமு மொழிவன தாரை வேலென
எறிவன காள கூடமு மமுதாகக்

கருகிய நீல லோசன அபிநய மாத ரார்தரு
கலவியில் மூழ்கி வாடிய தமியேனுங்
கதிபெற ஈட ருதன பதிபசு பாச மானவை
கசடற வேறு வேறுசெய் தருள்வாயே

ஒருபது பார மோலியு மிருபது வாகு மேருவு
முததியில் வீழ வானர முடனேசென்
றொருகணை யேவு ராகவன் மருகவி பூதி பூஷணர்
உணருப தேச தேசிக வரையேனற்

பரவிய கான வேடுவர் தருமபி ராம நாயகி
பரிபுர பாத சேகர சுரராஜன்
பதிகுடி யேற வேல்தொடு முருகம யூர வாகன
பரவச ஞான யோகிகள் பெருமாளே.

1122

இருநோய்ம லத்தைசிவ வொளியால்மி ரட்டியெனை
யினிதாவ ழைத்தெனது முடிமேலே
இணைதாள ளித்துனது மயில்மேலி ருத்தியொளி
ரியல்வேல ளித்துமகி ழிருவோரும்

ஒருவாகெ னக்கயிலை யிறையோன ளித்தருளு
மொளிர்வேத கற்பகந லிளையோனே
ஒளிர்மாம றைத்தொகுதி சுரர்பார்து தித்தருள
உபதேசி கப்பதமு மருள்வாயே

கருநோய றுத்தெனது மிடிதூள்ப டுத்திவிடு
கரிமாமு கக்கடவு ளடியார்கள்
கருதாவ கைக்குவர மருள்ஞான தொப்பைமகிழ்
கருணைக டப்பமல ரணிவோனே

திருமால ளித்தருளு மொருஞான பத்தினியை
திகழ்மார்பு றத்தழுவு மயில்வேலா
சிலைதூளெ ழுப்பிகவ டவுஞ்சேரை வெட்டிசுரர்
சிறைமீள விட்டபுகழ் பெருமாளே.

1123

இனமறைவி தங்கள்கொஞ் சியசிறுச தங்கைகிண்
கிணியிலகு தண்டையம் புண்டரீகம்
எனதுமன பங்கயங் குவளைகுர வம்புனைந்
திரவுபகல் சந்ததஞ் சிந்தியாதோ

உனதருளே யன்றியிங் கொருதுணையு மின்றிநின்
றுளேயுமொரு வஞ்சகன் பஞ்சபூத
உடலதுசு மந்தலேந் துலகுதொறும் வந்துவந்
துழலுமது துன்புகண் டன்புறுதோ
கனகிவத தந்தசங் க்ரமகவள துங்கவெங்
கடவிகட குஞ்சரந் தங்கும்பாணே
கடகசயி லம்பெறும் படியவுணர் துஞ்சமுன்
கனககிரி சம்பெழுந் தம்புராசி
அனலெழ மு னிந்தசங் க்ரமமதலே கந்தனென்
றரனுமுமை யும்புகழ்ந் தன்புகூர
அகிலபுவ னங்களுஞ் சுரரொடுதி ரண்டுநின்
றரிபிரமர் கும்பிடுந் தம்பிரானே.

1124

ஊனே றெலும்பு சீசீ மலங்க
ளோடே நரம்பு கசுமாலம்
ஊழ்நோ யடைந்து மாசான மண்டு
மூடே டுழன்ற கடைநாயேன்
நானு ரொடுங்க நானுர் வணங்க
நானுர் மகிழ்ந்து உனையோத
நானு ரிரங்க நானு ருணங்க
நானுர் நடந்து விழநானுர்
தானே புணர்ந்து தானே யறிந்து
தானே மகிழ்ந்து அருளூறித்
தாய்போல் பரிந்த தேனே டுகந்து
தானே தழைந்து சிவமாகித்
தானே வளர்ந்து தானே யிருந்த
தார்வேணி யெந்தை யருள்பாலா
சாலோக தொண்டர் சாமீப தொண்டர்
சாரூப தொண்டர் பெருமாளே.

1125

எதிரொருவ ரிலேயுலகி லெனஅலகு சிலுகுவிரு
திட்டுக்ரி யைக்கேயெ முந்துபாரின்
இடையுழல்வ சுழலுவன சமயவித சகலகலே
யெட்டெட்டு மெட்டாத மந்த்ரவாளால்

விதிவழியி னுயிர்கவர வருகொடிய யமபடரை
வெட்டித் துணித்தாண்மை கொண்டுநீபம்
விளவினிள இலைதளவு குவளைகமழ் பவளநிற
வெட்சித் திருத்தாள்வ ணங்குவேனே

திதிபுதல்வ ரொடுபொருது குருதிநதி முழுகியொளிர்
செக்கச் செவத்தேறு செங்கைவேலா
சிகரகிரி தகரவிடு முருவமர கதகலப
சித்ரக் ககத்தேறு மெம்பிரானே

முதியபதி னொருவிடையர் முடுகுவன பரிககன
முட்டச் செலுத்தாறி ரண்டுதேரர்
மொழியுமிரு அசுவினிக ளிருசதுவி தவசுவெனு
முப்பத்து முத்தேவர் தம்பிரானே.

1126

எழுந்திடுங் கப்புச் செழுங்குரும் பைக்கொத்
திரண்டுகண் பட்டிட் டிளையோர்நெஞ்
சிசைந்திசைந் தெட்டிக் கசிந்தசைந் திட்டிட்
டிணங்குபொன் செப்புத் தனமாதர்

அழுங்கலங் கத்துக் குழைந்துமன் பற்றுற்
றணைந்துபின் பற்றற் றகல்மாயத்
தழுங்குநெஞ் சுற்றுப் புழுங்குபுண் பட்டிட்
டலைந்தலைந் தெய்த்திட் டுழல்வேனோ

பழம்பெருந் தித்திப் புறுங்கரும் பப்பத்
துடன்பெருங் கைக்குட் படவாரிப்
பரந்தெழுந் தொப்பைக் கருந்திமுன் பத்தர்க்
கிதஞ்செய்தொன் றத்திக் கிளையோனே

தழைந்தெழுந் தொத்துத் தடங்கைகொண் டப்பிச்
சலம்பிளந் தெற்றிப் பொருசூரத்
தடம்பெருங் கொக்கைத் தொடர்ந்திடம் புக்குத்
தடிந்திடுஞ் சொக்கப் பெருமாளே.

1127

ஏட்டி லேவரை பாட்டி லேசில
நீட்டி லேயினி தென்றுதேடி
ஈட்டு மாபொருள் பாத்து ஞாதிக
லேற்ற மானகு லங்கள்பேசிக்

காட்டி லேயியல் நாட்டி லேபயில்
வீட்டி லேஉல கங்களேசக்
காக்கை நாய்நரி பேய்க்கு மூாமுண
யாக்கை மாய்வதொ ழிந்திடாதோ
கோட்டு மாயிர நாட்ட னுடுறை
கோட்டு வாலிப மங்கைகோவே
கோத்த வேலையி லார்த்த சூர்பொரு
வேற்சி காவள கொங்கில்வேளே
பூட்டு வார்சிலை கோட்டு வேடுவர்
பூட்கை சேர்குற மங்கைபாகா
பூத்த மாமலர் சாத்தி யேகழல்
போற்று தேவர்கள் தம்பிரானே.

1128

கச்சுப் பூட்டு கைச்சக் கோட்ட
கத்திற் கோட்டு கிரியாலங்
கக்கித் தேக்கு செக்கர்ப் போர்க்க
யற்கட் கூற்றில் மயலாகி
அச்சக் கூச்ச மற்றுக் கேட்ட
வர்க்குத் தூர்த்த னெனநாளும்
அத்தப் பேறறி லிச்சிப் பார்க்க
றப்பித் தாய்த்தி ரியலாமோ
பச்சைக் கூத்தர் மெச்சிச் சேத்த
பத்மக் கூட்டி லுறைவோரி
பத்திற் சேர்ப்பல் சக்கிற் கூட்டர்
பத்தக் கூட்ட ரியல்வானம்
மெச்சிப் போற்ற வெற்புத் தோற்று
வெட்கக் கோத்த கடல்மீதே
மெத்தக் காய்த்த கொக்குக் கோட்டை
வெட்டிச் சாய்த்த பெருமாளே.

1129

கடலினும் பெரியவிழி மலையினும் பெரியமுலை
கவரினுந் துவரதர மிருதோள்பைங்
கழையினுங் குழையுமென மொழிபழங் கிளவிபல
களவுகொண் டொருவர்மிசை கவிபாடி

அடலசஞ் சலன துல னநுபமன் குண தரன்மெய்
அருள்பரங் குரனபய னென ஆசித்
தலமரும் பிறவியினி யலமலம் பிறவியற
அருணபங் கயசரண மருள்வாயே

வடநெடுங் குலரசத கிரியினின் றிருகலுழி
மகிதலம் புகவழியு மதுபோல
மதசலஞ் சலசலென முதுசலஞ் சலதிநதி
வழிவிடும் படிபெருகு முதுபாகை

உடையசங் க்ரமகவள தவளசிந் துரதிலக
னுலகுமிந் திரனுநிலை பெறவேல்கொண்
டுததிவெந் தபயமிட மலையொடுங் கொலையவுண
ருடனுடன் றமர்பொருத பெருமாளே.

1130

கட்டக் கணப்பறைகள் கொட்டக் குலத்திளைஞர்
கட்டிப் புறத்தி லணைமீதே
கச்சுக் கிழித்ததுணி சுற்றிக் கிடத்தியெரி
கத்திக் கொளுத்தி யணைவோரும்

சுட்டுக் குளித்துமனை புக்கிட் டிருப்பரிது
சுத்தப் பொயொப்ப துயிர்வாழ்வு
துக்கப் பிறப்பகல மிக்கச் சிவத்ததொரு
சொர்க்கப் பதத்தை யருள்வாயே

எட்டுக் குலச்சயில முட்டத் தொளைத்தமரர்
எய்ப்புத் தணித்த கதிர்வேலா
எத்திக் குறத்தியிரு முத்தத் தனக்கிரியை
யெற்பொற் புயத்தி லணைவோனே

வட்டக் கடப்பமலர் மட்டுற்ற செச்சைமலர்
வைத்துப் பணைத்த மணிமார்பா
வட்டத் திரைக்கடலில் மட்டித் தெதிர்த்தவரை
வெட்டித் துணித்த பெருமாளே.

1131

கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்கள் சேல்மதி முகம்வேய்தோள்
கண்டு பாவனை கொண்டு தோள்களி
லொண்டு காதலி லிருகோடு

மண்டி மார்பினில் விண்ட தாமென
வந்த கூர்முலை மடவார்தம்
வஞ்ச மாலதில் நெஞ்சு போய்மடி
கின்ற மாயம தொழியாதோ
கொண்ட லார்குழல் கெண்டை போல்விழி
கொண்டு கோகில மொழிகூறுங்
கொங்கை யாள்குற மங்கை வாழ்தரு
குன்றில் மால்கொடு செலும்வேலா
வெண்டி மாமன மண்டு சூர்கடல்
வெம்ப மேதினி தனில்மீளா
வென்று யாவையு மன்றி வேலையும்
வென்று மேவிய பெருமாளே.

1132

கப்பரை கைக்கொள வைப்பவர் மைப்பயில்
கட்பயி லிட்டிள வளவோரைக்
கைக்குள்வ சப்பட பற்கறை யிட்டுமு
கத்தைமி னுக்கிவ ருமுபாயப்
பப்பர மட்டைகள் பொட்டிடு நெற்றியர்
பற்றென வுற்றவொர் தமியேனைப்
பத்மப தத்தினில வைத்தருள் துய்த்திரை
பட்டதெ னக்கினி யமையாதோ
குப்பர வப்படு பட்சமி குத்துள
முத்தரை யாக்கொரு மகவாகிக்
குத்திர மற்றுரை பற்றுணர் வற்றவொர்
குற்றம றுத்திடு முதல்வோனே
விப்ரமு னிக்குழை பெற்றகொ டிச்சிவி
சித்ரத னக்கிரி மிசைதோயும்
விக்ரம மற்புய வெற்பினை யிட்டெழு
வெற்பைநெ ருக்கிய பெருமாளே.

1133

கலைகோட்டு வல்லி விலைகாட்டு வில்ல
ரிவைமார்க்கு மெய்யி லவநூலின்
கலைகாட்டு பொய்ய மலைமாக்கள் சொல்ல
கடுகாட்டி வெய்ய அதிபாரக்

கொலைகோட்டு கள்ளி டறிவோர்க்கு முள்ள
முகையாக்கை நையு முயிர்வாழக்
கொடிகோட்டு மல்லி குரவார்க்கொள் தொல்லை
மறைவாழ்த்து செய்ய கழல்தாராய்

சிலைகோட்டு மள்ளர் தினைகாத்த கிள்ளை
முலைவேட்ட பிள்ளை முருகோனே
திணிகோட்டு வெள்ளி பவருட்டி லுள்ள
சிறைமீட்ட தில்ல மயில்வீரா

அலைகோட்டு வெள்ள மலைமாக்கள் விள்ள
மலைவீழ்த்த வல்ல அயில்யோகா
அடிபோற்றி யல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே.

1134

களவு கொண்டு கைக்காசி னளவ றிந்து கர்ப்பூர
களப துங்க வித்தார முலைமீதே
கலவி யின்பம் விறபார்க ளவய வங்க ளைப்பாடு
கவிதெ ரிந்து கற்பார்கள் சிலர்தாமே

உளநெ கிழ்ந்த சத்தான வுரைம றந்து சத்தான
உனையு ணர்ந்து கத்தூரி மணநாறும்
உபய பங்க யத்தாளி லபய மென்று னைப்பாடி
யுருகி நெஞ்சு சற்றேதி லிழிவாமோ

அளவில் வன்க விச்சேனை பரவ வந்த சுக்ரீவ
அரசு டன்க டற்றூளி யெழவேபோய்
அடலி லங்கை சுட்டாடி நிசிச ரன்த சக்ரீவ
மறவொ ரம்பு தொட்டார்த மருகோனே

வளரு மந்த ரச்சோலை மிசைசெ றிந்த முற்பால
வனசர் கொம்பி னைத்தேடி யொருவேட
வடிவு கொண்டு பித்தாகி யுருகி வெந்த றக்கானில்
மறவர் குன்றி னிற்போன பெருமாளே.

1135

கள்ளமீ னச்சுறவு கொள்ளுமீ னற்பெரிய
கல்விவீ றக்கரிய மனமாகுங்
கல்விடா துற்றதிசை சொல்விசா ரத்திசைய
மெய்கள்தோ ணிப்பிறவி யலைவேலை

மெள்ளற நிக்குரவு வெள்ளிலார் வெட்சிதண
முல்லைவே ருற்பலமு ளரிநீபம்
வில்லநீள் பொற்கனக வல்லிமே லிட்டுனது
சொல்லையோ திப்பணிவ தொருநாளே
துள்ளுமா னித்தமுனி புள்ளிமான் வெற்புதவு
வள்ளிமா னுக்குமயல் மொழிவோனே
தொல்லியா ளத்துவளர் செல்வர்யா கத்தரையன்
எல்லைகா ணற்கரியர் குருநாதா
தெள்ளுநா தச்சுருதி வள்ளல்மோ லிப்புடைகொள்
செல்வனே முத்தமிணர் பெருவாழ்வே
தெய்வயா னைக்கிளைய வெள்ளையா னைத்தலைவ
தெய்வயா னைக்கினிய பெருமாளே.

1136

கன்னியர் கடுவிட மன்னிய கயலன
கண்ணிலு மிருகன தனமீதுங்
கன்மைகள் மருவிய மன்மத னுருவிலி
மென்மைகொ ளுருவிலு மயலாகி
இன்னல்செய் குடிலுட னின்னமு முலகினி
லிங்கில பெறவிங னுதியாதே
யெண்ணுமு னடியவர் நண்ணிய பதமிசை
யென்னையும் வழிபட விடவேணும்
பொன்னவ மணிபயில் மன்னவ புனமற
மின்முலை தழுவிய புயவீரா
புண்ணிய முளபல விண்ணவர் தொழுமுத
லெண்மலை யொடுபொரு கதிர்வேலா
தன்னிறை சடையிறை யென்முனி பரவரு
இன்னிசை யுறுதமிழ் தெரிவோனே
தண்ணளி தருமொரு பன்னிரு விழிபயில்
சண்முக மழகிய பெருமாளே.

1137

கிஞ்சுகமெ னச்சி வத்த தொண்டையள்மி கக்க றுத்த
கெண்டையள்பு னக்கொ டிச்சி யதிபாரக்
கிம்புரிம ருப்பை யொத்த குங்குமமு லைக்கு றத்தி
கிங்கரனெ னப்படைத்த பெயர்பேசா

நெஞ்சுருகி நெக்குநெக்கு நின்றுதொழு நிர்க்குணத்தர்
நிந்தனையில் பத்தர்வெட்சி மலர்தூவும்
நின்பதயு கப்ரசித்தி யென்பனவ குத்துரைக்க
நின்பணித மிழ்த்ரயத்தை யருள்வாயே

கஞ்சன்வர விட்டதுட்ட குஞ்சரம ருப்பொசித்த
கங்கனும தித்திகைக்க மதம்வீசுங்
கந்தெறிக ளிற்றுரித்து வென்றுதிரு நட்டமிட்ட
கம்பனும திக்கவுக்ர வடிவேல்கொண்

டஞ்சியஜ கத்ரயத்தை யஞ்சலென விக்ரமித்து
அன்பர்புக ழப்பொருப்பொ டமராடி
அன்றவுண ரைக்களத்தில் வென்றுததி யைக்கலக்கி
அண்டர்சிறை வெட்டிவிட்ட பெருமாளே.

1138

குடிமைமனை யாட்டியும் அடிமையொடு கூட்டமும்
குலமுமிறு மாப்புமி குதியான
கொடியபெரு வாழ்க்கையி லினியபொரு ளீட்டியெ
குருடுபடு மோட்டென வுடல்வீழில்

அடைவுடைவி டாச்சிறு பழையதுணி போர்த்தியெ
அரிடசுடு காட்டிடை யிடுகாயம்
அழியுமள வாட்டலுன் அமலமலர் மாப்பத
அருணசர ணாஸ்பதம் அருள்வாயே

அடியிநெடு மாத்தரு மொளமொளமொ ளாச்சென
அலறிவிழ வேர்க்குல மொடுசாய
அவுணர்படை தோற்பெழ அருவரைக ளார்ப்பெழ
அயிலலகு சேப்பெழ மறைநாலும்

உடையமுனி யாட்பட முடுகவுணர் கீழ்ப்பட
உயரமரர் மேற்பட வடியாத
உததிகம ராப்பிர முதுகுலிச பார்த்திபன்
உலககுடி யேற்றிய பெருமாளே.

1139

குறைவ தின்றி மிக்க சலமெ லும்பு துற்ற
குடிலி லொன்றி நிற்கு முயிர்மாயங்
குலைகு லைந்து தெர்ப்பை யிடைநி னைந்து நிற்ப
கொடிய கொண்ட லொத்த வுருவாகி

மறலி வந்து துட்ட வினைகள் கொண்ட லைத்து
மரண மென்ற துக்க மணுகாமுன்
மனமி டைஞ்ச லற்று னடிநி னைந்து நிற்க
மயிலில் வந்து முத்தி தரவேணும்
அறுகு மிந்து மத்த மலையெ றிந்த அப்பு
மளிசி றந்த புட்ப மதுசூடி
அருந டஞ்செ யப்ப ரருளி ரங்கு கைக்கு
அரிய இன்சொல் செப்பு முருகோனே
சிறுகு லந்த னக்கு ளறிவு வந்து தித்த
சிறுமி தன்த னத்தை யணைமார்பா
திசைமு கன்தி கைக்க அசுர ரன்ற டைத்த
சிறைதி றந்து விட்ட பெருமாளே.

1140

கோக னகமு கிழ்த்த போக புளகி தத்த
கோடு தலைகு லைத்த முலையாலே
கூட வரவ ழைக்கு மாடு குழைய டர்த்த
நீடி யகுவ ளைக்கண் மடமாதர்
ஆக முறவ ணைத்து காசை யபக ரித்து
மீள விதழ்க டிப்ப தறியாதே
ஆசை யதுகொ ளுத்து மால மதுகு டித்த
சேலில் பரித விப்ப தினியேனோ
மாக நதிம திப்ர தாப மவுலி யர்க்கு
சாவி யதுவொ ரர்த்த மொழிவோனே
வாகு வலைய சித்ர ஆறி ருபுய வெற்பில்
வாழ்வு பெறுகு றத்தி மணவாளா
வேக வுரக ரத்ந நாக சயன சக்ர
மேவி மரக தத்தின் மருகோனே
வீசு திரைய லைத்த வேலை சுவற வெற்றி
வேலை யுருவ விட்ட பெருமாளே.

1141

சந்தம் புனைந்து சந்தஞ் சிறந்த
தண்கொங்கை வஞ்சி மனையாளும்
தஞ்சம் பயின்று கொஞ்சுஞ் சதங்கை
தங்கும் பதங்க ளிளையோரும்

எந்தன் தனங்க ளென்றென்று நெஞ்சி
லென்றும் புகழ்ந்து மிகவாழும்
இன்பங் களைந்து துன்பங்கள் மங்க
இன்றுன் பதங்கள் தரவேணும்

கொந்தின் கடம்பு செந்தண் புயங்கள்
கொண்டங் குறிஞ்சி யுறைவோனே
கொங்கின் புனஞ்செய் மின்கண்ட கந்த
குன்றம் பிளந்த கதிர்வேலா

ஐந்திந் த்ரியங்கள் வென்றென்று மன்ப
ரங்கம் பொருந்து மழகோனே
அண்ட ந் தலங்க ளெங்குங் கலங்க
அன்றஞ்ச லென்ற பெருமாளே

1142

சலமல மசுத்த மிக்க தசைகுருதி யத்தி மொய்த்த
தடியுடல் தனக்கு ளூற்று மிகுமாயம்
சகலமு மியற்றி மத்த மிகுமிரு தடக்கை யத்தி
தனிலுரு மிகுத்து மக்க ளொடுதாரம்

கலனணி துகிற்கள் கற்பி ளொடுகுல மனைத்து முற்றி
கருவழி யவத்தி லுற்று மகிழ்வாகிக்
கலைபல பிடித்து நித்த மலைபடு மநர்த்த முற்ற
கடுவினை தனக்குள் நிற்ப தொழியாதோ

மலைமக ளிடத்து வைத்து மதிபுனல் சடைக்குள்வைத்து
மழுவனல் கரத்துள் வைத்து மருவார்கள்
மடிவுற நினைத்துவெற்பை வரிசிலை யிடக்கை வைத்து
மறைதொழ நகைத்த அத்தர் பெருவாழ்வே

பலதிசை நடுக்க முற்று நிலைகெட அடற்கை யுற்ற
படையது பொருப்பில் விட்ட முருகோனே
பழுதறு தவத்தி லுற்று வழிமொழி யுரைத்த பத்தர்
பலருய அருட்கண் வைத்த பெருமாளே.

1143

சாங்கரி பாடியிட வோங்கிய ஞானசுக
தாண்டவ மாடியவர் வடிவான
சாந்தம தீதமுணர் கூந்தம சாதியவர்
தாங்களு ஞானமுற வடியேனும்

தூங்கிய பார்வையொடு தாங்கிய வாயுவொடு
தோன்றிய சோதியொடு சிவயோகந்
தூண்டிய சீவனொடு வேண்டிய காலமொடு
சோம்பினில் வாழும்வகை அருளாதோ

வாங்குகை யானையென வீங்குலை வாழைவளர்
வான்பொழில் சூழும்வய லயலேறி
மாங்கனி தேனொழுக வேங்கையில் மேலரிகள்
மாந்திய வாரணிய மலைமீதிற்

பூங்கொடி போலுமிடை யேங்கிட வாரமணி
பூண்பன பாரியன தனபாரப்
பூங்குற மாதினுட னுங்குற வாடியிருள்
பூம்பொழில் மேவிவளர் பெருமாளே.

1144

சிவஞான புண்டரிக மலர்மாது டன்கலவி
சிவபோக மன்பருக அறியாமற்
செகமீது முன்றுமல வடிவாயி ருந்துபொது
திகழ்மாதர் பின்செருமி யழிவேனோ

தவமாத வங்கள்பயில் அடியார்க ணங்களொடு
தயவாய்ம கிழ்ந்துதினம் விளையாடத்
தமியேன்ம லங்களிரு வினைநோயி டிந்தலற
ததிநாளும் வந்ததென்முன் வரவேணும்

உவகாரி யன்பர்பணி கலியாணி யெந்தையிட
முறைநாய கங்கவுரி சிவகாமி
ஒளிரானை யின்கரமில் மகிழ்மாது ளங்கனியை
யொருநாள்ப கிர்ந்தவுமை யருள்பாலா

அவமேபி றந்தஎனை இறவாம லன்பர்புகு
மமுதால யம்பதவி யருள்வோனே
அழகாந கம்பொலியு மயிலாகு றிஞ்சிமகிழ்
அயிலாபு கழ்ந்தவர்கள் பெருமாளே.

1145

சீறிட்டு லாவு கண்கள் மாதர்க்கு நாள்ம ருண்டு
சேவித்து மாசை கொண்டு முழல்வேனைச்
சீரிட்ட மாக நின்ற காசைக்கொ டாத பின்பு
சீரற்று வாழ மின்பம் நலியாதே

ஆறெட்டு மாய்வி ரிந்து மாறெட்டு மாகி நின்று
மாருக்கு மேவி எம்ப அறியாதே
ஆகத்து ளேம கிழ்ந்த ஜோதிப்ர காச இன்பம்
ஆவிக்கு ளேது லங்கி அருளாதோ

மாறிட்டு வான டுங்க மேலிட்டு மேல கண்டம்
வாய்விட்டு மாதி ரங்கள் பிளவாக
வாள்தொட்டு நேர்ந டந்த சூர்வஜ்ர மார்பு நெஞ்சும்
வான்முட்ட வீறு செம்பொன் வரையோடு

கூறிட்ட வேல பங்க வீரர்க்கு வீர கந்த
கோதற்ற வேடர் தங்கள் புனம்வாழுங்
கோலப்பெண் வாகுகண்டு மாலுற்று வேளை கொண்டு
கூடிக்கு லாவு மண்டர் பெருமாளே

1146

தூதினுண வாசைதனி லேசுழலு மீனதென
தூசுவழ கானவடி வதனாலே
சூதமுட னேருமென மாதர்நகை தேடுபொரு
ளாசைதமி லேசுழல வருகாலன்

ஆதிவிதி யோடுபிற மாதவகை தேடியென
தாவிதனை யேகுறுகி வருபோது
ஆதிமுரு காதிமுரு காதிமுரு காஎனவு
மாதிமுரு காநினைவு தருவாயே

ஓதமுகி லாடுகிரி யேறுபட வாழசுரர்
ஓலமிட வேயயில்கொ டமராடி
ஓநமசி வாயகுரு பாதமதி லேபணியும்
யோகமயி லாவமலை மகிழ்பாலா

நாதரகு ராமஅரி மாயன்மரு காபுவன
நாடுமடி யார்கள்மன துறைவோனே
ஞானசுர வானைகண வாமுருக னேயமரர்
நாடுபெற வாழவருள் பெருமாளே.

1147

செழுந்தாது பார்மாது மரும்பாதி ரூபோடு
சிறந்தியாதி லூமாசை யொழியாத
திறம்பூத வேதாள னரும்பாவ மேகோடி
செயுங்காய நோயாள னரகேழில்

விழுந்தாழ வேழுழ்க இடுங்காலன் மேயாவி
விடுங்கால மேஙாயென் வினைபாவம்
விரைந்தேக வேவாசி துரந்தோடி யேஞான
விளம்போசை யேபேசி வரவேணும்

அழுங்கோடி தேவார்க ளமர்ந்தார வானீடி
அழன்றேகி மாசீத நெடுவேலை
அதிர்ந்தோட வேகாலன் விழுந்தோட வேகூர
அலங்கார வேலேவு முருகோனே

கொழுங்கானி லேமாதர் செழுஞ்சேலை யேகோடு
குருந்தேறு மால்மாயன் மருகோனே
குறம்பாடு வார்சேரி புகுந்தாசை மாதோடு
குணங்கூடி யேவாழு பெருமாளே.

1148

தத்த னமுமடிமை சுற்ற மொடுபுதல்வர்
தக்க மனையினமு மனைவாழ்வுந்
தப்பு நிலைமையணு கைக்கு வரவிரகு
தைக்கு மயல்நினைவு குறுகாமுன்

பத்தி யுடனுருகி நித்த முனதடிகள்
பற்று மருள்நினைவு தருவாயே
பத்து முடியுருள வித்த பகழியினர்
பச்சை நிறமுகிலின் மருகோனே

அத்தி முகவனழ குற்ற பெழைவயிற
னப்ப மவரைபொரி அவல்தேனும்
அப்பி யமுதுசெயு மொய்ப்ப னுதவஅட
விக்குள் மறமகளை யணைவோனே

முத்தி தருமுதல்வர் முக்க ணிறைவரொடு
முற்று மறைமொழியை மொழிவோனே
முட்ட வசுரர்கிளை கெட்டு முறியமுதல்
வெட்டி யமர்பொருத பெருமாளே.

1149

தலைவலய போகமுஞ் சலனமிகு மோகமுந்
தவறுதரு காமமுங் கனல்போலுந்
தணிவரிய கோபமுந் துணிவரிய லோபமுஞ்
சமயவெகு ரூபமும் பிறிதேதும்

பேய்பூத மூத்த பாரேரி காக்கை
 பீருஇ ழாத்தி னுடல்பேணிப்
பேயோன டாத்து கோமாளி வாழ்க்கை
 போமாறு பேர்த்து னடிதாராய்

வேயூரு சீர்க்கை வேல்வேடர் காட்டி
 லேய்வாளை வேட்க வுருமாறி
மீளாது வேட்கை மீதூர வாய்த்த
 வேலோடு வேய்த்த இளையோனே

மாயூர வேற்றின் மீதே புகாப்பொன்
 மாமேரு வேர்ப்ப றியமோதி
மாறான மாக்கள் நீறாக வோட்டி
 வானாடு காத்த பெருமாளே.

1154

துடித்தெதிர் வடித்தெழு குதர்க்கச மயத்தவர்
 சுழற்கொரு கொடிக்கொடி யெதிர்கூறித்
துகைப்பன கிதத்தலை யறுப்பன யில்விட்டுடல்
 துணிப்பன கணித்தலை மிசைபார

முடித்தலை விழுப்பன முழுக்கஅ டிமைப்பட
 முறைப்படு மறைத்திர ளறியாத
முதற்பொருள் புலப்பட வுணர்த்துவ னெனக்கொரு
 மொழிப்பொருள் பழிப்பற அருள்வாயே

குடிப்பன முகப்பன நெடிப்பன நடிப்பன
 கொழுத்தகு ருதிக்கட லிடையூடே
குதிப்பன மதிப்பன குளிப்பன களிப்பன
 குவட்டினை யிடிப்பன சிலபாடல்

படிப்பன திருப்புக ழெடுப்பன முடிப்பன
 பயிற்றிய லகைக்குலம் விளையாடப்
பகைத்தெழு மரக்கரை யிமைப்பொழு தினிற்பொடி
 படப்பொரு துழக்கிய பெருமாளே.

1155

துத்தி நச்ச ராவிளம் பிச்சி நொச்சி கூவிளஞ்
 சுக்கி லக்க லாமிர்தப் பிறைசூதம்
சுத்த ரத்த பாடலம் பொற்க டுக்கை யேடலஞ்
 சுத்த சொற்ப கீரதித் திரைநீலம்

புத்தெ ருக்கு பாழிகங் கொத்தெ டுத்த தாளிதண்
பொற்பு மத்தை வேணியர்க் கருள்கூரும்
புத்தி சித்தி வாய்கனஞ் சுத்த சத்ய வாசகம்
புற்பு தப்பி ராணனுக் கருள்வாயே
பத்தி யுற்ற தோகையம் பச்சை வெற்றி வாகனம்
பக்க மிட்டு லாவியச் சுரர்மாளப்
பக்க விட்டு வாய்நிணங் கக்க வெட்டி வாய்தரும்
பத்ம சிட்ட னேடமுத் தெறிமீனக்
கைத்த லப்ர வாகையுந் தத்த ளிக்க மாமுறிந்
துட்க முத்து வாரணச் சதகோடி
கைக்க ளிற்று வாரணம் புக்கொ ளிக்க வாரணங்
கைப்பி டித்த சேவகப் பெருமாளே.

1156

தெரிவை மக்கள் செல்வ முரிமை மிக்க வுண்மை
தெரிவ தற்கு உள்ள முணராமுன்
சினமி குத்த திண்ணர் தனிவ ளைத்து வெய்ய
சிலுகு தைத்து வன்மை சிதையாமுன்
பரவை புக்கு தொய்யு மரவ ணைக்குள் வைகு
பரம னுக்கு நல்ல மருகோனே
பழுதில் நிற்சொல் சொல்லி யெழுதி நித்த முண்மை
பகர்வ தற்கு நன்மை தருவாயே
இருகி ரிக்க ளுள்ள வரைத டிக்கு மின்னு
மிடியு மொய்த்த தென்ன எழுதூரை
எழுக டற்கு ளுள்ளு முழுகு வித்து விண்ணு
ளிமைய வர்க்கு வன்மை தருவோனே
அரிவை பக்க முய்ய வுருகி வைக்கு மைய
ரறிய மிக்க வுண்மை யருள்வோனே
அறிவி னுக்கு ளென்னை நெறியில் வைக்க வல்ல
அடிய வர்க்கு நல்ல பெருமாளே.

1157

தென்றலு மன்றி யின்றலை பொங்கு
திண்கட லொன்று மிகமோதச்
செந்தழ லென்று வெந்தழல் சிந்து
திங்களும் வந்து துணையேய

அன்றிலு மன்றி துன்றுச ரங்க
ஊாந்துமெ னெஞ்ச மழியாதே
அந்தியி லென்றன் வெந்துய ரஞ்ச
அன்பொட லங்கல் தரவேணும்

வென்றிவி ளங்கு குன்றவர் வஞ்சி
விஞ்சிய கொங்கை புணர்மார்பா
வெண்டர ளங்கள் தண்டைச தங்கை
மின்கொடி லங்கு கழலோனே

கொன்றைய ணிந்த சங்கர ரன்று
கும்பிட வந்த குமரேசா
குன்றிய அண்ட ரன்றுய வென்று
குன்றமெ றிந்த பெருமாளே.

1158

தோரண கனக வாசலில் முழவு
தோல்முர சதிர முதிராத
தோகையர் கவரி வீசவ யிரியர்
தோள்வலி புகழ மதகோப

வாரண ரதப தாகினி துரக
மாதிர நிறைய அரசாகி
வாழினும் வறுமை கூரினு நினது
வார்கழ லொழிய மொழியேனே

பூரண புவன காரண சவரி
பூதர புளக தனபார
பூஷண நிருதர் தூஷண விபுதர்
பூபதி நகரி குடியேற

ஆரண வனச ஈரிரு குடுமி
ஆரியன் வெருவ மயிலேறு
மாரிய பரம ஞானமு மழகு
மாண்மையு முடைய பெருமாளே.

1159

நச்சுவாள் விழிக்கொ டெற்றியே தனத்தை
நத்துவார் சுகத்தில் நலமாக
நட்டமா மனத்தை யிட்டமே கொடுத்து
நத்துவாழ் கடற்கு ளணைபோலே

கச்சமே செலுத்தி யச்சமே படுத்து
கட்டஏழ் பிறப்பு விடவேதான்
கற்றநூ லுகக்க வெட்கமே செறித்த
கட்டனே னினைப்ப தொருநாளே

இச்சையே செலுத்தி யுச்சிதாள் பலிக்கு
மிட்டமா லவற்கு மருகோனே
எற்றுவா ரிதிக்குள் முற்றிநீள் பொருப்பை
யெக்கிநேர் மடித்த இளையோனே

மெச்சவே புடைத்த முத்தமார் தனத்தி
மிக்கவாள் படைத்த விழியாலே
வெட்டுமா மறத்தி யொக்கவே யிருக்க
வெற்றிவே லெடுத்த பெருமாளே.

1160

நற்குண மு ளார்த மைப்பொல் மைக்குழலி லேசி றக்க
நற்பரிம ளாதி துற்ற மலர்சூடி
நச்சுவிழி யால்ம யக்கி யிச்சைபல பேசி யுற்று
நற்பொருள வாம னத்தர் வசமாகி

வெற்பனைய மாத னத்தை பொற்புறவு ருவ ணைத்து
மெத்தமய லாகி நித்த மெலியாதே
வெட்சிகமழ் நீப புஷ்ப வெற்றிசிறு பாத பத்ம
மெய்க்கிருபை நீய ளிப்ப தொருநாளே

ரத்தினப ஞ்ஞாநி ருத்தன் மெய்ச்சுதனு நாடு மிக்க
லக்ஷணகு மார சுப்ர மணியோனே
நற்றிசையு மேறி யிட்ட பொய்ச்சமணை வேர றுத்து
நற்றிருநி றேப ரப்பி விளையாடும்

சற்சனகு மார வ்ருத்தி அற்புதசி வாய னுக்கொர்
சற்குருவி நோத சித்ர மயில்வீரா
சக்ரதரன் மார்ப கத்தி லுக்ரமுட னேத ரித்த
சத்தியடை யாள மிட்ட பெருமாளே.

1161

நாகாங்க ரோமங் காட்டி வாரேந்து நாகங் காட்டி
நாமேந்து பாலங் காட்டி யபிராம
நாணுங்க ராகங் காட்டி நாகேந்த்ர நீலங் காட்டி
நாயேன்ப்ர காசங் காட்டி மடலூர

மேகாங்க கேசங் காட்டி வாயாம்பல் வாசங் காட்டி
மீதூர்ந்த போகங் காட்டி யுயிரீர்வார்
மேல்வீழ்ந்து தோயுந் தூர்த்தன் மோகாந்தகாரந்தீர்க்க
வேதாந்த தீபங் காட்டி யருள்வாயே

ஏகாந்த வீரம் போற்றி நீலாங்க யானம் போற்றி
யேடார்ந்த நீபம் போற்றி முகில்தாவி
ஏரேறுங்கலேழுஞ்சாய்த்தநான்மூன்றுதோளும்போற்றி
யார்வேண்டி னுலுங் கேட்ட பொருளீயும்

த்யாகாங்க சீலம் போற்றி வாயோய்ந்தி டாதன் றூர்த்து
தேசாங்க சூரன் தோற்க மயிலேறிச்
சேவேந்தி தேசம் பார்க்க வேலேந்தி மீனம் பூத்த
தேவேந்த்ர லோகங் காத்த பெருமாளே.

1162

பரிமள மலரடுத் தகில்மண முழுகிமைப்
பரவிய ம்ருகமதக் குழல்மானூர்
பருமணி வயிரமுத் திலகிய குழையினிற்
படைபொரு வனவிழிக் கயலாலே

எரியுறு மெழுகெனத் தனிமன மடையநெக்
கினிமையொ டுருகவிட் டவமேயான்
இருவினை நலியமெய்த் திறலுட னறிவுகெட்
டிடர்படு வதுகெடுத் தருள்வாயே

சொரிமத அருவிவிட் டொழுகிய புகர்முகத்
தொளைபடு கரமலைக் கிளையோனே
துடியிடை யொருகுறக் குலமயில் புளகிதத்
துணைமுலை தழுவுபொற் புயவீரா

அரியன பலவிதத் தொடுதிமி லையுமுடுக்
கையுமொகு மொகுவெனச் சதகோடி
அலகையு முடனடித் திடவடி யயிலெடுத்
தமர்செயு மறுமுகப் பெருமாளே.

1163

பற்றகெட் டைப்படைத் துட்டிருட் டைத்தயிர்ப்
பத்தைமுட் டிப்படுத் தயில்மாதர்
பக்கமிட் டுப்பொருட் கொட்குமிட் டப்பரப்
பற்றுகெட் டுப்பயிர்க் களைபோலும்

கற்றகட் டுக்கவிக் கொட்டமொட் டிக்கணைத்
திட்டுகத் தத்தினுற் றகமாயுங்
கட்டமற் றுக்கழற் பற்றிமுத திக்கருத்
தொக்கநொக் குக்கணித் தருள்வாயே

வற்றவட் டக்கடற் கிட்டிவட் டித்துரத்
திட்டுமட் டுப்படப் பொருமாயன்
மற்றுமொப் புத்தரித் தெட்ட எட் டப்புறத்
துற்றஅத் தர்க்கருட் பெருவாழ்வே

செற்றமுற் றச்சினத் திட்டுநெட் டைப்பொருப்
பெட்டைமுட் டிச்செருச் செயும்வேலா
சித்தர்சித் தத்துறப் பற்றிமெத் தப்புகழ்ச்
செப்புமுத் தித்தமிழ்ப் பெருமாளே..

1164

பாதக மான யாக்கை வாதுசெய் பாவி கோத்த
பாணமும் வாளு மேற்ற இருபார்வை
பாரப டீர மாப்ப யோதர மாதர் வாய்த்த
பாயலின் மீத ணுப்பி யிதமாடுங்

தோதக மாய வார்த்தை போதக மாக நோக்கு
தூய்மையில் நாயி னேற்கும் வினைதீரச்
சூழும ளுதி நீத்த யாளுெடு தானி லாச்சு
கோதய ஞான வார்த்தை யருள்வாயே

சாதன வேத நூற்பு ராதன பூண நூற்ப்ர
ஜாபதி யாண்மை தோற்க வரைசாடிச்
சாகர சூர வேட்டை யாடிய வீர வேற்ப்ர
தாபம கீப போற்றி யெனநேமி

மாதவன் மாது பூத்த பாகர னேக நாட்ட
வாசவ னேதி மீட்க மறைநீப
மாமலர் தூவி வாழ்த்த யானையை மாலை சூட்டி
வானவர் சேனை காத்த பெருமாளே.

1165

பாரந றுங்குழல் சோரநெ கிழ்ந்துப
டீரத னம்புள கிதமாகப்
பாவைய ருந்தியில் மூழ்கிநெ டும்பரி
தாபமு டன்பரி மளவாயின்

ஆரமு துண்டஉணை மீதிலி ருந்தநு
ராகம்வி ளைந்திட விளையாடி
ஆகந கம்பட ஆரமு யங்கிய
ஆசைம றந்துனை யுணர்வேனோ

நாரத னன்றுச காயமொ ழிந்திட
நாயகி பைம்புன மதுதேடி
நாணம ழிந்துரு மாறிய வஞ்சக
நாடியெ பங்கய பதநோவ

மாரச ரம்பட மோகமு டன்குற
வாணர்கு றிஞ்சியின் மிசையேபோய்
மாமுநி வன்புணர் மானுத வுந்தனி
மானைம ணஞ்செய்த பெருமாளே.

1166

பிரமனும் விரகொடு பிணிவினை யிடர்கொடு
பேணிக் கரங்கொண் டிருகாலும்
பெறநிமிர் குடிலென வுறவுயிர் புகமதி
பேதித் தளந்தம் புவியூடே

வரவிட வருமுட லெரியிடை புகுதரு
வாதைத் தரங்கம் பிறவாமுன்
மரகத மயில்மிசை வருமுரு கனுமென
வாழ்கைக் கொரன்புந் தருவாயே

அருவரை தொளைபட அலைகடல் சுவறிட
ஆலிப் புடன்சென் றசுரேசர்
அனைவரு மடிவுற அமர்பொரு தழகுட
னுண்மைத் தனங்கொண் டெழும்வேலா

இருவினை யகலிட எழிலுமை யிடமுடை
யீசர்க் கிடுஞ்செந் தமிழ்வாயா
இயல்பல கலைகொடு இசைமொழி பவரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.

1167

பூதக லாதிகள் கொண்டு யோகமு மாகம கிழ்ந்து
பூசைகள் யாதுநி கழ்ந்து பிழைகோடி
போம்வழி யேதுதெ ரிந்து ஆதிய நாதியி ரண்டு
பூரணி காரணி விந்து வெளியான

நாதப ராபர மென்ற யோகியு லாசம றிந்து
ஞானசு வாசமு ணர்ந்து வொளிகாண
நாடியொ ராயிரம் வந்த தாமரை மீதில மர்ந்த
நாயகர் பாதமி ரண்டு மடைவேனோ
மாதுசர் வேஸ்வரி வஞ்சி காளிபி டாரிவி பஞ்சி
வாணிவ ராகிம டந்தை யபிராமி
வாழ்சிவ காமச வுந்தரி யாலமெ லாமுக பஞ்ச
வாலைபு ராரியி டந்த குமையாயி
வேதபு ராணம்வி ளம்பி நீலமு ராரியர் தங்கை
மேலொடு கீழுல கங்கள் தருபேதை
வேடமெ லாமுக சங்க பாடலொ டாடல்ப யின்ற
வேணியர் நாயகி தந்த பெருமாளே.

1168

பெருங்கா ரியம்போல் வருங்கே டுடம்பால்
ப்ரியங்கூர வந்து கருவூறிப்
பிறந்தார் கிடந்தா ரிருந்தார் தவழ்ந்தார்
நடந்தார் தளர்ந்து பிணமானார்
அருங்கான் மருங்கே யெடுங்கோள் சுடுங்கோள்
அலங்கார நன்றி தெனமூழ்கி
அகன்று சையும்போய் விழும்பா முடம்பால்
அலந்தேனை யஞ்ச லெனவேணும்
இருங்கா னகம்போ யிளங்கா ளைபின்போ
கவெங்கே மடந்தை யெனவேகி
எழுந்தே குரங்கா லிலங்காபுரந்தீ
யிடுங்கா வலன்றன் மருகோனே
பொருங்கார் முகம்பா ணிகொண்டே யிறைஞ்சார்
புறஞ்சாய அம்பு தொடும்வேடர்
புனங்கா வலங்கோ தைபங்கா வபங்கா
புகழ்ந்தோது மண்டர் பெருமாளே.

1169

மக்கட் பிறப்புக்கு ளொக்கப் பிறப்புற்ற
மட்டுற்ற சுற்றத்தர் மனையாளும்
மத்யத் தலத்துற்று நித்தப் பிணக்கிட்டு
வைத்துப் பொருட்பற்று மிகநாட.

நிக்ரித் திடுத்துட்டன் மட்டித் துயிர்ப்புற்ற
நெட்டைக் கயிற்றிட்டு வளையாமுன்
நெக்குக் குருப்பத்தி மிக்குக் கழற்செப்ப
நிற்றத் துவச்சொற்க ளருள்வாயே

திக்கப் புறத்துக்குள் நிற்கப் புகழ்ப்பித்த
சித்ரத் தமிழ்க்கொற்ற முடையோனே
சிப்பக் குடிற்கட்டு மற்பக் குறத்திச்சொல்
தித்திப்பை யிச்சிக்கு மணவாளா

முக்கட் சடைச்சித்த ருட்புக் கிருக்கைக்கு
முத்தித் துவக்குற்று மொழிவோனே
மு ச் சினத்திட்டு முற்பட் டிணர்க்கொக்கை
முட்டித் தொளைத்திட்ட பெருமாளே

1170

மக்கள்தா யர்க்குமரு கர்க்குமா மர்க்குமனை
விக்கும்வாழ் நர்க்குமிக மன தூடே
மைத்தவே லைக்குநெடி துற்றமா யத்துயரம்
வைத்துவா டச்சமனு முறமேவித்

திக்குநா டிக்கரிய மெய்க்கடா விற்றிருகி
திக்கஆ விக்களவு தெரியாமுன்
சித்தமோ வித்துயிலு மற்றுவா ழச்சிறிது
சித்ரபா தக்கமல மருள்வாயே

இக்குவே ளைக்கருக முக்கணு டிக்கனலை
யிட்டுயோ கத்தமரு மிறையோர்முன்
எச்சரா திக்குமுற நிற்குமா யற்குமுத
லெட்டொணு வித்தைதனை யினிதீவாய்

பக்கஆர் வத்துடனுள் நெக்குநா டிப்பரவு
பத்தர்பா டற்குருகு முருகோனே
பக்கம்யா னைத்திருவொ டொக்கவா ழக்குறவர்
பச்சைமா னுக்கினிய பெருமாளே.

1171

மதனிக் கதுகொடு பதுமப் புதுமலர்
மலையப் படவிடு வலியாலே
வனமுற் றினவளை யினநித் திலமலை
வலையத் துகள்வளை கடலாலே

விதனப் படுமதி வதனக் கொடியற
வெருவிப் பரிமள அணைமீதே
மெலியக் கலைதலை குலையத் தருமினி
விரையக் குரவலர் தரவேணும்

புதனைச் சதுமுக விதியச் சுதனெதிர்
புனைவித் தவர்தொழு கழல்வீரா
பொருள்கைச் சரிவரி பெருகச் செறிவுறு
புனமெய்க் குறமகள் மணவாளா

முதுநாற் சரவண மதனிற் சததள
முளரிப் பதிதனி லுறைவோனே
முதுமைக் கடலட ரசுரப் படைகெட
முடுகிப் பொரவல பெருமாளே.

1172

மதிதனை யிலாத பாவி குருநெறி யிலாத கோபி
மனநிலை நிலாத பேயன் அவமாயை
வகையது விடாத பேடி தவநினை விலாத மோடி
வரும்வகை யிதேது காய மெனநாடும்

விதியிலி பொலாத லோபி சபைதனில் வராத கோழை
வினையிகல் விடாத கூள னெனைநீயும்
மிகுபர மதான ஞான நெறிதனை விசார மாக
மிகுமுன துரூப தான மருள்வாயே

எதிர்வரு முதார சூர னிருபிள வதாக வேலை
யியலொடு கடாவு தீர குமரேசா
இனியசொல் மருத சீலர் கருவழி வராமல் நாளும்
இளமையது தானு மாக நினைவோனே

நதியுட னராவு பூணு பரமர்குரு நாத னுன
நடைபெறு கடூர மான மயில்வீரா
நகைமுக விநோத ஞான குறமினுட னேகு லாவு
நவமணி யுலாவு மார்ப பெருமாளே.

1173

மலந்தோற் சலந்தேற் றெலும்பாற் கலந்தீட்
டிடுங்கூட் டினிற்றங் கிடுமாய
மயங்காத் தியங்காப் பயங்கோட் டிடுங்காற்
றுடன்போக் குறத்தந் தையுமாதும்

குலந்தாய்க் குடம்பாற் பிறந்தேற் றிடுங்கோத்
தடங்கூப் பிடத்தம் புவியாவும்
குலந்தார்ப் பெழுங்காட் டிலந்தாட் களன்பாற்
குணங்காத் துணைக்கும் பிடஆளாய்

தலந்தாட் டொடண்டாத் தளிர்ந்தார்க் கிளங்காத்
தடந்தாட் புடைத்தன் பினர்வாழத்
தருங்கூத் தரும்பார்த் துகந்தேத் திடஞ்சாத்
திரஞ்சாற் றிநிற்கும் பெருவாழ்வே

அலந்தாற் றெழுங்கோச் சலந்தீக் கலந்தாட்
டரம்போச் செனக்கன் றிடும்வேலா
அறங்காத் துறங்காத் திறம்பார்த் திருந்தோர்க்
கயர்ந்தோர்க் களிக்கும் பெருமாளே.

1174

மனநூறு கோடி துன்ப நொடிமீதி லேகி ஊர்ந்து
மதனூட லேமு யங்கி யதிரூப
மடமாத ராசை கொண்டு புவிமீதி லேம யங்கி
மதிசீரெ லாம ழிந்து கொடிதான

வினைமூடி யேதி ரிந்து புவிமீதி லேயு ழன்று
விரகான்மெ யேத ளர்ந்து விடுநாளில்
விசையான தோகை துங்க மயிலேறி யோடி வந்து
வெளிஞான வீடு தந்து அருள்வாயே

தினைவேடர் காவல் தங்கு மலைகாடெ லாமு ழன்று
சிறுபேதை கால்ப ணிந்த குமரேசா
திரையாழி சேது கண்டு பொருராவ ணேசை வென்ற
திருமால்மு ராரி தங்கை யருள்பாலா

முனிவோர்கள் தேவ ரும்பர் சிறையாக வேவ ளைந்த
முதுசூரர் தானை தங்கள் கிளையோடு
முடிகோடி தூளெ ழுந்து கழுகோடு பாற ருந்த
முனைவேலி னாலெ றிந்த பெருமாளே.

1175

மாதர்மயல் தனிற்கலந்து காமபனி யெனப்புகுந்து
மாடவிய லெனச்சுழன்று கருவூறி
மாறிபல வெனச்சுமந்து தேனுகுட மெனத்திரண்டு
மாதமிது வெனத்தளர்ந்து வெளியாகி

வேதபுவி தனிற்கழன் றுஏனமென வெனத்தவழ்ந்து
வீறுமணி கனைப்புனைந்து நடைமேலாய்
வேணவித மெனத்திரிந்து நாறுபுழு குடற்றிமிர்ந்து
வேசிவலை தனிற்கலந்து மடிவேனோ

ஆதிசர ணெனக்கயங்கு லாவமுத லையைக்கிடங்கி
லாரவுடல் தனைப்பிளந்த அரிநேமி
ஆமைகய லெனச்செயங்கொள் கோலகுற
ளரித்தடங்கை
யானஅர வணைச்சயந்தன் மருகோனே

சோதியுரு வெனத்திரண்டு கோலஅரு ணையிற்கலந்த
சோமனணி குடிற்சிலம்ப னருள்பாலா
தோகைமயி லெனச்சிறந்த ரூபிகுற மகட்கிரங்கி
தோள்களிறு கிடப்புணர்ந்த பெருமாளே.

1176

முத்துமணி யாரமொய்த் திட்டஇரு கோடுமுற்
பட்டகரி போலுமத் தனமாதர்
முற்றுமதி யார்முகத் துற்றமுனை வேலுறப்
பட்டுமுகில் போல்மனத் திருள்மூடிச்
சுத்தமதி போய்வினைத் துட்டனவ னுய்மனத்
துக்கமுற வேமிகச் சுழலாதே
சொற்கள்பல நாவினிற் றொட்டுனிரு தாடொழச்
சொற்கமல வாழ்வுசற் றருள்வாயே
கொத்துமுடி யானபத் தற்றுவிழ வேகுறிப்
புற்றஅதி கோபனச் சுதன்மாயன்
கொற்றமரு காகுறக் கொச்சைமற மாதினுக்
கிச்சைமொழி கூறுநற் குமரேசா
பத்தியுட னேநினைத் தெத்துமடி யார்வினைப்
பற்றுவிடு மாமறைப் பொருளானாய்
பத்திவர ஞானசொற் கற்றவர்கள் பாடுநற்
பக்ஷபத தேவர்மெய்ப் பெருமாளே.

1177

முருகுமட லூரச் சேவக சரவண ஏனற் பூதரி
முகுளப டீரக் கோமள முலைமீதே
முழுகிய காதற் காமுக பதிபசு பாசத் தீர்வினை
முதியபு ராரிக் கோதிய குருவேயென்

றுருகியு மாடிப் பாடியு மிருகழல் நாடிச் சூடியு
முணர்விஞெ டுடிக் கூடியும் வழிபாடுற்
றுலகினெ ராசைப் பாடற நிலைபெறு ஞானத் தாலினி
யுனதடி யாரைச் சேர்வது மொருநாளே

மருகனெ னுமற் சூழ்கொலை கருதிய மாமப் பாதகன்
வரவிடு மாயப் பேய்முலை பருகாமேல்
வருமத யானைக் கோடவை திருகிவி ளாவிற் காய்கனி
மதுகையில் வீழச் சாடிய சதமாபுட்

பொருதிரு கோரப் பாரிய மருதிடை போயப் போதொரு
சகடுதை யாமற் போர்செய்து விளையாடிப்
பொதுவியர் சேரிக் கேவளர் புயல்மரு காவஜ் ராயுத
புரமதில் மாபுத் தேளிர்கள் பெருமாளே.

1178

மூலா நிலமதின் மேலே மனதுறு
மோகா டவிசுடர் தனைநாடி
மோனு நிலைதனை நாலு வகையிலு
மோதா நெறிமுறை முதல்கூறும்

லீலா விதமுன தாலே கதிபெற
நேமா ரகசிய வுபதேசம்
நீடு ழிதனிலை வாடா மணியொளி
நீதா பலமது தருவாயே

நாலா ருசியமு தாலே திருமறை
நாலா யதுசெப மணிமாலை
நாடாய் தவரிடர் கேடா வரிகரி
நாரா யணர்திரு மருகோனே

சூலா திபர்சிவ ஞானுர் யமனுதை
காலார் தரவரு குருநாதா
தோதீ திகுதிகு தீதீ செகசெக
சோதீ நடமிடு பெருமாளே.

1179

வரிபரந் திரண்டு நயனமுஞ் சிவந்து
வதனமண் டலங்கள் குறுவேர்வாய்
மணிசிலம் பலம்ப அளகமுங் குலைந்து
வசமழிந் திழிந்து மயல்கூர

இருதனங் குலுங்க இடைதுவண் டனுங்க
இனியதொண் டையுண்டு மடவார்தோள்
இதமுடன் புணர்ந்து மதிமயங் கினும்பொ
னிலகுநின் பதங்கள் மறவேனே

விரிபரந் தியங்கு முததியுங் கலங்க
விடமினும் பிறந்த தெனவானோர்
வெருவிநெஞ் சமஞ்சி யுரனொடுந் தயங்கி
விரைபதம் பணிந்து முறையோவென்

றுரைமறந் துணங்க அயில்தொடும் ப்ரசண்ட
உயர்தலங் குலுங்க வருதோகை
ஒருபெருஞ் சிகண்டி மயிலமர்ந் திலங்கி
உலகமும் புரந்த பெருமாளே.

1180

வரிவிழி பூச லாட இருகுழை யூச லாட
வளர்முலை தானு மாட வளையாட
மணிவட மாலை யாட முருகவி ழோதி யாட
மதுரமு தூறி வீழ அநுராகம்

இருவரு மேக போக மொருவர்த மாக மாக
இதமொடு கூடி மாயை படுபோதும்
இருகர மாறு மாறு மறுமுக நீப மார்பு
மிருகழல் தானு நானு மறவேனே

திருநட மாடு காளி பயிரவி மோடி சூலி
திரிபுர நீற தாக அனல்மோதுஞ்
சிவைகயி லாச வாசி மலைமகள் நாரி பாரி
திருமுலை யாயி தாயி யருள்பாலா

குருபர நாத னாகி யரனொரு காதி லோது
குணநிதி யானை நேச முருகோனே
குறமக ளார பார முகிழ்முலை மீது தாது
குலவிய மாலை மேவு பெருமாளே.

1181

விழையுமணி தரையுமுனி வரையுமவ ருயிர்துணிய
வெட்டிப் பிளந்துளம் பிட்டுப் பறிந்திடுஞ்
செங்கண்வேலும்

விரையளக முகிலுமிள நகையும்ருக மதகனவி
சித்ரத் தனங்களுந் தித்தித்த தொண்டையும்
புண்டரீகச்

சுழிமடுவு மிடையுமழ கியமகளிர் தருகலவி
சுட்டித் திரிந்திஙன் தட்டுப் படுங்கொடும்
பங்கவாழ்வுந்

தொலைவில்பிற வியுமகல வொருமவுன பரமசுக
சுத்தப் பெரும்பதஞ் சித்திக்க அன்புடன்
சிந்தியாதோ

எழுதரிய அறுமுகமு மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சமைந்தசெஞ் சுட்டிக் கலன்களுந்
துங்கநீள்பன்

னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும்
ரத்னக் குதம்பையும் பத்மக் கரங்களுஞ்
செம்பொனூலும்

மொழிபுகழு முடைமணியு மரைவடமு மடியிணையு
முத்தச் சதங்கையுஞ் சித்ரச் சிகண்டியுஞ்
செங்கைவேலும்

முழுதுமழ கியகுமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன்பெறுஞ் சற்புத்ர வும்பர்தந்
தம்பிரானே.

1182

வீணையிசை கோட்டி யாலமிட றூட்டு
வீரமுனை யீட்டி விழியார்தம்
வேதனையில் நாட்ட மாகியிடர் பாட்டில்
வீழுமயல் தீட்டி யுழலாதே.

ஆணியுள வீட்டை மேவியுள மாட்டை
யாவலுட னீட்டி யழியாதே
ஆவியுறை கூட்டில் ஞானமறை யூட்டி
யானநிலை காட்டி யருள்வாயே

கேணியுற வேட்ட ஞானநெறி வேட்டர்
கேள்சுருதி நாட்டி லுறைவோனே
கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரரியல் கேட்ட க்ருபைவேளே

சேணினுயர் காட்டில் வாழுமற வாட்டி
சீதவிரு கோட்டி வலேணவோனே
சீறவுணர் நாட்டி லாரவழல் மூட்டி
தேவர்சிறை மீட்ட பெருமாளே.

1183

வேலைவா ளைக்கொடிய ஆலகா லத்தைமதன்
வீசுபா ணத்தைநிக ரெனலாகும்
வேதைசா தித்தவிழி மாதரா பத்தில்விளை
யாடிமோ கித்திரியும் வெகுரூப
கோலகா லத்தைவிட லாகிமா றக்குணவி
காரமோ டத்தெளிய அரிதான
கூறொணா தற்பரம ஞானரூ பத்தின்வழி
கூடலா கப்பெருமை தருவாயே
வாலிமார் பைத்துணிய ஏழ்மரா இற்றுவிழ
வாளிபோ டக்கருது மநுராமன்
வானுலோ கத்திலம ரேசனோ லிக்கவளை
யூதிமோ கித்துவிழ அருள்கூரும்
நீலமே னிக்குமரு காவுதா ரத்துவரு
நீசர்வாழ் வைக்களையு மிளையோனே
நேசமா கக்குறவர் தோகைமா னைப்புணரு
நீபதோ ளொப்பரிய பெருமாளே.

1184

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

1185

கலந்த மாதுங் கண்களி யுறவரு புதல்வோரும்
கலங்கி டாரென் றின்பமு றுலகிடை கலிமேவி

உலந்த காயங் கொண்டுள முறுதுய ருடன்மேவா
　　உகந்த பாதந் தந்துனை யுரைசெய அருள்வாயே
மலர்ந்த பூவின் மங்கையை மருவரி மருகோனே
　　மறஞ்செய் வார்தம் வஞ்சியை மருவிய மணவாளா
சிலம்பி னோடுங் கிண்கிணி திசைதொறும் ஒலிவீசச்
　　சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே.

1186

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
　　இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
　　அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
　　உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
　　அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

1187

திரிபுர மதனை யொருநொடி யதனி
　　லெரிசெய் தருளிய சிவன்வாழ்வே
　சினமுடை யசுரர் மனமது வெருவ
　　மயிலது முடுகி விடுவோனே
பருவரை யதனை யுருவிட எறியு
　　மறுமுக முடைய வடிவேலா
　பசலையொ டணையு மிளமுலை மகளை
　　மதன்விடு பகழி தொடலாமோ
கரிதிரு முகமு மிடமுடை வயிறு
　　முடையவர் பிறகு வருவோனே
　கனதன முடைய குறவர்த மகளை
　　கருணையொ டணையு மணிமார்பா
அரவணை துயிலு மரிதிரு மருக
　　அவனியு முழுது முடையோனே
　அடியவர் வினையு மமரர்கள் துயரு
　　மறஅரு ளுதவு பெருமாளே.

1188

புழுககில் களப மொளிவிடு தரள
மணிபல செறிய வடமேருப்
பொருமிரு கலச முலையிணை யரிவை
புனையிடு பொதுவின் மடமாதர்

அழகிய குவளை விழியினு மமுத
மொழியினு மவச வநுராக
அமளியின் மிசையி லவர்வச முருகி
அழியுநி னடிமை தனையாள்வாய்

குழலிசை யதுகொ டறவெருள் சுரபி
குறுநிரை யருளி யலைமோதுங்
குரைசெறி யுததி வரைதனில் விறுசு
குமுகுமு குமென வுலகோடு

முழுமதி சுழல வரைநெறு நெறென
முடுகிய முகிலின் மருகோனே
மொகுமொகு மொகென ஞிமிறிசை பரவு
முளரியின் முதல்வர் பெருமாளே.

1189

முழுமதி யனைய முகமிரு குழையில்
முனிவிழி முனைகள் கொண்டுழுவார்
முதலறி வதனை வளைபவர் கலவி
முழுகிய வினையை மொண்டுநாயேன்

வழிவழி யடிமை யெனுமறி வகல
மனமுறு துயர்கள் வெந்துவாட
மதிதரு மதிக கதிபெறு மடிகள்
மகிழ்வொடு புகழ மன்புதாராய்

எழுதிட அரிய எழில்மற மகளின்
இருதன கிரிகள் தங்குமார்பா
எதிர்பொரு மசுரர் பொடிபட முடுகி
இமையவர் சிறையை யன்றுமீள்வாய்

அழகிய குமர எழுதல மகிழ
அறுவர்கள் முலையை யுண்டவாழ்வே
அமருல கிறைவ உமைதரு புதல்வ
அரியர பிரமர் தம்பிரானே.

1190

கொடியன பிணிகொடு விக்கிக் கக்கிக்
கூடன்போந் தசடாகுங்
குடிலுற வருமொரு மிக்கச் சித்ரக்
கோண்பூண் டகமயாதே
பொடிவன பரசம யத்துத் தப்பிப்
போந்தேன் தலைமேலே
பொருளது பெறஅடி நட்புச் சற்றுப்
பூண்டாண் டருள்வாயே
துடிபட அலகைகள் கைக்கொட் டிட்டுச்
சூழ்ந்தாங் குடனுடைத்
தொகுதொகு திகுதிகு தொக்குத் திக்குத்
தோந்தாந் தரிதாளம்
படிதரு பதிவ்ரதை யொத்தச் சுத்தப்
பாழ்ங்கான் தனிலாடும்
பழயவர் குமரகு றத்தத் தைக்குப்
பாங்காம் பெருமாளே.

1191

சுடரொளி கதிரவ னுற்றுப் பற்றிச்
சூழ்ந்தோங் கிடுபாரிற்
றுயரிரு வினைபல சுற்றப் பட்டுச்
சோர்ந்தோய்ந் திடநாறுங்
கடுகென எடுமெனு டற்பற் றற்றுக்
கான்போந் துறவோருங்
கனலிடை விதியிடு தத்துக் கத்தைக்
காய்ந்தாண் டருளாயோ
தடமுடை வயிரவர் தற்கித் தொக்கத்
தாந்தோய்ந் திருபாலும்
தமருக வொலிசெவு தத்திற் றத்தத்
தாழ்ந் தூர்ந் திடநாகம்
படிநெடி யவர்கர மொத்தக் கெத்துப்
பாய்ந்தாய்ந் துயர்கானம்
பயில்பவர் புதல்வகு றத்தத் தைக்குப்
பாங்காம் பெருமாளே.

1192

குடமென வொத்த கொங்கை குயில்மொழி; யொத்த இன்சொல்
குறமகள் வைத்த நண்பை நினைவோனே
வடவரை யுற்று றைந்த மகதெவர் பெற்ற கந்த
மத்சல முற்ற தந்தி யிளையோனே
இடமுடன் வைத்த சிந்தை யினைவற முத்தி தந்து
இசையறி வித்து வந்து எனையாள்வாய்
தடவரை வெற்பி னின்று சரவண முற்றெ ழுந்து
சமர்களை வெற்றி கொண்ட பெருமாளே.

1193

மடவிய ரெச்சி லுண்டு கையில்முத லைக்க ளைந்து
மறுமைத னிற்சு ழன்று வடிவான
சடமிக வற்றி நொந்து கலவிசெ யத்து ணிந்து
தளர்வுறு தற்கு முந்தி யெனையாள்வாய்
படவர விற்சி றந்த இடமிதெ னத்து யின்ற
பசுமுகி லுக்கு கந்த மருகோனே
குடமுனி கற்க வன்று தமிழ்செவி யிற்ப கர்ந்த
குமரகு றத்தி நம்பு பெருமாளே.

1194

கருமய லேறிப் பெருகிய காமக்
கடலினில் மூழ்கித் துயராலே
கயல்விழி யாரைப் பொருளென நாடிக்
கழியுமநாளிற் கடைநாளே
எருமையி லேறித் தருமனும் வாவுற்
றிறுகிய பாசக் கயிறாலே
எனைவளை யாமற் றுணைநினை வேனுக்
கியலிசை பாடத் தரவேணும்
திருமயில் சேர்பொற் புயனென வாழத்
தெரியல னோடப் பொரும்வீரா
செக்தல மீதிற் பகர்தமிழ் பாடற்
செழுமறை சேர்பொற் புயநாதா

பொருமயி லேறிக் கிரிபொடி யாகப்
புவியது சூழத் திரிவோனே
புனமக ளாரைக் கனதன மார்பிற்
புணரும்வி நோதப் பெருமாளே.

1195

குடலிடை தீதுற் றிடையிடை பீறிக்
குலவிய தோலத் தியினூடே
குருதியி லேசுக் கிலமது கூடிக்
குவலயம் வானப் பொருகாலாய்

உடலெழு மாயப் பிறவியி லாவித்
துறுபிணி நோயுற் றுழலாதே
உரையடி யேனுக் கொளிமிகு நீபத்
துனதிரு தாளைத் தரவேணும்

கடலிடை சூரப் படைபொடி யாகக்
கருதல ரோடப் பொரும்வேலா
கதிர்விடு வேலைக் கதிரினில் மேவிக்
கலைபல தேர்முத் தமிழ்நாடா

சடையினர் நாடப் படர்மலை யோடித்
தனிவிளை யாடித் திரிவோனே
தனிமட மானைப் பரிவுட னுரைத்
தழுவும்வி நோதப் பெருமாளே.

1196

கருதியே மெத்த விடமெலாம் வைத்த
கலகவா ளொத்த விழிமாதர்
கடினபோ கத்த புளகவா ருற்ற
களபமார் செப்பு முலைமீதே

உருகியான் மெத்த அவசமே வுற்ற
உரைகளே செப்பி யழியாதுன்
உபயபா தத்தி னருளையே செப்பு
முதயஞா னத்தை அருள்வாயே

பருவரா லுற்று மடுவின்மீ துற்ற
பகடுவாய் விட்ட மொழியாலே
பரிவினோ டுற்ற திகிரியே விட்ட
பழயமா யற்கு மருகோனே

முருகுலா வுற்ற குழலிவே டிச்சி
முலையின்மே வுற்ற க்ருபைவேளே
முருகனே பத்த ரருகனே வெற்பு
முரியவேல் தொட்ட பெருமாளே.

1197

கொலையிலே மெத்த விரகிலே கற்ற
குவளையோர் மைக்கண் விழிமாதர்
குழையிலே யெய்த்த நடையிலே நெய்த்த
குழலிலே பற்கள் தனிலேமா

முலையிலே யற்ப இடையிலே பத்ம
முகநிலா வட்ட மதின்மீதே
முதுகிலே பொட்டு நுதலிலே தத்தை
மொழியிலே சித்தம் விடலாமோ

கலையனே உக்ர முருகனே துட்டர்
கலகனே மெத்த இளையோனே
கனகனே பித்தர் புதல்வனே மெச்சு
கடவுளே பச்சை மயிலோனே

உலகனே முத்தி முதல்வனே சித்தி
உடையனே விஷ்ணு மருகோனே
ஒருவனே செச்சை மருவுநேர் சித்ர
வுருவனே மிக்க பெருமாளே

1198

அகிலநறுஞ் சேறு ம்ருகமதமுந் தோயு
மசலமிரண் டாலு மிடைபோமென்
றடியில்விழுந் தாடு பரிபுரசெஞ் சீர
தபயமிடுங் கீத மமையாதே

நகமிசைசென் றூடி வனசரர்சந் தான
நவையறநின் றேனல் விளைவாள்தன்
வளிதவிர்சிங் கார தனமுறுசிந் தூர
நமசரணென் றோத அருள்வாயே

பகலிரவுண் டான இருவரும்வண் டாடு
பரிமளபங் கேரு கனுமாலும்
படிகநெடும் பார கடதடகெம் பீர
பணமுகசெம் பால மணிமாலை

முகபடசிந் தூர கரியில்வருந் தேவு
முடியஅரன் தேவி யுடனுடை
முழுதுலகுந் தாவி எழுகடல்மண் டூழி
முடிவினுமஞ் சாத பெருமாளே.

1199

கலகமதன் காதுங் கனமலரம் பாலுங்
களிமதுவண் டூதும் பயிலாலும்
கடலலையங் காலுங் கனஇரையொன் றாலுங்
கலைமதியங் காயும் வெயிலாலும்

இலகியசங் காளும் இனியவளன் பீனும்
எனதருமின் தானின் றிளையாதே
இருள்கெடமுன் தானின் றினமணிசெந் தார்தங்
கிருதனமுந் தோள்கொண் டணைவாயே

உலகைவளைந் தோடுங் கதிரவன்விண் பால்நின்
றுனதபயங் காவென் றுணைநாட
உரவியவெஞ் சூரன் சிரமுடன்வன் தோளும்
உருவியுடன் போதும் ஒளிவேலா

அலகையுடன் பூதம் பலகவிதம் பாடும்
அடைவுடனின் றாடும் பெரியோர்முன்
அறமுமறந் தோயும் அறிவுநிரம் போதென்
றழகுடனன் றோதும் பெருமாளே.

1200

குருதிசலந் தோலுங் குடலுடனென் பாலுங்
குலவியெழுங் கோலந் தனில்மாயக்
கொடுமையுடன் கோபங் கடுவிரகஞ் சேருங்
குணவுயிர்கொண் டேகும் படிகாலன்

கருதிநெடும் பாசங் கொடுவரநின் றுயுங்
கதறமறந் தேனென் றகலாமுன்
கமலமலர்ந் தேறுங் குகனெனவும் போதுன்
கருணைமகிழ்ந் தோதுங் கலைதாராய்

நிருதர்தளஞ் சூழும் பெரியநெடுஞ் சூரன்
நிணைவுமழிந் தோடும் படிவேலால்
நிகரிலதம் பாரொன் றிமையவர்நெஞ் சால்நின்
நிலைதொழநின் றேமுன் பொருவீரா

பருதியுடன் சோமன் படியையிடந் தானும்
பரவவிடந் தானுண் டெழுபாரும்
பயமறநின் றுடும் பரமருளங் கூரும்
பழமறையன் றேதும் பெருமாளே.

1201

இருவினைக ளீட்டு மிழவுபடு கூட்டை லனைவோரும்
யெடுமெடென வீட்டி
இறுதியிடு காட்டி லழுதுதலை மாட்டி யிடுமாறு
லெரியளரி மூட்டி

கரியஇரு கோட்டு முரணொருமை மோட்டர்
கயிறிறுக மாட்டி யழையாமுன்
கனகமணி வாட்டு மருவுகழல் பூட்டு
கழலிணைகள் காட்டி யருள்வாயே

பருவமலை நாட்டு மருவுகிளி யோட்டு
பழையகுற வாட்டி மணவாளா
பகைஞர்படை வீட்டில் முதியகன லூட்டு
பகருநுதல் நாட்ட குமரேசா

அருமறைகள் கூட்டி யுரைசெய்தமிழ் பாட்டை
அடைவடைவு கேட்ட முருகோனே
அலைகடலி லீட்ட அவுணர்தமை யோட்டி
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

1202

உறவின்முறை யோர்க்கு முறுதுயரம் வாய்த்து
உளமுருகு தீர்த்தி வுடலூடே
உடலைமுடி வாக்கு நெடியதொரு காட்டி
லுயர்கனலை மூட்டி விடஆவி

மறலிமற மார்த்த கயிறுதனை வீக்கி
வலிவினொடு தாக்கி வளையாமுன்
மனமுமுனி வேட்கை மிகவுமுன தாட்கள்
மகிழ்வியல்கொ டேத்த மதிதாராய்

பிறைநுதலி சேற்க ணமையரிவை வேட்பு
வரையில்மற வோர்க்கு மகவாகப்
பிறிதுருவில் வாய்த்து நிறைதினைகள் காத்த
பிடியினடி போற்று மணவாளா

அறுகுபிறை யாத்தி அலைசல ழு மார்த்த
அடர்சடையி னார்க்கு மறிவீவாய்
அடரவரு போர்க்கை அசுரர்கிளை மாய்த்து
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

1203

அளகநிரை குலையவிழி குவியவளை கலகலென
அமுதமொழி பதறியெழ அணியாரம்
அழகொழுகு புளகமுலை குழையஇடை துவளமிக
அமுதநிலை யதுபரவ அதிமோகம்

உளமுருக வருகலவி தருமகளிர் கொடுமையெனு
முறுகபட மதனில்மதி யழியாதே
உலகடைய மயிலின்மிசை நொடியளவில் வலம்வருமு
னுபயநறு மலரடியை அருள்வாயே

வளையுமலை கடல்சுவற விடுபகழி வரதனிரு
மருதினெடு பொருதருளு மபிராமன்
வரியரவின் மிசைதுயிலும் வரதஜய மகள்கொழுநன்
மருகஅமர் முடுகிவரு நிருதேசர்

தளமுறிய வரைதகர அசுரர்பதி தலைசிதற
தகனமெழ முடுகவிடு வடிவேலா
தரளமணி வடமிலகு குறவர்திரு மகள்கணவ
சகலகலை முழுதும்வல பெருமாளே.

1204

அனகனென அதிகனென அமலனென அசலனென
அபயனென அதுலனென அநபாயன்
அடல்மதன னெனவிசைய னெனமுருக னெனநெருடி
யவர்பெயரு மிடைசெருகி யிசைபாடி

வனசமணி பணிலமழை சுரபிசுரர் தருநிகர்கை
மகிபஎன தினையளவு ளவுமீயா
மனிதர்கடை தொறுமுழலு மிடியொழியமொழியொழிய
மனமொழிய வொருபொருளை அருள்வாயே

இனனிலவு தலைமலைய அடியினுகி ரிலைகளென
இருசதுர் திசையிலுர கமும்வீழ
இரணியச யிலம்ரசித சயிலமர கதசயில
மெளனவிமலை யமுனையென நிழல்வீசிக்

ககனமழை யுகைகடவு ளுடலமென முதியவிழி
கதுவியெழில் பொதியமிசை படர்கோலக்
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே.

1205

குடருமல சலமுமிடை யிடைதடியு முடையளவு
கொழுவுமுதி ரமும்வெளிற ளறுமாகக்
கொளகொளென அளவில்புழு நெளுநெளென
விளைகுருதி
குமுகுமென இடைவழியில் வரநாறும்
உடலின்மண மலிபுழுகு தடவியணி கலமிலக
வுலகமரு ளுறவருமரிவையாரன்
பொழியவினை யொழியமன மொழியஇரு ளொழியஎன
தொழிவிலக லறிவையருள் புரிவாயே
வடகனக சயிலமுத லியசயில மெனநெடிய
வடிவுகொளு நெடியவிறல் மருவாரை
வகிருமொரு திகிரியென மதிமுதிய பணிலமென
மகரசல நிதிமுழுகி விளையாடிக்
கடலுலகை யளவுசெய வளருமுகி லெனஅகில
ககனமுக டுறநிமிரு முழுநீலக்
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே.

1206

குதறுமுனை யறிவுகொடு பதறியெதிர் கதறிமிகு
குமுதமிடு பரசமய மொருகோடி
குருடர்தெரி வரியதொரு பொருள்தெரிய நிகழ்மனது
கொடியஇரு வினையெனும ளறுபோக
உதறிவித றியகரண மரணமற விரணமற
வுருகியுரை பருகியநு தினஞான
உணர்வுவிழி பெறவுனது மிருகமத நளினபத
யுகளமினி யுணரஅருள் புரிவாயே
சிதறவெளி முழுதுமொளி திகழுமுடு படலமவை
சிறுபொறிக ளெனவுரக பிலமேழுஞ்
செகதலமு நிகர்சிகரி பலவுநல கெசபுயக
திசையுமுட னுருகவரு கடைநாளிற்

கதறுமெழு கடல்பருகி வடவைவிடு கரியபுகை
யெனமுடிவில் ககனமுக டதிலோடுங்
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே.

1207

வதைபழக மறலிவிறல் மதனன்வழி படுதுமென
வயிரமர கதமகர மளவாக
வரிசிதறி விடமளவி வளருமிரு கலகவிழி
வளையிளைஞ ருயிர்கவர வருமாய

இதையமள விடஅரிய அரிவையர்கள் நெறியொழுகி
எழுபிறவி நெறியொழிய வழிகாணு
இடர்கள்படு குருடனெனை அடிமைகொள
மகிழ்வொடுன
திருநயன கருணைசிறி தருள்வாயே

பதயுகள மலர்தொழுது பழுதில்பொரி அவல்துவரை
பயறுபெரு வயிறுநிறை யவிடாமுப்
பழமுமினி துதவிமுனி பகரவட சிகரிமிசை
பரியதனி யெயிறுகொடு குருநாடர்

கதைமுழுது மெழுதுமொரு களிறுபிளி றிடநெடிய
கடலுலகு நொடியில்வரு மதிவேகக்
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே.

1208

விடமளவி யரிபரவு விழிகுவிய மொழிபதற
விதறிவளை கலகலென அநுராகம்
விளையம்ருக மதமுகுள முலைபுளக மெழநுதலில்
வியர்வுவர அணிசிதற மதுமாலை

அடரளக மவிழஅணி துகிலகல அமுதுபொதி
யிதழ்பருகி யுருகியரி வையரோடே
அமளிமிசை யமளிபட விரகசல தியில்முழுகி
யவசமுறு கினுமடிகள் மறவேனே

உடலுமுய லகன்முதுகு நெறுநெறென எழுதிமிர
வுரகர்பில முடியவொரு பதமோடி
உருவமுது ககனமுக டிடியமதி முடியெயர
வுயரவகி லபுவனம கிரவீசிக்

கடககர தலமிலக நடனமிடு மிறைவர்மகிழ்
கருதரிய விதமொடழ குடனுடுங்
கலபகக மயில்கடவி நிருதர்கஜ ரததுரக
கடகமுட னமர்பொருத பெருமாளே.

1209

எழுபிறவி நீர்நிலத்தி லிருவினைகள் வேர்பிடித்து
இடர்முளைக ளேமுளைத்து வளர்மாயை
எனுமுலவை யேபணைத்து விரகுகுழை யேகுழைத்து
இருளிலைக ளேதழைத்து மிகநீளும்

இழவுநனை யேபிடித்து மரணபழ மேபழுத்து
இடியுமுடல் மாமரத்தி னருநீழல்
இசையிலவிழ ஆதபத்தி யழியுமுன மேயெனக்கு
இனியதொரு போதகத்தை யருள்வாயே

வழுவுநெறி பேசுதக்க னிசையுமக சாலையுற்ற
மதியிரவி தேவர்வஜ்ர படையாளி
மலர்கமல யோனிசக்ர வளைமருவு பாணிவிக்ர
மறையஎதிர் வீரவுக்ரர் புதல்வோனே

அழகியக லாபகற்றை விகடமயி லேறியெட்டு
அசலமிசை வாகையிட்டு வரும்வேலா
அடலசுரர் சேனைகெட்டு முறியமிக மோதிவெட்டி
அமரர்சிறை மீளவிட்ட பெருமாளே.

1210

நடையுடையி லேயருக்கி நெடியதெரு வீதியிற்குள்
நயனமத னுல்மருட்டி வருவாரை
நணுகிமய லேவிளைத்து முலையைவிலை கூறிவிற்று
லளிதமுட னேபசப்பி யுறவாடி

வடிவதிக வீடுபுக்கு மலரணையின் மீதிருத்தி
மதனனுடை யாகமத்தி னடைவாக
மருவியுள மேயுருக்கி நிதியமுள தேபறிக்கும்
வனிதையர்க ளாசைபற்றி யுழல்வேனோ

இடையர்மனை தோறுநித்த முறிதயிர்நெய் பால்குடிக்க
இருகையுற வேபிடித்து உரலோடே
இறுகிடஅ சோதைகட்ட அழுதிடுகொ பாலக்ருஷ்ண
னியல்மருக னேகுறத்தி மணவாளா

அடலெழுது மேடுமெத்த வருபுனலி லேறவிட்டு
அரியதமிழ் வாதுவெற்றி கொளும்வேலா
அவுணர்குலம் வேரறுத்து அபயமென வோலமிட்ட
அமரர்சிறை மீளவிட்ட பெருமாளே.

1211

மடலவிழ்ச ரோருகத்து முகிழ்நகையி லேவளைத்து
மதசுகப்ர தாபசித்ர முலையாலே
மலரமளி மீதணைத்து விளையுமமு தாதரத்தை
மனமகிழ வேயளித்து மறவாதே

உடலுயிர தாயிருக்க உனதெனதெ னுமறிக்கை
ஒருபொழுதொ ணாதுசற்று மெனவேதான்
உரைசெய்மட வாரளித்த கலவிதரு தோதகத்தை
யொழியவொரு போதகத்தை யருள்வாயே

தடமகுட நாகரத்ன படநெளிய ஆடுபத்ம
சரணயுக மாயனுக்கு மருகோனே
சரவணமி லேயுதித்த குமரமுரு கேசசக்ர
சயிலம்வல மாய்நடத்து மயில்வீரா

அடல்மருவு வேல்கரத்தி லழகுபெற வேயிருத்தும்
அறுமுகவ ஞானதத்வ நெறிவாழ்வே
அசுரர்குல வேரைவெட்டி அபயமென வோலமிட்ட
அமரர்சிறை மீளவிட்ட பெருமாளே.

1212

அங்கதன் கண்டகன் பங்கிலன் பொங்குநெஞ்
சன்பிலன் துன்பவன் புகழ்வாரா
அஞ்சொடுங் கும்பொதும் பொன்றையென் றுஞ்சுமந்
தங்குமிங் குந்திரிந் திரைதேடுஞ்

சங்கடங் கொண்டவெஞ் சண்டிபண் டன்பெருஞ்
சஞ்சலன் கிஞ்சுகந் தருவாயார்
தந்தொழும் பன்தழும் பன்பணிந் தென்றுநின்
தண்டையம் பங்கயம் புகழ்வேனே

கங்கையும் பொங்குநஞ் சம்பொருந் தும்புயங்
கங்களுந் திங்களுங் கழுநீருங்
கஞ்சமுந் தும்பையுங் கொன்றையுஞ் சந்ததங்
கந்தமுந் துன்றுசெஞ் சடையாளர்

பங்குதங் கும்பசுங் கொம்புதந் தின்புறும்
பந்தவெங் குண்டர்தங் குலகாலா
பண்டிதன் கந்தனென் றண்டரண் டந்தொழும்
பண்புநண் பும்பெறும் பெருமாளே.

1213

தந்தமுந் துன்பவெஞ் சிந்தைகொண் டந்தகன்
தண்டவொன் றன்றெடுங் கிடுமாவி
தஞ்சமென் றும்பரிந் தின்சொல்வஞ் சந்தெரிந்
தன்றுமென் றுந்தனந் தனைநாடி

நின்தனன் பென்பதொன் றின்றிநன் றென்றுநெஞ்
சின்கணன் பொன்றில்மங் கையர்நேசம்
நின்றளந் துஞ்சளங் கொண்டிடும் புன்கணந்
தின்பமொன் றின்றியிங் குழல்வேனோ

சுந்தரன் பந்தமுஞ் சிந்தவந் தன்புடன்
தொண்டனென் றன்றுகொண் டிடுமாதி
தும்பைசெம் பொன்சொரிந் துந்தருங் கொன்றைதுன்
பங்கடிந் தென்பொடுந் தொலையாநீர்

அந்தமுந் திந்துவுங் கெந்தமிஞ் சுங்கொழுந்
தன்றுமின் றும்புனைந் திடும்வேணி
அன்பர்நெஞ் சின்புறுஞ் சொஞ்சொலன் கந்தனென்
றண்டரண் டந்தொழும் பெருமாளே.

1214

உம்பரா ரமுதெனுந் தொண்டைவா யமுதமுண்
டுண்டுமே கலைகழன் றயலாக
உந்திவா வியில்விழுந் தின்பமா முழுகியன்
பொன்றிலா ரொடுதுவண் டணைமீதே

செம்பொனார் குடமெனுங் கொங்கையா பரணமுஞ்
சிந்தவாள் விழிசிவந் தமராடத்
திங்கள்வேர் வுறவணைந் தின்பவா ரியில்விழுஞ்
சிந்தையே னெனவிதங் கரைசேர்வேன்

கொம்புநா லுடையவெண் கம்பமால் கிரிவருங்
கொண்டல்ப்லோ மசையள்சங் ரமபாரக்
கும்பமால் வரைபொருந் திந்த்ரபூ பதிதருங்
கொண்டலா னையைமணஞ் செயும்வீரா

அம்புரா சியுநெடுங் குன்றுமா மரமுமன்
றஞ்சவா னவருறுஞ் சிறைமீள
அங்கநான் மறைசொலும் பங்கயா சனமிருந்
தங்கைவே லுறவிடும் பெருமாளே.

1215

வண்டுதான் மிகவிடங் கொண்டகா ரளகமென்
பந்திமா மலர்சொரிந் துடைசோர
வம்புசேர் கனிபொருந் தின்பவா யமுதருந்
தந்தமா மதனலம் விதமாக
விண்டுமே னிகள்துவண் டன்றில்போ லுளமிரண்
டொன்றுமா யுறவழிந் தநுபோகம்
விஞ்சவே தருமிளங் கொங்கையார் வினைகடந்
துன்றன்மே லுருகஎன் றருள்வாயே
பண்டுபா ரினையளந் துண்டமால் மருகசெம்
பைம்பொன்மா நகரிலிந் திரன்வாழ்வு
பண்பெலா மிகுதிபொங் கின்பயா னையைமணந்
தன்பினே ரகமமர்ந் திடுவோனே
அண்டர்தா மதிபயங் கொண்டுவா டிடநெடுந்
தண்டுவாள் கொடுநடந் திடுசூரன்
அங்கமா னதுபிளந் தெங்கும்வீ ரிடவெகுண்
டங்கைவே லுறவிடும் பெருமாளே.

1216

காதல்மோ கந்தருங் கோதைமார் கொங்கைசிங்
காரநா கஞ்செழுங் கனிவாய்கண்
காளகூ டங்கொடுங் காலரூ பம்பொருங்
காமபா ணஞ்சுரும் பினம்வாழும்
ஓதிகார் செஞ்சொல்மென் பாகுதே னென்றயர்ந்
தோநமோ கந்தஎன் றுரையாதே
ஊசலா டும்புலன் தாரியே சென்றுநின்
றோயுமா றென்றையுங் கருதாதோ
தாதகீ சண்பகம் பூகமார் கந்தமந்
தாரம்வா சந்திசந் தனநீடு
சாமவே தண்டவெங் கோபகோ தண்டசந்
தானமா தெங்கள்பைம் புனமேவும்

தீதிலா வஞ்சியஞ் சீதபா தம்படுஞ்
சேகரா தண்டையங் கழல்பேணித்
தேவிபா கம்பொருந் தாதிநா தன்தொழுந்
தேசிகா வும்பர்தம் பெருமாளே.

1217

கோலகா லத்தைவிட் டாசுபா டக்கொடிக்
கோவைபா டக்கொடிக் கொடிவாதிற்
கோடிகூ ளக்கவிச் சேனைசா டக்கெடிக்
கூறுகா ளக்கவிப் புலவோன்யான்

சீலகா லப்புயற் பாரிசா தத்தருத்
த்யாகமே ருப்பொருப் பெனவோதுஞ்
சீதரா சித்ரவித் தாரமே செப்பிடக்
கேளுறு நிற்பதைத் தவிர்வேனோ

ஆலகா லப்பணிப் பாயல்நீ ளப்படுத்
தாரவா ரக்கடற் கிடைசாயும்
ஆழிமா லுக்குநற் சாமவே தற்குமெட்
டாதரு பத்தினிற் சுடராய

காலகா லப்ரபுச் சாலுமா லுற்றுமைக்
காகவே ளைப்புகக் கழுநீராற்
காதும்வே ழச்சிலைப் பாரமீ னக்கொடிக்
காமவேள் மைத்துனப் பெருமாளே.

1218

ஞாலமோ டொப்பமக் காளொறு நற்சொலைத்
தீதெறு நற்றவத் தணைவோர்தம்
நாதமோ டுட்கருத் தோடவே தர்க்கமிட்
டோயுநா யொப்பவர்க் கிளையாதே

நீலமே னிக்குலத் தோகைமே லுற்றுநிட்
டூரசூர் கெட்டுகப் பொரும்வேலா
நேசமாய் நித்தநிற் றுளைநீ ளச்சமற்
றேதநீ திப்பொருட் டரவேணும்

கோலவா ரிக்கிடைக் கோபரா விற்படுத்
தானும்வே தக்குலத் தயனுருங்
கூறும்வா னப்புவிக் கூறுதீ ரக்குறிப்
போதுரு நிற்பஅக் கொடிதான

காலன்மார் புற்றுதைத் தானுமோர் கற்புடைக்
கோதைகா மக்கடற் கிடைமூழ்கக்
காவிசேர் கொத்தலர்ப் பாணமேய் வித்தகக்
காமவேள் மைத்துனப் பெருமாளே.

1219

கரவுசேர் மகளிர்குங் குமபயோ தரதனங்
களினரு துயில்வதுஞ் சரிபேசுங்
கரசரோ ருகநகம் படவிடாய் தணிவதுங்
கமலநா பியின்முயங் கியவாழ்வும்

அரவுபோ லிடைபடிந் திரவெலா முழுகுமின்
பநல்பரகோ ததிநலம் பெறுமாறும்
அதரபா னமுதமுந் தவிரவே மவுனபஞ்
சரமனே லயசுகந் தருவாயே

பரவுமா யிரமுகங் கொடுதிசா முகதலம்
படர்பகீ ரதிவிதம் பெறஆடல்
பயில்பணு வனமுகந் தகுணமா சுணகணம்
பனிநிலா வுமிழுமம் புலிதாளி

குரவுகூ விளமரும் பிதழிதா தகிநெடுங்
குடிலவே ணியிலணிந் தவராகங்
குழையஆ தரவுடன் தழுவுநா யகிதருங்
குமரனே யமரர்தம் பெருமாளே

1220

வடிவவேல் தனைவெகுண் டிளைஞரா வியைவளைந்
தமர்செய்வாள் விழியர்நெஞ் சினில்மாயம்
வளரமால் தனைமிகுந் தவர்கள்போ லளவிவந்
தணுகுமா நிதிகவர்ந் திடுமாதர்

துடியையே ரிடைதனந் துவளவே துயில்பொருந்
தமளிதோய் பவர்வசஞ் சுழலாதே
தொலைவிலா இயல்தெரிந் தவலமா னதுகடந்
துனதுதாள் தொழுமனந் தருவாயே

படியெலா முடியநின் றருளுமா லுதவுபங்
கயனுநான் மறையுமும் பரும்வாழப்
பரவையூ டெழுவிடம் பருகிநீள் பவுரிகொண்
டலகையோ டெரிபயின் றெருதேறிக்

கொடியவா ளரவிளம் பிறையினே டலைசலங்
குவளைசேர் சடையர் தந் திருமேனி
குழைய ஆ தரவுடன் தழுவுநா யகிதருங்
குமரனே யமரர்தம் பெருமாளே.

1221

கட்டமுறு நோய்தீமை யிட்டகுடில் மாமாய
கட்டுவிடு மோர்கால மளவாவே
கத்தவுற வோர்பாலர் தத்தைசெறி வார்வாழ்வு
கற்புநெறி தான்மாய வுயர்காலன்

இட்டவொரு தூதாளு முட்டவினை யால்மூடி
யிட்டவிதி யேயாவி யிழவாமுன்
எத்தியுனை நாடோறு முத்தமிழி னலோத
இட்டமினி தோடார நினைவாயே

துட்டரென ஏழ்பாரு முட்டவினை யாள்சூரர்
தொக்கில்நெடு மாமார்பு தொளையாகத்
தொட்டவடி வேல்வீர நட்டமிடு வார்பால
சுத்ததமி ழார்ஞான முருகோனே

மட்டுமறை நால்வேத னிட்டமலர் போல்மேவ
மத்தமயில் மீதேறி வருநாளை
வைத்தநிதி போல்நாடி நித்தமடி யார்வாழ
வைத்தபடி மாறுத பெருமாளே.

1222

பக்கமுற நேரான மக்களுட னேமாதர்
பத்தியுடன் மேல்மூடி யினிதான
பட்டினுட னேமாலை யிட்டுநெடி தோர்பாடை
பற்றியணை வோர்கூவி யலைநீரிற்

புக்குமுழு காநீடு துக்கமது போய்வேறு
பொற்றியிட வேயாவி பிரியாமுன்
பொற்கழலை நாடோறு முட்பரிவி னலோது
புத்திநெடி தாம்வாழ்வு புரிவாயே

இக்கனுக வேநாடு முக்கணர்ம காதேவ
ரெப்பொருளு மாமீசர் பெருவாழ்வே
எட்டவரி தோர்வேலை வற்றமுது சூர்மாள
எட்டியெதி ரேயேறு மிகல்வேலா

மக்களொடு வானுடர் திக்கில்முனி வோர்சூழ
மத்தமயில் மீதேறி வருவோனே
வைத்தநிதி போல்நாடி நித்தமடி யார்வாழ
வைத்தபடி மாறாத பெருமாளே.

1223

நீருநில மண்டாத தாமரைப டர்ந்தோடி
நீளமக லஞ்சோதி வடிவான
நேசமல ரும்பூவை மாதின்மண மும்போல
நேர்மருவி யுண்காத லுடன்மேவிச்

சூரியனு டன்சோம னீழலிவை யண்டாத
சோதிமரு வும்பூமி யவையூடே
தோகைமயி லின்பாக ருமெனம கிழ்ந்தாட
சோதிஅயி லுந்தாரு மருள்வாயே

வாரியகி லங்கூச ஆயிரப ணஞ்சேடன்
வாய்விடவொ டெண்பாலு முடுபோல
வார்மணியு திர்ந்தோட வேகவினி றைந்தாட
மாமயில்வி டுஞ்சேவல் கொடியோனே

ஆரியன வன்தாதை தேடியின மும்பாடு
மாடலரு ளஞ்சோதி யருள்பாலா
ஆனைமுக வன்தேடி யோடியெய ணங்காத
லாசைமரு வுஞ்சோதி பெருமாளே.

1224

சுட்டதுபோ லாசை விட்டுலகா சார
துக்கமிலா ஞான சுகமேவிச்
சொற்கரண தீத நிற்குணமூ டாடு
சுத்தநிரா தார வெளிகாண

மொட்டலர்வா ரீச சக்ரசடா தார
முட்டவுமீ தேறி மதிமீதாய்
முப்பதுமா றாறு முப்பதும்வே றான
முத்திரையா மோன மடைவேனோ

எட்டவொணா வேத னத்தொடுகோ கோவெ
னப்பிரமா வோட வரைசாய
எற்றியஏ ழாழி வற்றிடமா றாய
எத்தனையோ கோடி யசுரேசர்

பட்டொருசூர் மாள விக்ரமவே லேவு
பத்திருதோள் வீர திணைகாவல்
பத்தினிதோள் தோயு முத்தமமா ருது
பத்திசெய்வா ருடர் பெருமாளே.

1225

மைச்சுனமார் மாம னைச்சியுமா தாவு
மக்களுமா ருத துயர்சூர
மட்டிலதோர் தீயி லிக்குடில்தான் வேவ
வைத்தவர்தா மேக மதிமாய

நிச்சயமாய் நாளு மிட்டொருதூ தேவு
நெட்டளவாம் வாதை யணுகாமுன்
நெக்குருகா ஞான முற்றுனதா ளோதி
நித்தலும்வாழ் மாறு தருவாயே

நச்சணைமேல் வாழு மச்சுதனுல் வேத
னற்றவர்தா நாட விடையேறி
நற்புதல்வா சூரர் பட்டிடவே லேவு
நற்றுணைவா ஞால மிகவாழப்

பச்செனுநீள் தோகை மெய்ப்பரியூர் பாக
பத்தியதா மாறு முகநாளும்
பக்ஷமுமே லாய்ஷ டக்ஷரசூழ் பாத
பத்திசெய்வா ருடர் பெருமாளே.

1226

தத்துவத் துச்செயலொ டொட்டில்பட் டக்குருகு
சத்துவிட் டப்படிபொ லடியேனுஞ்
சச்சிலுற் றுப்படியில் விட்டுவிட் டுக்குளறி
சத்துவத் தைப்பிரிய விடும்வேளை

சுத்தமுத் தப்பதவி பெற்றநற் பத்தரொடு
தொக்குசற் றுக்கடையன் மிடிதீரத்
துப்புமுத் துச்சரண பச்சைவெற் றிப்புரவி
சுற்றவிட் டுக்கடுகி வரவேணும்

வித்தகத் திப்பவள தொப்பையப் பற்கிளைய
வெற்றிசத் திக்கரக முருகோனே
வெற்புமெட் டுத்திசையும் வட்டமிட் டுச்சுழல
விட்டபச் சைச்சரண மயில்வீரா

கத்தர்நெட் டுச்சடையர் முக்கணக் கக்கடவுள்
கச்சியப் பர்க்கருள்செய் குருநாதா
கற்பதத் தைக்குருகி யுற்பதத் துக்குறவர்
கற்பினுக் குற்றுபுணர் பெருமாளே.

1227

மக்களொக் கற்றெறிவை பக்கமிக் கத்துணைவர்
மற்றுமுற் றக்குரவ ரனைவோரும்
வைத்தசெப் பிற்பணமும் ரத்னமுத் திற்பணியு
மட்டுமற் றுப்பெருகு மடியாரும்

புக்குதுக் கித்தெரிகள் தத்தவைக் கப்புகுது
பொய்க்குமெய்க் குச்செயலு முருகாதே
புஷ்பமிட் டுக்கருணை நற்பதத் தைப்பரவு
புத்திமெத் தத்தருவ தொருநாளே

செக்கர்கற் றைச்சடையில் மிக்ககொக் கிற்சிறகு
செக்கமுற் றச்சலமு மதிசூடி
சித்தமுற் றுத்தெளிய மெத்தமெத் தத்திகழு
சித்தமுத் திச்சிவமு மருள்வோனே

கொக்குறுப் புக்கொடுமை நிற்கும்வட் டத்தசுரை
கொத்திளெக் கக்கொலைசெய் வடிவேலா
கொற்றவெற் றிப்பரிசை யொட்டியெட் டிச்சிறிது
குத்திவெட் டிப்பொருத பெருமாளே.

1228

உற்பா தப்பூ தக்கா யத்தே
யொத்தோ டித்தத் தியல்காலை
உட்பூ ரித்தே சற்றே சற்றே
யுக்கா ரித்தற் புதனேரும்

அற்பா யிற்ருய் நிற்பா ரைப்போ
லப்பா வித்துத் திரிவேனுக்
கப்பா சத்தா லெட்டா அப்பா
லைப்போ தத்தைப் புரிவாயே

பொற்பார் பொற்பார் புத்தே ளிர்க்கா
கப்போய் முட்டிக் கிரிசாடிப்
புக்கா ழிச்சூழ் கிட் டா கிச்சூர்
பொட்டா கக்குத் தியவேலா